# 01 Ways of Kissing

1079



மலா வாசக நிலையம்
து. ரெங்கநாதபுரம்
ச நெ. 1109
நெ. 9071

# மங்கையின் முத்தம்

மங்கையரை அழகு பெற
முத்தமிடும் ஆயிரம் முறைகள்



கல்பதரு பிரசுராலயம் சென்னை

காபிரைட் ரிஜிஸ்டர்ட்

1929

சாதா பதிப்பு ரூ. 2
உயர்ந்த „ ரூ. 3

மங்கையின் முத்தம் :



—காதல காதலியர் உல்லாசமாய் உலாவி வரும்போது அளித்துக்கொள்ளும் சரச சல்லாப முத்தம்.—

ஸ்ரீ :

# முன்னுரை

---

உலகத்தில் வாழ்கின்ற ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் உயர் பதவியை நாடி உழைத்து வருகின்றார்கள். ஒவ்வொரு சமயத்தில் போராடியும் வருகின்றார்கள். உயிரைவிட அழகுதான் மிக்க மேலானது, உயர்ந்தது, சிறப்பினையுடையது என்று கருதப்பட்டு வரும் இக்காலத்தில் முத்தத்தின் ஞானம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டியது மிக்க அவசியம். அந்த ஞானம் உண்டாகாவிட்டால் முற்போக்குத் தடைபடும் என்று சொல்லுவதும் மிகையாகாது. இல்லற வாழ்க்கை ஸதிபதிகளினிடையில் இன்பமாய் நடைபெறுவதற்கு முத்தத்தின் ஞானம் இன்றியமையாததே. அவர்கள் தமது வாணாளை வீணுக்கிக் கெடுத்துக்கொள்ளாமல் இனிமையாகவும் மனம் சந்தோஷமாகவும் இல்லற சுகத்தை அனுபவித்துக்கொள்ள இவ்வருமையான முத்த ஞானம் பெரிதும் பயன்படும்.

அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய சர்வ கலாசாலையின் இரண்டு பெரிய வித்துவான்கள் தத்தம் அனுபவத்தை வெளியிட்டு வருந்தி யிருக்கின்றார்கள். "நாங்கள் முத்தமிட்டு அறியாதவர்கள். முத்தத்தின் பாக்கியத்தைப் பெறக் கொடுத்து வைக்காத நிர்ப் பாக்கியசாலிகள். நாங்கள் இது சமயம் வருந்துவதுபோல வாலிபர்கள் ஒரு போதும் வருந்தக்கூடாது. முத்தமிடும் விஷயத்தில் அவர்கள் பூரண ஞானம் பெற்றிருக்கவேண்டும்" என்று பெரிய பிரசங்கத்தி னிடையில், பசுமரத்தாணி போல ஒவ்வொரு

வர் மனத்தில் பதியும்படி பிரசங்கம் செய்திருக்கின்றார்கள். அவ்விரு வித்துவான்களின் உண்மை மொழிகளை ஒவ்வொரு மனித இதயமும் கருணையோடு ஏற்றுக் கொள்ளுகின்றது. இன்னும் இதுவரையிலும் முத்தத்தின் ஆனந்தத்தைக் கொஞ்சமும் பெறாத நிர்ப்பாக்கியவான்கள் எண்ணிறந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்களெல்லோரும் அமெரிக்காவின் வித்துவான்களின் வார்த்தைகளை முழு மனதுடன் அங்கீகரிப்பார்கள். இன்னும் சிலர் முத்தத்தின் இன்பத்தைப் பெற்றிருந்தாலும் அதன் லக்ஷணத்தை அறியாதவர்களாயிருக்கின்றார்கள். நாகரிக மற்றவர்கள் போலவும் நடந்து கொள்ளுகின்றார்கள். அந்த முத்தம் என்னும் தேவாமிர்தத்தை எப்படிச் சுவைப்பது என்பதைக் குறித்தே இந்நூல் எழுதப்படுகின்றது. இவ்விதமான நூல் வெளிவராததனாலும், பிரஜைகள் அந்தகாரத்தில் அடைப்பட்டிருப்பதனாலும் இந்நூலிற்குத் தற்காலம் பெருந்தாகம் ஏற்பட்டிருக்கிறது. அதை யுணர்ந்தே முத்தம் என்னும் தேவாமிர்தத்தை யாவரும் வகுப்பு வித்தியாச மின்றியும்; மத வித்தியாச மின்றியும்; அந்தஸ்து வித்தியாச மின்றியும்; வயது வித்தியாச மின்றியும், கால தேச வர்த்தமான பேதங்களின்றியும் ஒரே சமமாக அருந்தி ஆனந்த மனுபவிக்க வேண்டுமென்ற நன்னோக்கத்தைக் கொண்டு மங்கையின் முத்தம் என்னும் இவ்வரிய நூலை வெளியிடத் துணிந்தனம்.

“மங்கையின் முத்தம்” என்னும் அரிய நூல் பள்ளிக்கூட மாணவ மாணவிகளுக்குப் பாடப் புத்தகமாக அமைக்கப்படவும் வேண்டும். இந்நூலின் ஞானத்தினால் அவர்களது பிற்கால வாழ்க்கை மிகவும் மேம்பாடு அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த ஞானம் இன்றியமையாமல் வேண்டும் என்று பெருந்தாகங் கொண்டிருப்பவர்களுக்குத்

தண்மை பொருந்திய நீரைப்போல் பயன்படும் என்பது திண்ணம். அப்பொழுது தான் இத்துறையில் இறங்குவோர்களுக்கு இந்நூல் பால சிட்சையைப் போலவும், வயதானவர்களுக்கு இப்புத்தகம் ஓர் உத்தம நண்பனைப் போலவும் உபயோகப்படும் என்ற உறுதியைக் கொண்டே பிரசுரிக்கின்றோம். இதுவரையில் முத்தம் என்னும் தேவாமிர்தத்தை விவரிக்கும் நூல்கள் வெளிவந்ததே கிடையாது. அதைக் குறித்து எழுதும் ஞானம் ஒருவரும் இதுகாறும் பெற்றிராததே அல்ல அதற்குக் காரணம். அதைக் குறித்து ஒருவருக் கொருவர் பேசிக் கொள்வதுகூட வெட்கம் என்று கருதுங் காலத்தில் புத்தகம் வெளியாவது எங்ஙனம் ?

மங்கையின் முத்தம் அல்லது மங்கையருக்கு முத்தமளிக்கும் முறைகள் என்ற இந்நூலில் சாதாரண பாமர மக்களுக்குத் தெரியவாராத உண்மை தத்துவங்கள் பல மலிந்து கிடக்கின்றன. இதில் கண்டிருக்கும் விஷயங்கள் தேடித் தேடி எடுத்தாலும் கண்டெடுக்கப்படாத விலையுயர்ந்த முத்துக்கள் போல்வனவாம். ஒவ்வொருவரும் வாரி வாரி உண்ண மேன்மேலும் வற்றாமற் சுரந்துவரும் ஊற்றுப் போலவும்; தோண்டத் தோண்ட பொன் அதிகமாகத் தோன்றும் தங்கச் சுரங்கம் போலவும், முத்தேயான முத்துக்களின் விஷயங்களைத் தெளிக்கின்றது.

இந்நூலில் காணப்படும் அரிய விஷயங்களை ஆடவரும் மகளிரும் படித்து அறிந்து அதன்படி நடத்தையில் ஒழுகி வருவார்களானல் ஒவ்வொருவரும் சொர்க்க போகத்தைப் பெற்றது போல் ஆனந்தமடைவார்கள் என்பதில் சற்றும் சந்தேகம் கிடையாது.

பிரபவஹு, புரட்டாசிமீ.
விஜயதசமி

கீ. பி. சே.

## ‘மங்கையின் முத்தம்’ விடுதூது

முத்த மளிக்கும் முறைகளைப் போதிக்கும் இனிய புத்தகமே! நீ வெளியில் உலகத்தில் எங்கணும் பாவி ஒவ்வொருவருக்கும் களிப்பினை யுண்டாக்குவாயாக. சூரிய சந்திரர்களைப் போல பேதமற்று யாவருக்கும் பிரகாசத்தைக் கொடுப்பாயாக. குடியானவனது குடிசையி னுள்ளேயும் தனவந்தனது அலங்கார மண்டபத்தி னுள்ளேயும் பேதமின்றி சென்று பரவுவாயாக. உபகாரம் என்றால் ஊரைவிட்டோடும் உலோபி கொடைத் தொழிலைச் செய்யாமல் அழுத்தி மூடியிருக்கும் தன்கைகளைத் திறக்கச் செய்து உன்னை ஆவலோடு பிடிக்கச் செய்து கொள்வாயாக. கர்வமடைந்து ஆகாயத்தைப் பார்க்கும் அகங்காரிகளைத் தாழ்மையுறச் செய்வாயாக. மிக்க எளிய பேதைமையானவர்களை மெதுவாக உன்னதப் பதவியி லிருத்துவா யாக. எல்லா ஆடவர்களையும் மகளிர்களையும் ஒரே நிலைமையில் பேத மில்லாமலும் சம அந்தஸ்திலும் இருக்கச் செய்வாயாக. மத பேதத்தைப் பாராட்டாமலும், ஜாதி பேதத்தைப் பாராட்டாமலும், காலதேச வர்த்தமான வேறுபாட்டைப் பொருட்படுத்தாமலும்; யாவரையும் ஒரே மாதிரியான இன்பத்தை அடையச் செய்வாயாக. அந்த அபேதமான சம நிலைமையில் இருதயங்கள் ஒன்றுபடக் கலந்து ஆனந்தமடையச் செய்வாயாக.

இந்தச் சுகானந்தக் கனியை நீவிர் எடுத்துப் புசித்து நலம் பெறுவீர்களாக. இந்நூலிற் கண்டுள்ளபடி இக்கனியை உண்பீர்களானால் இக்கனி கெட்டுப் போவதில்லை; நோயை உண்டாக்குவதுமில்லை. சாதாரணமாகப் பூவுலகத்தின்கண் உண்டாகும் விருக்ஷத்தின் கனி அல்ல இது. தேவலோகத்துக் கற்பகத் தருவின் இனிமையான கனிகளே இவை. நீவிர் வேண்டும் ஆனந்தத்தைத் தடையின்றி அளிக்கவல்லது இவ்வருமை வாய்ந்த ‘மங்கையின் முத்தம்’ என்னும் முத்துப் புத்தகம்.

---

# மங்கையின் முத்தம்

(முதற் பாகம்)

ஸ்ரீ:

# மங்கையின் முத்தம்

## க. முத்தத்தின் ஆதி சரித்திரம்

முத்தம்—ஓமரின் இலியட்—பெற்றோர் தம் குழந்தைக்கு முத்தமிடுதல்—யூதர்களின் முத்தம்—ரோம் நகரில் முத்தம்—முத்தமே சொத்தின் பாத்தியதையை அளிக்கும்—ஆஸ்டிரியா தேசத்து முத்தம்—அமெரிக்கரின் முத்தம்—பைரன் விவரிக்கும் முத்தம்—வைத்தியர் குறை கூறுவது—

'முத்தம்' என்பது காதல், சிநேகம், அபிமானம் மரியாதை இவைகளுக்கு எல்லாம் அடையாளம். உலகத்திலுள்ள கல்வி கேள்விகளிற் சிறந்த நாகரிக முற்றவர்கள் யாவரும் சாதாரணமாக அனுஷ்டித்து வரும் ஒரு பெரிய வழக்கம்.

அனாதி காலந்தொட்டு முத்தம் என்பது முதன் முதலில் தாய் தந்தையர்கள் தம் குழந்தையினிடத்தில் தமக்குள்ள பிரியத்தைக் காட்ட உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. அநேக ஆயிர வருஷங்களுக்கு முன் கிரீஸ் தேசத்தில் ஓமர் என்னும் அந்தகக் கவி நம்முடைய இராமாயணத்தைப் போன்ற ஓர் அருமையான கதை இலியட் என்ற பெயருள்ளதை எழுதி இருந்தார். அதில் அப்புலவர் முத்து என்பதைப் பெற்றோர்கள் தமது குழந்தைகளினிடத்தில் தான் முதன் முதலில் பயன் படுத்தி வந்தார்கள் என்று விவரித்

திருக்கின்றார். அவரே இன்னோரிடத்தில் யுத்த களத்தில் ஜயித்தவனது கையை தோல்வி யடைந்தவன் முத்த மிடும் ஒரு வழக்கம் அக் காலத்தில் இருந்து வந்ததாகவும் கூறியிருக்கின்றார். பிரோஸி என்னும் யுத்த வீரன், அசகாய சூரனும், பராக்கிரமசாலியும், திக்கு விஜயம் செய்து பல அரிய தீரச் செயல்கள் புரந்த தீராதி தீரனும், வீராதி வீரனுமான உலிசீயஸ் என்பவனுடன் சண்டை செய்து தோல்வி யடைந்தபோது அந்த உலிசியஸினுடைய வீரம் பொருந்திய கைகளை முத்தமிட்டான். அத்தகைய தைர்ய சிங்கமாகிய உலிசியஸ் ஒரு காலத்தில் ஸர்ஸி என்னும் அழகிய மாதைக் கண்டபோது அவளது சுந்தரத்திற்கு அடிமையாகவில்லை. அவளுக்கு ஒரு முத்தமும் கொடுக்க வில்லை. பாரிஸ் என்னும் அரசன் இராவணனைப்போல பிறன் மனையாளாயிருந்த ஹேலன் என்னும் பெண்ணைப் பலாத்காரமாகத் தூக்கிச் சென்ற காலத்திலும்கூட அவளை முத்தங் கொடுக்கவில்லை.

ஹீரா என்னும் தேவமாதும் ஜீயஸ் என்னும் தேவனும் அன்பும், அருளும் காதலும் நிறைந்த ஸ்த்ரீ புருஷர்களாக விருந்தும் ஒருவருக் கொருவர் காதல் மிகுதியை முத்தங்களினால் வெளியிட்டுக் கொள்ளவில்லை. இத்தியாதி விஷயங்களை எல்லாம் அந்த ஓமர் என்னும் புலவர் சிகாமணி இலியட் என்னும் பெரிய காவியத்தில் வெளியிட்டிருக்கின்றார். இன்னோரன்ன விஷயங்களினால் காமநுகர்ச்சியை வெளிப்படுத்தவோ அல்லது உண்டாக்கிக் கொள்ளவோ முத்தங்கள் அக்காலத்தில் வழங்கப்படவில்லை யென்றும் அவ்வழக்கம் பெற்றோரிடத்தில் மட்டுந்தான் இருந்து வந்தது என்றும் புலனாகின்றது.

கிரீஸ் தேசத்து மற்றொரு வீரன் அழகிலும் வனப்பிலும் மிகுந்த அண்டிரோமாசி என்னும் கன்னிகையிடம்

அன்பும் ஆதரவும் காட்டிக் கொஞ்சிக் குலாவி சல்லாபம் செய்யும் காலத்திலும் அவன் முத்தத்தைப் பிரயோகிக்காமல் தன் கைகளினாலே அவளது திவ்விய அங்கத்தைப் பாதாதி கேச பரியந்தம் தடவிக் கொடுத்து ஆனந்தத்தை அடைந்து வந்ததாகவும் அந்தப் புத்தகத்திலேயே குறிக்கப்பட்டிருக்கின்றது. எகிப்து தேசத்திலும் கூட ஆதிகாலத்தில் முத்தமிடும் வழக்கம் இருந்ததில்லையாம். ஒருவர் தமது அளவில்லாப் பிரியத்தை மற்றவர்க்குக் காட்டிக்கொள்ள ஒருவருக் கொருவர் தேகத்தைக் கட்டி ஆலிங்கனம் செய்து வந்தார்கள். அவர்கள் வாயோடு வாய் வைத்து உதட்டோடு உதடு வைத்து முத்தமிட்டே அறியார்களாம். முத்தம் என்னும் பதம் ஒன்று வழக்கத்திலேயே இருந்து வரவில்லை என்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தார்களாம்.

பூர்வீகர்களும் நாகரிக மற்றவர்களும் முத்தம் என்பதைச் சிற்றின்ப விஷயமாகத் தெரிந்து கொண்டவர்களே அல்ல. முத்தம் என்பதை தாய் தந்தையர் தமது குழந்தைகளிடத்தில் மட்டுமே உபயோகித்து வந்தார்கள். ஆகவே, பெற்றோர்கள் தமது அளவிலாப் பிரியத்தையும், வாத்ஸல்யத்தையும் முத்துக்களின் மூலமாக வெளிப்படுத்தி வந்தார்கள். நாகரிகமற்று கானகத்தில் வாழும் காட்டுமிராண்டிகள் கூட குழந்தைக்குத் தாகமெடுக்கும் சமயத்தில் தங்களுடைய வாயில் நீரைக் குடித்து விழுங்காமலிருந்து தமது குழந்தையின் வாயில் அந்த நீரை உமிழ்வார்களாம். அவ்விதமாகக் குழந்தைகளுக்கு நீர்க்குடிப்பித்து வந்தார்கள். அவ்விதம் நீரைக் குடிப்பியாமற் போனால் குழந்தையின் உயிர் நில்லாது. இச் செய்கையினின்று முத்தம் என்பது சிற்றின்ப நுகர்ச்சிக்காக ஏற்படவில்லை யென்றும் தாய் தந்தையரின் பிரியத்தைக் காட்டப் பயன் பட்டு வந்தது யென்றும் விளங்குகின்றது. குழந்தைகள் கூட முத்தமிடக்

கற்றுக் கொடுத்தால் தான் முத்தம் கொடுக்கின்றது. குழந்தைக்கு அழுவது இயற்கையாகவே தெரிந்திருக்கின்றது. அழுவதற்கு ஒருவரும் கற்றுக் கொடுப்பதில்லை. ஆனால் முத்தமிடுவதற்குக் கற்றுக் கொடுக்கவேண்டியது அவசியமாகின்றது, அப்பியாசம் வேண்டியிருக்கின்றது. சிறு குழந்தைகள் ஆறு மாதம் கழிந்த பின்னர் முத்து கொடுக்கக் கற்றுக் கொடுக்கப்படின் முத்தம் கொடுக்கும். இது சர்வ சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்படுகின்ற ஒரு சம்பவமாகும். குரங்கினிடத்தில் பார்த்ததைச் செய்யும் குணமிருப்பதைப்போல குழந்தைகளிடத்திலும் ஒருவர் செய்வதையோ சொல்வதையோ அப்படியே செய்யவும் சொல்லவும் கூடிய ஒருவித சக்தி இயற்கையாகவே குடிகொண்டிருக்கிறது. முத்தமிட்டால் தானும் பதிலாக முத்தங்கொடுக்கும்.

புராதன யூதர்களிடத்தில் முத்தம் சாதாரண வழக்கமாக விருந்து வந்தது. தற்கால யூதர்கள் முத்தம் என்பதை அவ்வளவு தாராளமாகக் கைக்கொள்ளவில்லை. பூர்வீகர்கள் அறிமுகமானவர்களாக விருந்தாலும் அல்லது அன்னியர்களாக விருந்தாலும் ஒருவருக்கொருவர் சந்திக்க நேர்ந்தால் கைகளையும் தலையையும் புஜங்களையும் முத்தமிடுவார்கள். முத்தமிடும்போது "உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும்" என்பதாக வாயினால் சொல்லிக்கொண்டே முத்தமிடுவார்கள் அந்தப் பூர்வீக யூதர்கள் யாருக்கேனும் தம்முடைய மரியாதையைத் தெரிவிக்கும் காலத்தில் அவர்கள் அப்பெரியாரது பாதங்களையும் அடிச் சுவட்டையும் முத்தம் இடுவார்களாம். ஜூடாஸ் மெஸ்ஸையாவை வணங்கியதனால் இம்மாதிரியான வழக்கங்கள் மிகவும் சாதாரணமாக விருந்தன. இக்காலத்தில் கைகுலுக்கும் வழக்கம் எவ்வளவு சாதாரணப் பழக்கமாக இருந்து வருகின்றதோ அதுபோல

அக்காலத்தில் பாதத்தை முத்தமிடுவதும் அடிச் சுவட்டை முத்தமிடுவதும் பெரிய வழக்கங்களாக இருந்து வந்தன. இக்காலத்திலும் கூட மகமதிய உலாமாக்களை அவர்களது சீஷர்கள் பாதங்களைத் தொட்டு முத்தமிடுகின்றார்கள். இன்றைக்கும் நாளைக்கும் அவ்வழக்கம் மறையாமல் இருந்து வருகின்றது. கிறிஸ்தவமத ஸ்தாபகரான இயேசு முத்தம் கொடுப்பதை ஒரு பெரிய வழக்கம் என்பதாகக் கொள்ளாமல் அன்பின் அறிகுறியாகக் கருதினார். ஆகவே, அவர் ஜூடாஸை நோக்கி 'மனித குமாரனை முத்தத்தால் காட்டிக் கொடுக்கப் பார்க்கின்றாயா!' என்று இயேசு கேட்டார். அதற்காகத் தான் இன்றைக்கும் நாளைக்கும் ஜூடாஸின் முத்தம் என்பதாக உலகத்தவர் பழமொழியாகக் கூறி வருகின்றார்கள். ஜூடாஸின் முத்தம் வஞ்சக முத்தத்திற்கு அடையாளமாக இருக்கின்றது.

யூதர்களிடமிருந்து தான் முதன் முதலில் புராதன கிறிஸ்தவர்களுக்கு முத்தம் என்னும் வழக்கம் சென்றது. முதலில் கிறிஸ்தவன் சகோதர சகோதரியின் முத்தங்களையே அறிந்தான். பிறகு கோயிலில் எல்லோரும் ஒருவர்க்கொருவர் க்ஷேமத்தைக் கோரி முத்தமிட்டுக் கொண்டார்கள். இதற்கெனவே அவ் வாலயங்களில் விலையுயர்ந்த ஒரு பொருள் வைக்கப்பட்டிருக்கும். அதை ஒருவரிடமிருந்து ஒருவர் மாற்றிக் கொள்ளுவார். கத்தோலிக் கிரேக்க மாதா கோயில்களில் தற்காலத்தில் புது வெள்ளி நாட்களில் முத்தம் இடுவது பெரிய வழக்கமாக இருக்கிறது. கடவுளிடத்தில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஒருவருக்கொருவர் புது வெள்ளி காலத்தில் சந்திக்கும்போது 'கடவுள் தோன்றி யிருக்கின்றார்' என்று சொல்லி முத்து கொடுத்துக் கொள்ளுவார்கள். அதற்குப் பதில் முத்தம்

'உண்மையில் கடவுள் தோன்றி யிருக்கிறார்' என்று திரும்பி முத்து கொடுப்பார்கள்.

உலகத்தின் கண்ணுள்ள அகில கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு அதிகாரியான போப் பாதிரியார்தாம் கடவுளது பிரதிநிதி என்ற நம்பிக்கை கிறிஸ்தவர்களிடத்தில் உண்டு. அம்மகானிடத்தில் தங்களுக்குள்ள பக்தி வினயத்தைத் தெரிவித்துக் கொள்ளப் பாதிரியாரின் பாதரக்ஷையின் மீது செதுக்கப்பட்டிருக்கும் சிலுவையை முத்தமிட வேண்டும். கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள், அவர் தம் விரலில் அணிந்துள்ள மோதிரத்தை முத்தமிட வேண்டும்.

புராதன ரோம் நகரத்தில் முத்தமிடும் வழக்கம் அதிகரித்திருந்தது. அகஸ்டஸ் சக்கரவர்த்தி ஆண்டுவந்த காலத்தில் அவ்வழக்கம் மிக்க கேவலமான ஸ்திதியை அடைந்திருந்தது. ரோமுலஸ் என்னும் மற்றொரு சக்கரவர்த்தி ராஜ்யபாரம் வகித்திருந்த காலத்தில் ஆடவர் மகளிரை முத்தமளித்து வரும் கெட்ட வழக்கம் அதிகமாகப் பரவியிருந்தது. ஏனென்றால், அக்காலத்தில் பெண் பிள்ளைகள் மதுபானம் செய்து வந்தார்களாம். அவ்விதம் அவர்கள் மதுபானம் செய்திருக்கின்றார்களா என்று கண்டறியவே ஆடவர்கள் அவர்களது வாயை முகர்ந்து பார்த்து வந்தார்கள். மேலும், அக்காலத்தில் பெண்பாலர் மதுபானம் முதலிய போதை தரும் பொருள்களைச் சாப்பிடக்கூடாது என்ற நிபந்தனை இருந்து வந்தது.

புராதன காலங்களில் கிரீஸ் தேசம் மிக்க புகழும் கீர்த்தியும் பெற்றிருந்தது. கல்வி கேள்விகளிலும் நாகரிகத்திலும் தலை சிறந்து விளங்கி யிருந்தது. சட்ட திட்டங்கள் பல அமுலிலிருந்து வந்தன. எவனொருவன் பகிரங்கமாக ஒரு மங்கையை முத்தமிடுகிறானோ அவன் பெரிய குற்ற

வாளி யாகின்ருன். அக் குற்றத்திற்கு ஏற்ற தண்டனை மரண தண்டனையே அளிக்கப்பட வேண்டும் என்று ஒரு கடுமையான சட்டம் இருந்தது. ஒரு சமயத்தில் ஏதென்ஸ் நகரத்தில் ஒரு வாலிபன் இருந்தான். அவன் கொடுங்கோன் மன்னவன் என்ற பெயரை வகித்த பிசிஸ்டிரேடஸ் என்பவனுடைய மகளைப் பகிரங்கமாகத் தெருவில் முத்தமிட்டான். அவ்விரு காதலர்கள் அவ்வளவு அதிகமாக நேயங்கொண்டிருந்ததனுல் பகிரங்கத்தையும் பொருட் படுத்தாமல் தமது ஆவலைத் தணித்துக் கொண்டார்கள் போலும். ஓரோர் சமயங்களில் இரும்பு போன்ற கடின சித்தம் படைத்திருப்பவர்கள்கூட அனலிடைப்பட்ட மெழுகுபோல் மன மிளகி யிருப்பதற்குப் பல அத்தாட்சிகள் சரித்திரங்களில் காணக் கிடைக்கின்றன. கொடூர சித்தம் படைத்தவர்கள் கூட கருணை கொண்டு நற்செய்கைகள் செய்திருக்கின்றனர் என்று சரித்திரங் கூறுகின்றது. பிஸிஸ்டிரேடஸினுடைய மனைவி தன் கணவனை நோக்கி 'நாயகா! நமது உயர் குலத்துதித்த குமாரியைச் கொஞ்சமும் பயமின்றிப் பகிரங்கமாய் முத்தமிட்டப் பாதகனை சட்டப்படி மரண தண்டனை யளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவன் செய்த குற்றத்திற்குச் சிரச்சேதமே தகுந்த தண்டனை' என்று வேண்டிக் கொண்டாள். அவ்விதம் வேண்டிக் கொண்ட மனைவியின் வார்த்தையை அலக்ஷியம் செய்து உல்லங்கனம் செய்தான். 'பாவையே! உன் மொழிக்கு இது சமயம் நான் இணங்காமலிருப்பதற்கு முக்கிய காரணமிருக்கின்றது. நம் உயிர் நிலையான நமது பெண்மணி மீது விசுவாசமும் நேயமும் கொண்டுள்ள அந்த அழகுள்ள வாலிபனைக் கொலை செய்வதால் நமக்கு என்ன லாபம்? நம் மருந் குழந்தையின் வாழ்க்கை என்னும்? நமது நேசனைக் கொலை செய்வோமானுல் நம்மை இயற்கையிலேயே விரோ

திக்கும் பகைவர்களை நாம் என்ன செய்ய வேண்டும்? நம்முடைய நேசனுக்கு ஒருவிதத் தீங்கும் இழைக்கலாமோ நாம்' என்றுரைத்து அவளைச் சாந்தப்படுத்த அவளும் அங்கீகரித்துக் கொண்டாள்.

மேற்கூறிய சம்பவத்திற்கு மாறாகவும் நடந்திருக்கிறது. ரோம் நகரத்து **புப்ளியஸ் மேவியஸ்** என்பவன், ஒரு பிரபுவின் மகளை முத்தமிட்ட ஓர் அடிமையின் காலையும் கையையும் பிய்த்துப் பிய்த்து கிழித்தெறிந்ததாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. கேடோ என்னும் நகர உத்தி யோகஸ்தர் ஒரு சட்டத்தை ஏற்படுத்தி யிருந்தார். அதாவது, மணஞ் செய்துகொண்டு இல்வாழ்க்கையை நடத்தி வரும் தம்பதிகள் தமது மக்களின் முன்னிலையில் ஒருவரை யொருவர் முத்து கொடுத்துக் கொள்ளக்கூடாது என்ற ஒரு சட்டம் ஏற்படுத்தி யிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

தன் நாயகனைத் தவிர வேறொருவரையும் ஒரு பெண் முத்தம் கொடுக்கக் கூடாது என்ற ஒரு நிர்ப்பந்தமான சட்டமும் இருந்து வந்தது. அப்படி வேறொருவனை ஒரு மனைவி முத்தங் கொடுத்தால் அவளுக்கு ஜீவனுமிசமும் ஆஸ்தியில் பங்கும் கொடுக்கப்படக் கூடாது என்ற ஒரு சட்டமும் அமுலில் அக்காலத்தில் இருந்து வந்தது.

இதற்கு மாறாக, ஒருவன் தான் விவாகம் செய்ய நிச்சயிக்கப்பட்ட பெண்ணை விவாகம் செய்து கொள்வதற்கு முன் தான் இறக்குந் தருணத்தில் இம்மங்கையை மூன்று பேர் முன்னிலையில் முத்தங்கொடுத்து தனது விசுவாசத்தை யும் பிரியத்தையும் வெளிப்படுத்திக் கொண்டானுல் அவன் மரித்த பிறகு அம்மங்கை அவனது ஆஸ்தியில் பாதி பங்குக்கு உரியவளாவாள் என்றும் சட்டம் போதிக்

கின்றது. சட்ட காரியங்களுக்கெல்லாம் அம்மங்கை இறந்தவனது தர்ம பத்தினியாகவே கருதப்படுகின்றாள். இக்காலத்திலுங்கூட அனேக தேசங்களில் மணவினை முடிக்கும் முன்னர் நிச்சயித்த மணமகளை முத்தங் கொடுத்திருந்தால் அம்மங்கையே அவ்வாலிபனுக்கு மனைவியாகக் கருதப்படுகின்றாள்.

சக்கரவர்த்திகள் ரோம் ராஜ்யத்தைப் பரிபாலித்து வரும் நாளில் இவ்வளவு கடுமையான சட்ட திட்டங்களுடன் இருந்து வந்த முத்தம் தாழ்ந்த நிலைமையை அடைந்துவரத் தலைப்பட்டது. அக்காலத்தில் ராஜ்யபாரம் வகித்த பன்னிரு சக்கரவர்த்திகள் முத்தம் கொடுப்பதில் அதிகப் பைத்தியமும் ஆர்வமும் கொண்டுள்ளவர்களாக இருந்ததாக லஸ்டன் என்பவர் தமது ஜீவிய சரித்திரத்தில் எழுதியுள்ளார். எங்குப் பார்த்தாலும் முத்தத்தைக் குறித்து அவதூறும் நிந்தனையும் அதிகரித்து விட்டன. ஆகவே, அகஸ்டஸ் டிபீரியஸ் முதலியவர்கள் முத்தத்தை எவரும் கொடுத்துக் கொள்ளக்கூடாது என்ற ஒரு கடுமையான தாக்கீதை பிறப்பித்தார்கள். பெரிய பெரிய ராஜ விருந்துகளிலும் தாதிகளின் உதடுகளை ஒவ்வொரு விருந்தாளியும் முத்தம் கொடுத்து வரும் வழக்கம் இருந்ததாம். அந்த வழக்கத்தை அடியோடு ஒழித்து விட்டார்கள்.

ஒடிஸியஸ் என்னும் வீராதி வீரனை எவ்விதம் அவனது வேலையாட்கள் தலையிலும் புஜங்களிலும் கைகளிலும் முத்தமிட்டு வந்தார்கள் என்பதைக் குறித்து ஓமர் என்னும் அந்தகக் கவி விவரித்திருக்கின்றார். எவ்விதமான அந்தஸ்திலுள்ளவர்கள் இம்மாதிரியான மரியாதைகளைச் செய்யலாம் என்றும் இன்னும் எந்த விதமான நிலைமையிலுள்ளவர்கள் கை குலுக்கி மட்டும் மரியாதை செய்ய அருகர் என்பதைக்

குறித்தும் அக்கவி பிரஸ்தாபித்திருக்கின்றார். ஆகவே, இவ் விதம் ரோம் ராஜ்யத்தில் தலையையும் கைகளையும் இன்னும் பெரிய அந்தஸ்திலுள்ளவர்களின் பாதத்தையும், வணங்கு பவனது நிலைமைக்குத் தக்கபடி முத்தமிட்டு வருவது பழைய வழக்கமாக இருந்தது.

சக்கரவர்த்திகள் ஆண்டுவர ஆரம்பித்த காலத்தில் ரோம் நகரத்தில் பெரிய அந்தஸ்திலுள்ளவர்கள் பொதுக் கூட்டங்களிற் தோன்றவே மாட்டார்கள். ஏனென்றால், அவர்களை சாதாரண ஜனங்கள் அப்படியே விழுங்கிவிடுபவர் கள் போல முத்தங்கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். ஓர் அரிய அபூர்வமான தீரச் செய்கையை எவரேனும் செய் தால் அன்னவனைக் கௌரவப்படுத்தவும் அங்கீகரிக்கவும் சக்கரவர்த்தி தாமாகவே அவனை முத்தமிடுவார். அத்தகைய கௌரவம் எல்லாருக்கும் கிடைத்து விடாது. அக்காலத் தில் அஃது அரும்பாக்கியமெனக் கருதப்பட்டு வந்தது.

புராதன டோனியர்கள் முத்தத்தைக் காதலுக்கும் நேசத்திற்கும் அறிகுறியாக மதித்து வந்தார்கள். ஆனால் தற் காலத்தில் அவர்களும், ஸாக்ஸன் ஜாதியினரும் பொதுக் கூட்டங்களில் ஒருவரையொருவர் கைகுலுக்கி வணங்குகின் றார்கள். மத்திய காலங்களில் முத்தம் என்பது மற்றைய உணர்ச்சிகளைத் தெரிவித்துக் கொள்ளும் அறிகுறியாயிருந் தது. சிற்றரசர்களும், பிரபுக்களும் அரசரது கத்தியை முத்தமிடவேண்டுவது அவசியமா யிருந்தது. நீதி ஸ்தலங் களில் சிலுவையையும், பைபில் புத்தகத்தையும் முத்தமிட்டு வந்தார்கள். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இன்னும் இம்முறை கையாளப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது. அமெரிக்காவில் பைபிலின் மீது தந்தத்தினால் செய்யப்பட்ட உறை ஒன்று போடுவித்து அதை முத்தமிட்ட பின்னர்

அதனாலேற்பட்ட எச்சிலை ஈரத்துணி கொண்டு துடைத்து விடுகின்றார்கள்.

ஆஸ்டிரியா தேசத்தில் ஸ்திரீகளின் கையை முத்த மிடுவது நற்குலத்தின் செய்கை என்பதாகக் கருதப்படு கிறது. ஸ்பெயின் தேசத்தில் ஆண்பாலர் பெண்களை முத்த மிடாமல் வார்த்தையால் மட்டும் 'உன் கையை முத்த மிடுகிறேன்' என்று சொல்லியே திருப்தியடையவேண்டும். இத்தாலியா தேசத்தில் ஸ்திரீகளை முத்தமிடுவது நெருங்கிய பந்துத்துவ முள்ளவர்கள் தாம் செய்து கொள்ளவேண்டும். சினேகிதர்கள் கூட அவ்விதம் செய்து கொள்ளுவதினின் றும் தடுக்கப்பட்டவர்கள். ருஷியா தேசத்தில் ஸ்திரீகள் கைகளை முத்தமிடத் தெரியாதவர்கள். ஆனால் நெற்றியை முத்தமிடுவார்கள். ருஷிய ஸ்திரீ தன் விருந்தாளியைத் திருப்தி செய்யவேண்டு மென்று எண்ணினால் அவன் தன் அறையுனுள் நுழையும்போது அவனுடைய புருவத்தில் முத்தமிடுகின்றாள். அவன் உள் நுழைந்ததும் அவனுக்கு ஒரு கோப்பை பிராந்தியும் கொடுக்கின்றாள். ருஷியா தேசத்துக் குடியானவன் தன் பிரபுவை வணங்குவது எப் படி யென்றால் அப்பிரபுவினுடைய முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அவைகளுக்கு முத்தமிடுவான். போலண்டு தேசத்தவர்கள் தங்களுடைய எஜமானனது இருபுஜங்களை முத்தமிடுவார்கள். ச்ஜீச் என்னும் ஜாதியினர் தங்களுடைய எஜமானனுடைய ஆடைகளை முத்தமிடுகின்றார்கள்.

அமெரிக்கா தேசத்தில் முத்தங்கள் இரண்டு வகையி னவையாக விருக்கின்றன. ஒன்று நேய முத்தம் மற்றொன்று மரியாதை முத்தம். காதலின் முதல் முத்தத்தை எவர் தாம் மறந்து விடுவார்கள்? பூர்ண சந்திரன் பிரகாசிக்கும் இரவுகளும் நக்ஷத்திரம் ஒளிதரும் இராக்காலங்களும் மனத்

தின் கண் முன் தோன்றுகின்றன. காதல் என்னும் வெள்ளத்தில் கரை தெரியாது உழன்று கிடப்போர் எத்தனை பேர்? பஞ்சினும் மெத்தென்று மிருதியாயுள்ள அழகிய மங்கையைத் தன் கைகளில் தாங்காதவன் எவனேனும் உண்டோ? அப்படித் தாங்கிக்கொண் டிருக்கும் ஒரு நிமிஷ காலத்தை கல்ப காலமாகத் தோன்ருதவனும் எவனேனும் உண்டோ?

சரித்திரத்தில் முத்தங்கள் எவ்வளவோ அரிய பெரிய காரியங்களைச் செய்திருக்கின்றன. ரோம் தேசத்துக் கீர்த்தி பெற்ற சீசருக்கு அவருடைய சதிக்காரர்களின் முத்தத்தை ஒருவரும் மறந்திருக்க மாட்டார்கள். ஸ்காட்லந்து தேசத்து முதலாவது ஜேம்ஸ், டென்மார்க்கு தேசத்து இளவரசியான அன்னி என்பவருக்கு முத்தங் கொடாதிருந்த விஷயமும் ஒவ்வொருவருக்குந் தெரியும். காவியங்களிலும் செய்யுள்களிலும் முத்தங்கள் மிகவும் விரிவாகவும் உயர்வாகவும் கூறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சமயங்களில் முத்தங்களே அக் காவியங்களுக்கும் செய்யுள்களுக்கும் முழு விஷயங்களாக எடுத்தாளப்படுகின்றன.

பைரன் என்னும் ஆங்கில வித்வான் முத்தத்தைப் பற்றிக் கூறி யிருக்கின்ருர். 'நீண்டகாலந் தங்கும் முத்தம்; யௌவனமும் காதலும் நிறைந்த முத்தம் என்றும் யௌவனமும் அழகும் காதலும் மிகுந்த மங்கைக்குக் கோவைக் கனியை நிகர்த்த சிவந்த வாய் ஒன்றே இருபுறங்களினுமிருந்து முத்துக்களைப் பதித்துக் கொள்ள விருக்கின்றது' என்று குறை கூறி யிருக்கின்ருர்.

முத்தம் என்னும் ஓர் அரிய இனிய செய்கையைக் குறித்து ஹெர்ரிக் என்னும் நிபுணர் 'காதலின் தேனினுமினிய பாஷை' என்பதாகக் கூறுகின்ருர். காதல்

கொள்ளாத ஆடவரும் மகளிரும் அந்தப் பாஷையைத் தெரிந்து கொள்ள முடியாது. காமமும் கருங்கடலும் இரண்டும் ஒரே தன்மையன. மனக்கொதிப்பை உண்டாக்கும் முத்தம், தேகத்தில் தேன்போல் கொட்டும் கடலின் அலைகள், இவைகளின் அவஸ்தையைச் சொல்லால் விவரிக்க முடியாது; வார்த்தைகளால் விவரிக்கவும் ஒண்ணாது; சித்திரங்களினாலும் சித்திரிக்க முடியாது.

வைத்திய நூல் வல்லார்கள் யாவரும் நாம் முத்தம் கொடுக்கும் வழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்றும் அதனால் பற்பல வியாதிகள் ஒருவருக்கொருவர் தொத்திக் கொள்ள நேருகின்றதென்றும் எச்சரிக்கை செய்கின்றார்கள். தொன்று தொட்டு மனத்திற்குச் சாந்தத்தையும் இனிமையையும் குதூகலத்தையும் ஒருங்கே காதல காதலியருக்குக் கொடுத்து வருகின்ற தெய்விகமான அமிர்தம் போன்றது முத்தம் என்பதைத் தெரிந்து கொண்டால் என்னதான் அவர்கள் சொல்வார்களோ ? ஒரு வேளை ஒருவருக்கொருவர் இதழை முத்தமிடாமல் தங்களது பிரியத்தை வெளிக்காட்டிக்கொள்ள மூக்குகளை ஒன்றோடொன்று சேர்த்து தேய்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லுவார்கள் போலும் !

---

## ௨. முத்தத்தின் ஆதி சரித்திரம்

(தொடர்ச்சி)

முத்தத்தின் உற்பத்தி—பூர்வீக ரோம் நகரில் முத்தம்—பூர்வீக யூதர்களுடையவும், பழைய கிறிஸ்தவர்களுடையவும் முத்தம்—பைபிலீய முத்தம்—மதசம்பந்தமான குறிப்புக்கள்—பழைய இங்கிலாந்தில் முத்தம்—எராஸ்மஸ் விவரிக்கும் பழைய முத்து கொடுக்கும் பழக்கங்கள்—அகராதியில் முத்தத்தின் பொருள்—வேடிக்கை யார்த்தமான சில வர்ணனைகள்—முத்தத்தின் இலக்கணம்—முத்தங்கள் இனிமையா யிருப்பதற்கு சாஸ்திரீயமான காரணம்.

முத்தத்தை உண்டாக்கியது இயற்கை யென்றும், அது முதலில் ஒருவர்க் கொருவர் காதல் கொள்ளும்போது ஆரம்பமாகின்றதென்றும் திருத்தமாகச் சொல்லப்படுகின்றது.

வெகு காலமாக பூர்வீக ரோம் நகரில் அது ஒரு மத சம்பந்தமான சடங்காக இருந்து வந்தது. ரோமர்களில் முத்தத்தின் தெய்விகத் தன்மை மறக்கக் கூடாததாக விருந்தது. கடைசியாக அது சாதாரண வந்தனம் புரியும் வழக்கத்திற்குள் வந்துவிட்டது.

ரோம் நகரில் முத்தமானது காலப் போக்கில் வந்தனம் புரிந்துகொள்ளும் செய்கையாக உபயோகப்பட்டு வந்தது. மனிதர்கள் தாம் எவ்விதமாக மற்றவர்களை நேசிக்கிறார்களென்றும், தம்மை எவ்விதமாக மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களென்றும் அவர்கள் ஒருவருக் கொருவர் அளித்துக் கொள்ளும் முத்தங்களின் எண்ணிக்கைகளினால் சோதித்து அறிந்து கொள்ளுகிறார்களாம்: ரோமர்களில்

ஒரு விசித்திரமான சட்டம் காான்ஸ்டாண்டின் என்பவரால் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது.

ஒருவன் தான் மனைவியாக்கிக் கொள்ள விரும்பும் மங்கையை முத்தமிட்டிருந்தால், விவாக மாவதற்கு முன் தான் இறக்க நேர்ந்தால் அவனது சொத்தில் பாதி அம்மங்கையைச் சேரச் சுதந்திரம் உண்டு. அவளும் இறந்துவிட நேரும் பக்ஷத்தில் அவளது நெருங்கிய உறவினர்கள் அவளது பாதி பாகத்தைப் பெறவும் சுதந்திரம் உண்டு. பூர்வீகர்க ளிடத்தில் முத்தமானது பக்தி விசுவாசத்திற்கு ஓ.. அறிகுறியாக விருந்தது.

யூதர்களிடத்தில் அது சாதாரணமாக ஒருவருக்கொருவர் வந்தனை புரியும் ஒரு வழக்கமான செய்கையாக இருந்தது. ஜூடாஸ் தன் எஜமானனை முத்தத்தினுல் வந்தனை புரிந்தான் என்று சொல்லப்பட் டதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒரு மேதாவி முத்தங்களை மூன்று விதங்களாக மட்டும் பிரிக்கின்றுர். மரியாதை முத்தம் என்றும், வரவேற்பு முத்தம் என்றும், நிக்கிரக முத்தம் என்றும் இம்மாதிரி மூன்று விதங்களாகப் பிரித்திருக்கின்றுர். பற்பல மதங்களில் முத்தம் என்பது பக்தியையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தும் அறிகுறியாக இருந்திருக்கின்றது. மகமதியர்கள் பக்தி விசுவாசத்தோடு மெக்காவிற்கு யாத்திரை சென்று தெய்விகம் வாய்ந்த கல்லின் பின்புறத்தையும், காபாவின் நான்கு மூலைகளையும் முத்தமிடுகின்றுர்கள். ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் 'குறுத்து ஞாயிற'ன்று குறுத்தை முத்தமிடுகின்றுர்கள்.

அகஸ்ட்டின் அடியார் எழுதிய கிரந்தங்களின் முத்தத்தில் நான்கு விதங்களிருப்பதை நாம் காண்கின்றோம். முதலாவது சமாதான முத்தம்; அது பகைவர்களாக

விருந்தவர்கள் நேயர்களாகும் போது கொடுத்துக் கொள்ளும் முத்தம்: இரண்டாவது க்ஷேம முத்தம்; மாதா கோயிலில் ஒருவர்க் கொருவர் அளித்துக் கொள்ளும் முத்தம்: மூன்றாவது அன்பு முத்தம்; நேயர்கள் ஒருவர்க் கொருவர் தமது அன்பைக் காட்டிக்கொள்ள முத்தமிடுவார்கள். பீட்டர் அடியவரும் பால் அடியவரும் தங்கள் கடிதங்களை முடிக்கும்போது ஒருவருக் கொருவர் 'தெய்விக முத்தத்தால் வந்தனம் செய்கின்றோம்' என்று முடிப்பார்கள். நான்காவது காதல் முத்தம்; காதல காதலியர் அன்பும் ஆதரவும் கொண்டு கொடுத்துக் கொள்ளும் முத்தம்: ஆதி காலத்தில் மாதா கோயிலில் முத்தம் என்பது சர்வ சாதாரணமாக வயது, அந்தஸ்து ஆண் பெண் என்ற பேதமில்லாமல் கொடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு பெரிய வழக்கமாக இருந்து வந்தது.

கிறிஸ்தவ வேதமாகிய பைபிலில் எட்டுவிதமான முத்தங்கள் குறிக்கப்பட் டிருக்கின்றன.

1. வந்தனை முத்தம்:—'தாவீது தரைமீது விழுந்து மூன்று தடவை நமஸ்கரித்து எழுந்தான். தாவீதும் ஜொனதனும் ஒருவர்க்கொருவர் முத்தமிட்டுக் கொண்டார்கள். ஒருவர்க்கொருவர் கட்டிக்கொண்டு அழுது கொண்டார்கள்.[1] சகோதரர்கள் எல்லாருக்கும் பரிசுத்த முத்தமிட்டு மங்களஞ் சொல்லுங்கள்.[2] ஒருவர்க்கொருவர் பரிசுத்த முத்தமிட்டு மங்களஞ் சொல்லிக் கொள்ளுங்கள். கிறிஸ்துநாதருடைய சபையில் உட்பட்ட சகலரும் உங்களுக்கு மங்களஞ் சொல்லுகிறார்கள்.[3] மோஸஸ் தமது

1 முதல் சாமுவேல் XX—41.
2 தெசலோனிக்கேயர் V—26.
3 உரோமர் XVI—16.

மாமனுரைச் சந்திக்க வெளியில் சென்று அவருக்கு வணங்கி அவரை முத்தமிட்ட பின்னர் அவர்கள் ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரித்துக் கொண்டார்கள். கூடாரத்தினுள் நுழைந்தார்கள்.[1] சகோதரர் யாவரும் உங்களை வாழ்த்துகிறார்கள். ஒருவரை யொருவர் பரிசுத்த முத்தமிட்டு வாழ்த்துங்கள்.[2]

2. வாழ்த்து முத்தம் :—(நியோமி தன்னுடைய மறுமகளுக்கு) நீங்கள் சாந்தத்தை யடைய உங்களுக்குக் கடவுள் அநுக்கிரகஞ் செய்யட்டும். பிறகு அவள் அவர்களை முத்தமிட்டாள். அவர்கள் தங்களது குரலை உயர்த்திப் புலம்பினார்கள்.[3]

3. சமாதான முத்தம் :—'ஆகவே ஜோஆப் அரசனிடத்து வந்து அவனிடத்தில் சொன்னான். அரசன் அப்ஸலாமை அழைப்பித்து அவன் அரசனிடம் வந்தபோது அவனெதிரில் வணங்கி தரைமீது நமஸ்கரித்து நின்றான். அப்ஸலாமை அரசன் முத்தமிட்டான்.'[4]

4. சரணுகத முத்தம் :—'மகனை முத்தமிடு. அன்றேல் அவனுக்குக் கோபமூளும். அவனது கோபத்தை மூளச் செய்தால் நீ பாழடைந்து போவாய்.'[5]

5. வணக்க முத்தம் :—'பாஆலுக்கு வணங்கப்படாத ஒவ்வொரு முழந்தாளும்; அவனை முத்தமளியாத ஒவ்வொரு வாயும்[6] அவருடைய பாதங்களி னருகே பின்

---

1 யாத்திரை யாகமம் XVIII—7.
2 முதல் கொரிந்தியர் XVI—20.
3 ருத் I—9.
4 இரண்டாவது சாமுவேல் XIV—33.
5 சங்கீதம் II—12.
6 முதல் ராஜக்கள் XIX—18.

தங்கி நின்று தன் கண்ணீரால் அவருடைய பாதங்களைக் கழுவத் துவக்கித் தன் கூந்தலால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தமிட்டு பரிமள தைலத்தால் பூசினாள்.'[7]

6. சம்மத முத்தம் :—'சரியான விடை பகருபவனுடைய உதடுகளை அவர் முத்தமளிக்கின்றார்.'[8]

7. வஞ்சக முத்தம் :—'அவரைக் காட்டிக் கொடுத்தவனே, அவர்களுக்குக் கொடுத்திருந்த அடையாளமானது நான் எவனை முத்தமிடுகின்றேனோ அவன் தான். அவனை பிடித்துக் கொள்ளுங்கள் என்று யூதாசு சொல்லியிருந்தான். ஆகையால் உடனே அவன் யேசுநாதரிடத்தில் வந்து குருவே! வாழ்க வென்று சொல்லி அவரை முத்தமிட்டான்.[9] பகைவனது முத்தம் வஞ்சகம் நிறைந்துள்ளது.[10] அவள் அவனைப் பிடித்து அவனுக்கு முத்தங் கொடுத்தாள்.[11]

8. அன்பு முத்தம் :—லாபான் தன் சகோதரியின் குமாரனை யாக்கோபுவின் சமாசாரங்களைக் கேட்டபோது அவர் அவனைச் சந்திக்க ஓடினார். ஆலிங்கனம் செய்து கொண்டார். அவனை முத்தமிட்டார். தம் வீட்டுக்கு அவனை அழைத்து வந்தார்.[12] யோசேப்பு தன் சகோதரர்மாரை யெல்லாம் முத்தமிட்டு ஆனந்தபாஷ்பம் சொறிந்தார்.[13] யோசேப்பு தன் பிதாவின் முகத்தில் விழுந்து அவர் பேரில் அழுது அவரை முத்தமிட்டார்.[14]

---

7. லூக்காஸ் VII—38.
8. நீதி மொழிகள் XXIV—26.
9. மத்தேயு XXVI—47, 48.
10. நீதி மொழிகள் XXVII—6.
11. நீதி மொழிகள் VII—12.
12. ஆதி ஆகமம் XXIX—13.
13. ஆதி ஆகமம் XIV—15.
14. ஆதி யாகமம் I,—1.

அப்பொழுது அவர்கள் எல்லோரும் மிகவும் அழுது நீங்கள் இனி என் முகத்தைக் காணமாட்டீர்கள் என்று அவர் சொன்னதைக் குறித்து விசேஷமாய்த் துக்கப்பட்டு அவருடைய கழுத்தைக் கட்டியணைத்து முத்தமிட்டு கப்பல் மட்டும் அவருடனே கூடப்போனார்கள்.[15] உடனே எழுந்து தகப்பனிடத்திற்கு வந்தான். அவன் இன்னும் தூரத்தில் வரும்போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடிவந்து, அவன் கழுத்தில் தாவி விழுந்து அவனை முத்தமிட்டான்.[16]

இவ்விதம் பற்பல சந்தர்ப்பங்களில் முத்தங்கள் பைபிலில் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆங்கில கவிகளில் ஒருவரான ஜொஹான்னஸ் ஸெக்கண்டஸ் என்பவர் முத்தத்தின் ஆதி சரித்திரத்தைக் குறித்து கவியாகப் பாடியிருக்கின்றதன் பொருள் கீழ் வருமாறு :—

அழகும் வாலிபமும் நிறைந்த அஸ்கானியஸ் யுவகன் காதலால் மயங்கி ஸைதிரியாவின் உத்தியான வனத்திற்குச் சென்றான். காதல் வயப்பட்டு அதை நினைத்தவாறே அயர்ந்து நித்திரைப் போய்விட்டான். அயர்ந்து நித்திரைப் போன அழகனை அப்படியே தன் இரு கைகளால் அம் மங்கை தூக்கிச் சென்று நீலோற்பல புஷ்பங்கள் பரப்பிய பஞ்சணை மீது படுக்க வைத்தாள். அந்த லதாக்கிருகமானது ரோஜா மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மந்தமாருதம் தவழும்போது நறுமணம் கமகம வென வீசியது. தன் மார்பகம் பட படவென்று அடித்துக் கொண்டு வெகு ஆவலோடு அவ்வழகனது முகத்தைப்

15. அப்போஸ்தலர் நடபடி XX—37, 38.
16. லூக்காஸ் XV—20.

பார்க்கும்போது மன்மதனது நினைப்பு அவளுக்குத் தோன்றியது. அந்த நினைப்புத் தோன்றும் போதெல்லாம் அப்படியே நித்திரை புரியும் அந்த யுவகனைக் கட்டிப் பிடித்து, ஆலிங்கனம் செய்து கொள்ளலாமா என்று கருதுவாள். 'மன்மதனே இவன்; என் ஆவியைக் கொள்ளைகொண்ட மன்மதனே இவன்; அவன் முகமும் இவன் முகமும் ஒன்றே' என்று பலமுறை கூறிக்கொள்ளுவாள்.

முத்தமிட்டால் எங்கு அவனுடைய நித்திரை கலைந்து விடுமோ வெனப் பயந்து ரோஜாமலர்கள் ஒவ்வொன்றுக்கும், அவனுக்கு முத்து கொடுப்பதாக எண்ணி முத்தமிடலானாள். தேவாமிர்த மனைய ஆயிரம் முத்தங்களை யிட்டாள். முத்தங் கொடுக்கப்பட்டதும் மொட்டாக விருந்த ரோஜா மலர்கள் யாவும் மலர்ந்தன. முன் வெண்மையா யிருந்த ரோஜா மலர்கள் ஆச்சரியப்படும்படியாக செந்நிறம் வாய்ந்து நின்றன. என்ன சுந்தரமான காட்சி!"

என்பதாக முத்தத்தின் ஆதி சரித்திரத்தைத் தன் மனப்போக்கின்படி விவரித்திருக்கின்றார்.

இங்கிலாந்தில் நான்காம் எட்வர்ட் ராஜ்யபாரம் வகித்து வந்த நாளில் முத்தமிடும் வழக்கம் மும்முரமாக அதிகரித்து இருந்தது. ஒரு விருந்தாளி ஒரு வீட்டுக்கு வந்தானானால் அவ் வீட்டிலுள்ள எல்லோராலும் முத்தங்களினால் அவன் வரவேற்கப்படுவான். அவ்வீட்டை விட்டுப் போகும்பொழுதும் கூட அது மாதிரியே யாவராலும் முத்தமிடப் படுவான். இங்கிலாந்தில் இந்த முத்தமிடும் வழக்கம் புதிதாகக் கொண்டு வரப்பட்டதே யெனினும் அதிகப் பழக்கத்தின் கீழ் வந்து விட்டது. ஒவ்வொரு நாளும் செய்யும் சாதாரண செய்கையாகி விட்டது. ஆங்கிலேயர்கள் 'முத்தம் கொடுக்கும் ஜனங்கள்' என்று வெகுதூரம் வரையில் தெரிந்து விட்டது.

எராஸ்மஸ் என்னும் மேதாவி கி. பி. 1497-ல் இங்கிலாந்தில் மும்முரமாக விருந்த முத்தமிடும் வழக்கத்தைக் குறித்து விவரித்திருக்கின்றார். ‘ நீ ஓரிடத்துக்குச் சென்றால் அவ்விடத்தி லுள்ளவர்க ளெல்லோரும் உன்னை முத்தமிட்டு வரவேற்பார்கள். நீ ஒரு பிரயாணமாகச் செல்லும்போதும் உன்னை யாவரும் முத்தமிட்டே செலவு கொடுத்தனுப்புவார்கள். திரும்பி வந்தாலும் முத்தங்கள் மாற்றிக் கொள்ளப்படும் : அவர்கள் உன்னைப் பார்க்க வந்தாலும் முதல் செய்கை முத்தந்தான் ; அவர்கள் உன்னை விட்டுச் செல்லும் போதும் நீ அவர்களெல்லோரையும் முத்தமிடவேண்டும். அவர்கள் உன்னை எங்காவது சந்தித்தார்களானால் எண்ணிக்கையற்ற முத்தங்களால் நீ அலங்கரிக்கப்படுவாய். கடைசியாக, எங்கே நீ சென்றபோதிலும் அங்கும் முத்தமே உனக்குக் கிடைக்கும். ஒரு தடவை அந்த முத்தத்தை நீ சுவைத்திருப்பாயானால் ஆ ! எவ்வளவு மேன்மை ; என்ன மணம் ! எத்துணை ஆனந்தம் ! இவ்விடத்தில் பத்து வருஷங்களே வசிக்கமட்டும் விரும்பமாட்டாய். உன் ஆயுள் காலம் முழுமையும் இங்கேயே கழிக்க விரும்புவாய் என்று நான் துணிவாய் சொல்வேன் ” என்று வர்ணித்திருக்கின்றார்.

ஜான் பனியன் என்னும் யாத்திரை ஆசிரியர் தமது அருமையான புத்தகத்தில் நூறு வருஷங்களுக்குமுன் இந்த முத்தமிட்டுக் கொள்ளும் வழக்கத்தை விரும்பாமல் குறை கூறினர். அவர் பின் வரும் விதம் எழுதியு மிருக்கின்றார். ‘ சாதாரணமாக ஸ்திரீகள் வந்தனம் புரியும் வழக்கத்தை நான் மனமார வெறுக்கின்றேன். நான் அவ்வழக்கத்தை எவரிடத்தில் காண்கின்றேனே அவர்களை நான் அருவருக்கின்றேன். நற்குலத் துதித்தவர்கள் ஸ்திரீகளைக் காணும் சமயத்திலும் அல்லது ஸ்திரீகள் அவர்களைக் காணும்போதும் ஒருவருக்கொருவர் முத்தமிட்டுக் கொள்வதைக் குறித்து

நான் பல முறைகளில் ஆட்சேபணைகள் செய்திருக்கின்றேன். அப்போது அவர்கள் இஃது ஒரு வழக்கம் என்று சொல்லியபோது நான் அது நல்ல அழகிய காட்சி அல்லவென்றும் சொன்னேன். சிலர் முத்தம் தெய்விகமானது என்று என்னை வற்புறுத்தினார்கள். அவ்விதம் முத்தம் தெய்விகமானால் ஏன் அவர்கள் அதைப் பார பக்ஷமாக உபயோகிக்கின்றனர்? அழகியவர்களை மட்டும் முத்தமிட்டு அழகில் குறைந்தவர்களை முத்தமிடாம லிருப்பதேன்?' என்று அவர் அவர்களைக் கேட்டார்.

'மாதர் அகராதி' என்னும் பொருள்படும் லேடீஸ் டிக்ஷனெரி என்னும் புத்தகத்தில் அதன் ஆசிரியர் ஸ்காட்லண்டில் முத்தமிடுதலும் குடிக்கும் வழக்கமும் ரோமர் காலத்திலிருந்ததைவிட அதிகமா யிருந்ததாகக் கூறுகின்றார். மார்டியல் என்னும் புலவர் தாம் எழுதிய எபிகிராம்ஸ் என்பதில் ரோம் ராஜ்யத்தில் முத்தம் எவ்வளவு நாளாய் பரவியிருந்தது என்பதை விவரிக்கின்றார். ஒவ்வொரு அயல் வீட்டானும் ஒவ்வொரு குடியானவனும் கூட நெடி மணம் கமழும் முத்தத்தை உன் உதடுகளில் பதிப்பான். நெசவுக்காரனும், அப்போது தான் தோலைக் கடித்துக்கொண்டிருந்த சக்கிலியனும், நரைத்த தாடியையுடையவனும், ஒற்றைக் கண்ணனும், கண்டதைத் தின்று வாய் நாற்றம் பிடித்தவர்களும் உன்னை முத்தமிடுவார்கள்.

இங்கிலாந்தில் இவ்வண்ணம் முத்தமிடும் வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக ஒழிந்து மறையத் தலைப்பட்டது. முத்தத்தின் ஆதி சரித்திரத்தைப் பற்றிக் கூறுங்கால் அதன் ஆதி சரித்திரம் பெரிய ரகசியத்தில் ஆழ்ந்திருக்கின்றது என்று மட்டும் கூறி ஒப்புக்கொள்ளுகின்றோம்.

இவ்வினிமை வாய்ந்த முத்தத்தின் ஆதிசரித்திரத்தை ஆராய்ச்சி செய்தறிய நாம் அதிர்ஷ்ட ஹீனர்களாக விருந்த

போதிலும் முத்தம் என்பது என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிக்கவாவது நமக்கு அதிர்ஷ்ட மிருக்கின்றதா என்று முயற்சி செய்வோம்.

முதன் முதலில் அகராதியில் என்ன சொல்லியிருக்கிற தென்று கவனிப்போம். முத்தம் என்பது ஒருவித சப்தம். ‘உதடுகள் நெருக்கமாகப் பதிக்கப்பட்டு உடனே அவைகள் பிரிந்துவிடச் செய்யும் ஒருவித வந்தனம் என்று அறி கின்றோம்.

ஜோஹான்னஸ் ஸெக்கண்டஸ் தன் இன்னுயிர் காத லிக்குப் பின் வருமாறு உரைக்கின்றார்.

“என் அன்பே! என் உயிரே! நீ எனக்கு அளித்தது முத்தமல்ல. அது தேவலோகத்தினின்று வரும் அருமை யான தேவாமிர்தமேயாம். உன் தேனினுமினிய உதடுகள் தாம் அத்தகைய பனித்துளிகளைக் கொடுக்கும் சக்திபெற் றிருக்கின்றன.”

‘முத்தம் என்பதைக் குறித்துத் தெரிந்துகொள்ள எவ்வளவுக்கு எவ்வளவு முயற்சிகள் செய்கின்றோமோ அவ் வளவுக் கவ்வளவு அதைத் தெரிந்துகொள்ளாமற் போகின் றோம். முத்தம் என்பதற்குப் பொருள் கூறப் பிரயத்தனப் படுவதைவிட, அதைக் குறித்த எல்லா விஷயத்தையும் தெரிந்துகொள்ள ஒரு முத்தம் கொடுப்பதால் அல்லது கொடுக்கப் படுவதால்தான் நன்குணரலாம்’ என்று ஜோஸ் பில்லிங்க்ஸ் என்னும் அனுபவ வித்தியார்த்தி அபிப்பிராயப் பட்டுக் கூறியிருக்கின்றார். முத்தங்கள் என்பவை விலை யொன்றுமில்லாதவை; எப்பொழுதும் தேய்ந்து போகா தவை; எப்பொழுதும் எக்காலத்தும் எச்சமயத்தும் ஏராள மாகக் கிடைக்கக்கூடியவை. கடைசியாக, முத்தங்கள் ஏன் இனிமையாக விருக்கின்றன? முத்தங்கள் வெகு இனிமை

யாக விருக்கின்றதற்குக் காரணம் என்னவென்ருல் பற்களி லும், தாடை எலும்புகளிலும், உதடுகளிலும் இவைகளிலெல் லாம் நரம்புகள் அதிகமாக நெருங்கி யிருக்கின்றன. ஆதலால் உதடுகள் ஒன்ருேடொன்று சேருங்காலத்தில் ஒரு மின்சார சக்தியின் அதிர்ச்சி உண்டாகின்றது என்று ஒரு சாஸ்திரி காரண காரியத்தைக் கவனித்து உரைத்திருக்கின்ருர்.

அவ்வானந்தம் இவ்வளவு சீக்கிரத்தில் வீணுகவோ? இனிமையும் தேவாமிர்தமும் போன்ற முத்தம் நீண்ட காலம் நிலைத்திருக்காதோ? இனிமையும், கருணாரசமும், மென்மை யும் பொருந்திய முத்தம் எப்பொழுதும் நிலையாக நிற்காத தேனே? ரோஜாமலரின்மீது பதிந்துள்ள பனித்துளிகள் சூரியோதயமானதும் மறைந்து விடுகின்றன. அப் பனித் துளி முத்தத்தினிடம் எவ்வளவு? நான் அத்தகைய முத்தத் தைச் சுவைப்பேனுல்—அது என்னுடைய மனமார்ந்த விருப்பம்—நான் அவ்விதம் சுவைத்துக்கொண்டே என் உயிரையும் விடச் சித்தமா யிருக்கிறேன் என்பதாக அந்த சாஸ்திரியார் தமது விருப்பத்தைக் கவியின் மூலமாய் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கின்ருர்.

---

# ௩. முத்தமிடும் முறைகள்

முத்தமிடும் விதம்—முறைகளின் விவரம்—வாயின் அளவைக் கவனித்தல்—அகன்ற வாய்களும்; ரோஜா மொக்கு வாய்களும்—பிரூண்டிப் போராடும் பெண்—கவிதா முறைகள்—ஆலிங்கனத்தின் கெடுதிகள்—சைன தேசத்துப் பெண்ணை முத்தமிடுதல்—முத்தத்தைப் பெறும் விதம்—நீண்ட காலம் மறவாமல் மனத்தின் கண் நிலையாக நிறுத்தும் முத்தம்—விவாக காலத்தில் முத்தம்—

முதன் முதலில் முத்தம் என்பது இன்னது என்று தெரிந்து கொண்ட பிறகு முத்த மிடுவது எவ்விதம் என்பதைக் குறித்த விஷயங்களை அறிந்து கொள்ளுவோம். இது விஷயத்தில் பல பொதுவான முறைகள் இருக்கின்றன. ஒரு மாதை முத்தமளிக்க விரும்பும் ஆடவன், அவளை விட உயரமாக விருக்கவேண்டும். அம்மங்கையின் வலது கரத்தை உன்னுடைய வலது கையால் பிடித்துக்கொண்டு உன் பக்கமாக அவளை மெதுவாக இழுத்துக் கொள்வாய். உன்னுடைய இடது கரத்தை அவளுடைய முதுகின் பக்கத்துக்கு வலது புஜத்தின் மீது செலுத்தி அவளது முதுகின் குறுக்கே இடது கரத்தின் கீழ்ப்புறமாகக் கொண்டு வா. அவளை உனது மார்போடு அழுத்திக்கொள். அப்போது அவள் தன்னுடைய தலையைப் பின் புறமாகச் சாய்த்துக் கொள்ளுவாள். நீ ஒன்றுஞ் செய்யாமல் கொஞ்சம் முன் பக்கமாய்ச் சாய்ந்து உன் உதடுகளை அவளுடைய உதடுகளுடன் வைத்து அழுத்துவாய். நீ விரும்பியது கைகூடும். முத்தம் கொடுக்கும்போது சத்தமுண்டாகும்படிச் செய்யாதே. மங்கையை முத்தமிட்டபின் அவளைத் 'திருப்திகாமாக விருக்கின்றதா' என்று கேட்க வேண்டும். ஏனென்

ருல், ஒரு மாதினது முத்தத்தைத் அவள் வாயினின்றும் தான் பெறுகின்ற வரையில் ஓர் ஆடவன் அம்மாது தன் முத்தத்தை நன்ருகத் தெரிந்திருக்கிருள் என்று திருப்தி படுவதில்லை.

இத்தொழிலைச் செய்ய ஓர் ஆடவனுக்கு ஆர்வ மிருக்க வேண்டும். நீ விரும்பும் மங்கை உன்னுடைய முத்தத்திற் காக ஏங்கி உயிர் நீங்கும் பான்மையிலிருப்பதாக நீ எண்ண வேண்டும். உனது வரவிற்காகவும் உனது முத்தத்திற் காகவும் காத்துக் கொண்டிருப்பதாகவும் எண்ணவேண்டும். பிறகு அவளது அழகிய வாயினளவை ஒரு விதமாகக் கவனித்து அந்த வாயின் எவ்வளவு பாகத்தை முத்த மிடலாம் என்பதை யோசனை செய். அம்மங்கையின் வாய் ரோஜா மொக்கைப்போல் சிறிதாக விருக்கும் பட்சத்தில் ஒரே முத்தத்தில் வாய் முழுவதையும் மிக்க ஆத்திரத்தோடு முத்தமிடுவாய். அவளது வாய் 'கால்காணி' அகல மிருப்ப தாக விருந்தால் அப்போது முத்த மிடுவதற்குத் தகுந்த முறை யெது வென்ருல் வாயின் மூலைகளை முத்தமிடு. உன் முத்தத்தை வாயின் பற்பல பாகங்களாகப் பிரித்துக் கொள்வாய். பெரும்பாலும் மங்கையற்கு மாங்கதுப்பனைய கன்னங்க ளிருக்கின்றன. ஆகவே, ஓர் ஆடவன் ஒரு மங்கையின் கன்னத்தில் முத்தங் கொடுக்கத் தவறுவதே யில்லை. அனேக தடவைகளில் கன்னத்தில் முத்த மிடுவதற் குப் பதிலாகக் காதை முத்தமிடாதே. நீ முத்த மிடுவது அவளுக்கு வெகு ஆச்சரியத்தை யுண்டு பண்ணுகிறதென்று நீ அறியவேண்டுமென்று அவள் வேண்டு மென்றே அசை வாள். அவளுடைய காதை முத்த மிடுவதற்குப் பதிலாக வாசனைத் தைலம் பூசிய தலைமயிரை நீ வாயால் முத்த மிடுவாய். உன் வாயெல்லாம் வாசனைத் தைலமாகி விடும். நாடகத்தில் நடிப்பவர்கள் புருவத்தை முத்த மிடுவார்கள்.

ஒரு மங்கை அழகுள்ள வாயைப் பெற்றிருப்பாளானால் அதை ஒவ்வொரு தடவையும் முத்த மிடுவாய். அவளது வாய் அகன்றிருக்குமானால் வாயை முத்தமிடாமல் அவளுடைய கன்னத்தை முத்த மிடுவாய். அதுதான் சிறந்தது.

ஒரு மங்கையை முத்த மிடுவதற்கு முன்பாக அவளுடைய வாயின் அளவை மிகவும் கவனமாக உற்றுப் பார்க்க வேண்டும் என்று மறுபடியும் உரைக்கின்றோம். அகன்ற வாய்கள் ஓர் ஆடவனுக்குப் பெரிய அசௌகரியத்தை உண்டாக்குகின்றன. அவன் அவ்வாயை முத்தமிட எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்று யோசனை செய்ய ஆரம்பிக்கிறான். வாயின் ஒரு மூலையிலிருந்து ஆரம்பம் செய்து மற்றொரு மூலையில் முடிக்கலாமா அல்லது நேராக ஒரே பாய்ச்சலாக வாயின் நடுவில் முத்தங் கொடுத்துக் கொண்டே இரண்டு மூலைகள் வரையிலும் செல்லலாமா என்று எண்ணுகின்றான். மாணவர்களும் வாலிபர்களும் இத்தகைய ஆத்திரத்தோடு வாய் மத்தியில் கொடுக்கும் முத்தமே சிலாக்கியமானது என்று கருதுகின்றார்கள். ஏனென்றால், இந்த முத்தத்தில் கால தாமதம் கிடையாது. இவ்விதமாகத் திடீரென்று முத்தமிடுவோனை மேலுக்காகவாவது இணங்காதவர் போல் நடித்துக்கொள்ளும் மங்கையர், தடுக்க முடியாமல் அவனுடைய முத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகின்றது. வட்டமாகச் சரிந்துள்ள உதடுகளும், மென்மையாக அமைந்துள்ள வாயும் கோவைக் கனியை ஒத்த நிறமுடைய இதழும் முத்தமிடச் சுலபமானவை. அத்தகைய கனி வாய் இதழே முத்துக்களைப் பதியவைக்கும் சுவர்ணம் போன்றது. உனது முத்தத்தை விரும்பாத ஓர் இளமங்கையை நீ ஒருபோதும் முத்தமிடாதே.

முத்தத்தின் சுகானந்தத்தை அதிகரிக்கச் செய்பவை மங்கையின் அனுமதியும் சம்மதமுமேயாம். அவளுடைய சம்மதம் பூரணமாக விருக்கும் பட்சத்தில் பிரம்மானந்தம் என்றே சொல்ல வேண்டும். மணமகனுடைய தலை மயிரைப் பிடித்திழுத்து உபத்திரவப்படுத்தும் மணமகளையும், அவனுடைய முகத்தைப் பிறாண்டும் மங்கையையும் முத்து கொடுப்பதினின்றும் விலக்க வேண்டும். அத்தகையப் பெண்களை உடனே விட்டுவிட வேண்டும். மங்கை எதுவரையில் கிள்ளாமலும் பிச்சாமலும் சாந்தமாக இருக்கின்றளோ அதுவரையில் இத்தொழிலில் நிர்ப்பயமாய் இறங்கலாம். பெற்றோரும், சகோதரரும் அதுவரையில் முத்தமிட்டு நாணமுள்ள நங்கைக்கு முத்தத்தைக் கற்றுக் கொடுக்க ஆரம்பம் செய்வதாக விருந்தால் அவளது நெற்றியில் மெதுவாக உன் உதடுகளை வைத்து முத்தமிடுவாயாக. இவ்விதம் செய்வதை அந்நங்கை தனக்குக் காட்டும் பெருத்த மரியாதை என்பதாகக் கருதுவாள். இவ்விதம் ஒரு நம்பிக்கையை அவள் கொண்டதும் நீ உன் தொழிலில் ஊக்கத்தோடு வேலை செய்யலாம். நெற்றியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உன் முத்தத்தைக் கீழிறக்கிக் கொண்டே வந்து செவ்விய இதழில் முத்தங் கொடுக்க அதையும் சாந்தமாக அம்மங்கை ஏற்றுக்கொள்ளுவாள்.

ஓர் ஆடவன் அழகும் எழிலும் மிகுந்த கன்னிகையை முத்தமிட விரும்புவா னனல் அவன் அவளருகிலேயே சுற்றிக்கொண்டே இருப்பான். அவளது கன்னத்தையே தான் அடைய ஏங்கி நிற்பதைப்போல் உற்று நோக்கிக் கொண்டே யிருப்பான். 'அம்மங்கையை ஒழுங்காகவும்' இனிமையாகவும், பூரணமாகவும் முத்தமிட எண்ணங் கொண்டால், நீ கொடுக்கும் முத்தம் அம்மங்கைக்கு அதிக உற்சாகத்தையும் குதூகலத்தையும் தேக புளகாங்கிதத்

யையும் கொடுப்பதாக இருக்க வேண்டுமென்று நீ விரும்புவாயானல், உனக்கு முத்தமிடச் சந்தர்ப்பம் நேர்ந்தபோதும் அந்தச் சந்தர்ப்பத்தை வேண்டுமென்றே தவறவிட்டுவிடு. நீ முத்தமிடுவாய் என்று நிச்சயமாக அறிந்து அம்மங்கை அதை எதிர்பார்த்த விதமாக இருப்பாள். அந்தச் சமயத்தில் நீ முத்தம் கொடுத்தால் அது அவ்வளவு இனிமையை அவளுக்குக் கொடுக்காது. ஏனென்றால், அந்த முத்தத்தின் குண குணங்களை அவள் ஏற்கனவே அறிந்திருக்கின்றாள். ஆகவே, சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் உன் முத்தத்தைக் குறித்து அவள் மனத்தாலும் எண்ணமிருக்கும்போது உடனே உன் முத்தங்களை அவளது இதழில் பதிக்கக்கடவாய்.

தேகத்தை இறுகக் கட்டிக்கொள்ளுவதும் முத்தத்தின் வகையைச் சேர்ந்ததே. இறுகக் கட்டிக்கொள்ளுவதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் குறித்து ஒரு மேனாட்டுக் கிரந்த கர்த்தர் எழுதியிருக்கின்றார். இறுகக் கட்டிக்கொள்ளுவது என்பது நூதனமானப் பழக்கம் என்றும் இறுகக் கட்டிக்கொள்வது என்பதற்கும் ஆலிங்கனத்துக்கும் வித்தியாச மிருக்கின்றதென்றும் அவர் அபிப்பிராயப்படுகின்றார். இறுகக் கட்டிக்கொள்வது என்பது உள்ளன்போடும், விரைவாகவும் செய்வது: மார்பு, கைகள் இவைகளிலுள்ள நரம்புகளைச் சுருக்கி மங்கையை கைகளை வளைத்துக் கட்டிக்கொள்ளுவதாகும். அவ்விதம் இறுகப் புல்லுவதன் நோக்கம் மார்போடு மார்பு இழைகின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு நரம்புகள் சுருங்குகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு இறுகப்புல்ல முடியும். மங்கையை மார்போடு மார்பு சேர்த்துக் கட்டிக்கொள்ளுவதனுலேயே இறுகப் புல்லுவது பூர்ணமாவதில்லை. அதற்கு மாறாக; அவ்விதம் வேகமாக மார்புற அணைத்துக்கொள்வது இறுகப்

புல்லுவது என்ற இனிய கனிக்கு மேல் தோல் போன்றது. இறுகப் புல்லுவோனது மார்புக்கும் இறுகப் புல்லப் படுவோளது விம்மும் மார்பகத்திற்கும் இடையில் மயிரிழை போன்ற கத்தியின் அலகும் உட்செல்ல முடியாமல் சற்றும் இடைவெளி யிருக்கக்கூடாது. அவ்விதம் இரண்டு மார்புகளும் இழைந்து ஒன்றெனக் கலந்திருக்க வேண்டும். இறுகக் கட்டிக்கொள்வது முடிந்த பிறகு விடுவித்துக் கொள்வது மிக்க சாமர்த்தியமாகச் செய்து கொள்ளப் படாவிட்டால் அபாயங்கள் சம்பவிக்கும். இது விஷயத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டும். இறுகக் கட்டிக் கொள்ளப்படும் மங்கைக்கு இறுகப் புல்லும் காலத்தில் தான் வேதனைப்படுவதாகப் பாசாங்குகளைக் காட்டிக்கொள்ளுவாள். அந்தப் பாசாங்குகளுக்கு லட்சியம் செய்யாமல் இறுகப் புல்லுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டாம். இறுகப் புல்லப்படும் மங்கை தனக்கு வேதனை உண்டாகிறதாகக் காரணமில்லாமல் கூறுவாளானல் அவ்விதம் சொன்னதற்குத் தண்டனையாகப் பின்னும் உன் பலங்கொண்டு இழுத்துக் கட்டிக்கொள்ளுவாய்.

மெக்ஸிகோ நாட்டு மங்கையர்களுக்கு முத்தமிடுதல் என்பதைக் குறித்து விசேஷமாக ஒன்றுந் தெரியாது. ஒரு சிலருக்கு மட்டுமே முத்தமிடுவதனுல் தேவாமிர்த சுகத்தை அளிக்க முடியுமாம். மெக்ஸிகோ நாட்டில் தங்கிய ஒரு அமெரிக்கர் பின் வருமாறு கூறுகின்றார். 'நான் ஒரு நாள் கரிய கூந்தலும் வேல் விழியும் பெற்ற இள நங்கைக்கு அமெரிக்கர் எவ்விதம் முத்தங்கொடுத்துக் கொள்ளுகிறார்கள் என்பதைக் காட்ட முத்தமிட்டேன். அந்நங்கை புன்முறுவல் செய்து சம்மதித்துக்கொண்டாள். நான் அவளை அணுகினேன். எனது வலது கரம் முழங்கையில் மடங்கியது. எனது உள்ளங்கை அவளது அழகிய முகவாய்க் கட்டை

யைத் தாங்கிக் கம்பீரமாக நின்றது. மெதுவாக அவளது தலையைப் பின்புறமாகச் சாய்த்து அவளது, விழிகளை என் விழிகளால் பார்த்து சில விநாடிகள் வரை அப்பார்வையை அப்படியே வைத்திருந்து பெருமூச்சு இழுத்து அவளது உதடுகளை என்னுடைய இதழ்களால் முத்தமிட்டு அலங்கரித்தேன். அவ்விதம் அழகாக நான் முத்தமிட்டது அவளுக்கு ஒரு புதுமையாகத் தோன்றியது. அவளுக்கு இன்னதுதான் செய்வதென்றும், இன்ன வார்த்தைகள் தாம் சொல்வது என்றும் ஒன்றும் தெரியவில்லை.

இவ்வளவு இனிமையாகவும் அருமையாகவும் நான் தந்த முத்தங்களுக்குப் பதிலாக அந்நங்கை என்னை முத்தமிடாமல் என்னுடைய ஆலிங்கனத்தினின்றும் திமிறிச் சென்று ஓர் அறையிற் புகுந்து தாளிட்டுக் கொண்டாள். பயந்துபோய் விட்டாள் என்றாலும், மனம் திருப்தி அடைந்தாள். ஆயினும் அதி ஆச்சரியப்பட்டுப் போனாள். எனக்கு முத்தமிடுதல் என்பது சர்வ சாதாரண செய்கையாகும்படி அவ்வளவு பழக்கம் இருந்தது. இரண்டு நாள் கழித்து அவளை மீளவும் கண்டேன். அந்நங்கை அதிக நாணத்துடன் தலைகுனிந்து தான் அமெரிக்காவில் பிறக்கப் பாக்கியம் பெற்றவளில்லையே என்று வருத்தப்படுவதாக என்னிடம் கூறினாள்.

அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த கப்பற் படைத் தலைவரொருவர் ஜப்பானில் தங்கி யிருக்கும்போது ஓர் அழகிய சைன பெண்ணைத் தமக்கு முத்தங் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். தாம் கேட்பது இன்னது என்று அந்தப் பெண் தெரிந்து கொள்ளுவதை அவர் உணர்ந்து கொண்டார். ஆகவே ; தாமே அந்த அன்னிய தேசத்து நங்கையை முத்தமிட்டார். அவ்விதம் அவர் முத்தமிட்ட

தும் அந்தப் பெண் அந்த இடத்திலேயே நிற்காமல் விரை வாக ஓடிப்போய் விட்டாள். அவ்விதம் பயந்து ஓடும்போது 'மனிதரைத் தின்னும் பேய் என்னை விழுங்கிவிடும் போலிருக் கிறது' என்று உரக்கக் கூச்சலிட்டாள். அடுத்த நிமிஷத் துக்குள் தனக்கு யாதொரு தீங்கும், உபத்திரவமும் ஏற் படாதிருப்பதை உணர்ந்து மீளவும் அந்தத் தலைவரிடம் சென்று 'தங்களுடைய அமெரிக்கா முறையைப்பற்றி அதிக மாகத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்' என்று முத்த மிடும் முறைகளைத் தெரிந்து கொள்ள அவாக் கொண்டாள்.

அத்தலைவர் தான் செய்வது அவ்வளவு உசிதமான தல்லவென்று உணர்ந்திருந்தும் அவளுக்கு முத்தமிடும் முறைகளை விவரமாகவும், செய்கை மூலமாகவும் கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொடுக்கும் போதே அதை நன்ரு கத் தெரிந்து கொண்டாளா என்பதைச் செய்கையாற் செய்யச் சொன்னார். அம்மங்கையும் வெகு அழகாக அமெரிக்காவின் அணங்கைப் போலவே முத்தமிட்டாள். நன்ருகத் தெரிந்துகொண்ட பிறகுகூட அந்நங்கை அத் தலைவரைத் தனக்கு முத்தங் கொடுக்கும்படி மன்ருடினாள். அத்தலைவர் கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ என்று சொல்லிக் கொண்டே பல தடவைகள் முத்தமிட்டார். மிகவும் ஆத்திரத்தோடும் சத்தத்தோடும் முத்துக்களை ஒருவருக்கொருவர் பதித்துக் கொண்டு தங்களையே மறந் திருந்ததால் அம்மங்கையின் தாயார் கூப்பிட்டதையும் கவனிக்கவில்லை. அவ்விருவரது காதல் கனவு அவளது தாயாரால் கலைக்கப்பட்டது.

சைனுவில் சில சமுகங்களில் முத்தங் கொடுக்கும் வழக் கம் வழக்கத்திலிருந்து வருகிறதென்று ஒரு கவியின் மூல மாகத் தெரியவருகிறது. அக்கவியின் பொருள் பின்வரு

மாறு :—ரோஜா மலரின் நிறத்தை நிகர்த்த கன்னங்களை ஓர் ஆடவன் முத்தமிட்டால் மற்ற கன்னிகைகளும் முக மலர்ந்து அகம் குழைந்து 'எனக்கும் முத்தங் கொடு' என்று பரிந்து கேட்கின்றார்கள்.

ஓர் ஆடவன் முத்தமளிக்கும் முறைகளை நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மங்கை ஆடவனளிக்கும் அன்பு முத்தங்களை ஏற்றுக்கொள்ளும் விதங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு மிருக்கவேண்டும். முத்தத்தின் விஷயத்தை ஒவ்வொருவரும் தெரிந்துகொண் டிருந்தால் தான் இருவரும் குதூகலத்தையும் ஆனந்தத்தையும் பெறலாகும். அறிவிற் சிறந்த ரேவரண்ட் ஸிட்னி ஸ்மித் பாதிரியார் தமது அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகின்றார். 'முத்தம் கொடு' என்ற வார்த்தை கேட்ட மாத்திரத்திலேயே ஒருவிதமான கூச்சமும் நாணமும் ஏற்படுகின்றது. அதை ஒருவருக் கொருவர் அளித்துக் கொள்ள நீண்டகாலம் தாமதிக்கக்கூடாது. ஒரு மங்கை முத்தமிடுவாளானால் அவள் அதை மிக்க இனிமையாகவும் மன குதூகலத்துடனும் கொடுக்கட்டும். அவள் தன் கண்களை மூடிக்கொண்டு பெருமூச்சுவிட்டு முத்தமிடுவாளானால் அத்தகைய முத்தத்திற்கு ஆனந்தம் எல்லையற்றதாகும். அந்த அணங்கு முத்தமிட்ட அடுத்த வினாடியே வாயை எடுத்துவிடாமல் தேனீ புஷ்பத்திலிருந்து தேனைக் குடிப்பது போலும் அங்கேயே கொஞ்சநேரம் முத்தத்தைப் பதிய வைத்திருக்க வேண்டும். முத்தம் நன்றாகவும் கிரமமாகவும் கொடுக்கப்படில் அதில் எத்தனையோ புண்ய விசேஷம் உண்டு. நாம் இளைஞராக விருக்கும் சமயத்தில் முத்தமிடப்பட்ட விஷயம் நாற்பது வருஷங்கள் சென்ற பின்னும் நமது கவனத்தி லிருக்கின்றது. நாம் இந்நில உலகைவிட்டு மரண மடையும்போதும் கூட அவ்விஷயமே

நம்முடைய மனத்தின் கண் கடைசி விஷயமாகக் கவனத்தில் இருக்கும்.'

நீண்ட காலம் மனத்தில் மறவாமல் பதிந்திருக்கும் முத்தங்களைக் குறித்து கவிகள் வெகுவாகப் பாடி யிருக்கின்றார்கள். "மூன்று முத்தங்கள்" என்ற செய்யுளில் ஒரு காதலன் மரத்தின் அடியில் அமர்ந்து தானாகவே தன் ஆருயிர்க் காதலியுடன் பேசுவது போல எண்ணிக்கொண்டு பின்வரும் விதம் தனக்குத் தானே பேசிக் கொள்ளுகிறான். 'அவளுடைய இனிய பரிசுத்தமான முகத்தை மெதுவாக நிமிர்த்தினேன். அவளது வேல் விழிகளில் காதல் பிரகாசித்துக்கொண் டிருந்தது. அவள் எனக்குக் கொடுத்த நடுக்கத்தோடு கூடிய அந்த முத்தத்தை நான் எப்போதும் மறக்க மாட்டேன். அந்த இனிய முத்தம் எங்களிருவரது இருதயங்களையும் பரமானந்த மடையச் செய்துவிட்டது. இப்பொழுது தான் நான் அதைப் பெறுகின்றதைப் போலவும் அவ்வளவு புதியதாக விருக்கின்றது.

பத்து வருஷங்கள் கடந்த பிறகு அவனது ஆருயிர் மனைவி மண்ணுலகை நீத்தனள். அவளது உயிரற்று நீட்டப்பட்ட களேபரத்தை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு காலத்தில் காதல் சூட்டையும் காமக் கிளர்ச்சியையும் கொடுத்துவந்த வடிவம் அந்தச் சமயத்தில் சீதளத்தின் வயப்பட்டுக் கிடந்தது.

மெதுவாக நான் அந்தச் சிவந்த இதழை முத்தமிடக் குனிந்தேன். அதுகாறும் எனக்குக் காதலையும் அன்பையும் அள்ளி அள்ளிக் கொடுத்துவந்த அந்த இதழ்களை முத்தமிட எண்ணினேன். ஆனால், அவைகள் குளிர்ந்தும் அசைவற்றும் கிடந்தன. அவைகளை முன்போல் அசையச் செய்ய இவ்வுலகத்தில் எத்தகைய சக்தியாலும் முடியாது.

கடைசியாகவும் அவளது தேகத்தைத் தடவிக் கொடுத்தேன். ஜில்லென்று இருந்த தேகத்தில் ஒன்றும் இல்லாது போய்விட்டது. கடலிலிருந்து விடாமல் ஒன்றின் பின் ஒன்றாக உயர்ந்து எழுந்து உருண்டு வரும் அலைகளைப் போல் எனக்குத் துக்கம் மூண்டெழுந்தது. அந்தத் துக்கம் என்னை விட்டு அகலாத நிரந்தர துக்கமாயிற்று.

இவ் விதமாகத்தான் காதலியை இழந்த காதலன் தன் ஏக்க எண்ணத்திற்கு அடிமைப்பட்டுத் தான் தன்னந் தனியே இனி இவ்வுலக வாழ்க்கையில் துணையின்றித் தவிக்கவேண்டு மென்பதை யுணர்ந்தான். இவ்விதமாக ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்து உழலும்போது கண்களில் நீர் ததும்பாமல் பிரகாசம் குன்றி பித்தம் பிடித்தவன்போல் வெறும் வெளியை உற்று நோக்கிக்கொண் டிருக்கும்போது, தன் சிறு குழந்தையின் கைகள் அவனது கழுத்தைச் சுற்றிக்கொண்டு அதனது சின்னஞ் சிறிய இதழ் அந்தத் துர்ப்பாக்கியனது உதடுகளுக்கு முத்தமிட்டது.

'என்னுடைய கட்டுத்தளைகள் கழன்றுபோயின. என்னரும் குழந்தையை மார்போடு மார்பாகக்கட்டிக்கொண்டேன். என் கண்களினின்றும் ஆனந்தப் பாஷ்பம் பெருகியது. உலக வாழ்க்கையில் ஏதோ கொஞ்சம் சுகமும் எனக்கு உண்டு என்று தோன்றியது. என் அருமையும் இனிமையும் பொருந்திய குழந்தையே! நீ முத்தமிட்ட அந்த முத்தத்தினுள்ளே உனது அழகிய தாயின் உயிர் இருக்கிறதுபோல் நான் உணருகின்றேன். வாழ்க்கையில் இருப்பதைவிடப் பரிசுத்தமான காதல் இறந்தபின் தான் இருக்கின்றது என்பதை மானிடர் அறிவார்கள்' என்பதாக மிகவும் பரிதாபமான விஷயங்களை அவ்வாங்கிலக் கவி எழுதியுள்ளார்.

இதுபோலவே மற்றொரு செய்யுள் "மூன்று முத்தங்கள்" என்பதாக இருக்கின்றது. இம் மூன்றில் முதலாவது 'கஷ்டத்திலும் மேன்மையான முத்தம்' இரண்டாவது 'பரமானந்தம் பயக்கும் இனிய முத்தம்.' 'நம்மிருவரும் இதுவரையிலும் ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொண்டோம்' என்றும் அவ்விதமே செய்துகொள்வோம். கால தேச வர்த்தமானம் இவைகள் பேதமில்லாத விடத்தை நாமிருவரும் அடைவோம். உலகத்திலே இங்கு மங்கும் செல்வதற்கு மன்மதன் விடும் தூதர்கள் நிரம்பியிருக்கின்றார்கள். நாமிருவரும் தெரிந்து கொண்டுள்ள எல்லா ஆனந்தத்திற்காக 'கண்ணே! நான் உன்னை முத்தமிடுகின்றேன்.'

ஒருவர்க்கொருவர் மறுபடியும் பார்த்துக் கொள்ளாமல் இறக்கலாம் என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவரும் கடைசி முத்தம்.

ஆருயிர் மனைவியின் முத்தத்தை "தேவாமிர்தம்" என்று ஒரு கவி குறிப்பிடுகின்றார். 'கண்ணே! ஒரு முத்தங்கொடு. அது வலியையும் நோயையும் தீர்க்கும் அருமையான மருந்து. ஒரு நாளின் உழைப்பையும் அலுப்பையும் போக்கி பலத்தை மேன்மேலும் உண்டாக்கும் உத்தீபன மருந்து. என் பாரங்களையெல்லாம் இலகுவாக்கும் அருமையான சக்தி பெற்றது. என் பாவங்களையெல்லாம் அடியோடு போக்கும் பாவநாசினி அம்முத்தம்.'

ஆகவே; அவன் ஒவ்வொரு நாளும் அந்தத் தேவாமிர்தத்தைப் பருகிக்கொண்டே வாழ்ந்து வந்தான். ஆருயிர் இனிய மனைவியின் முத்தங்களினால் பலத்தையும் வீரத்தையும் பெற்றான். மனத்தின் கண் சபல புத்தியினால் தோன்றும் கெட்ட எண்ணங்களையெல்லாம் அந்த மனைவியின் முத்தம் என்னும் தேவாமிர்தத்தால் போக்கினான்.

இரண்டு முத்தங்களைக் குறித்த ஒரு வர்ணனைக் கீழ் வருமாறு :

' முதன் முதலில் எனக்கு முத்தமளிக்கும்போது நீ உன் தலையைச் சாய்த்து என்னுடைய உதடுகளுடன் அழுத்தினய். உன் மிருதுவான கை என்னுடைய தலை மயிரைத் தடவிக்கொடுத்தது. எனது இருதயம் களிப்பினல் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. எனது ஆன்மா மோக்ஷத்தில் ஆழ்ந்திருந்தது. நீ முதன் முதலில் அந்த இனிமையான முத்தத்தைக் கொடுக்கும்போது உன் பிரகாசம் பொருந்திய விழிகளை உற்று நோக்கினேன்.

' மனவருத்தமடைந்த பிற்பட்ட வருஷங்களில் என் பக்கத்தினின்றும் நீ வெளியேறிய பின்பு உன் மதிவதனத்தை மீளவும் நான் பார்ப்பதுபோல் எண்ணுகிறேன். நீ அன்று முதன் முதலில் எனக்குத் தந்த முத்தமும் என் மனத்தின்கண் தோன்றியது.

' நாமிருவரும் வழக்கமாகச் சந்திக்கும் இடத்திலேயே நான் நிற்கின்றேன். இது சமயம் மாங்கள் இலையுதிர்ந்தும் பழுப்பாகியும் இருக்கின்றன. நான் மனக்கொதிப்புடனும், மனத் தாங்கலுடனும் ஏக்கங்கொண்டு நீ மற்றொருவனை முத்தமிடுவதைப் பார்க்கின்றேன்.''

---

## ௩. முதலில் முத்தமிட்டது யார்?
## ஆதாமா? ஏவாளா?

ஒரு காலத்தில் ஒரே ஒரு மனிதன் பூவுலகில் தனியாகத் தோன்றி யிருந்தான். அவ்வாதி மனிதனே எல்லா வற்றிற்கும் நாதனாக இருந்தபோதிலும், தன்னைச் சுற்றி யுள்ள வஸ்துக்களெல்லாம் தனக்கே உரியனவாக விருந்த போதிலும், காட்சிகளெல்லாம் தன்னுடையதேவாக விருந்த போதிலும், தனக்கு ஒருவிதத்திலும் மனம் நிம்மதியடை யாமலிருப்பதை அவன் உணர்ந்தான். மனம் சந்தோஷத் தையும் சந்துஷ்டியையும் அடையவில்லை. மினு மினுக்கும் நட்சத்திரக் கோடிகளும், தண்ணொளியுடன் பிரகாசிக்கும் சந்திரனும், உஷ்ணத்தையும் பிரகாசத்தையும் ஒருங்கே கலந்து அளிக்கும் சூரியனும் தனக்கென்றே இருந்தும் அவைகளெவற்றிலும் அவனுடைய மனஞ் செல்லவில்லை.

அல்லும் பகலும் அனவரதமும் பேரிரைச்சலிடும் கடற் கரையின் மணலின்மீது அவ்வாதி மனிதன் நின்றுகொண் டிருந்தான். அவனுடைய பாதங்களை அலைகள் மெதுவாக உருண்டுவந்து தடவிக் கொடுத்தன. ஒவ்வொரு சமயத் தில் பேரிரைச்சலோடும் மின்னல் மின்னிப் பேரிடி இடித் தும் மலைபோல் பெரிய அலைதோன்றி தலைக்குமேல் எழும்பி அப்படியே அவனை விழுங்கி விடுவதுபோலவும், மற்றும் சில சமயத்தில் அலைகள் அடக்கமாக இரைச்சலின்றி மெது வாகத் தவழ்ந்து வந்து அவனுடைய பாதங்களை நுரை யுடன் கழுவும்.

பசி மிகுதியால் மிருகங்கள் ஒன்றுக் கொன்று கர்ஜனை செய்து கோபத்தால் கடிக்கும் இயல்புடையவைகளும்

தமது இயற்கைப் பகைமையை மறந்து வாழ்ந்து வந்தன. அவைகளை அவன் தொட்டுத் தடவும்போது அவைகள் மித்திர பாவத்துடன் இருந்தன. பெண் சிங்கங்கள் தத்தம் குட்டிகளைக் கொஞ்சிக் குலாவிக்கொண் டிருப்பதையும்; ஆடுமாடுகள் யாவும் சற்றும் பயமின்றி வயல்களில் புல்லை மேய்வதையும் அவன் கண்டான். இலைகளடர்ந்த மரங்களில் பட்சி ஜாலங்கள் தத்தம் இனிய பாடல்களைப் பாடித் தம் பேடுகளுடன் இனிமையாகக் காலங்கழிப்பதையும் சிறு குஞ்சுகளுக்கு வெளியிலிருந்து ஆகாராதிகளைக் கொணர்ந்து புசிப்பிப்பதையும் கண்டான்.

விதானமாக விரிக்கப்பட்ட ஆகாயத்தின் கீழ் இயற்கையினால் உண்டாக்கப்பட்ட சகல விதமான சரப்பொருள்களும், அசரப் பொருள்களும் சந்தோஷ மிகுதியால் வெளியிடும் குரலோசைகளையும், குதூகல மொழிகளையும் மெதுவாக வீசும் தென்றல் மூலமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான். இவைகளெல்லாம் அவனுடைய மகிழ்ச்சிக்கும் இன்பத்திற்குமே உண்டாக்கப்பட்டன. நாட்கள் செல்லச் செல்ல இவைகள் அவனுக்கு இன்பம் பயக்கவில்லை. அவனும் அதை யுணர்ந்தான். அவனுடைய இருதயத்தில் இவைகளெல்லா வற்றினையும் தன்னுள் ளடக்கிக்கொண்டு ஒரு சக்தி மட்டும் மேலோங்கி உயர்ந்திருந்தது. அது தன்னை எதனுடனும் கலக்காமலும், சேர்ந்து கொள்ளாமலும் இருக்கச் செய்து வந்தது. தன்னைச் சுற்றிலுமுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றுக்கொன்று அமைதியாயும், பூரணமாயும், ஒவ்வொன்றும் அததற்குள் நிறைவைப் பெற்றும், ஒருவிதக் குறைவுமின்றி இன்பவாழ்வை அடைந்து வந்தன.

அவ்வாதி மனிதனுக்கு எல்லாப் பாக்கியங்களும் அபரிமிதமாகக் குவிந்திருந்தபோதிலும் ஏதோ ஒரு குறையிருப்பதாகவும் அக் குறை என்ன வென்று சொல்லத் தெரியாமல்

தியங்கி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். தன் அறிவிற்கு எட்டிய அளவு பலமுறை யோசனை செய்து தன் வரையில் பூரணத்தைப் பெறவில்லை யென்றும், தான் பூரணமாவதற்கு ஏதோ ஒன்று கட்டாயம் வேண்டும் என்றும் உணர்ந்தான்.

அவனது மனத்தில் எவ்விதமாக அவ்வுணர்ச்சி எழுந்தது என்றும், யார் அவனுக்கு அறிவுறுத்தியவர்கள் என்றும், தான் கனவு கண்டானே என்பதும் ஒன்றுமே அறிய மாட்டான். அவனுக்கு அருகில் ஒருவரும் கிடையாது. அக்குறையை ஒருவரும் எடுத்துச் சொன்னவர்களும் கிடையாது. சலசல வெனச் சப்திக்கும் நீரோடைகளும், எக்காளம் போடும் எருதுகளும் இனிய கானம் எழுப்பும் பட்சி வகைகளும் பெருமூச்சுவிடும் இளங்காற்றும் இவைகளெல்லாம் அவன் மனத்திடை பெழுந்து அவன் அறிய முடியாத ஓர் உணர்ச்சியை அவனுக்கு உணர்த்த முயற்சி செய்தன. அவைகளினுடைய பாஷை இன்னது தான் என்பதையும் அவனால் ஊகித்தறிந்து கொள்ள முடியவில்லை.

கடைசியில், ஒரு நாட் காலை தூங்கி விழித்து எழுந்த போது கைகளை நீட்டி தூக்கத்தை உதறுவதைப் போல அப்படியும் இப்படியும் தடவியபொழுது தன் கை ஏதோ ஓர் உருவத்தின் மீது படுவதைப்போல் உணர்ந்தான். கண்ணை மட்டும் திறக்காமல் தடவினபோது இதை உணர்ந்தான். முதலில் ஏதோ ஒரு பிராணி தன் பக்கத்தில் படுத்திருக்க வேண்டும் என்று எண்ணினான். கண்களை நன்றாகக் கசக்கிப் பார்த்தான். அப்படிப் பார்த்தபோது அதிக ஆச்சரியத்தை யுண்டாக்கும் காட்சியைக் கண்டான். தன் முழங்கையின் மேல் தன் தேகத்தைத் தாங்கிக்கொண்டு கீழே படுத்துள்ள உருவத்தை உற்று நோக்கினான். தன் தேக அமைப்பிற்கும் அந்தப் புதிய தேக அமைப்பிற்கும்

எவ்வளவோ பேதமிருப்பதைக் கவனித்தான். புதிய உருவம் தன் உருவத்திற்கு நேர் எதிரிடையாக விருப்பதை நன்றாகத் தெரிந்து கொண்டான்.

அதி அழகும் வனப்பும் வாய்ந்த ஒரு மங்கை அவன் பக்கத்தில் படுத்து அயர்ந்து நித்திரை புரிந்துகொண்டிருந்தாள். நன்றாக உருண்டு அழகிய கைகளின் மீது தன் தலையை வைத்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது கூந்தல் அவிழ்ந்து தேகத்தின் பல பாகங்களை மூடிக்கொண்டிருந்தது. தனக்கிருப்பது போல் அவளுக்கு கைகளும் கால்களும் மிக்க அழகுடனும் உருட்சியுடனுமிருப்பதைக் கண்டு அதி ஆச்சரியமடைந்தான். அம் மங்கையின் தேகத்தினின்றும் கமழும் இனிய மணம் அவனை அசையவும் கூடச் செய்யவில்லை. அப்படியே அவ் வாஸனையை முகர்ந்த வண்ணம் ஒன்றுந் தெரியாமல் மயங்கி விட்டான்.

அப்படியே ஸ்தம்பித்து அவள் நித்திரை செய்வதைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். அவளது மதி வதனத்தைக் கண்கொட்டாமல் பார்த்து அவளது சுந்தரத்தைக் கண்களாலேயே விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான். ஏதேனும் செய்தால் அப்படியே மறைந்து விடுவாளோ எனப் பயந்தான். அவளது கண்கள் அந்தத் திவ்விய சுந்தரியின் வடிவத்தைக் காண விருப்பங் கொண்டன. கைகளால் அவ்வடிவத்தைப் பிடிக்கப் பெரிதும் விரும்பினனேனும் செய்கையினுல் செய்யத் துணியவில்லை. அதற்குக் காரணம் நித்திரை தெளிந்து மறைந்து விடுவாளோ என்ற அச்சம் அவனைப் பெரிதும் வாட்டியது. இவ்விதம் அவன் விழிகளுக்கு நல்விருந்து அளித்துக் கொண்டிருக்கும்போது அவளது கண்கள் சற்று திறக்கலாயின. மனப்பூர்வமாகத் தியானிக்கும் கடவுளது சன்னிதானத்தை

யடைந்து சன்னிதி வாயில் எப்போது திறக்கப் போகின்றது ; எந்தச் சமயம் திவ்விய மங்கள ரூபரைத் தரிசனம் செய்யப் போகிறோம் என்று ஏங்கும் பக்த சிகாமணியைப் போல எப்பொழுது சுந்தராங்கி கண் விழிக்கப் போகின்றாள் ; அவளது வேல் விழியை எப்போது காணப்போகின்றோம் என்று ஏங்கியிருந்தான்.

அந்தத் திவ்விய அங்கனை கயலென்ன விழிகளைத் திறந்தாள். அவன் அவ்விழிகளில் ஆகாயம் பிரதிபலிப்பதைக் கண்டான். ஆகாயத்தின் நீல நிறத்தையும் கருமணியையும் அவளது விழிகளில் கண்டான். ஆகாயம் கீழே அவளது விழிகளில் தஞ்சமென புகுந்து கொண்டதோ என்றும் அவன் எண்ணங் கொண்டான். சற்று நேரம் அப்படியே கவனித்துக் கொண்டிருக்கையில் இதழ்கள் மலர்ந்து புன்முறுவல் செய்வதைக் கண்டு உவகை பூத்தான்; தேகம் புளகாங்கித மடைந்தான். அதியாச்சரியங் கொண்டான். ஒன்றுந் தோன்றாது மெய்மறந்து உணர்வற்றான். திடீரென்று அம்மாது தன் உருண்டு அழகிய கரங்களினால் அவனுடைய கழுத்தைச் சுற்றிக் கட்டிக்கொண்டு தன் மார்பின்மேல் அவனை இழுத்து வைத்துக் கொண்டாள்.

'கண்ணாளா! நான் தான் தங்களுடைய ஆருயிர்க் காதலி; இன்னுயிர் மனைவி; நல்வாழ்க்கைத் துணைவி. நான் இல்லாமற் போனால் தங்களைச் சுற்றிலுமுள்ள இப்பொருள்கள் ஒன்றுக்கும் உதவா. இவைகள் படைக்கப்பட்டதன் காரணமும் தங்களுக்குத் தெரிய வாரா. நீண்ட காலமாக அதிக ஆச்சரிய மடைந்துள்ளீர். 'ஏன் நான் தனிமையாக இருக்கின்றேன் என்றும், இப்பொருள்கள் எனக்குப் புகழ்ச்சியைத் தராமலிருப்பதேன் என்றும் என்னில் நான் ஏன் பரிபூரணமாக இருக்கவில்லை யென்றும் பற்பல தடைவைகளில் ஆலோசனைகள் செய்து மிருக்கின்றீர்கள்



காதல காதலியர் இறுகப் புல்லுதல்.

[35-ம் பக்கம் பார்க்க.]



கலாசாலையில் பயிலும் மாணவ மாணவியரின் காதல் முத்தம்.
[74-ம் பக்கம் பார்க்க.]

வேண்டாம் என் நாதா சற்றும் விலகிக் கொள்ளவேண்டாம். (அவன் அவளது பிடியினின்றும் விலகிக் கொள்ள முயற்சி செய்தபோது சொன்னாள்) தங்களுக்கு ஊழியனை ஏற்படுத்தியபடி தாங்கள் நடந்து ஒழுக வேண்டியது கடமை. எனது மனமொழி காயங்களால் தங்களையே தஞ்சமென சரண மடைந்து விட்டேன். என்னுடைய ஐந்து பொறிகளும் தம்மையே பற்றுகக் கொண்டுள்ளன. எனது கண்கள் தங்களைத் தவிர வேறு ஒரு காட்சியையும் காண விரும்பவில்லை. எனது காதுகள் தங்களுடைய இனிய மொழிகளைத் தவிர வேறு எதையும் கேட்கப் பிரியப்படவில்லை. எனது நாசியும் தங்களுடைய சுந்தரமான தேகத்தினின் றெழும் நறுமணத்தையே முகருகின்றது. வேறு எந்த நறுமணத்தையும் முகர என் நாசி நண்ணுவதில்லை. எனது கரங்கள் தங்களுடைய திறங்கொண்ட புஜங்களையும் அழகிய தேகத்தையும் பிடித்து வருட விரும்புகின்றன. தங்களுடைய இனிய இதழ்களையே என் இதழ்கள் சுவைக்கப் பெரிதும் ஏங்கி நிற்கின்றன. என் மனமாகிய கண்ணின் முன்னே தங்களுடைய திருமேனி எப்பொழுதும் தரிசனங் கொடுத்துக் கொண்டே யிருக்கின்றது. தங்களுடைய சேவைக்காகவும், சௌகரியத்திற்காகவும் நான் தோன்றி யிருக்கின்றேன். தங்களுடைய வாழ்நாளை இனிமையாக்கவும் பிரகாசமடையச் செய்யவுமே இதுசமயம் தோன்றியுள்ளேன். தாங்கள் இவ்வுலகில் தோன்றி வெகு நாளாகியும், வேண்டுவன யாவும் தம்முடைய வசத்திலிருந்தும், மனம் மட்டும் ஒருவிதமான சாந்த நிலையையும் நிம்மதியையும் அடையாது போய்விட்டது. அதற்குக் காரணம் இன்னது என்பதும் தங்களுக்குத் தெரியவில்லை. என்னுடைய சிற்றறிவுக்கும் அனுபவத்திற்கும் எட்டியமட்டும் தங்களை இன்புறுத்த முயலுவேன். ஆனால், இவ்வேழையைத் தாங்கள்

விலக்க வேண்டும் என்பதாக மட்டும் கனவிலும் கருத வேண்டாம் என்று மன்றாடிக் கேட்கின்றேன். நான் சொல்லும் விதம் தாங்கள் கேட்கவேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன். நாமிருவரும் சேர்ந்து தான் ஒரு பெரிய ஜனசமூகம் உண்டாகப் போகின்றது. பெரிய ஜனசமூகத்திற்கு நாமிருவருந்தான் பெற்றோர்கள். நமக்குப் பிறக்கும் சந்ததியினர்கள் தாம் இப்பூவுலக முழுவதும் பரவிப் புகழையும் கீர்த்தியையும் அடையப்போகின்றனர்.

இனி நமக்குப் பிறக்கப்போகும் சந்ததியினரின் சந்தோஷம் எனது மார் பகத்தில் அடங்கி யிருக்கின்றது. நமது எதிர்கால சந்ததியாரின் மகிழ்ச்சியை நான் இப்போதே என் ஆத்மாவில் உணர்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்களுக்கு இன்றியமையாத நற்குணங்களாகிய ஊக்கம் ஒழுக்கம் இவைகள் எனது இரத்தத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. நான் தங்கள் கையினால் பறித்துச் சாப்பிடும் இனிமை வாய்ந்த கனியாக விருக்கின்றேன். அதைத் தாங்கள் ஒருவரே உண்ண அருகரானவர். அதைத் தாங்கள் உண்ட பிறகுதான் தங்களுடைய இருவிழிகளும் நன்கு பிரகாசத்தை யடையும். அப்பொழுது தான் நாமிருவரும் ஒன்றெனக்கலந்து தேவர்களாவோம். தாங்கள் தான் காரிய கர்த்தா—எதுவும் தங்களிடமிருந்து தான் செய்கையாக பரிணமிக்கும். நானோ காரண பூதமாக விருப்பேன். எனக்குச் செய்கை என்பது கிடையாது; தாங்கள் தாம் எதையும் செய்ய வேண்டும் என்பது முறையோ அதுபோலவே நான் தாங்கள் செய்வதற்கு எல்லாம் இணங்க வேண்டியது முறையாகும். எப்படி நிழலானது ஒரு பொருளை அணுகி, விடாமல் பின் தொடருகின்றதோ அதுபோல நானும் தங்களைப் பின் தொடர்ந்து கொண்டே இருப்பேன். எங்கு

தாங்கள் சென்றிடினும் அங்கு நான் வரத் தடையேயில்லை. தாங்கள் தாம் என் உயிர்நிலை; தாங்களே என் இருநிதிப் பொக்கிஷம்; தாங்களே என் நவநிதிக் களஞ்சியம். தாங்கள் தாம் நான் வழிபடுந் தெய்வம்' என்பதாகக் கூறி ஏவாள் ஆதாம் என்னும் ஆதி மனிதனைக் காதல் கொண்டு முத்த மிட்டனள்.

---

## ௪. விந்தையான முத்தங்கள்

---

முத்தங்களின் குறிகள்—மதசம்பந்தமான சடங்குகளிலும் சமுதாய வாழ்விலும் முத்த மிடுதல்—கோபமுள்ள பாதிரி—கோப்பைக்குள் முத்தம்—உதடுகளைக் குறித்துச் சில விஷயங்கள்—முத்தத்தை எதிர் பார்க்கும் இனிய மனுதாரர்கள்—நாட்டியமும் முத்தமும்—மேலைய முத்தமிடும் தேனீ.—

முத்தங்களில் அநேக குறிப்புக்கள் உண்டு. உதடுகளை முத்தமிடுவது என்பது முத்தமிடப்பட்ட மனிதனைப் புகழ்வதற்கு அடையாளம். அவனது பாதங்களையும் அடிச்சுவட்டையும், பூமியையும் முத்தமிடுவது அவனுக்குக் கீழ் அடங்கிய ஊழியன் என்பதை அறிவிக்கும். அவனுடைய மேலங்கியை முத்தமிடுவதால் முத்தமிடப்பட்டவருக்கு முத்தமிடுவோன் காட்டும் மரியாதையைக் குறிக்கும். கைகளை முத்தமிடுவது மிக்கப் புராதனமானதொரு வழக்கம். மதத்திலும் சமுகத்திலும் அவ்வழக்கம் வழங்கி வந்தது.

டெமாஸ்தினீஸ் என்பவன் தன் பகைவனை அண்டிபேடர் வசம் சிக்கிக் கொண்டபோது அப்பகைவனிடம் பக்கத்திலுள்ள மாதா கோயிலுக்குள் தான் சென்று உலக

மாதாவைத் தரிசித்து வர அனுமதி பெற்றுக்கொண்டு, கோயிலின் வாசலை யடைந்ததும் தன் வலது கையை வாயிக்குக் கொண்டுபோனான். அவன் அவ்விதம் கையினால் வாயை முத்த மிட்டதை மதச் சடங்கு போலும் என்று அப்பகைவர்கள் எண்ணினார்கள். ஆனால் விஷத்தைக் கையி னின்றும் அவன் வாயிற் போட்டுக் கொண்டான் என்று பின்னர் தெரிந்தது. நெடுநேரங் கழித்துத் தெரிந்தபடியால் விஷமுறிப்பு செய்யவும் முடியாது போயிற்று. ரோமர்களில், எவனொருவன் மாதா கோயிலினுள் நுழையும்போது தன் கையை முத்தமிட வில்லையோ அவன் நாஸ்திகன் என்று கருதப்பட்டு இகழப்படுகின்றான். கிறிஸ்தவமத ஆரம்ப காலத்தில் பாதிரிமார்கள் தமது கையை குருக்கள் முத்த மிடுவதற்கு அனுமதி யளித்திருந்தார்கள். இவ் வழக்கம் நாட் செல்லச் செல்ல குறையத் தலைப்பட்டது.

சமுக வாழ்க்கையில் கைகளை முத்தமிடுவது என்பது உபசரணையைக் காட்டும் ஒரு சாதாரண மௌன செய்கை யாகும். மற்றவர்களைத் தயவு கேட்கும்போது, அவ்விதம் தயையளித்தவர்களுக்கு நன்றி செலுத்தி வந்தனம் செய்யும் போதும், தம்மைவிட மேலானவர்க்கு மரியாதை செலுத் தும்போதும் கைகளை முத்தமிட வேண்டும். ஓமர் என்னும் அந்தகக் கவி எழுதிய இலியட் என்ற இதிகாசத்தில் தோன்றும் பிரயாம் என்பவன் அக்கிலீஸின் முழந்தாளைக் கட்டி ஆலிங்கனம் செய்துகொண்டு அவனுடைய கைகளை முத்தமிட்டு ஹெக்டரின் பிரேதத்தைத் தன்னிடம் கொடுக் கும்படி வேண்டிக்கொண்டான். இவ்வழக்கம் பூர்வீக ரோம் நகரத்தில் பரவியிருந்தது. ஆனால் அது வித்தியாசப்பட்டது.

குடியரசு நாட்கள் ஆரம்பத்தில் இழிகுலத்தவர்கள் உயர் குலத்தவர்களுக்குக் காட்டிய பெரிய வழக்கம். சம

அந்தஸ்திலுள்ளவர்கள் தங்களது கைகளை ஒருவர்க்கொரு வர் முத்தமிடக் கொடுத்துக் கொள்ளுவார்கள். ஒருவர்க் கொருவர் ஆலிங்கனமும் செய்து கொள்ளுவார்கள். காலம் செல்லச் செல்ல தமது தலைவர்களிடத்திலும் யுத்த வீரர்கள் கூட இந்த மரியாதையை அளிக்கத் தவிர்த்தார்கள். சக்கர வர்த்திகள் ஆண்டுவந்த காலத்தில் பெரிய பெரிய பிரபுக் களில்கூட கைகளில் முத்தமிடும் வழக்கம் பிரதான கடமை யாக விருந்தது. அரண்மனை உத்தியோகஸ்தர்கள் தங்க ளுடைய சக்கரவர்த்தி முன்னர் முழந்தாளிட்டு அவ ருடைய இந்திர நீல நிறப்பட்டாடையை வலது கையினால் தொட்டு அக்கையை அவர்கள் தம்முடைய வாய்க்குக் கொண்டு போய் முத்த மிடவேண்டும். இவ்விதம் முத்த மிடுவதுகூட மிகவும் நெருங்கியதாகவும் தாராளமானதாகவும் கருதப்பட்டு வந்தது. ஆகவே, அவர்கள் சக்கரவர்த்தியை நெருங்கி வராமல் தொலை தூரத்திலேயே நின்று கொண்டு தங்களுடைய கைகளைத் தாங்களே கடவுளது ஆலயத்தை நெருங்கும்போது செய்து கொள்வதுபோல முத்தமிட்டுக் கொள்ள வேண்டும். ஸாலோமன் என்பவர் தன் காலத்தி லிருந்த முகஸ்துதியினர்கள் செய்து வந்த ஒரு வழக் கத்தைக் குறித்துக் கூறுகின்றார். அந்த முகஸ்துதிக்காரர் கள் தாங்களைப் போஷிப்பவர்களிடம் ஏதேனும் யாசகம் கேட்க ஆரம்பித்து அது கிடைக்கும் பரியந்தம் விடாமல் அப்போஷணைக் கர்த்தர்களுடைய கரங்களை முத்த மிட்டுக் கொண்டே இருப்பார்களாம். அவர்கள் தங்களை விட்டுத் தொலைந்தால் போதும் என்று அருவருப்புடன் யாசகங் கொடுத்து ஒழிப்பார்கள் போலும். கார்டிஸ் என்னும் அறிஞர் மெக்ஸிகோவில் தாம் இருந்த சமயத்தில் தம்மை பல்லாயிரக் கணக்கான பிரபுக்கள் தமக்குக் காட்டிய மரியாதையைக் குறிப்பிட் டிருக்கின்றார். அவர்கள் தங்க

ளுடைய கைகளால் பூமியைத் தொட்டு அவைகளை அப்படியே தங்களுடைய வாய்க்குக் கொண்டு போய் முத்தமிட்டுக் கொள்ளுவார்களாம்.

ஆஸ்டிரியா தேசத்தில் கைகளை முத்தமிடுவது தேசாசாரமான செய்கையாகும். ஒரு கனவான் தன்னுடைய சிநேகிதையைக் காணும்போது அவளுடைய கைக்கு முத்தமளிக்கின்ருர். அவளைப் பிரியும்போதும் அம்மாதிரியே அவளுடைய கைக்கு முத்தமளிக்கின்ருர். ஒரு பிச்சைக்காரிக்கு ஓர் ஆடவன் தானம் செய்வானுனல் அவள் அக் கொடையாளின் கையை முத்தமிடுவாள். அல்லது 'உங்கள் கையை முத்தமிடுகின்றேன்' என்று உரைத்தாலும் உரைப்பாள். ஆஸ்டிரியாவிற்குப் புதிதாகச் செல்லும் யாத்திரிகர் தமது கையைப் பிச்சைக்காரிகளும் பணிப் பெண்களும் முத்தமிடுவார்கள் என்பதை நன்ருகக் கவனத்திற் பதிய வைத்துக்கொண் டிருக்கவேண்டும். **பேன் ஜான்ஸன்** என்ற புலவர் எழுதிய **ஸின்தியாஸ் ரேவல்ஸ்** என்னும் நாடகத்தில் **ஹேடன்** என்னும் கதாநாயகன் தன் நண்பனிடம் கீழ்வருமாறு கூறினுன் :—

பிலாண்டியா மாதராளை நான் 'என் கௌரவமே' என்று அழைப்பதை நீ நன்ருக உணர்வாய். அவள் என்னை 'தான் விரும்பும் பேரவா' என்று கூறுவதையும் நீ கேட்டிருக்கின்ருய். இப்பொழுது சன்னிதானத்தில் அவளைச் சந்தித்து அவளிடம் அணுகி என்ன சொல்லப் போகிறேன் தெரியுமா ? என் இனிய கௌரவமே? தாமரை மலர் போன்ற மென்மை பொருந்திய உன் அழகிய கைகளை இதுகாறும் முத்தமிட்டுப் பரமானந்தத்தை அடைந்து திருப்தி பெற்றேன் ; ஆனுல் இப்பொழுதோ நின் ரோஜாமலர் போன்ற மென்மையும் மணங்கமழும் இதழ்களை முத்தமிடுகின்றேன் என்று சொல்லிக்கொண்டே

முத்தங் கொடுக்கப் போகிறேன். அதற்கு அம்மங்கை என்ன பதில் கூறுவாள்? இல்லை இல்லை, நீ மிகவும் பேராவலை அளிக்கின்றாய்' என்பாள் என்று தன் சமத்காரத்தைக் குறித்துச் சொன்னான். அதற்கு அவனுடைய நண்பன் 'முத்தத்தைப் பெற இது ஒரு காரிய சாதனமான வழிதான்' என்று அவனை உறுதிப்படுத்தினான்.

லோரேனைச் சேர்ந்த ஜான் என்னும் பாதிரியார் மங்கையின் மயக்கம் அதிகமாகக் கொண்டவர். அவர் ஒரு சமயம் சேவாய் நாட்டு இளவரசியாரைக் காணச் சென்றார். அவர் தன்னைக் காண வந்தபோது அவ்விளவரசி தமது கரத்தை அப்பாதிரியார் முத்தமிட நீட்டினாள். அவ்விதம் அம்மங்கை செய்தது அப்பாதிரியாருக்குக் கோபத்தை மூட்டியது 'மாதோ! என்ன; என்னையும் இவ்வாறு உபசரிக்கலாமா? சாதாரணமானவர்கள் போல் என் அந்தஸ்தையும் செல்வாக்கையும் பொருட்படுத்தாது நாடோடி போல வரவேற்கின்றாயே? நான் என் யஜமானியாகிய மகாராணியை முத்தமிடுகின்றேன். உலகத்திலுள்ள அரசர்களுக் கெல்லாம் உயர்பதவியும் மேம்பாடும் பெற்ற லோக நாயகியைக்கூட அல்லவா முத்தமளிக்கின்றேன். உன் மாசு படிந்த அசுத்தமான கையையோ நான் முத்தமிடுவது? வேண்டாம் வேண்டாம் 'உன் கை முத்தம்' என்று சீற்றத்தோடு கூறினார். மேலொன்றும் பேசாமலும் செய்யாமலும் திடீரென்று அந்த இளவரசியைத் தன் கைகளால் கட்டிப் பிடித்து அவளது கொவ்வைக் கனிபோன்ற சிவந்த இதழ்களில் மூன்று முறைகள் முத்தமிட்டார். மங்கையர்களின் இதழை முத்தமிட்ட பின்னர் அவர்களது கையை மட்டும் முத்தமிட வேண்டும் என்று வழக்கம் மாறியதைக் குறித்து அவர் ஒருவிதமாக அபிப்பிராயப் படுகின்றார். சிறு குழந்தைகள் ஆப்பில் பழத்தின் தோலைச்

சீவி சாப்பிட்டு ருசி அனுபவித்த பின்னர்க் கீழே உதிர்ந்துள்ள ஆப்பில் பழத்தோல் சீவலையும் எடுத்துச் சாப்பிடுவார்கள். அந்தச் சிறுவர்கள் செய்யும் செய்கையைப் போல முத்தத்தின் முழு அனுபவத்தையும் சுகத்தையும் பெற்ற பின்னர் அந்தச் சுகத்தில் எத்தனையோ பாகத்திலும் சேராத அவ்வளவு அற்பமான பாகமான கை முத்தத்தை விரும்புவது இருக்கின்றது. மிக்க இனிமை பொருந்திய கரும்பு இருக்க அதைவிட்டு வேப்பிலையை மெல்லுவோரும் உண்டோ என்பதாக ஒரு வார்த்தையில் தமது அபிப்பிராயத்தை வெளியிட் டிருக்கின்றார்.

கிரேக்கர்களிடத்திலும் ரோமர்களிடத்திலும் ஒரு வழக்கம் இருந்து வந்தது. ஒரு மங்கை ஒரு கிண்ணத்தின் எந்த பாகத்தை வாயில் வைத்துப் பானம் செய்தாளோ அந்தப் பாகத்திலேயே ஆடவனும் தன் வாயை வைத்துப் பானம் செய்வான். இம்மாதிரியாக ஒரு விந்தையான வழக்கம் இருந்தது. பேன் ஜான்ஸன் இந்தக் கொள்கையை ஒரு கிரேக்க கவியினின்றும் தெரிந்து எடுத்தாளுகின்றார். அவர் கூறுவதாவது :

'கிண்ணத்தில் உன் முத்தத்தைப் பதியவை. எனக்கு வேறு போதை தரும் பணம் வேண்டாம்' என்பதாகக் குறித்திருக்கின்றார்.

இவ் வழக்கத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு பெரிய கவி கீழ்வரும் விதம் கூறிப்போந்தார் :

'அருமை வாய்ந்த கிண்ணமே', என்னே நின் பாக்கியம்! அழகு மிகுந்த அணங்கின் உதடுகள் நின் இதழை முத்தமிட்டன. உனது இதழை என் இதழ் முத்தமிட்டால் என் ஆன்மா உன் இதழில் கரைந்து போய்விடும்.

உண்மையில், இதழ்களைக் குறித்து எவ்வளவோ விஷயங்கள் உண்டு என்பதாகப் பல கவிகள் அபிப்பிராயப் படுகின்றார்கள். அனக்ரியான் என்பவன் 'உதடுகள் கோபங் கொள்ளும் முத்தங்கள்' என்பதாக உரைக்கின்றார். அவரே, மற்றொரு அழகிய மாதின் இனிய உதடுகளைக் கண்டு முத்தமிட அவாவுறும் 'இனிமை பொருந்திய மஞ தாரன்' என்பதாகவும் கூறியிருக்கின்றார்.

டாடியஸ் என்பவர் 'முத்தமிட மிருதுவும் மேன்மை யும் பொருந்திய உதடுகள்' என்கின்றார்.

லூக்ரிடியஸ் என்னும் காமுகன் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றான். அதாவது அகன்ற உதடுகளைப் பெற்றிருக்கும் மங்கையர்கள் தாம் மற்றவர்களைவிட இனிமையாக முத்தங்கொடுக்க வல்லவர்கள் என்றான். புராதன மங்கையர்கள் தங்களுடைய காதலனது உதடுகளை ஆத்திரத்தோடு கடித்து விடுவதுபோல அவ்வளவு வேக மாகவும் ஆசையுடனும் முத்தமிடுவார்களாம்.

கட்டாலஸ் தான் யாத்த செய்யுள் ஒன்றில் கேள்வி மூலமாகப் பின் வரும் விதம் கேட்கின்றான். 'நீ யாரை உன் காதலனைத் தேர்ந்தெடுப்பாய்? உன்னை யாருடைய காதலியென்றழைப்பார்? அவனுடைய உதடுகளை நீ கடித் துக் காயம் செய்யும்போது உனது நடனம் புரியும் இதழ் கள் யார் மீது பாய்ந்து பருகும்?

ஹோரேஸ் தன் பாடல்களில் 'உனது உதடுகளில் பல மிகுந்த ஆசை நாயகன் தன் ஆனந்த மிகுதியினால் கடித்து அடையாளம் செய்கின்றான்' என்றுரைத்திருக்கின்றான்.

## ரு. நாநா தேச முத்தம்

நாநா தேசங்களில் முத்தமிடுதல்—அரேபியா, ருஷியா, ஐஸ்லாண்டு, பாரகுவே—இனிமையும் புதுமையுமுள்ள நார்வே தேச முத்தம்—முத்தமும் சட்டமும்—திருட்டுத்தனமாக முத்தமிடுதலில் செல்வம்—முத்தத்தின் அனேரோக்கிய அபாயம்—மரணத் தருவாயிலுள்ள வரை முத்தமிடுதல்—பிரக்கியாதி பெற்ற முத்தம்—ஆன்மார்த்த முத்தங்கள்—பிச்சைக்காரர்களுடைய பாதங்களை முத்தமிடுதல்—ஹெர்மென் என்னும் ஜர்மானியரெழுதிய பிரபஞ்ச முத்தம்—காதலரின் சுவர்க்கம்—இந்துப் பெண்—நாநா தேச முத்தம்—ஸ்பெயின் தேசத்து முத்தம்—

முத்தமிடும் வழக்கமானது தேசத்துக்கு தேசம் வித்யாசப் படுகின்றது. எவ்விதம் ஒரு தேசத்தவரும் மற்றொரு தேசத்தினரும் நடை உடை பாவனைகளில் வேறுபட்டிருக்கின்றார்களோ அவ்விதமே முத்தமிட்டுக் கொள்ளும் விஷயத்திலும் வித்தியாசப் படுகின்றார்கள். அராபியா தேசத்து அணங்கு தன் கணவனுடைய தாடியை முத்தமிடுகின்றாள். அந்த முத்தத்தை அந்த கணவன் அம் மனைவிக்குத் திருப்பி யளிக்க அவளுடைய நெற்றியில் முத்தமிடுகின்றான். எகிப்து தேசத்தில், தாழ்ந்த பதவியிலுள்ளவன் உயர்ந்த பதவியிலுள்ளவனுடைய புறங்கைக்கு முத்தங் கொடுக்கின்றான்; சிற்சில சமயங்களில் உள்ளங் கையில் முத்தமிடுகின்றான். புத்திரன் தன்னுடைய பிதாவின் கையை முத்தமிடுகின்றான். மனைவி தன் கணவனுடைய காத்தை முத்து கொடுக்கின்றாள்; சுயேச்சையை அடைந்த அடிமை தன் எஜமானனது கைக்கு முத்தமளிக்கின்றாள். சுதந்தரம் பெறாத அடிமைகள் தங்களுடைய

எஜமானனுடைய அங்கிக்கும் உடைக்குந் தான் முத்தங் கொடுக்கவேண்டும்.

ருஷியா தேசத்தில் 'கிறிஸ்து உயிர்த்தெழுந்த திரு நாள் கொண்டாட்ட காலத்தில்' முத்தத்தால் வந்தனம் புரிந்துகொள்ளுகின்றார்கள். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் முத்தங்கொடுத்துக் கொள்ளுகின்றார்கள். அறிமுகமானவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது முத்தமளித்துக் கொள்ளுகிறார்கள். முதலாளிகள் தங்களிடம் ஊழியஞ் செய்யும் வேலைக்காரர்களை முத்தமளிக்கின்றார்கள். தளகர்த்தர்கள் தங்களது சேனையிலுள்ள யுத்த வீரர்களை முத்து கொடுக்கின்றார்கள்; ருஷியா ஜார் சக்கரவர்த்தியரும் தமது ராஜ குடும்பத்திலுள்ளவர்களையும், சேனு வீரர்களையும், ஆஸ்தானத்தவர்களையும் மந்திரிப் பிரதானியர்களையும், அரண்மனை வாயில் காப்போரையும் முத்தமிடுவார். 'அரசரது முத்தத்தைப் பெற ஏற்படுத்தப்பட்டிருக்கும் இன்னும் சில வீரர்களையும் சக்கரவர்த்தியார் முத்தமிடுவார். ருஷியாவில் இன்னும் சில பிரதேசத்தில் மிகுந்த ஏழை, தெருவில் பெருத்த பணக்காரியைச் சந்தித்தாலுங்கூட அவளை அணுகி 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்' என்று சொல்லவேண்டும். இவ்விதம் சொன்ன ஏழையை அந்தப் பணக்காரி உடனே முத்தமிடவேண்டும். அதோடு நின்றுவிடாமல் அவனுக்கு மறுமொழியும் புகலவேண்டும். "அவர் உண்மையிலேயே உயிர் பெற்று எழுந்துவிட்டார்" என்று சொல்லவேண்டும். ருஷியா சக்கரவர்த்தினியான காதரைன் மகாராணியார் ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக் கொருவர் காட்டிக்கொள்ள வேண்டிய மரியாதை விஷயங்களை விருத்தி செய்ய நோக்கங்கொண்டு பெரிய பெரிய சங்கங்களை ஏற்படுத்தினள். அச் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்கள்

கவனிக்கவேண்டிய சில விதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்படுத்தியிருந்தாள்.

ஆடவர் எவரும் ஓர் அணங்கைப் பலவந்தமாக முத்தமிடக்கூடாது. சங்கத்தினிடையில் மங்கையுடன் எவ்வித செய்கையும் செய்யக்கூடாது. அவ்விதம் யார் நடந்துகொள்ளுகிறார்களோ அவர்களைச் சிரச்சேதம் செய்யப்படும் என்பதாக ஒரு கடுமையான தண்டனையையும் ஏற்படுத்தியிருந்தாள்.

நார்வே தேசத்தில் மிக்க ஆச்சரியமானதொரு வழக்கம் இருந்துவருகிறது. இனிமையும் மேன்மையும் இன்னும் அதிக வியப்பையும் தாத்தக்கவிதமாக முத்தங்கள் வழங்கப்படுகின்றன. நார்வே தேசத்திய நாரீமணிகள் ஆடவரைப் பஞ்சணை மெத்தை மீது படுக்கவைத்து மேற்போர்வையைக் கழுத்துவரையில் போர்த்துவிட்டு தமது பரிசுத்தமும் அழகும் வாய்ந்த முகத்தைத் தாழ்த்தி மிக்க மரியாதையாக அந்த ஆடவரது முகவாய்க்கட்டையில் கொஞ்சமும் வெட்கம் நாணமின்றி முத்தமிடுகின்றார்கள்.

பின்லாண்டு என்னும் தேசத்தில் இதற்கு மாறாகவும் மிக விந்தையானதுமான ஒரு வழக்கம் இருந்துவந்தது. முத்தமிடுவதை அல்லது இடப்படுவதை மங்கையர்கள் வெறுக்கின்றார்கள். முத்தம் என்பதை பின்லாண்டு மாதர்கள் அருவருத்து அவ்வழக்கம் மேற் கொண்டவர்களையும் இகழ்கின்றார்கள். இங்கிலாந்தில் ஆடவர்களும் மகளிர்களும் முத்தங்கொடுத்துக் கொள்ளுகிறார்கள் என்பதைக் கேட்ட ஒரு பின்லாண்டு தேசத்திய மாது அவ்விதம் செய்துகொள்வதை வெகுவாக இழிவுரைத்தாள். தன்னுடைய காதலன் தன்னை முத்தங்கொடுக்க நெருங்குவானானால் அவனுடைய இருகன்னங்களும் புளித்துப் போகும்படியும் அவ்விதம்

தான் கொடுத்த அறை ஒரு மாத காலவரையிலும் வலி கொடுத்து வரும்படியும் அறைவதாகக் கண்டிதமாகச் சொன்னாள். அப் பெண்மணிகளுக்கு எவ்வளவு அருவருப்பைக் கொடுப்பதாகவிருந்தால் முத்தங்கொடுக்கும் தம் கணவர்களையும் அடிக்கவும் தோன்றும் என்பதைச் சற்று ஆலோசிக்கவேண்டும். கணவர்களுக்கு மனைவி காட்ட வேண்டிய மரியாதையையும் முத்தம் என்பது பறந்தோடும்படிச் செய்துவிடுகின்றது.

ஐஸ்லாண்டு தேசத்தில் நியாய விரோதமானதும் திருட்டுத் தனமாகவும் முத்தமிடுவது என்னும் வழக்கங்களுக்குக் கண்டிப்பான தண்டனைகளும் உண்டு. மற்றொருவனுடைய மனைவியை அவளுடைய அனுமதியையும் சம்மதத்தையும் பெற்ற பிறகோ அல்லது பெறாமலேயோ ஓர் ஆடவன் முத்தமிடுவானானால் அவ்விதம் முத்தமிட்டவன் மதப்பிரஷ்ட தண்டனையையும், திரவிய அபராதத்தையும் பெறுவான் என்பது திண்ணம். ஒரு விவாகமாகாத மங்கையை ஒரு வாலிபன் அவளுடைய அனுமதியைப் பெறாமல் முத்தமிட்டதற்காகக் குற்றவாளியாக்கப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டான்.

பாரகுவே என்ற நாட்டில் ஒவ்வொரு வாலிபனும் தனக்கு அறிமுகமாக்கப்படும் ஒவ்வொரு மங்கையையும் வழக்கமாகவே முத்தமிடவேண்டும். இம்மாதிரி செய்வது உண்மையிலேயே அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கத் தக்கதாகவிருந்தாலும் அவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்காது. ஏனென்றால் அப் பிரதேசத்தில் மங்கையர்கள் பதின்மூன்று வயதடைந்த காலத்தில் புகையிலை மெல்ல ஆரம்பிக்கின்றபடியினால் அவர்களிடம் புகையிலை மணம் மிகுந்திருக்கின்றது. அந்த நெடியானது ரோஜா செடிக்கு முள் எவ்விதமாக அருவருப்பைத் தருகின்றதோ அவ்விதமாக

முத்தத்தின் ஆனந்தத்திற்குப் பங்கத்தை விளைவிக்கின்றது. ஆடவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு மங்கையும் மிக்க எழிலும் வனப்பும் உருவமைதியும் பெற்றிருப்பவர்களாதலால் புகையிலை மணத்தையும் பொருட்படுத்தாமல் அவர்களது இதழ்களை தங்களது ஆத்திரம் மிகுந்த உதடுகளால் பற்றிப் பிடித்து முத்தமிடுகின்றார்கள். அந்த யுவதிகளின் அழகும், வடிவழகும், காமக்கிளர்ச்சித் தோற்றமும் யுவாக்களின் மனத்தைக் கொள்ளை கொள்கின்றன. அவைகள் யுவாக்களை அடிமைகளாகவும் ஊழியக்காரர்களாகவும் செய்துவிடுகின்றன. என்னே அப்பெண்களின் வனப்பு! என்னே அத் தருணிகளின் எழில்!

கன்னக்டிகட் என்ற நகரத்தின் 'கடுமையான சட்டங்களில்' ஒரு ஸ்திரீ தன் குழந்தையைக்கூட விரதநாட்களில் முத்தமிடக் கூடாது என்பதாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விதம் செய்தால் அந்த குற்றத்திற்குப் பெரிய கடுமையான தண்டனைகளுமிருக்கின்றன. ஒரு துர்ப்பாக்கிய வாலிபன் ஒரு மங்கையின் சம்மதமில்லாமல் அவளை முத்தமிட்டதன் குற்றத்திற்காக ஒரு நியாயாதிபதியால் அபராதமும் சிக்ஷையும் ஒருங்கே பெற்றான். சம்மதமும் அனுமதியுமில்லாமல் யுவதியை முத்தமிடுவது ஒரு பெரிய குற்றமாகும். அக்குற்றத்திற்கு திரவிய அபராதமும் கடுங்காவல் சிறையும் தண்டனைகளாம்.

முத்தத்தின் மதிப்பு எவ்வளவு தொகையினளவாக இருக்கும் என்பதை அறிந்துகொள்ளச் சிலர் அவாவுறுவது இயற்கையாம். அமெரிக்காவில் ஐக்கிய மாகாணத்து நியாய சபையில் ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது பென்ஸில் வேனியா பிரதேசத்தில் எவனொருவன் பலவந்தமாக ஒரு மங்கையை முத்தமிடு

கின்றானோ அவன் 750 டாலர்கள் அபராதம் விதிக்கப் படுவான் என்று ஒரு சட்டப் பிரிவு அமுலில் இருந்தது. நியூ யார்க் பிரதேசத்தில் அக் குற்றத்திற்கு 2500 டாலர்கள் அபராதம் என விதிக்கப்பட்டிருக்கிறது.

வைத்திய முறையில் பரிசீலனை செய்து பார்த்தால் முத்தம் பெரிய ஆபத்துக்களை விளைவிக்கக்கூடியது என்று புலப்படுகிறது. குழந்தைகளை முத்தமிடுவதனாலே டிபிதிரியா என்னும் கொடிய நோய் பாவுகின்றது. இந்தக் கொடிய நோய் முத்தமிடுவதன் மூலமாகத் தான் விசேஷமாகப் பாவுமேயொழிய வேறு எந்த வழியாகவும் ஒருவருக்கொருவர் தொத்திக்கொள்ள இயலாது. கை குலுக்கும் வழக்கத்தினால் கைகளில் சிரங்குகள் உண்டாவதைப்போல் முத்தமிடுவதினால் டிபிதிரியா வியாதி உண்டாகின்றது என்பது உண்மையான விஷயம். ஒரு பெரிய வைத்திய சிகாமணி தமது மனைவிக்கு ஒரு எச்சரிக்கை செய்திருந்தார்: 'நமது குழந்தைகளை அன்னியர் எந்த சமயத்திலும் முத்தமிடக் கூடாது. இது விஷயத்தில் நீ மிகவும் கவலையாக இருக்க வேண்டும்' என்று திட்டஞ் செய்திருந்தார். இவ்விதம் தாம் தமது மனைவிக்கு எச்சரிக்கை செய்த விஷயத்தைப் பிரசங்கங்களிலும் எடுத்துக் கூறினார். இன்னும் அவர் ஓர் அருமையான பிரசங்கஞ் செய்துள்ளார். அது பின்வருமாறு: 'ஜூடாஸ் ஒருவன்தான் வஞ்சக முத்தம் கொடுத்து நண்பனைக் காட்டிக்கொடுத்தான் என்று நீவிர் எண்ண வேண்டாம். அழகும், களையுமுள்ள ஆயிரக் கணக்கான சிசுக்கள் ஒவ்வொருநாளும் குழிதோண்டப்பட்டுப் புதைக்கப்படுகின்றன. அந்தோ! முத்தத்திலே எமன் சஞ்சாரஞ் செய்கின்றான். காதல் மிகுந்தவளும், 'பரிதபிக்கப்பட்டவளுமான ஹெஸ்ஸிபட்டணத்து அலிஸ் இளவரசி தனது குழந்தையை முத்தமிட்டதனாலே டிபிதிரியா நோய் கண்டு

குழந்தை மரணமடைய தானும், அதைப் பின் தொடர்ந்து மரணமடைந்தாள். எனவே, டிபிதிரியா, மலேரியா ரத்த விஷமாதல், மரணம் இவைகளெல்லாம் முத்தத்தில் ஒளிந்து கொண் டிருக்கின்றன.

முத்தமிடுவதைக் குறித்து பல மூட நம்பிக்கைகளும் உண்டு. அந்த நம்பிக்கைகளைக் கொள்கைகளாகப் பாவித்து நடக்கின்றவர்களும் பலர் உண்டு. வர்ஜினியா பிரதேசத்தில் வர்ரே என்ற ஊரில் பைபிளில் முழு நம்பிக்கைகொண் டிருந்தவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் இளம் பிராயத்திலேயே முத்தமிடுவது மிகக் கொடிய வழக்கம் என்று நன்குகத் தெரிந்துகொண் டிருந்தபடியாலே அவ் வழக்கத்தை முழு மனதாக வெறுத்தான். சிறு வயதிலேயே இம்மாதிரியான வெறுப்பு உண்டானதற்குக் காரணமாக கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தது முத்தமே என்று உறுதியாக நம்பினன். ஆகவே, தன் வாழ்நாட்களில் ஒருவரையும் தான் முத்தமிடவும், முத்தமிடப்படவும் கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டான். அவனுக்கு விவாகமாகி சுமார் இருபது வருஷங்களாக இல்லறம் நடத்தி வந்தான். அவனுக்குப் பதிஞேரு குழந்தைகள் உண்டு. அவ்வளவு அன்பும் ஆதரவும் தனது மனைவியிடம் கொண்டு வாழ்ந்துவந்தான். எனினும், அவன் தனது இன்னுயிர் மனைவியையாவது அல்லது மக்களையாவது ஒரு தடவைகூட முத்தமிட்டதேயில்லை. அவன் மற்றவர்களாலும் முத்தமிடப்படவுமில்லை. தான் சிறுவயதில் தன் மனத்திற் பதிய வைத்துக்கொண்ட விஷயத்தின் சக்தியே சக்தி. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்னும் பழமொழியும் பழிமொழியாகுமோ ?

ஸர் வால்டர் ஸ்காட் என்னும் ஆங்கில நாவல் ஆசிரியர் தாம் எழுதிய 'பெர்த்தின் அழகிய மங்கை' என்பதில்

கதாநாயகன் மாரணத்தருவாயி லிருந்ததாகவும் அந்தச் சமயத்தில் அவனுக்கு முத்தங் கொடுக்கவும் ஒருவரு மில்லா மற் போனதைக் குறித்து மிகவும் பரிதபிக்கின்றதாகக் குறித் திருக்கின்றார். சிறிது நேரங் கழித்ததும் தமது காலஞ் சென்ற நண்பரது மனைவி தன் மரித்த கணவன்மீது விழுந்து புலம்புவாளானாள்.

வெண்மையும் மென்மையும் பொருந்திய அல்லிப் புஷ் பங்களைப் போன்ற தன் நாதனது உதடுகளிலிருந்து பிரிந்து போகும் சுவாசத்தை அவள் தன் முத்தத்தால் உறிஞ்சினாள் என்பதாக மிக விசனத்துடன் எழுதிப் போந்தார்.

கப்பலில் சண்டை போட்டுக்கொண் டிருக்கும்போது லார்ட் நெல்சன் இறக்க நேர்ந்தது. அந்தச் சமயத்தில் அவன் பக்கத்தில் ஆத்ம நண்பனான ஹார்டி நின்றுகொண் டிருக்கக் கண்டு 'என் நண்பா! ஹார்டி, எனக்கு ஒரு முத் தங் கொடு' என்றான். இதுவே அவன் கடைசியாக உயிர் போகும்போது சொன்ன வார்த்தை. பிறகு உயிர் நீத்தான். இதைப் போலவே ஸர் வால்டர் ஸ்காட் என்னும் நாவலா சிரியர் மரண மடையும்போது லாக்கார்ட் என்னும் தன் உறவினனை முத்தமிட்டு 'நல்லவனாக இரு என் பிரிய நண்ப! நற்பெய ரெடுப்பாய்!" என்று சொன்னார்.

இம்மாதிரியான பிரக்கியாதி பெற்ற பல முத்தங்களைக் குறிப்பிடலாம். கிறிஸ்தவ வேதமான பைபிலில் ஆதியாக மத்தில் யாக்கோபு ராச்சேலை முத்தமிட்டபோது 'தன் குர லெழுப்பிப் புலம்பினான்.' அவ்விதம் அவன் புலம்பினதைக் குறித்து சிலர் வேடிக்கை யார்த்தமாக எழுதி யிருக்கின்றார் கள். அவர்கள் சிலவற்றைக் காரணமாக எடுத்துக் காட்டு கின்றார்கள். அவற்றுள், அவன் அழுவதற்குக் காரணமாகத் தான் மீண்டும் அவளை முத்தமிடுவதற்குச் சந்தர்ப்பம்

கிடைக்காது என்று தெரிந்து கொண்டதும் ஒன்றாகும். ராச்சேல் தன் தாயிடம் அவன் செய்ததைச் சொல்லி விடுவதாகப் பயமுறுத்தியதும் ஒரு காரணமாகும். அவன் புலம்பினதற்கு மற்றொரு காரணம் என்னவென்றால் அம்மங்கை தன்னைத் திருப்பி முத்தம் கொடுக்கவில்லையே யென்பது.

வாட்டர்லூ யுத்தகளத்தில் கடும்போர் புரிந்தவனும் 1886-ல் ஸ்காட்லண்டில் எல்ஜின் நகரில் இறந்த வீரனுமான **டன்கன் மேக்கன்ஜி** தான் எவ்விதமாக இளவரசியை முத்தமிட்டு அவளது அழகிய வாயினின்றும் ஒரு பொன் நாணயத்தைப் பெற்று அவளது சேனையில் தளகர்த்தனைச் சேர்த்துக் கொள்ளப்பட்டான் என்பதைப் பிறருக்குச் சொல்லுவதில் மகிழ்ச்சியும் களிப்புங் கொண்டான். டட்கில் சந்தைக் கிடையில் கயல்விழியாளைக் காதல்கொண்டு முத்தமிட்ட விஷயத்தை நினைத்து நினைத்து உடல் பூரித்து அகமகிழ்ந்து ஆனந்த பரவசத்தை யடைந்து ஒவ்வொருவரிடத்திலும் சொல்லிக் கொண்டான். அவ்விஷயத்தை அவன் சொல்லிக் கொள்ளாத மனிதரே கிடையாது.

**டென்னிஸன்** பிரபு ஒரு பெரிய ஆங்கில கவிதா சிரோமணி யாவர். அவர் தமது அருமையான செய்யுட்கள் ஒன்றில் முத்தத்தைக் குறித்து ஒரு மங்கை அனுபவித்து ஆனந்தப்படுவதை வெகு அழகாக வெளியிட் டிருப்பதாகக் கூறுகின்றார்.

'எனது ஆவியை ஒரே மூச்சில் முத்தத்தால் அபகரித்துக் கொள்வான் போலும்; பனியை உறிஞ்சும் சூரிய கிரணம் போலும் உறிஞ்சி விட்டான்' என்று வெகு சாதுர்யமாக மொழிந்திருப்பதாக வெளியிட்டிருக்கின்றார்.

ஆத்மத்துவம் நிறைந்ததும், கீர்த்தி பெற்றதுமான முத்தம் **பாடிமாவுக்குக்** கொடுக்கப்பட்டதாம். அம்மாதிரி

யான இன்பந் ததும்பும் முத்தம் அதிசயமானது மன்று; புதிதானது மன்று. இக்காலத்திலும் கூட அது பழைமை யானதென்று தள்ளப்படாமல் வழக்கத்தில் இருந்து வரு கின்றது.

ஆத்மதத்துவம் நிறைந்த முத்தங்களைக் குறித்துப் பற்பல கவிகள் பற்பல விதங்களில் சிலாகித்தும், வியந்து பேசியும் போயிருக்கின்றார்கள்.

பைரன் என்னும் பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் நன்றாக நிரம்பப் பெற்ற ஆங்கில கவி சிரேஷ்டர் தாம் இயற்றிய நூல்கள் பலவற்றில் ஒன்றான டான்ஜுயான் என்ற காவியத்தில் முத்தத்தின் விசேஷத்தைக் குறித்து மிகைபடக் கூறி யிருக்கின்றார். 'முத்தங்கள் இருதயத்தையும் ஆன்மாவையும் அறிவையும் பெருஞ் சுழலிடையில் அகப்பட்ட மரக்கலத்தைப் போலக் கலக்கமடையச் செய்யும் சக்தி பெற்றவை. அத்தகைய முத்தங்களைத் தாமே அனுபவித்துப் பரிசிலனை செய்து பார்த்து நமக்குப் பின்வருமாறு சொல்லுகின்றார் :—முத்தம் ஆத்திரத்துடன் கொடுத்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் நமது தேகத்தின் கண் சதா ஓடிக்கொண்டிருக்கும் இரத்தம், ஓர் எரிமலையி னுள்ளிருந்து கரைந்து உருகி வரும் மிக்க உஷ்ணமான பாகுபோலாகும். நாடிகளெல்லாம் எரிமலையினுள்ளே கொளுத்தப்படும் பொருள்களுக்குச் சமானமானதாகிவிடும். அத்தகைய சந்தர்ப்பத்தில் பெறும் ஒவ்வொரு முத்தமும் இதய கம்பத்தை உண்டாக்காமல் போகுமா? பூகம்பம் ஏற்படுவதைப் போல இதய கம்பம் ஏற்படும் என்பதாக அவர் கூறியுள்ளார்.

ஆத்ம தத்துவம் நிறைந்த முத்தத்தைப்பற்றி மற்றொரு தத்துவ நிபுணரும் சிலாகித்துப் பேசி யிருக்கின்றார். அது பின்வருமாறு :—

'குகையில் வசிக்கும் சன்னியாசியைப் போல மூளையில் ஆன்மா வசிக்கின்றது. ஆனால் நான் புத்தியில்லாதவனான படியினால் மெதுவாக அவளுடைய உதட்டிற்குத் தாழ்ந்து அவளறியாமல் திருட்டுத்தனமாக அவளது ஆவியையே நேரிற் முத்தமிட்டு விட்டேன். அதனால் ஆத்ம திருப்தியை முழுவதும் பெற்றவனாகி விட்டேன்.'

புராதன காலங்களில் இங்கிலாந்தில் அரசர்களும் அரசிகளும் நாடோடியாய்த் திரியும் பிச்சைக்காரர்களுடைய பாதங்களைக் கழுவிச் சுத்தம்செய்து அவைகளை முத்தமிடுவது ஒரு பெரிய வழக்கமாக விருந்து வந்தது. பிச்சைக்காரர்கள் கிறிஸ்துவின் அடியார்கள் என்று அவர்கள் எண்ணி மரியாதை செய்து வந்தார்கள்.

இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டில் சுமார் அறுபத்துநான்கு வருஷகாலம் நீண்ட அரசாட்சி செய்த முதல் இராணியான **எலிஜபெத்** மகாராணியார் வருஷத்தில் ஒரு நாள் 39 பிச்சைக்காரர்களைக் கால் கழுவி முத்தமிட்டாராம். மிக்க மேம்பாடும் நாகரிகமும் சமத்காரமும் வாய்ந்த எலிஜபெத் மகாராணியார் கூட அத்தகைய காரியத்திற்கு ஒப்புக் கொண்டது மத போதனையாலே யன்றி வேறல்ல என்று சொல்லுவதைத் தவிர வேறென்ன மொழிவதற் கிருக்கின்றது?

ஆப்பிரிகா கண்டத்தில் இதற்குமாறாக நடந்த நிகழ்ச்சி ஒன்றுள்ளது. பிச்சைக்காரர்களது பாதங்களை மதபோதனையினால் கழுவி முத்தமிட்ட இங்கிலாந்து அரசியின் செய்கைக்கு நேர் எதிராக நடந்திருக்கின்றது. ஆப்பிரிகாவின் ஒரு நாட்டின் இறைவன் விவாகத்தில் மன வெறுப்படைந்து தனக்கு மணமே வேண்டாம் என்று உறுதியாகக் கூறிவிட்டான். மந்திரிகளும் அரசனது பந்துக்களும் எவ்வளவோ

மூயன்று அரசனை விவாகத்திற்கு உட்படுமாறு உபாயங்கள் செய்து பார்த்தனர். ஒன்றிலும் அரசன் வழிக்கு வந்தானில்லை.

நிற்க, ஒருநாள் அரசன் தன் கொலு மண்டபத்தில் மந்திரிகளுடனும் பிரபுக்களுடனும் வீற்றிருந்தான். அந்தச் சமயம் தேவலோகத்தினின்றும் அப்போதே இறங்கி வந்த அப்ஸரஸ் போன்ற ஒரு மங்கை நல்லாள் அம்மண்டபத்தில் தோன்றி அரசனது சிம்மாசனத்தை நோக்கி அன்ன நடையுடன் அடிமேலடி வைத்து நடந்து வரலானாள். அவ்வணங்குக்கு நல்லாடை கிடையாது. கிழிந்த ஒரு துண்டை தன் தேகத்தின் பல உறுப்புக்கள் நன்றாக மூடப் பெறாமல் சற்று திறந்தும் திறவாமலும் போர்த்துக் கொண்டிருந்தாள். அவள் ஒரு பிச்சைக்காரியே யாவாள். அந்தச் சமயத்தில் அந்தப் பிச்சைக்காரி அரசனது கண்ணிற்குப் பெருத்த அரம்பை போலாகி விட்டாள். அவளைக் கண்டதும் அவளது அழகுக்கு அடிமையாகி ஆசனத்தை விட்டெழுந்து படிகளின் வழியாக இறங்கிவந்து, 'என்னே இவளது அழகு! என்னே இவளது வனப்பு! என் ஆசையை ஒருங்கே கொள்ளை கொண்ட இவ் வடிவழகியை அல்லவோ நான் மணத்தல் வேண்டும்' என்றுரைத்து அவளது அருகில் சென்று அவளுடைய தாமரை யொத்த கரத்தைப் பிடித்தழைத்துத் தன் சிம்மாசனத்தி லிருத்தித் தானும் அவள் பக்கத்தே கம்பீரமாக அமர்ந்து கொண்டான்.

சில வருஷ காலத்திற்கு முன்பாக **ஹேர்மன்** என்னும் ஜர்மானியர் பிரபஞ்சத்திலுள்ள பற்பல நாட்டிற்கு நேரில் விஜயஞ்செய்து முத்தத்தின் அனுபவத்தைக் குறித்து பரிசீலனை செய்து பார்த்தார். அவ்விதம் தான் அடைந்த அனுபவத்தைத் தாம் வெளியிட்ட 'பிரபஞ்சத்தில் முத்தங்

கள்' என்னும் நூலில் விரிவாகவும் தெளிவாகவும் கூறி யிருக்கின்றார்.

முத்தம் என்பது காதல காதலியர் ஒருமித்து ஒன்றெனக் கலந்து அடையும் சொர்க்கம் என்பதாக அவர் அபிப்பிராயப்படுகின்றார். அந்தச் சொர்க்கத்தைப் போல் வேறு சொர்க்கம் அவர்களுக்குக் கிடையாது என்றும் கூறி யிருக்கின்றார்.

ஹொர்மென் ஒவ்வொரு நாட்டின் மங்கையர்களைக் குறித்துக் கூறி வரும்போது நல்லபிப்பிராயத்தைக் கொடுக்காமல் இந்தியா தேசத்து இளமங்கையரைப்பற்றி தன் அபிப்பிராயத்தை வெகு அழகாகக் கூறுகின்றார். 'பற்பல தேசங்களில் மங்கையரின் முத்தங்களை விட நான் இந்தியாவின் மங்கையரின் முத்தங்களைப் பெரிதும் விரும்புகின்றேன். என் உள்ளமும் அதை நினைக்குந் தோறும் புளகாங்கித மடைகின்றது. முத்தமளிக்கப்படுங்கால் இந்திய மங்கையர் அதைப் பொறுமையுடனும் வணக்கத்துடனும் அருமையான மதச் சடங்குகள் செய்யும்போது பக்தி வினயத்துடன் இருப்பதுபோல் முத்தங்களை ஏற்றுக் கொள்ளுகின்றனர். புருஷர்களுக்கு ஸ்திரீகள் எவ்விதத்திலும் கட்டுப்பட்டவர்கள் அடங்கினவர்கள் என்பதை இவ்வொரு செய்கையிலிருந்தே நான் அறிந்து கொண்டேன்.

'ஸ்பெயின் தேசத்துப் பெண்களின் முத்தத்தை நான் என் மனமார அருவருக்கின்றேன். அப்பெண்கள் பூனைகள் போல் பிறாண்டிப் பிறாண்டி உபத்திரவம் செய்கின்றார்கள். அவர்களது முத்தங்களைப் பெறுவதினின்றும் பெருமலிருப்பதே மிக்க மேலானது' என்று தமது உலகானுபவத்தைத் தமது பாஷையில் எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்.

## கூ. பற்பல விதமான முத்தங்கள்.

முத்தங்களில் பலவிதம்—நீண்ட நீண்ட முத்தம்—பனியினும் தண்மையான முத்தம். மேலையினர் முத்தம்—நீண்ட காலம் முத்தம்—கலாசாலைப் பெண்களின் முத்தம்—ரோமர்களின் முத்தம்—முத்தங்களின் லக்ஷணம்—முத்தமே தண்டனை—குழந்தைகளை முத்தமிடும் அரசர்—கலியாணத்திற்குப் பின் முத்தம்—களவாடப்பட்ட முத்தங்கள்—முத்தம் சில வேளைகளில் கொள்ளையின் இனிய பாகம் என்றழைக்கப்படும்—கார்வீகா தீவின் மங்கையின் மாண்டகு முத்தம்.

மனித சிருஷ்டியில் எத்துணைய விதங்களும் மாதிரிகளும் இருக்கின்றனவோ அதைப்போலவே முத்தங்களிலும் பற்பல விதங்களும், பற்பல மாதிரிகளும் இருக்கின்றன. எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பது போலும், விலையுயர்ந்த வைரக் கற்கள் பதித்த பதக்கத்தில் நடுநாயகக் கல் ஒன்றிருப்பது போலவும் முத்தங்களெல்லா வற்றிற்கும் மிகச் சிறந்த முத்தம் ஒன்றிருக்கிறது. அதுவே பைரன் பிரபு கூறிவரும் இளமையினுடையவும் காதலினுடையவும் 'நீண்ட நீண்ட முத்தம்' என்பது. இம்மாதிரியான நீண்ட நீண்ட முத்தத்தைக் கடைப்பிடித்து வெற்றி பெற்றவரும் உண்டு என்று விளங்குகின்றது. ஆரோக்கிய திடகாத்திரமுடைய ஒரு பட்டிக்காட்டு இளைஞன் தன் ஆசையும் அன்பு மிக்க மங்கையை அடிக்கடி முத்தமிட்டான். பழகப் பழக பாலும் புளிக்கும் என்பது பழமொழி. ஆனால் முத்தத்தின் விஷயத்தில் அப்பழமொழி பலியாது. அதற்குமாறாக பாடப் பாட ராகம் என்பது போலவும் சாணைக்கல்லில் தீட்டப்பட தீட்டப்பட வைரம் ஒளி மிகுவதைப்போலவும் முத்தம் சிறப்பை யடைகின்றது.

ஒருநாள் அவ்வாலிபன் தன் எழில் மிக்க மங்கைக்கு முத்தங்கொடுக்கையில் சற்று நிறுத்தினன். முத்தமிட்டு முடியவில்லை. அதற்குள்ளாக அவ்வரிவையின் இருவிழிகளிலும் நீர்ப் பெருகி வர ஆரம்பித்து விட்டது. துக்கம் தொண்டையி லடைக்கத் தலைப்பட்டது. நாவும் தடுமாறியது. தழதழத்த குரலில் 'என் அன்பே! என் உயிரே! என் உயிரின் நிலையே! என் கண்ணே! கற்பகமே! என் கட்டிக் கரும்பே! என் காதல் துரையே! நான் என்ன தவறிழைத்து விட்டதாக எண்ணித் தாங்கள் என்னை இவ்விதத் துன்பத்திற்கு ஆளாக்கினீர்கள். ஒருவித அபராதத்தையும் நான் இழைக்கவில்லையே. அவ்வித மிருக்க ஏன் என்னைக் காதலிப்பதினின்றும் நின்று விட்டீர்கள். இத்தனை காலமாக என்னிடத்தில் தாங்கள் இருந்து வந்த விதத்தில் ஒன்றையும் இன்று நான் காணவில்லையே. உமது காதல் முறைகளெல்லாம் இன்றைக்கு எங்கு சென்று ஒளிந்தனவோ விளங்கவில்லையே' என்று மிகவும் நைந்து வருந்தினள்; அனலிடைப்பட்ட மெழுகென உருகினள். இத்தகைய துக்ககரமான வார்த்தைகளைக் கேட்க அவ்வாலிபன் திடுக்கிட்டான்; திகைத்து நின்று விட்டான். என்ன பதில் உரைப்பது என்றும் ஓராது ஸ்தம்பம் போல் நிலையாக நின்று கொண்டிருந்தான். பிறகு ஒருவாறு மனந் தெளிந்து 'என் காமக்கிழத்தி! என் கண்ணின் கருமணியே! என் இருதய கமலவாஸினீ! என் உடல் பொருள் ஆவி யெல்லாம் நீயே என்று கருதி வாழ்ந்து வரும் என்னை இவ்விதத் துன்பத்திற்கு உள்ளாக்குவாய் என்று நான் என் கனவிலும் கருதினவனல்லனே! அவ்வண்ணமிருக்க, நீ இவ்விதம் மொழிந்ததற்கு ஒரு காரணத்தையும் அறியாது இது சமயம் தவிக்கின்றேன். நான் உன் மீது எப்பொழுதும் கொண்டிருக்கும் காதலையே இன்றும் இப்பொழுதும் கொண்டிருக்கின்றேன். கண்ணே!

கங்கை நீர் வறண்டாலும் வறண்டுப்போம்; அலைகடல் நிலை தவறினாலும் தவறிப்போகும்; தினகரன் தெற்கில் உதய மானாலும் ஆகும்; அந்த நீலநிற ஆகாயம் பூமியாக மாறினாலும் மாறிவிடும்; இந்தப் பூமி வானமாகிலும் ஆகிவிடும்; ஆனால் நான் உன் மேற் கொண்டுள்ள காதல் மட்டும் மாறிடாது; சற்றும் குறைந்திடாது; அது வேறிடத்தில் சென்றும் பதியாது: இஃது உண்மை. முக்காலும் சத்தியம், சத்தியம். ஒரு மயிரிழையும் என் காதல் உன்னிடத்தில் குறையாது கண்ணே! உன்னை நீண்ட காலம் முத்தமளித்துக் கொண்டிருந்ததனாலே சற்று சுவாசத்தை உள் வாங்கிக் கொள்ளக் கொஞ்சம் தாமதித்தேன். அதற்குள்ளாக நீ இவ்வாறெல்லாம் விபரீதமாக, அபாண்டமாக என் மேல் வருத்தப்படலாமோ? என் உயிரே!" என்று அவ்விளைஞன் மறுமொழி பகர்ந்து சாந்தப்படுத்தினான்.

முத்தமே! போற்றி போற்றி!! பனியினும் தட்பம் பொருந்திய தயவுள்ள முத்தமே! இரண்டு ஆன்மாக்களை ஒன்றெனக் கலக்கச் செய்யும் உத்தம சேர்க்கையே! உயரிய சம்பந்தமே! என்று முத்தத்தின் மேன்மையையும் மாண்பினையும் ஆயுள் வரையிலும் விசேஷப்படுத்திக் கூறிக் கொண்டேயிருக்கலாம்.

ஒரு மேனாட்டு மங்கையின் முத்தத்தைக் குறித்து ஒரு சிறிய கதை உலாவி வருகின்றது. அம்மங்கை தன் காதலனுடன் சரச சல்லாப உல்லாசமாய் அமர்ந்து கொண்டிருக்கும்போது அவள் கோடைகாலத் தவளைபோன்று அவன் மீது தவழ்ந்து, அவனைத் தன்னுள் அடக்கிக்கொண்டு முத்தங் கொடுப்பாள். பின்னும் அவனுடைய மடிமீது தான் உட்கார்ந்துகொண்டு மீண்டும் முத்தமிடுவாள். அத்தருணீமணி முத்தமிடுவதைப்போல பல வருஷங்கள் நாடகமேடை மீது பயின்றவர்களாலும் கூட முடியாதென்றால் அவள் அத்

துறையில் பெற்றிருக்கும் திறமையை என்னென்றுரைப்பது? காதல் என்னும் இதயகம்பம் ஆசையின் அலையாகும். அம் மங்கை நல்லாள் தன் பிராணகாந்தனை மிகக் கெட்டியாகப் பிடித்து, முதுகெலும்பு உடைந்து போகும்படி ஆலிங்கனம் செய்துகொண்டு, மூச்சுகூட விடாமல் ஒரே பிடியாக முத்த மிட்டாள். அவளுக்கிருக்கும் அவாவும் அன்பும் அவளுக் கல்லவா தெரியும். தலைவலியும் சங்கடமும் அவரவர்களுக்கு வந்தால் தான் தெரியும் என்பார்கள் பெரியோர்கள். அதைப் போல இக் காதலின் துன்பமும் இன்பமும் அதில் ஈடுபடு வோர்க்கு மட்டுந் தெரியுமே யன்றி மற்றவர் அறியமாட்டார். பிள்ளை பெறாத மலடி அறிவாளோ பிள்ளைப்பேறின் பரமா னந்தத்தை?

பேரும் சீரும் பெற்ற பெரிய பெரிய ஸ்திரீகளின் கலா சாலைகளில் உடற் கூறு சாத்திரத்தைப்போதிக்க தனி உபாத் தினிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்விதம் ஏற்படுத்தப் பட்டவர்கள் அந்த சாஸ்திரத்தில் கற்றுத் தெளிந்த வித்து வாம்சினிகளாக விருப்பார்கள். அந்த உபாத்தினிமார்கள் முத்தமிடும் முறைகளையும், அதன் பலாபலன்களையும், இன் பத்தையும், குறித்து விரிவாகப் போதிக்கின்றார்களாம்.

அமெரிக்காவிலுள்ள, நியூயார்க் பட்டணத்திலுள்ள ஸ்மித்காலேஜ் வித்தியார்த்தி தன் காதலனுடைய வாயின் இடது மூலையினின்றும் ஆரம்பித்துக்கொண்டே வந்து தன் தலையை அசைத்து அசைத்து சாமர்த்தியமாய் முத்தமிடுகின் றாள். அதே பட்டணத்திலுள்ள லாஜர் கலாசாலை வித்தி யார்த்தி ஸ்மித் காலேஜ் மாணவியைக் காட்டிலும் வெகு அழ காகவும் சுவாரஸ்யமாகவும் முத்தமிடுகின்றாள். வாயை முத்த மிடாமல் முகவாய்க்கட்டையின் மீது அவளுக்கு விருப்பம் அதிகம். அதையே அவள் தன் முத்தங்களினால் அலங்கரிப் பாள். வெல்லஸ்லி கலாசாலை மாணவிகள் அவ்விரு கலா

சாலை மாணவர்களைக் காட்டிலும் முற்றிலும் வேறான விதமாக நடந்து கொள்ளுகின்றார்கள். அதாவது தங்கள் காதலரின் புருவங்களை முத்தமிடுகின்றார்கள். **ஹார்வார்டு சர்வ கலாசாலை** அணங்குகள் தங்கள் காதலர்களை நாசிக்கும் செவிக்கும் நடுமையத்திலுள்ள கதுப்பை முத்தமிடுகின்றார்கள். எனவே, முத்தமிடும் பிரதேசம் இது தான் என்று தீர்மானஞ் செய்து விடுவது அவ்வளவு இலேசான காரியமல்ல. ஒரே பட்டணத்தின் கண்ணுள்ள பற்பல கலாசாலைகளில் பற்பல விதமான அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதனாலே முத்தமிடப்படும் பாகத்தை வரையறுத்து இதுதான் முத்தத்திற்கு ஏற்ற பிரதேசம் என்று நாம் உறுதியாகச் சொல்ல அசக்தர்களாக விருக்கின்றோம். அவ்விஷயத்தில் காதல காதலியரே சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி மனோ பீஷ்டப்பிரகாரம் முத்தமிட்டுக்கொள்ள சர்வ சுதந்தரம் பெற்றிருக்கின்றார்கள் என்று மட்டும் சொல்லி நிறுத்துகின்றோம்.

ஒரு சங்கீத வித்வாம்சனியின் முத்தம் வெகு வியப்பை யளிக்கத் தக்கதாயிருந்தது. அவளது சங்கீதம் மிக்க இனிமையும் குதூகலமும் பொருந்தியதாகும். அவ்வரிவையின் சங்கீத கச்சேரிக்கு ஓர் இளைஞன் சென்று அவளது சங்கீதத்தின் உயர்வையும், ஞானத்தையும் குறித்து வெகுவாகப் புகழ்ந்தான். அவன் தன் அனுபவத்தைக் குறித்துப் பின் வரும் விதமாகக் கூறியுள்ளான். 'அந்த கோகில கான சிங்காரியை நான் குழந்தைப்பருவ முதற்கொண்டு அறிவேன். அவளுடன் நான் சிறு பிராயத்தில் ஒன்றாக விளையாடி வந்தேன். நான் அவளை வெகுவாகப் பரிகசித்தும் அவள் என்னைப் பரிகசித்தும் விளையாடுவது வழக்கம். இருவரும் ஒரே கலாசாலையில் சேர்ந்து கல்வி கற்று வந்தோம். எங்களுடைய உபாத்தியாயரை நாங்கள் இருவரும் சேர்ந்து குறும்புகள் செய்தோம்.

இதுவே எங்கள் இருவருடைய பூர்வீக வரலாறு. பிறகு அவள் சங்கீத ஞானத்தில் தேர்ந்து விளங்கலானாள். கச்சேரி வெகு விமரிசையாக நடந்ததன் பின்னர் நான் அவளை அணுகி 'உனது சங்கீதத்தால் என் செவி இது சமயம் இன்பம் நுகர்ந்து ஆனந்தமுற்றிருக்கின்றது. ஆனால் எனது அதரம் உனது கோவைக் கனியை நிகர்த்த அதரத்தின் சுவையைப்பெற ஏங்கி நிற்கின்றது. செவிக்கின்பத்தை அளித்த நீ, என் அதரத்திற்கும் இன்பத்தை யளிக்க மறுப்பாயோ? என் கண்மணீ' என்றுரைத்தேன். இவ்வார்த்தை என் வாயினின்றும் வெளி வருவதற்கு இத்தனை நேரம் பிடித்ததே யொழிய அம்மங்கை நல்லாள் உடனே மனமுவந்து, 'இதற்கா இவ்வளவு பேச்சு, ஆயாசப்பட வேண்டாம். அதையே நானும் எதிர் பார்த்து ஏக்கங் கொண்டுள்ளேன். இதை நாம் எப்படி முன்பாகச் செய்வது என்று தயங்கிக் கொண்டிருக்கிறபோது தாங்கள் சொன்னதை நான் முழுவதிலும் அங்கீகரித்துக் கொண்டதற்கு அடையாளமாக நானே தங்களை முத்தமிடுகின்றேன்' என்று மொழிந்து முத்தமிட்டனள்.

'அவள் கொடுத்த முத்தத்தின் அருமையான சக்தியை என்ன வென்றுரைப்பேன்! ஆ! வெண்கலத்தினால் செய்யப்பட்ட ஒரு பாத்திரத்தினால் இடிக்கப்பட்டது போலுணர்ந்தேன். இரும்பினலாய விக்கிரகத்தால் தட்டப்பட்டவனைப் போலவும் உணர்ந்தேன். ஏதோ எனக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டதுபோல நான் எண்ணி என் கைக்குட்டையை அறியாமலே எடுத்து வாயைப் பொத்திக்கொண்டேன். அந்தச் சமயம் என் கவனம் என் நினைவு எல்லாம் என்னை விட்டு சற்று நீங்கியே போயிருக்கவேண்டும். எனக்கு இத்துணைய அதிர்ச்சியையும் உணர்ச்சியையும் கொடுக்கக் கூடியது எதுவாக விருக்கும்? இவ்வளவு அதிர்ச்சியை அளித்தபோதிலும்

அது இன்பம் மிகுந்திருப்பதற்குக் காரணம் யாதாயிருக்கக் கூடும்? என்று பன்முறை என் மனதிற்குள்ளேயே ஆலோசனை செய்து பார்த்தேன். ஆம்! உண்மையில் அது தான் என்று தெரிந்துகொண்டேன். அஃதோர் மங்கை நல்லாளின் இனிய முத்தமே என்று உணர்ந்து பெரிதும் மகிழ்ச்சி கொண்டேன். என்னே முத்தத்தின் அபாரமான சக்தி!" என்பதாக அந்த இளைஞன் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றான்.

பிரஞ்சு காதலன் ஒருவன் தன் காதலியிடம் ஒரு சமயம் கீழ் வரும் விதமாகக் கூறியிருப்பதாகத் தெரிய வருகின்றது. 'உன் சிவந்த உதடுகளிலிருந்து எனது இதயத்தைப் பிடுங்கும், மெதுவானதும் பசுவானதுமான முத்தங்களைக் கொண்டு என்னை முத்தமிடுவாயாக' என்றுரைத்தான். இத்தன்மையான முத்தத்தை அவ்விளைஞன் பெரிதும் விரும்புகின்றதாக வெளியாகின்றது.

முத்தங்களின் பற்பலவிதங்களை வித்தியாசப்படுத்திக்கூற ரோமர்களுக்குப் பல மொழிகள் உண்டு. ஆபத்து சம்பத்துக்களில் உதவும் நேசர்கள் ஒருவர்க்கொருவர் கொடுத்துக் கொள்ளும் முத்தத்தை நட்பினர்முத்தம் என்பார்கள். ஒருவர்க்கொருவர் மரியாதையின் பொருட்டு கொடுக்கும் முத்தத்தை மரியாதை முத்தம் என்றும்; ஒருயிரும் ஈருடலுமாகவும், நகமும் சதையும் போலும், மலரும் மணமும் போலும் ஒரு தன்மையரான காதலகாதலியர் கொடுக்கும் முத்தத்தைக் காதல் முத்தம் என்றும் பற்பல மொழிகளால் முத்தத்தை வேறுபடுத்திப் பெயரளித் திருக்கின்றார்கள். ரோம் தேசத்துச் சக்கரவர்த்திகள் தங்களது அரசாங்க பெரிய உத்தியோகஸ்தர்களை மரியாதை செய்வது முத்தங்களினுலே தான். சிலரை அச்சக்கரவர்த்திகள் வாயில் முத்தமிடுவார்கள். இன்னும் சிலரைக் கண்களில் முத்தமளிப்

பார்கள்; மற்றுஞ் சிலரைப் புருவத்தில் முத்தமிடுவார்கள். இவ்விதமாக முத்தமிடப்படுவோர்களின் அந்தஸ்திற்குத் தக்கபடி முத்தங்களை வெவ்வேறு பாகங்களில் முத்த மிடுவார்கள். யுத்தவீரர்கள் தங்களுடைய சேனாதிபதிகளையும் தலைவர்களையும் அவர்களின் கையில் முத்தமிடுவது வழக்கம்.

மேனாடுகளில் காதல் விஷயத்தில் பகிரங்கமாக இருந்து வந்து போதிலும் ரோமர்கள் மட்டும் சிற்சில சமயங்களில் ஏகாந்தத்தை அனுஷ்டித்து வந்திருக்கின்றார்கள். அதாவது ஒரு தந்தை தன் மக்கள்களின் முன்னிலையிலும் எதிரிலும் தன்னுடைய மனைவியை முத்தமிட மாட்டான். அந்தச் செய்கையைப் பகிரங்கமாகச் செய்ய எந்தப் பிதாவும் விரும்ப மாட்டான். அவ்வளவு நாணத்தையும் லஜ்ஜையையும் பெற்றிருந்தார்கள். மனைவியைப் புருஷன் ஆலிங்கனமும் செய்து கொள்ளமாட்டான். ஒருபிதா தனது மகளை தன் நெருங்கிய பந்துக்கள் மட்டும் முத்தங்கொடுக்க அனுமதி யளிக்கின்றான். இது காதலை வெளியிட்டுக் கொள்ளச் செய்வதல்லவென்று அவர்கள் கருதுகின்றார்கள். ஆனால், அப்பெண்கள் மது முதலிய லாகிரி வஸ்துக்களை உட்கொள்ளுகின்றார்களா இல்லையா என்பதை ஒருவாறு தெரிந்து கொள்ளவே இவ்விதம் அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லிக் கொள்ளப் படுகின்றது.

முத்தங்கள் பலவந்தமானதாயும், விருப்பமற்றதாயும், குளிர்ச்சியானதாயும், சுகமற்றதாயும், இறுகிப்போனதாயும், கற்புள்ளதாயும், நாணமுள்ளதாயும், இனிமையாயும், தணிவுற்றதாயும், பனித்துளிபோன்றதாயும், நடுக்கமுற்றதாயும், தெய்விகமானதாயும், இன்பகரமானதாயும், களிப்புற்றதாயும், அபீஷ்டமுள்ளதாயும், ஆனந்தகரமானதாயும், நீண்டபெருமூச்சுள்ளதாயும், ஆத்திரமுள்ளதாயும், தீயைப்போன்று

கனிந்துள்ளதாயும், பலாத்காரமானதாயும், தயங்கித் தயங்கி இருப்பதாயும் இருக்கின்றன.

பிரியும்போது கொடுத்துக் கொள்ளும் முத்தம் சுவையற்றதாயும், விருப்பமில்லாததாயும் விஷத்தன்மையுள்ளதாயும், சதிகாரத்தனமுள்ளதாயும், பொய்மையானதாயும், முறட்டுத்தனமானதாயும், இருக்கின்றதாகப் பற்பல விதங்களாகக் கூறிக்கொள்ளுகின்றார்கள்.

ஜன்மப் பகையை வெளிப்படுத்தும் கொர்வமுள்ள முத்தமும் உண்டு. அத்தகைய கொர்வமான, ஜன்மப்பகையை வெளிப்படுத்தும் முத்தத்தைப் பெறும் பேதை செங்குத்தான மலையினின்றும் கீழே உருட்டித் தள்ளுவது போலுணர்வான். பனி முத்தம் என்பதும் உண்டு. அது ஒருவனது இருதயத்தைப் பனிக்கட்டியைப் போல் இறுகும்படிச் செய்துவிடும். தேகமெங்கணும் ஓடிப்பாயும் ரத்தத்தை உடனே ஓடாமல் நிறுத்திவிடும். நுரைமுத்தம், ஒன்றுமில்லா முத்தம் எனவும் உண்டு. அவை நேயர்களிடத்திலும் பந்துக்களிடத்திலும் உண்டு.

தேனொழுகப்பேசி கழுத்தை அறுக்கும் சுபாவமும் சிலருக்கு உண்டு. அதுபோல அரைக் கணமும் விட்டுப் பிரியாதவர் போல சினேகஞ் செய்து கெடுதி செய்ய இருகன்னங்களிலும் முத்தமிடும் சதிமுத்தங்களும் உண்டு. ‘உன்னைக் காணவும் உன்பக்கம் இருக்கவும், உன்னைக் குறித்து சதா நினைக்கவும் என் மனம் என்ன விதமாகக் களிப்படைகின்றது தெரியுமா ?’ என்று வெளிப்படையாகப்பேசி உள்ளூர உன்னைக் காண்பதும், உன் பக்கமிருப்பதும், உன்னைக் குறித்து நினைப்பதும் எனக்கு அருவருப்பைத் தருகின்றதே தவிர கொஞ்சமும் விருப்பத்தைத் தரவில்லை. அந்த வெறுப்பைக் வெளிக்காட்ட வேண்டுமானாலும் காட்டுகின்றேன்

என்று பழிக்குப்பழி வாங்க எண்ணும் சதிமுத்தம் அல்லது வஞ்சக முத்தமும் உண்டு. அது மேலுக்கு இன்பகரமாகத் தோற்றும். ஆனால் முற்றிலும் அபாயகரமானது. பசுவின் தோலைப் போர்த்த புலியைப் போன்றது அது.

தோல் முத்தம் என்று ஒரு விதமான முத்தமும் இருந்து வருகின்றது. அதைப் பெறுபவர்கள் எவ்விதமான உணர்ச்சியையும் பெறுவதில்லை. உறைந்து பனிக்கட்டியாய்ப் போன நீர், தாகத்தால் வருந்தும் பாம்பிற்குப் பயன் படாததைப் போலாகிவிடும்.

காதல காதலியர் கொடுத்துக் கொள்ளும் சாதாரண முத்தமும், காம விரகதாபத்தால் ஜொலிக்கும் முத்தமும், அன்பும் ஆதரவும் மிகுந்த தந்தையின் முத்தமும், வாஞ்சை யும் பாசமுமுள்ள தாயின் முத்தமும் உண்டு.

மேற் கூறியபடி முத்தங்களின் பற்பல விதங்கள் இருக்கின்றன. காதலின் முதல் முத்தமும் அதில் சார்ந்த தாகும். களிப்பையே தாம் விரும்பும் பெரிய பேறாக எண்ணி அதன்படி ஒழுகிவரும் ஓர் இளைஞனும், மங்கையும் காமாந்தகரமான வார்த்தைகளிலும் செய்கைகளிலும் ஈடுபடா மலே இருந்து வந்தார்கள். எனினும் அவ்விருவர்கள் தத்தம் பார்வையால் மட்டும் ஒருவரை யொருவர் வரவேற்பு செய்து வருவாராயினர். கண்ணொடு கண்ணிணை நோக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனை அளிக்கும்? ஒரு விதப் பிரயோஜனத் தையும் வார்த்தைகள் கொடா என்பது பெரியோர் மொழி. அக்கட்டழகனும் கட்டழகியும் காதல் ததும்பும் பார்வையுடன் ஒருவர்க்கொருவர் பார்த்துக் கொள்வது வெகு அழகான காட்சி என்பதை எவரும் மறுக்கத் துணியார். அவ்விருவர் களின் வாழ்க்கையில் அப்பார்வைகள் அலைகள் போல் தோன்றி, நிலைமை மாறி மாறி, காதல் என்னும் கரையை

மங்கையின் முத்தம் :



அவன் தன் வேலையிலிறங்குகின்றான். இனியும் அவளைத் துன்புறுத்தான். இதழினருகாமையில் தன்னிதழைக்கொண்டுவந்துவிட்டான். அவளை அப்படியே அழுத்திக் கட்டிக்கொள்ளப்போவது திண்ணம்.

மங்கையின் முத்தம் :



.........ஆடவர்க்கு மீசையுடன் தாடியுமிருக்கின்றது. மீசை தாடி முதலிய ரோமங்களினுல் ஆடவனது முத்தம் மங்கைகட்குப் பின்னும் பன்மடங்கு அதிகமான மகிழ்ச்சியை யளிக்கின்றது.

[94-ம் பக்கம் பார்க்க.]

நோக்கி விடாமல் தொடர்ந்து தொடர்ந்து நிகழ்கின்றன. அவர்களது உடல், ஆவி, அறிவு இம் மூன்றையும் ஒன்றாகக் கலக்கும் பேரானந்த முத்தத்தில் விரகதாபத்தால் பீடிக்கப் பட்டிருக்கும் அவர்களது இதழ்கள் ஒன்று சேர்வதைக் காண்பதைவிட அச்செய்கையைத் தாமே இயற்றுவதை ஒவ் வொரு காதலனும் காதலியும் தத்தம் முதற்கடமை என்று கருதி நடப்பார்கள்.

ஒரு காதலன் தன் காதலிக்கு இருட்டில் முத்தமிடும் முறைகளைக் குறித்துப் போதித்தான். எத்தனையோ முறை திருப்பித்திருப்பி அவளுக்குக் கற்பித்தபோதிலும் அம்மங்கை தெரிந்து கொள்ளாமல் மௌட்டீகமாய் இருந்தாள். அது கண்டு அக்காதலன் அவளைத் திட்டினனும். மேற் கூறப்பட் டுள்ள விஷயத்தை மூர் என்னும் கவிச்ரேஷ்டர் பாட்டாகப் பாடி யுள்ளார். அப்பாட்டில் கீழ் விவரித்துள்ளபடியும் அடங்கியிருந்தது 'நாதா! நிறுத்தும் நிறுத்தும்; போதுமே எனக்கு முத்தம்' என்று மந்தஹாசமாகப் புன்முறுவல் பூத்து நின்றாள். இம்மட்டும் வாயால் சொன்னளே தவிர தன் இருகைகளினல் ஆடவனை அழகாக ஆலிங்கனஞ் செய்த வண்ணம் இருந்தாள். 'பிராணேசா! ஏன் என்னைத் தாங்கள் நிந்தித்தீர்கள்? நான் தங்களுடைய இன்னுயிர் மனைவி அன்றோ? எனக்குத் தாங்கள் இருட்டில் அல்லவோ முத்தங் கொடுக்கக் கற்றுக் கொடுத்தீர்கள்? அவ்விதம் கற்றுக் கொடுத்ததை அம்மாதிரியான இடத்தில் அல்லவோ அப் பியாசமும் பழக்கமும் செய்யவேண்டும். அது தான் முறை என்று என் சிற்றறிவுக்கு எட்டியது. அதுபோல் நான் கருதி அதன் வழி நடந்து வந்தேன். இதற்குத் தாங்கள் என்னை வையாத வசவுகளால் வைதீர்கள்! நிந்தைகளைச் சரமாரியாகப் பொழிந்து விட்டீர்கள்' என்பதாக வாசாம கோசரமாக வார்த்தைகளை அடுக்கினாள்.

முத்தத்தில் பற்பல விதங்களிருப்பதைப் போல அதற்குப் பலவகையான தண்டனைகளும் உண்டு. ஒரு காதலன் தன் காதலியின் மீது அளவிலாத அன்பும் காதலும் ஒருமிக்க தான் கொண்டிருந்து அவள் அதை வெளிக்குக் காட்டாதிருக்கக் கண்டு அவள் மீது கோபம் கொண்டிருப்பது போல நடித்து அவளை நோக்கி, 'உன்னை இப்போது என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? புறாக்களின் மென்மையான இறகுகளைக் கொண்டு நையப் புடைக்கப் போகின்றேன். இது மட்டுமா? ரோஜாமலர்களை உன் மேல் வீசிக் கொட்டுவேன். அப்போழுதும் நீ உன் கனிவாய் இதழ் விரித்து இனிய மொழி பகர்வாயானல் நான் எனது கைகளை விரித்து உனது இடுப்பை அப்படியே சுற்றிக் கொண்டு மார்போடு மார்பு உறவாட உன் இதழ்களில் எனது முத்தங்களைப் பதிய வைத்து தண்டனையைப் பூர்த்தி செய்வேன்' என்று அவனளிக்கும் தண்டனையை விரிவாக விளக்கி அதை அவள் அனுபவிக்கும்படி செய்து காட்டினன். இத்தகைய தண்டனைகளை காதலிகள் முகமலர்ச்சியுடனும் இருதய பூரிப்புடனும் என்றென்றும் தாங்கள் தங்களுடைய நாதரிடத்து அடையவேண்டும் என்று இருகைகூப்பி இறைவனை இறைஞ்சி வேண்டாதவரும் இப்புவியி லிருப்பாரோ?

மகா யுத்தம் நடந்த காலத்தில் யுத்தவீரர்கள் தமது வீட்டை விட்டு யுத்தகளத்திற்குச் செல்வதற்கு முன்பாகத் தங்களுடைய மனைவிமக்களையும் சினேகிதைகளையும், முத்தமிட்டுக் கொள்ளும் கடமை ஒன்று வழக்கத்தில் இருந்து வந்தது. தண்டிலே போனல் இரண்டிலே யொன்று என்ற ஒரு வசனமும் வழங்கிவருகின்ற தல்லவா? யுத்தத்தில் ஒருவன் சென்றால் அவன் உயிருடன் மீண்டு வருவது வெகு துர்லபம். அப்படி மீண்டு வந்தால்தான் அவனது

தாய்க்குப் பிள்ளையாகவும், மனைவிக்குப் புருஷனாகவும், மக்களுக்குத் தகப்பனாகவும் ஆவான். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நிற்க நிதானித்து மங்கையர்களுக்கு முத்த மிட்டுக் கொண்டிருந்தால் காலதாமதம் ஆகிவிடு மாதலால் அதற்காக அப்படைத் தலைவன் ஒரு யுக்தியைத் தமது வீரர்களுக்குப் போதித்தான். மூன்று அசைப்புகளில் முத்த மிடுவதை முடித்து விடு என்றுரைத்து அதை விவரமாகவும் கூறுகின்றார். முதலாவது அசை :—வலது முழங்காலை வளைத்து இடது முழங்காலை நீட்டு. உனது தலையை இப்படியும் அப்படியும் சாய்க்காமல் சரியான நிலைமையிலிருத்திக் கொள் வாய். அதே சமயத்தில் உன்னிருகைகளையும் நீட்டி மங்கை யின் இருகன்னங்களைப் பிடித்துக்கொள். இரண்டாவது அசை :—உனது தேகத்தை மெதுவாக முன்னுக்கு வளைத்து உனது இதழ்களால் அவளது இதழ்களைத் தொடுவாய். மூன்றாவது அசை :—விரைவாக உனது இரண்டு கால்களையும் சேர்த்து அம்மங்கையி னிடமிருந்து அகன்று செல்வாய். முதலில் சொல்லிய இரண்டு முறைகளையும் பிழையின்றி ஒவ்வொருவரும் செய்யச் சக்தியும் மனமும் கொண்டிருப் பார்கள். ஆனல் மூன்றாவது அசையை மட்டும் செய்யச் சற்று சிரமமாகத் தானிருக்கும். ஏன் சிரமம் என்பதை அவரவர்களே அறிந்து கொள்ளவேண்டியது. கரும்பின் இனியரசத்தைப்பருகிக் கொண்டிருப்பவனை, அதை உமிழ்ந்து விட்டு வேம்பின் கஷாயத்தைப்பருகு என்று ஆக்யாபனை செய்தால் அவன் அதை எவ்விதம் ஏற்றுக் கொள்ளுவானே அதைப் போலவே அந்த யுத்தவீரர்களும் அந்தப் படைத் தலைவனது ஆக்கினைகளையும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நாம் கருதுவோம்.

ரோமர்கள் முத்தத்தைக் குறித்து இனிமையான பாடல்களைப் பாடியிருக்கின்றார்கள். அவ்விதமான பாடல்

களின் ஒன்றின் பொருள் பின்வருமாறு 'மெதுவாக என்னை முத்தமிடு; மெதுவாகப் பேசுவாய். ஏனென்றால், பொறாமைக்குக் கூர்மையான காதுகள் உண்டு. பொறாமையைப் பற்றி எனக் காவதென்ன? அன்பே! எனக்கு முத்தமளி.'

'மெதுவாக முத்தமிடு; எனக்கு மெல்லிய குரலில் பேசு. பொச்சரிப்பு மிகக் கவனமாகக் கேட்கும். பொச்சரிப்பு இருந்தால்தான் என்ன? அது கேட்டால்தான் எனக் காவதென்ன? அன்பே! முத்தங்கொடு!'

'மெதுவாக முத்தமிடு; மெல்லிய குரலில் பேசு; மெதுவாக முத்தமிடு மெல்லிய குரலில் பேசு; என்னை நம்பு. அன்பே! சமயமும் நெருங்குகிறது. ஒரு பயமுமில்லாமல் நாமிருவரும் காதல் கொள்ளும் சமயம் நெருங்க அன்பே! முத்தமளி, மெதுவாக முத்தமிடு! மெல்லிய குரலில் பேசு!" என்பதாகப் பொருள் படும்படி பாடல்கள் பாடி யிருக்கின்றார்கள்.

மேரிலாண்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த **லூயிஸ் மெக்காமஸ்** என்னும் பெரியார் **குழந்தைகளை முத்தமிடும்** அரசர் என்ற பட்டப் பெயர் வாங்கியிருந்தார். குழந்தைகளை ஆர்வத்துடன் முத்தமிடுவதில் அப் பெரியாருக்கு நிகர் ஒருவருமேயில்லை. அதன் வரலாறு கீழ்வருமாறு: 'முதன் முதலில் லூயிஸ் மெக்காமஸ் குழந்தையின் அருகே நிற்கின்றார். தன்னுடைய பெரிய நீலநிறக் கண்களால் பார்க்கின்றார். பிறகு திடீரென்று ஏதோ எண்ணங் கொண்டோ அல்லது தடுக்கக் கூடாதபடி ஒரு புதிய உணர்வு கொண்டோ அந்தக் குழந்தையை நாடகமேடையில் ஒரு தாய் தன் அருங் குழந்தையை மட்டிற் கடங்கா மகிழ்ச்சியுடன் எடுப்பதுபோல ஆத்திரங்கொண்டு வாரி யெடுத்து தன் மார்போடு மார் பாக வைத்துக் கட்டிக் கொள்ளுகின்றார். குழந்தையை

அப்படியே மார்பின்மீது அழுத்திக் கட்டிக் கொண்டு தன் தலையைத் தாழ்த்தி குழந்தையின் உச்சியை முகந்து தன்னெதிரில் குழந்தையை இரண்டுகைகளிலும் படுக்கவைத்த மாதிரி தாங்கிக்கொண்டு அந்தச் சிறிய அழகிய முகத்தை உற்று நோக்குகிறார். பிறகு அவருடைய தலை மெதுவாகக் கொஞ்சங் கொஞ்சமாகக் கீழே சாய்கின்றது. குழந்தையின் சின்னஞ் சிறிய இதழ்களை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. அவரது முகத்தின் கண்ணுள்ள மீசைகள் ஒரு தேவதையின் இறகுகளைப் போன்றிருக்கின்றன. சந்தோஷமும் பெருமூச்சும் மாறி மாறி அவருக்கு உண்டாகின்றன. இனிமையாயும், தயங்கியும், தேனினுமினிய உதடுகளைச் சுவைத்ததும் சத்தம் கேட்கின்றது. அந்தச் செய்கை முற்றுப் பெறுகின்றது.

குரங்குகளைப் பற்றிய விநோதமான கதையும் வழங்கி வருகின்றது. ஒரு செங்குரங்கு கருங்குரங் கொன்றை மணந்து கொண்டதாம். அந்த ஆண் குரங்கு தன் மனைவியை ஆத்திரத்தோடு இதழைச் சுவைத்து முத்தமிட்டதாம். வெகு ஆத்திரத்தோடு முத்தமிடவே பெண் குரங்குக்குக் காய முண்டாகிவிட்டது. காய முண்டாகவே வலியைப் பொறுக்கமாட்டாமல் கத்தத் தொடங்கி வேதனைப் பட்டுக் கொண்டிருந்ததாம்.

மேற் கூறிய விஷயத்தைக் குறித்துப் பேசும்போது சில பழமொழிகள் கவனத்திற்கு வருகிறது. ஒருவன் மற்றொருவனுடைய மனைவியை முத்தமிடுவதோ, அல்லது அவனது கத்தியைக் கழுவுவதோ வந்தனத்திற்குரிய செய்கைகள் ஆகமாட்டாவாம்.

சந்தைக் கடையில் தன் மனைவியை முத்தமிடுகின்றவன் எவன் என்பதைத் திண்ணமாய்த் தெரிந்து கொள்ளுவதற்

குப் பல வழிகளிருக்கின்றன ; தந்திரங்களும் பல விருக்கின்றன. வீரமும் தீரமும் பொருந்திய காதலன் ஒருவன் திருட்டு முத்தம் தான் அதற்குப் பெருத்த சாதனமானது என்று அபிப்பிராயப்பட்டுப் பின் வருமாறு இயம்புகின்றான்.

'மெதுவாக அவளை முத்தமிடுவாயாக! தந்திரமாக முத்தமிடு. பக்கத்தில் ஒருவருமில்லாத சமயம் பார்த்து முத்தங் கொடுப்பாய். அவ்விதம் ஒருவர் கண்ணுக்குத் தென்படாமல் திருடிக் கொண்ட திருட்டு முத்தமே மிகவும் தித்திப்பானது; இனிமையும் மேன்மையும் பொருந்தியதாகும். கிட்டாத பொருள்கள் நமக்குக் கிட்டுவது எவ்வளவுக்கு எவ்வளவு துர்லபமோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்தத் தித்திப்பான முத்தங்கள் கிடைப்பதும் அருமை. அத்தகைய அருமையான சமயம் மறுமுறை வாய்ப்பது அரிதினும் அரிதாகையாலும் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டுமென்று பழமொழியும் உறுதியாகக் கூறுகின்றமையாலும் அந்தச் சமயத்தை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொள்ளுவதே சாலவும் சிறந்தது. அறிவும், ஆற்றலும், ஆண்மையும் பொருந்திய காதலர்கள் இவ் விஷயங்களில் எது நன்மையைப் பயக்கும், எது தீமையைப் பயக்கும் என்பதை முன்னமேயே ஆய்ந்தோய்ந்து பார்த்து ஒரு விதமான முடிவுக்கு வந்திருப்பார்கள்' என்பதாக விரிவாகக் கூறியிருக்கின்றான்.

தன்னைச் சுற்றிலும் நடக்கும் விஷயங்களைக் கூர்ந்து கவனிக்கும் இயல் பினையுடைய ஒரு மாணவன் தன் அனுபவத்தைக் கீழ்க் கண்டுள்ளபடி குறிப்பிட்டிருக்கின்றான்.

'அன்பும் ஆதரவும் கொண்ட காதலனும் காதலியும், மிகப்பரந்து விசாலமாய்த் தழைத்ததோர் ஆலமரத்தினடியில் அமர்ந்திருந்தார்கள். அமர்ந்து பொம்மை போல் அசைவற்றிருந்தார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. காதலன்

தன் காதலியின் இடது கையைப்பிடித்துக் கொண்டிருந்தான். அம்மங்கை அவ்வாடவனது குல்லாவைத் தொட்ட வண்ணமாக இருந்தாள். அந்தச் சமயத்தில் அவர்கள் என்னை எங்கு கண்டு விடப்போகிறார்களோ வென்று நான் பயந்தேன். நல்ல வேளையாய் அவர்களுடைய கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து சென்று ஓரிடத்தில் மூச்சையடக்கிப் படுத்துக் கொண்டேன். நான் பதுங்கி இருந்த இடத்திலிருந்து நான் அவர்களைக் கவனிக்கமுடியுமே தவிர அவர்கள் என்னைப் பார்க்க முடியாது.

அவர்கள் ஒருவருக் கொருவர் முத்தங்கொடுத்துக் கொண்டனர். அதை நான் என் கண்ணாரக் கண்டேன். அக்காட்சியை என் விழிகளுக்கு நல் விருந்தாக அளித்தேன். அவர்கள் முத்தங்கொடுத்துக் கொள்வதை நான் குற்றமாக எண்ணவில்லை. முத்தமிடும் போது அவள் தன் தலையை நிமிர்த்தினாள். அந்த இனிய செய்கையைக் காணக் காண எனக்கு ஒருவிதமான உணர்ச்சி உண்டாகியது. என்னுடைய அடக்கமுடியாதிருந்த ஆத்திரத்தை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டே கவனித்திருந்தேன். அவர்கள் செய்து கொள்ளும் ஒவ்வொரு இன்பச் செய்கையையும் கண் கொட்டாமல் வியப்போடு நான் காண்பதை அவர்களில் ஒருவரும் கவனிக்கவேயில்லை. தம்மை எவராவது அந்த நிலைமையில் பார்ப்பார்களோ என்ற எண்ணமே அவர்களுக்குத்தோன்ற வில்லை போலும். முத்தத்தின் பரமானந்த வாரிதியிற் திளைத்தவர்களுக்குத் தம்மைச் சுற்றி என்ன விருக்கிறதென்றும், பூலோகத்தி லிருக்கின்றோமா, மற்று சுவர்க்க லோகத்தில் சுகபோகாதிகளில் அழுந்தி யிருக்கின்றோமா என்றும் ஒன்றையும் உணராமல் மெய் மறந்து மகிழ் வெய்துவதில் கண்ணுங் கருத்துமாகிக் காலங் கடத்தி வந்தார்கள்' என்று அம்மாணவன் காதலைக் கிளர்த்தும் நிகழ்ச்சிகளைத்

தான் கவனித்து அறிந்து கொண்டதை ஒருவாறு வெளிப் படுத்தினான்.

வாலிபப்பருவமும் தேகக்கட்டும் பொருந்திய ஓர் ஆடவன் ஒரு சாலையின் வழியே நடந்து சென்று கொண் டிருந்தான். அவன் தன் முதுகின் மேல் ஒரு இரும்பு கெட்டிலைத் தாங்கிக்கொண்டும் ஒரு கையில் கோழிக்குஞ் சொன்றையும் மற்றொருகையில் ஆட்டுக் குட்டியின் கயிறையும் கொம்பையும் கொண்டிருந்தான். இவ்வித கோலத்துடன் வழிப் பிரயாணஞ் செய்தான். அந்தச் சாலை மற்றொரு சாலை யில் போய்ச் சேர்ந்தது. அவ்விரு சாலைகள் ஒன்று சேரும் சந்திப்பில் அவ்வாலிபன், தன் வயதிலும் இளைய ஓர் ஆரணங்கு தன் முன் செல்வதைக் கண்டான். அவள் பின் அழகையும் நடையின் ஒயிலையும் அவளது கொண்டையின் சாயலையும் கண்டு உள்ளம் பூரித்தான். தன்னைச் சுற்றிலும் நாற்புறமும் பார்த்தான். நிரமானுஷியமான பிரதேசமாக யிருப்பதை யுணர்ந்தான். வேறு மனித சஞ்சாரமே அவ்விடத்தில் கிடையாது என்று தெரிந்த பின்னரும் அவன் மனம் அவனுக்குத் தைரியத்தை அளிக்கவில்லை. அவளை நெருங்கினால் என்ன சொல்வாளோ, ஏது செய்வாளோ, ஒரு கால் நிந்திப்பாளோ; கூவி துணைக்கு யாரையாவது அழைத்து அவமானத்தைச் செய்வாளோ என்று பயந்து தன் வழியே நடந்து கொண்டிருந்தான். அவளைக் கவனிக் காமல் அவளையுந் தாண்டி சென்று கொண்டிருந்தான். அவ்வழகி தன் முன்னே ஓர் ஆணழகன் செல்வதைக் கண்டு விட்டாள். கண்டதும் அவள் தன் ஆடைசரியாக விருந்தும் கூட அதைச் சரிப்படுத்துவது போல நாணிக் கோணி தன் இடையை நெளித்து அன்ன நடையைப் பழித்து இன்னும் அழகு படுத்திக் கொண்டாள். இவ்வளவையும் அவன் நேரில் பார்க்காமல் கடைக் கண்ணால் தெரிந்து கொண்டான்.

அவள் தான் எண்ணிய விதம் அவன் செய்ததைக் கண்டு தன் உள்ளத்திற்குள் மகிழ்ந்து அகங்குளிர்ந்தாள். சற்று நேரம் எவரும் பேசாமல் வழி நடந்து சென்று கொண்டேயிருந்தார்கள்.

எதிரில் ஒரு பெரிய பள்ளத்தாக்கு இருப்பதும் அதைக் கடந்து செல்லவேண்டியது மிக்க அவசியம் என்பதும் அம்மங்கைக்குத் தெரியும் பள்ளத்தாக்கு கண்ணுக்குத் தெரியும் வரையில் பேசாதிருந்தவள் மெதுவாக கோகிலத் தொனியில் பேச வாரம்பித்தாள். அத்தகைய இனிமையான மொழிகளை அவ்வாலிபன் தன் காதால் அது வரையில் கேட்டவனேயில்லை.

'இப்போது நல்ல பகலாக இருந்தபோதிலும் மரங்கள டர்ந்தும் மலைகளால் சூழப்பட்டு மிருக்கும் இப்பள்ளத் தாக்கு மிக்க அந்தகாரமாக விருக்கின்றது. எதிரில் வருவோர் கூடத் தெரியாது போலுமல்லவா யிருக்கின்றது? இந்த இருண்ட பிரதேசத்தில் தனியாக ஒரு பெண்பிள்ளை ஓர் ஆடவனுடன் செல்லுவதற்கு அஞ்சுவது இயற்கை தானே. இதற்கு முன்னே பார்த்தறியாத புருஷனுடன் பேசுவது என்பதும் லஜ்ஜைக் குரித்தான ஒரு செய்கையே யாகுமன்றோ? அயல் புருஷரை, அதாவது அறிமுகமாகாத ஆடவரைப் பார்த்து நேருக்கு நேராக நிற்பது என்பதும் நற்குல ஸ்திரீகளுக்கு நேராகுமோ? எனினும் இடம் பொருள் ஏவல் என்னு மிவைகளுக்குள் ளடங்கி இது சமயம் தங்களுடன் பேசும்படி அவசியம் ஏற்பட்டிருக்கின்றது' என்று தான் பேச நேர்ந்ததற்குப் பீடிகையாகப் பெண்மணி இவ்வளவு பேசி பதிலுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

தான் எதிர்பாராமல், கனவிலும் எண்ணாத விதமாகத் தன்னுடன் வடிவழகுள்ள மங்கை யொருத்தி பேசுவதைக்

காதாரக் கேட்டுக் கொஞ்சநேரம் பரவசமடைந்திருந்துப் பின் மறுமொழி பகரத் தலைப்பட்டான். 'ஆரணங்கே! இது காறும் யான் ஒரு மங்கையுடனும் தனித்து வார்த்தை யடினவ னன்று. ஆகையினால் எந்த முறையில் உன்னிடம் சம்பாஷிப்பது என்பதையும் நான் தெரிந்தவனல்ல வென் பதை நீ இந்தச் சொற்ப காலத்திற்குள்ளாகவே தெரிந்து கொண்டிருப்பாய். இருந்தாலும், நான் அயல் மாதரைக் கண்ணெடுத்தும் பார்த்தவனல்ல. தனியில் பேசிப் பழக்கப் பட்டவனுமல்ல. ஆகவே, இது சமயம் திகைப்பூண்டு மிதித்தவன் போலத் தயங்குகின்றேன்' என்று அவளது முகத்தை நோக்கவும் லஜ்ஜை மிகுதியடைந்தவன் போல் நின்றான்.

இந்தப் பதிலைக் கேட்க அக்காரிகை வெகு துணிவு கொண்டவளானாள். உலக மின்னதென்பதையும், ஸ்திரீ களின் சாகச மின்னதென்பதையும் சற்று முணராத சீலன் போலு மிவன் என்பதாக எண்ணிக் கொண்டாள். 'ஆண் பிள்ளையாகப் பிறந்தவர்கட்கும் இவ்வளவு லஜ்ஜையா! இயற்கையாக இக்குணம் மாதர்கட் கிருக்குமே யாகில் மிக்க சிலாக்கியமாக விருக்கும். அப்படிக் கின்றி புருஷர்களுக் கிருந்தால் யாது பிரயோஜனம்?

ஒருவேளை சிலர் லஜ்ஜைப்படுவது போல நடித்துப் பேதை பெண் மக்களைத் தம் வசப்படுத்திக் கொள்ளும் சக்தி பெற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். புருஷர்களைப் பெண் கள் நம்பவே கூடாது. தனியாக ஒரு பெண் துணையின்றி எதிர்பட்டால் பலவந்தமாக முத்தமிட்டு விடுவார்கள். நான் தனிமையாக இப்பள்ளத் தாக்கில் செல்வதற்கு அஞ்சு கின்றேன்' என்று சொல்லிப் பின்பக்கம் திரும்பி வந்த வழியே சென்றுவிடத் தீர்மானித்தவள் போல ஈரடி எடுத்து வைத்தாள். மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

அம் மங்கையின் கடுமொழியைக் கருத்தி லுன்னி அவ் வாலிபன், "பெண்கள் நாயகமே! நீ யாரென்பதையும், எந்த ஊரென்பதையும், உன்பே ரின்னதென்பதையும் ஒன்றினையுந் தெரிந்து கொள்ளாத நான் அத்தகைய செய்கையைச் செய்து உனக்கு உபத்திரவத்தை யுண்டாக்குவேனு? ஒருகாலும் மாட்டேன். உன்னை யான் முத்தமிடவாவது; உன்னை நெருங்கிப் பிடிக்கவாவது என்னல் இது சமயம் முடியுமா என்பதைச் சற்றும் ஆலோசியாமல் இவ்வார்த்தையைக் கூறி விட்டாயே. என் கைகள் இரண்டும் கட்டப்பட்டவை போலு மல்லவா இருக்கின்றன? எனது முதுகின்பேரில் இரும்பு கெட்டில் ஒன்று வைக்கப்பட் டிருக்கின்றது. இடது கையில் கோழிக்குஞ் சொன்றை வைத்துக்கொண் டிருக்கின்றேன்; எனது வலது கையில் ஆட்டின் கயிறையும் கொம்பையும் பிடித்துக் கொண்டிருக்கின்றேன். இவ்வளவு அவஸ்தையில் உன்னை நான் முத்தமிடுவது எப்படி? அது ஒருகாலும் சாத்தியமாகாத காரியம். கைகளில் ஒன்று மில்லாவிட்டாலும் ஒரு வேளை நீ சொல்லிய மாதிரி—நீ விரும்பும் வண்ணம்—மனம் மயங்கி அதற்குச் சம்மதப்பட்டு அச் செய்கையைச் செய்யக்கூடும்" என்று தனது நிலைமையை விவரித்துக் கூறி அவளை முத்தமிடத் தனக்கு இருக்கும் அவாவை நேரில் வெளிப்படையாக வார்த்தைகளால் சொல் லாமல் சொல்லிக் காட்டிக் கொண்டான்.

அம்மங்கை, அவ்வாலிபன் மிகவும் நாணியவன்போ லிருக்கின்றனே! இத்தொழிலில் ஈடுபடாதவன் போலு மல்லவா இருக்கின்றன். இவனுக்குத் தக்கதோர் முறையை இவனறியா வண்ணம் ஒரு போக்காகக் கூறுவோம். அதை யுணர்ந்த பின்னராவது அச் செய்கையைச் செய்கின்றனே பார்ப்போம் என்பதாகத் தனக்குள்ளே ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். அதன் பிறகு வெளிப்படையாக,

'ஐயா, உம்முடன் கூட ஒரு அடியும் எடுத்து வைக்கமாட்டேன். ஏனென்றால் எனக்கு மிகவும் பயமாக விருக்கிறது. உம்மைப் பார்த்தால் என்னை ஆத்திரத்துடன் விடாமல் பிடித்து முத்தமிடத் தீர்மானம் கொண்டவர் போலிருக்கின்றீர். நீர் எவ்வளவு விதமாகச் சமாதானங்கள் எனக்குக் கூறினாலும் நான் திருப்தியடையவும் மாட்டேன். கூட வரவும் மாட்டேன். என்னுடைய கையும் காலும் கட்டுண்டு கிடக்கின்றன என்று நீர் சொல்லிய போதிலும் நீர் கட்டாயம் முத்தமிடுவீர் என்று என் மனத்தில் ஏதோ வொன்று உறுத்தி உறுத்திச் சொல்லுகின்றது. நீர் கையில் பிடித்துள்ள பிரம்பைப் பூமியில் பலமாக ஊன்றி அதில் அந்த ஆட்டைப் பிடித்துக் கட்டிவிடுவீர். பின்னர் உமது தோளின்மீதுள்ள கெட்டிலேத் தலைகீழாகக் கவிழ்த்து அதினுள் கோழிக்குஞ்சை விட்டுவிடுவீர். அதன் பிறகு உமது மனமும் ஆவலு மடங்க மிக்க ஆத்திரத்துடன் என்னை அழுத்தி ஆலிங்கனஞ் செய்துகொண்டு—நான் எவ்வளவு பிரயத்தனப்பட்டு தப்பித்துக் கொள்ளத் திமிறினாலும் விடாமல் பிடித்து முத்தமிட்டுவிடுவீர். அந்தப் பயம் எனக்கு அதிகமாக விருக்கின்றது. அதை வார்த்தைகளால் விவரிக்கும் போதே அது நிகழ்வது போல நான் உணருகின்றேன். அவ்விதம் நான் உணர்வதனாலேயே அவ்வச்சம் பின்னும் அதிகரிக்கின்றது' என்று அவளுரைக்கும்போது கேட்டுக் கொண்டிருந்த கட்டழகன் இதுவரையிலும் தான் கொண்டிருந்த சந்தேகத்தையும் பயத்தையும் அறவே யொழித்து அவள் விவரித்து வந்தபடியே செய்தால் அவளது மனதும் இருதயமும் மிக்க புளகாங்கிதம் அடையும் என்று தெரிந்துகொண்டான். அஃதுணர்ந்த பின் இனியொரு க்ஷணமும் தாமதிக்கலாகாது. ஒவ்வொரு விநாடியும் அதே யெண்ணத்தை எண்ணிக் கொண்டு அது நிறைவேறும் தருணத்தை மிக்க ஏக்கத்

துடன் எதிர்பார்க்கும் வனிதைக்கு மேலும வருத்தத்தைக் கொடுக்கக்கூடாது என்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

அந்தப் பள்ளத்தாக்கில் ஒரு விசாலமான இடத்தை அடைந்தார்கள். அது சமயம் வாலிபன் தன் கையில் வைத்திருந்த கொம்பைப் பூமியில் அழுத்தி ஊன்றினான். அதில் ஆட்டின் கயிற்றைக் கட்டி விட்டான். அம்மங்கையை அணுகி 'பெண்பாவாய்! இக்கோழிக்குஞ்சைச் சற்று பிடிப்பாய். ஆட்டிற்குக் கொஞ்சம் புல்லறுத்துப் போடுகின்றேன்' என்றுரைத்தான். அவனுரைப்பதற்குள்ளாக மங்கை கையை நீட்டினாள். நீட்டினதும் அதில் கோழிக்குஞ்சை விட்டான். அவள் அதைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள். அதன் பிறகு தோளில் கட்டியிருந்த கெட்டிலைக் கீழே யிறக்கி கோழிக்குஞ்சை மீண்டும் அவளிடமிருந்து பெற்று, கெட்டிலைத் தலைகீழாகக் கவிழ்த்து அதனுள்ளே அதை விட்டு விட்டான். வாலிபன் பெருத்த திருப்தியை யடைந்தவன் போல் நின்றான். ஏனெனில், இப்போது அவள் செய்ய எண்ணியிருக்கும் வேலை இனிதாக முடியப்போகின்றது என்பதை உணர்ந்து விட்டான்.

இருவரது இருதயமும் ஒன்றை நாடியே உழைக்கின்றன. அதைப் பெறுவதையே பெரிய லட்சியமாக எண்ணி ஒலிக்கின்றன. ஆகவே, வாலிபன் அவளை நெருங்கி இருகரங்களால் ஆலிங்கனஞ்செய்து கொண்டு இதழோடு இதழ்வைத்து முத்தத்தின் தேவாமிர்தத்தை அவர்கள் மாறி மாறி பெற்றுக் கொண்டு சுவர்க்கபோகத்தில் விடப்பட்டவர்கள்போல தத்தம் உணர்வு கெட்டு அப்படியே நின்று விட்டார்கள்.

அம்மங்கையும் அவ்வாலிபனும் முத்தத்தைப் பெற வேண்டும் என்று எண்ணியது முதல் அது நிறைவேறுகின்ற

வரையில் எவ்வளவு மும்முரமாக அதைப்பற்றி சிந்தனை செய்தும், தந்திரமாக வார்த்தைகளாடியும் அதை நிறைவேற்றிக் கொண்டார்கள் என்பதை நான் நினைக்க நினைக்க மிக்க வியப்பாகவே யிருக்கின்றது. அம்மங்கையின் சாமர்த்தியத்தையும், சொற் சாதுர்யத்தையும், முத்தத்தைத் தான் விரும்பாமல் வெறுத்தவள் மாதிரி சொல்லிக்கொண்ட மாதிரியையும் குறித்து நினைக்க நினைக்க அவளது அபிலாஷை எவ்வளவு அதிகரித்திருந்தது என்பது நன்ருக விளங்குகின்றது.

பிரான்சு தேசத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களில் பகிரங்கமாகப் புருஷர்கள் ஒருவர்க்கொருவர் இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டுக் கொள்ளுகின்றனர். அவ்வழக்கத்தைக் கண்டு ஆங்கிலேயர்களும் மிக்க வியப்படைகின்றனர். ஒரு காலத்தில் இங்கிலாந்திலும் கூட ஒருவரையொருவர் வரவேற்கவும் மரியாதை காட்டிக்கொள்ளவும் முத்தமிட்டு வந்தார்களானுலும் பிரான்சுக்காரர்கள் செய்வதை விநோதமாகக் கருதுகின்ருர்கள்.

பிரஞ்சுக்காரர்களுடைய ஆலிங்கனத்தில் புராதன முறைகளை வெகு ஸ்பஷ்டமாகக் காணலாம். ஆடவர்களும், மகளிர்களும் ஒருவர்க்கொருவர் காதல் கொண்டு தோள்களின் மேல் கை வைத்தும், கழுத்தைச் சுற்றிக்கொண்டும் இரு கன்னங்களிலும் முத்தமிடுகின்ருர்கள். ஆடவர்கட்கு மீசையுடன் தாடியுமிருக்கின்றது. மீசை தாடி முதலிய உரோமங்களினுல் ஆடவனது முத்தம் மங்கைகட்குப் பின்னும் பன்மடங்கு அதிகமான மகிழ்ச்சியை யளிக்கின்றது. சாதாரணமாகவே முகத்தில் பல்லாயிரக் கணக்கான நரம்புகள் நிரம்பியிருக்கின்றன. அவ்விதமிருப்பதனுல் ஸ்பரிச உணர்ச்சி மிகக் கூர்மையாகவும் தீவிரமாகவு மிருக்கின்றது. பிரான்சு தேசத்துக் காதலன் கன்னத்தை முத்தமிடும்போது அவனது தாடியின் உரோமம் அம்மங்கைக்கு ஸ்பரிச

உணர்ச்சியை அதிகப்படுத்துகின்றது. காதலை மூண்டெழச் செய்கின்றது.

இங்கிலாந்தை **முதலாவது ஜேம்ஸ்** அரசாட்சி செய்து வந்த காலத்தில் முத்தமிடுவது சர்வ சாதாரணமானதாக விருந்து வந்தது. கி. பி. 1680-ஆம் வருஷத்தில் **எல்வின்** என்னும் ஆங்கிலேயன் தன் சினேகிதனுக்கு எழுதிய கடிதத்தின் குறிப்பு பின்வருமாறு:—ஸர். ஜே. ஷா என்னும் கனவான் நம்முடைய வீட்டுக்கு விஜயம் செய்திருந்தார். இவரது விஜயத்தைக் கௌரவப்படுத்துவதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை. அவரை வரவேற்கும் பாக்கியம் எனக்கில்லாமற் போய் விட்டது. அதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன். ஆனல் இப்போது பரமானந்த மடைகின்றேன். அகஸ்மாத்தாய் நான் அவரை லண்டன் பட்டணத்தில் சந்தித்தேன். அங்கு, கொஞ்சமும் நாணமின்றி பேரவாவுடன் நான் அவரை முத்தமிட்டேன்.

ஜர்மானியர்களிடத்தும் முத்தமிடுவது சாதாரணமான செய்கையாகும். தாடியும் மீசையும் முழ நீளம் வளர்ந்திருக்கும். கிழவர்கள் தங்கள் காமக்கிழத்திகளை மாடப்புறுவைப் போல முத்தமிட்டு ஆனந்தப்படுவார்களாம்.

கி. பி. 1888 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் ஜர்மனி சக்கரவர்த்தியான வில்லியம் என்பவரும் ருஷ்யா தேசத்து ஜார் என்பவரும், செண்ட் பீடர்ஸ்பெர்கு என்னுமிடத்தில் இரண்டு பெரிய சக்கரவர்த்திகள் ஆலிங்கனஞ் செய்து கொண்டு பல தடவைகள் ஒருவர்க்கொருவர் முத்தமிட்டுக் கொண்டார்கள். ஜர்மானியர்களில் ஆண் பெண் இருபாலரும் முத்தமிடுவதில் மிக்க அபிமானமும் ஆர்வமும் ஆசையும் கொண்டிருக்கின்றார்கள். மிகவும் கீர்த்தியும் பொருள் நயமும் சொல்நயமும் அமைந்த ஜர்மன் நாவல் ஒன்றில் கீழ் வரும்

விதம் குறிக்கப்பட்டிருக்கிறது. "சோபையா என்னுடைய முத்தத்திற்குப் பிரதி முத்தம் அளித்தாள். அந்த முத்தத்தின் அருமையான சக்தியை என்னென்றுரைப்பேன்! நான் நின்று கொண்டிருந்த பூமியும் என் பாதங்களை விட்டுப் பெயர்ந்து நகர்ந்து விட்டது. எனது ஆவியும் என் தேகத்தை விட்டு அந்தப் பரமானந்தமான முத்தத்தில் புதைந்து விட்டது போலுமுணர்ந்தேன். நான் நட்சத்திர மண்டலத்தை எட்டினேன்."

வெகு காலத்துக்கு முன்னே வாழ்ந்துவந்த ஒரு ஜர்மானிய கிழவன் முத்தாடுவதில் அதிக ஊக்கமும் அபிலாஷையும் கொண்டிருந்தான். தன்னுடைய அனுபவத்தைக் கூறியிருக்கின்றான். அடிக்கடி ஸ்த்ரீ புருஷர்கள் முத்தமிட்டுக் கொள்ளுவதால் பெறப்படும் நன்மைகள் கணக்கிலடங்காவென்றும், பல் நோய்க்குக் கை கண்ட ஔஷதம், சிறந்த சஞ்சீவி முத்தமே யென்றும் வெளியிட்டிருக்கின்றான்.



## வசந்தருதுவில் வனிதையின் மனப்பான்மை

வசந்தருதுவில் ஒரு வனிதை ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்வாள். ஏதோ பேச எண்ணி அதற்கு மாறாக எதையாவது பேசுவாள். மனத்தின் ஞாபகசக்தியை இழந்துவிடுவாள்; வெறும் வெளியை உற்றுநோக்கியபடியே உள்ளத்தில் ஒன்றை நினைத்து நினைத்துப் பெருமூச்சுவிடுவாள். அவ்விதம் நெட்டுயிர்ப்பு விடுவதற்கு ஏற்றகாரணத்தையும் வெளியிட லஜ்ஜை கொள்ளுவாள். தன்மனத்தையும் ஆவியையும் கவர்ந்த தன் காதலனைக் குறித்து ஏங்கி அவனது வரவை மிக்க ஆவலுடன் எதிர் நோக்கியபடியே இருப்பாள். மழையில்லாப் பயிர் மழையை எந்தவிதம் எதிர்பார்க்குமோ அந்தவிதம் காந்தை தன் காந்தனை எதிர்பார்ப்பாள். தாமரைப் புஷ்பமானது தினகரனது உதயத்தை எவ்விதம் ஆவலுடன் எதிர்பார்த்தபடி ஏங்கி நிற்குமோ அதுபோல தாமரை போன்ற முகத்தினையுடைய மங்கைநல்லாள் ஆதவனைப் போன்ற புத்திவிக்ஷண்யமுடைய உயிர்ப்பாங்கனது வரவை ஒவ்வொரு க்ஷணமும் உற்றுநோக்கிய வண்ணமிருப்பாள்.

குயில் பாடும்போது அவ்வனிதாரத்தினம் தன்னுணர்வு கெட்டு அதனுடன் கூடவே தன் நிகரில்லா சாரீரத்தால் இன்

னிசை எழுப்புவாள். அவ்விதம் அவள் செய்வது பொருத்த மற்ற செய்கை என்பதாக நீ கருதுவாயானால் அப்பிழை உன்னுடையதாகவாவது இருக்கவேண்டும் அல்லது நீ விரும்பிய மங்கை உன்னிடம் கடுமொழி பகர்ந்து எப்பொழுதுமாவது அல்லது மறுநாள் மாலைவரையிலுமாவது தான் பார்க்கமாட்டேன் என்றாவது சொல்லி இருக்க வேண்டும். இவ்விதமாக ஏதேனும் ஒரு காரணத்தால்தான் இப்படிப் பட்ட நிகழ்ச்சி சம்பவிக்கும். நீ உன் மோகனாங்கியுடன் உடனே இந்தக்ஷணமே சேர்ந்துவிடு. அவளை இந்த நேரத்தில் விட்டுப்பிரியாதே; ஏனென்றால் வசந்தகாலம் மற்ற காலத்தைப்போல ஒருவருக்காகக் காத்துக்கொண்டிருக்காது. இறகுகளையுடையது போலவே பறந்துகொண்டே இருக்கிறது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்; அய்யர் வருகின்ற வரையிலும் அமாவாசை காத்திராது என்னும் பழமொழிகளைப்போல நீ உன் பிரியையினிடம் சல்லுக்காகப் போகின்றவரையில் வசந்தகாலம் தாமதித்திருக்காது.

காதற்சுவையை அனுபவிக்க வசந்தமே ஏற்றகாலம். மணமும் அழகும் மிகுந்த மல்லிகை மலரும் மாக்ஷிமையான காலமும் அதுவே. செடி கொடிகளும் விருக்ஷஜாலங்களும் பச்சைப்பசேலென்ன இலைகளைத் தாங்கி எழிலுடன் விளங்கும் பருவம் வசந்தமேயாம். பக்ஷி ஜாலங்களும் மந்தமாருதமும் புத்துயிர்பெற்று ஆன்ம கோடிகளுக்கு குதூலகஞ் செய்விக்கும் காலம் வசந்தந்தான். வசந்தகாலத்தில் காதற்றுறையிலிறங்காத ஓர் ஆடவனும் மாதும் உயிர் வாழ்வதற்கே ஏற்றவர்களல்லர். அவ்வாடவனும், அம்மாதும் அழகிய ஓர் ஓவியத்தின் மத்தியில் விழுந்த மசிக்குச் சமானமானவர்கள். இன்னும், நல்ல அறுசுவை உணவுடன் கூடிய ஒரு விருந்தின் நடுவில் நின்றுகொண்டிருக்கும் மனித எலும்புக்கூட்டிற்கு அவர்கள் நிகராவார்கள். அதாவது, அவர்கள் இப்பூவுலக வாழ்

விற்கு அருகராகாதவர்களாவார்கள் என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்.

நீ காதல் கொண்டிருந்தால் ஒருவருக்கும் பகைவனாகமாட்டாய். இப்பிரபஞ்சத்திலுள்ள பொருள்களெல்லாவற்றையும் விட குறிப்பிட்ட ஒரு நபரை அதிகமாக விரும்புகின்றாய்; உயிரைவிட அந்நபரைச் சிறந்ததாகப் பாவிக்கின்றாய். மனிதர்கள் நலம் பெற்றிருக்க விரும்புவது ஒருவருக்குப் பிழையுமல்ல; தப்பிதமுமல்ல.

ஓர் ஆடவனும் ஒரு மங்கையும் ஒருவர்க்கொருவர் அன்புடன் நேசித்துக் காதல்கொண்டிருப்பதைக் காண்பதே பிரபஞ்சத்தில் காணுதற்கரிய காட்சியென்று நான் கருதுகின்றேன். அதைக்காட்டிலும் வேறு அற்புதமும் அழகியதுமான காட்சி ஒன்றுமேயில்லை. அக்காதல காதலியர்தாம் அத்தியந்த ஆனந்தமனுபவிப்பவர். அத்தம்பதிகளுக்குச் சொர்க்க போகாதிகள் யாவும் ஒரு துரும்புக்குச் சமானம். அந்தச் சதிபதிகள் ஒருவரோடொருவர், இணைபிரியாதிருப்பதே சகல போகாதிகளைப் பெறுவதுபோல எண்ணுவார்கள். அவ்விருவருக்கும் உணவும் வேண்டியதில்லை. வேறு பொருளும் வேண்டியதில்லை. மற்று எதுதான் வேண்டுமெனில் இருவரும் ஒன்றெனச் சேர்ந்திருத்தலேயாம். இத்தகைய ஆனந்தம் நிலையாக நீடித்திருக்குமென்பதற்கில்லை. அவ்விருவரும் தத்தம் மனத்தின்கண் எத்துணையோ ஆசையையும், காதலையும் கொண்டிருக்கலாம். இருப்பினும் இவ்வானந்தம் சொற்பகால வாழ்வையே பெற்றதாகவிருக்கும். எனினும், ஆனந்தமே அடையாதிருப்பதை விடச் சற்று நேரமாயினும் ஆனந்த வயப்பட்டிருத்தல் மிகவும் சிலாக்யமானதாகும். வசந்தகாலமும் நீடித்திருப்பதில்லை; வசந்தகாலமுழுமையும் ஒரேவிதமான ஆனந்தத்தைப் பெறுகின்றார்களென்பதற்கில்லை. அந்தச்சொற்பகாலத்திற்குள் அவர்கள்பெறும் இன்

பத்தில் ஒரு சிறிதையும், பலர் ஆயுள்கால முழுவதிலும் பெறுவதில்லை என்று சொல்லின் அவர்களது ஆனந்தத்தின் எல்லைதான் என்னே? யாரோ ஒருவன் எங்கோ சொன்ன மாதிரி நாமெல்லோரும் இறந்தவிடம் புல்முளைத்துப்போயிருக்கும். நிற்க, வசந்தகாலம் வனப்புடன் வந்திருக்கின்றது.

உனது வீடு பெருக்கும் பணிப்பெண் அதிகாலையில் உனக்குத் தினசரி பத்திரிகை கொண்டு வரும் வாலிபன் மீது தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கின்றாள். உனது உத்தியோக சாலையில் டைப் அடிக்கும் இளமங்கையர் மங்கிய பார்வையுடன் புன்முறுவல் பூக்கின்றனர். வாலிபங் கடந்து நடுத்தர வயதுள்ள புருஷர்கள் வீதியில் புஷ்பச் செண்டுகளை வாங்குகின்றனர். இவை யெல்லாம் வசந்த காலத்தின் வழக்கமான செய்கைகளாம். அந்தச் சமயத்திற்கு ஏற்ப பூலோகந்தான் உயிர் வாழ்க்கைக்கு ஏற்ற ஸ்தலம் என்று நீயே நினைப்பாய்.

பூர்வீக கிரேக்கர்களில் நானும் ஒருவனாக இருக்க விரும்புகின்றேன். வசந்த காலத்தில் அவர்கள் கடவுளுக்குப் பூசை செய்து மலரால் அலங்காரம் செய்வார்கள். சுமார் இன்றைக்கு இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னமேயே எழுதப்பட்ட ஒரு கிரேக்க கவியின் சாராம்சத்தைக் கீழே குறிப்பிடுகின்றேன் :—

சூரியனை அவர்கள் அடோனிஸ் என்னும் பெயரால் அழைக்கின்றனர். வசந்த காலத்தில் தாவர வர்க்கங்களெல்லாம் புஷ்பிக்க ஆரம்பிக்கின்றன. அவற்றின் கனிகளைக் கொண்டு சூரியன் முன்னிலையில் நிவேதனமாக வைக்கின்றனர். சித்திரான்னங்களையும் இனிய பலகார வகைகளையும் இளமங்கையர்கள் இன்பமுடன் செய்து நைவேத்தியம் செய்கின்றார்கள். தோட்டத்தையும் நந்தவனத்தையும் கொடிகளாலும் மற்றவைகளாலும் அலங்காரம் செய்வதில் அணங்கு

கள் அவாவுறுகின்றனர். அடோனிஸை நோக்கி 'அன்பும் அருளும் ஆதரவும் மிகுந்த தேவனே! எங்கள் மீது கருணையைப் பொழிவீராக! வரப்போகும் வருஷத்தில் எங்களுக்குச் சகல நலன்களையும் அளிப்பீராக! இவ்வருஷம் தாங்கள் எங்கள் மீது மிக்கப் பிரியத்துடன் இருந்தீர்கள். இனி வரப்போகும் ஆண்டிலும் எம்மை ஆனந்தத்திலிருத்துவீராக' என்று பொருள் படும்படியான இனிய கீதங்களை மிக்க இனிய குரலில் பாடிப் புகழ்வாராயினர்.

மாரிக்காலத்தின் கொடுமையை அனுபவித்தவர்கள் வசந்த காலத்தை எவ்விதம் குதூகல மனத்துடன் வரவேற்பார்கள் என்பதைக் குறித்து நாம் விவரிக்க முடியாது. ஆனால் மனத்தில் உத்தேசிக்கலாம். சூரியன் தனது கிரணங்களாகிய கைகளைப் பரப்பி பிரபஞ்சத்தின் கண்ணுள்ள சகல ஜீவராசிகளையும், சராசரப் பொருள்களையும் ஒரே தடவையாக ஆலிங்கனம் செய்து கொள்ள விரிப்பான் போலத் தோன்றும். நீறுபூத்த அக்கினியைக் கோல் கொண்டு கிளற மிகப் பிரகாசமான ஜ்வாலை எழும்புவதேபோல், மாரிக்காலத்தில் மங்கிய உஷ்ணத்துடன் பிரகாசித்த சூரியன் வசந்தம் வந்ததும் மிக்க ஜோதியுடன் தோன்றுகின்றான்.

வசந்த காலம் ஆரம்பமானதும் மழை பெயா தொழிகின்றது. பனியும் குளிரும் கூண்டோடு ஒழிந்து விடுகின்றன. காதல் கொள்ளுவதற்குச் சதிபதிகள் சரச சல்லாப உல்லாசத்தில் தலையிட்டு ஆனந்த மனுபவிக்க முற்படுகின்றார்கள். ஆணழகன் கட்டழகியாளைக் காதலிக்கின்றான். மங்கை நல்லாள் மணவாளனை மகிழ்வுடன் நேசிக்கின்றாள். வசந்த காலத்தில் காதல் கொள்ளாமலிருக்கவே முடியாது. உனது மேன்மாடியிலுள்ள அறையின் சாளரத்தின் மூலமாக உற்று நோக்குவாயாயின் அப்போது வசந்தகால மாலைப்போதில் சூரியாஸ்தமனம் காதலை எழுப்பும் வண்ணம் இருப்பதை

யுணருவாய். அந்தச் சமயத்தில் கண்விழித்திருந்த போதி லும் மனம் இன்பக் கனவு கண்டு தன்னுள்ளேயே ஆனந்தப் பட்டுக் கொண்டே யிருக்கும்.

மற்ற பருவங்களுக்கெல்லாம் இந்த வசந்தமே மிகச் சிறந்தது; கீர்த்தி பெற்றது. எனவே, வசந்த காலத்தைப் பருவங்களுக் கெல்லாம் அரசு என்று சுருக்கமாகக் கூறலாம். இந்தப் பருவத்தில் மிக்க ஏழ்மையானவர்கள் எல்லோரும் மிக்க தனவந்தர்களாக ஆய்விடுகின்றார்கள். தரித்திரனைத் தனவானுக்கும் வசந்த காலத்தின் அருமையான சக்தியை என்னென் றுரைப்பது? வாழ்க்கையில் எங்கெந்தப் பொருள் கள் மிக்க அழகு வாய்ந்திருக்கின்றனவோ அந்தந்தப் பொருள்கள் யாவும் வசந்த ருதுவில் எல்லோருக்கும் சொந்த மானதாகி விடுகின்றன.

காதல் கொள்ளுவதற்காக நீ பணக்காரனாக விருக்க வேண்டுமென்ற அவசியமேயில்லை. நாட்டுப் புறங்களி லிருந்தா லும் கூட நீ அழகிய காட்சியினைக் காணலாகும். வெளிகளி லுள்ள செடி கொடிகள் மலர்ந்து உனக்கு மகிழ்ச்சியை யுண் டாக்கும். வயல்களில் ஆட்டுக் குட்டிகள் துள்ளித் துள்ளி வேகமாக ஓடும் அழகிய காட்சியையும் ஆவலுடன் காண்பாய். அல்லது நீ பட்டணங்களில் வாழ நேரிட்டால் வசந்த கால மாலையில் எப்பொழுதும் நீ வழக்கமாக நடந்து சென்றிடும் வீதிகூட அந்தி வேளையில் ஒருவித பிரகாசத்துடனிருக்கும். நீ காதல் கொண்டிருக்கும் காரிகையை முத்தமிட்டபோதும் உனது பணம் சிறிதும் குறைந்திடாது. பாங்கியில் போட் டிருக்கும் பணத்தில் ஒருவிதக் குறையும் ஏற்படாது.

வசந்த காலத்தின் மாண்பை ஆடவர்களைக் காட்டிலும் மங்கையர்கள் வெகு சீக்கிரத்தில் அறிந்து கொள்ளுகின்றார் கள். ஏனென்றால் தருணீமணிகள் ஆடவர்களை விட இள

கிய தன்மையை யுடையவர்களாயும்; உண்மையுள்ளவர்களாயும், டாம்பீகத் தன்மை யற்றவர்களாயும், இயற்கைக்கு ஒத்த மாதிரியாகவும் இருக்கின்றார்கள். இன்னும் அவர்களுடைய உள்ளக் கிளர்ச்சிகள் தூண்டப்பட்டால் லஜ்ஜைப் படுவதேயில்லை. இவ்வித மிருப்பதற்கு அவர்களது உணர்ச்சிகள் வெகு எளிதில் தூண்டப்பட்ட போதிலும் அவைகள் முழுமையும் ஆடவர்களதைப்போல ஆழ்ந்திராததும் ஒரு காரணமாக விருக்கலாம். சரித்திரங்களில் மிக விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் கவனித்தால் காதல் கொண்டிருந்தவர்கள் யாவரும் ஆண்மக்களே யாவர் என்பது எளிதில் புலப்படும்.

பக்கத்தில் வெகு அழகாகத் தீட்டப் பட்டிருக்கும் படத்தைச் சற்று உற்று நோக்குவாம். வசந்தகால பௌர்ணமி யன்று வெண்மதி தன் ஆற்றலை யெல்லாம் ஒருங்கே திரட்டி மிக்கப் பிரகாசத்துடன் ஆகாயத்தின் கண் தோன்றி யிருக்கின்றான். பட்சிகளும் தங்கள் பேடுகளுடன் இன்ப சாகரத்தில் அமிழ்ந்து சல்லாபத்தி லிறங்கி இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கின்றன. கொடிகளும் புஷ்பச் செடிகளும் கம்பீரத் தோற்றத்துடன் தலை நிமிர்ந்து வளர்ந்திருக்கின்றன. பற்பல விதமான புஷ்பங்கள் தரைமீது எங்கணும் பரவி புல்லை மறைத்து விட்டன. அவ்விதம் புஷ்பங்கள் ஒரே தன்மையாகக் கீழ் பரப்பப் பட்டிருப்பதைக் காண ஒவ்வொருவரும் மிக்க அழகும் வேலைப்பாடும் சித்திரமும் அமைந்த ரத்தின கம்பளத்தைத் தான் விரித்திருக் கின்றார்களோ என ஐயமுறுவர். ஒரு பெரிய ஸ்தூபியின்மீது வசந்தகாலத்துக்கு உற்ற தேவதையான மன்மதனுடைய சிலை கையில் கரும்பு வில்லுடன் நின்று கொண்டிருக்கின்றது. அந்த மன்மதன் கீழே தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பது போலும் காட்டப் பட்டிருக்கின்றது. அழகும் பெருமை

யுமுள்ள அந்த நந்தவனத்தின்கண் நடுவில் சிறியதோர் நீர்



நிலையு மிருக்கின்றது. அந்நீர் நிலையில் சந்திரன் மிக்கப் பொலிவுடன் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் நேர்மையைக்

கண்டு ஓர் யுவகன் தன் இன்னுயிர் நேசியான ஓர் யுவதியுடன் அமர்ந்து கொண்டிருக்கும் காட்சியைக் காண்பாயாக. அந் நண்பன் தன் சிநேகிதையினுடைய கழுத்தைத் தனது இடது கரத்தால் சுற்றிக் கொண்டு அவளது வலது கன்னத்தைத் தன்னுடைய இடது கன்னத்தின் அருகே கொண்டு வந்து இதழுடன் இதழ்வைத்து முத்தமிடுகின்றான் போலும்.

அக்காட்சியினைக் கண்டு களிப்பினை யடைந்த நாம் சற்று பின்புறம் திரும்பினதும் திரும்பாததும் ஓர் அருமையான அற்புதக் காட்சியினைப் பார்ப்போம். காதல காதலியர் எதிரெதிரே நின்றுகொண்டு தேகத்தோடு தேகம் சம்பந்தப் படுத்தப்படாமல் குழந்தைகள் தலையோடு தலைவைத்து ட கொடுத்துக் கொள்ளுவதுபோல ஒருவருக் கொருவர் மூக்கோடு மூக்குவைத்துத் தேய்த்துக் கொள்ளுவதைப் பார்த்து வெகு வியப்பு கொள்ளுவாய். அவர்கள் அவ்விதம் செய்து கொள்வதால் பெருத்த இன்பத்தையும் சுகத்தையும் பெறுகின்றார்கள் போலும். இன்ப நுகர்ச்சியில் இன்னின்னது தான் செய்து கொள்ளவேண்டும் என்று கட்டுதிட்டமான சட்டம் கிடையாது. எதெது இன்ப மளிப்பதாகக் காதல காதலியர் விரும்பி செய்து கொள்ளுகின்றார்களோ அதெதெல்லாம் அவர்கள் செய்துகொள்ளச் சர்வ சுதந்தரம் பெற்றவர்களாகின்றார்கள்.

அகசியத்தில் பழக்கப்பட்ட அகட விகட காதலர்களைக் கண்ட பிறகு மற்றொரு தம்பதியைக் காண்பாய். ஆடவன் தன்காதலியிடம் வெகு ரகசியமாக ஏதோ சொல்லுகின்றான். ஒரு வேளை நம்மைப்போலவே அவனும் வியப்படைந்து அவர்க ளெதிரில் தானும் லஜ்ஜையின்றி தன் காதலியை முத்தமிடக்கூடாது என்ற எண்ணமோ என்னவோ தெரியவில்லை. முத்தமிட மாத்திரம் தயங்கினானே தவிர அவன் தன் ஆர்வலிக்கு இடையுள்ளதோ இல்லையோ என்று உணருவதற்

குத் தன் வலது கையை அவளது இடையைச் சுற்றிக் கொண்டு அப்படியே கட்டிக் கொண்ட வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

மன்மதனது சிலையை ஒருமுறை பிரதக்ஷிணமாக வலம் வருவதுதான் சாலவும் சிறந்தது என்றெண்ணிய நாம் அவ் வண்ணமே வலம் வருவோமாக. ஸ்தூபியின் அருகிலேயே ஒரு காதலன் தன் காதலியின் பின்புறமாகச் சென்று அவளை அப்படியே கட்டிக் கொண்டு அவளது வலது கன்னத்தில் தன் முத்தத்தைப் பதிய வைக்க விரும்பி நிற்கும் காட்சியைக் காணக் காண உனக்கும் அவ்விதம் உன் இன்னுயிர் ஆர் வலியை முத்தமிடவேண்டும் என்ற அவா எழுகின்றதல்லவா? அக்காதலருக்குச் சற்று பின்புறத்தில் காதலாம் கடலில் மூழ்கி அமிழ்ந்து இன்பம் நுகர்ந்த காதல காதலியர் ஒருவர்க் கொருவர் தத்தம் கைகளினால் ஆலிங்கனம் செய்துகொண்டு இதழோடு இதழ்வைத்து முத்தமிடுகின்றார்கள். அவர்களது ஆனந்தத்தின் அளவை வரையறுத்துச் சொல்லவும் படுமோ?

நமக்கு எதிரில், நம் அருகில் தோன்றும் காட்சியை வார்த்தைகளால் சொல்லப்புகினும் அதன் மாண்பை நன்குக வர்ணித்ததாக மாட்டோம். அழகிலும் வனப்பிலும் அவனுக்கு அவளே இணை யென்றும் அவளுக்கு அவனே நிகர் என்றும் சொல்லக் கூடிய சதிபதிகள் உலகத்தையே மறந்து சுகானந்தவாரிதியில் மூழ்கிக் கிடக்கும் பான்மையை என்னென்றி யம்புவது? ஆடவன் தன் வலது கரத்தை அவளது இடையின் பக்கம் செலுத்திப் பிடித்துக் கொண்ட போது அவ்வனிதையின் முகம் சற்று நிமிர்ந்துவிட்ட நேர் மையை நோக்குவாயாக. அவளது இடது கரத்தைத் தனது இடது கையால் பற்றிக் கொண்டிருக்கும் மாதிரியை மனத்திற் கொள்வாய். அம்மங்கை, தான் அனுபவிக்கும் ஆனந்தம் எங்கு கண் விழித்திருந்தால் மறைந்து போய் விடுமோ

என்ற எண்ணம் மேலிட்டவளாய் விழிகளை மூடிய வண்ணமே காதலனின் பிடியில் அசையாமல் பொற்பாவை போல அவன் என்ன விரும்பினும் செய்து கொள்ளட்டும் என்று மெய் மறந்து நிமிர்த்திய தலை நிமிர்த்தியபடியே நின்றிருக்கின்றாள். அவ்வனிதா சிரோமணியின் கொவ்வைக் கனிபோன்ற சிவந்த இதழைத் தன் இதழ்களால் மூடிய வண்ணமே நிற்கின்றான் அவ்வாலிபன். ஒரு தேனீ ஒரு மலரின் மீதமர்ந்து மெதுவாகக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேனைப் பருகியபடியே வெகு நாழிகை அசைவற்று மதிமயங்கி இருப்பதைப் போலவே அவ்வாலிபனும் அவளது மாதுளமலரனைய இதழின்மேல், இருபுறத்திலும் இறகுகளைப்போன்று விரிந்துள்ள மீசைகளுடன் கூடிய தன் இதழை வைத்து முத்தமாகிய தேனைப் பருகுவான்போல அதிக நேரம் அப்படியே தன் மதி கலங்கி தன் முத்தங்களைப் பதித்த வண்ண மிருக்கின்றான்.

## கூ. புதிதாக மணந்த மணமக்களின் காதல் இரகசிய விளக்கம்.

குழந்தைப் பருவ முதற்கொண்டு தோழமை பூண்டு ஒன்றாக விளையாடி நேயம் பாராட்டிய காதலரின் காதல் வாழ்க்கையைக் குறித்து அக்காதலன் பின் வரும் விதம் விவரமாகக் கூறுகின்றான் :

'விக்டோரியாவும் நானும் கணவனும் மனைவியுமாக வாழ்தல் வேண்டும் என்பதாக எங்களுடைய பெற்றோர்களின் அந்தரங்கமான அவா. மனித யத்தனத்திற்கு நாங்கள் இருவரும் சதிபதிகள் என்றே அவர்கள் தீர்மானங் கொண்டிருந்தார்கள். நாங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒன்றாக வாழ்ந்தும் விளையாடியும் வந்தோம். அவள் பல அரசர்கள் கப்பங்கட்டும் சக்கரவர்த்தினி போலும், நான் அத்தகைய சக்கரவர்த்தினியை விட்டுப் பிரியாத மெய்க்காவலன் போலுமிருந்து வந்தேன். நான் ஏதேனும் ஓர் அற்ப உதவியை அவளுக்குச் செய்தாலும் அதைப் பெருமை படுத்தி எனக்கு வெகுமதிகளும் கொடுப்பாள். என்னை முத்தமிட்டு 'உன்னைக் காதலிக்கிறேன் ; உன்னை நேசிக்கின்றேன்' என்றுரைப்பாள். அந்த முத்தத்தை நான் மீளவும் அவளுக்கு உடனுக்குடன் திருப்பிக்கொடுத்து விடுவேன். அப்போது நாங்கள் பறிமாறிக்கொண்ட முத்தங்கள் எல்லாம் குழந்தைகள் கொடுத்துக் கொள்ளும் ஆசை முத்தங்களே யாம். அவைகள் காதல் விஷயத்தைத் தெரிவியாத சாதா முத்தங்களே. குழந்தைகள் ஒன்றுக்கொன்று கொடுத்துக்கொள்ளும் முத்தங்களில் ஒருவித உணர்ச்சியும், மனவெழுச்சியும், புளகாங்கிதமும் ஒன்றுமே கிடையாது. உணவு பதார்த்தங்களில் ஒரு

வித ருசியும் இல்லாதிருக்குமானுல் 'சப்பென்றிருக்கிறது' என்பதைப்போல அந்த முத்தமும் சுவையின்றி சப்பென்றிருக்கும்.

வருஷங்கள் இறகுகளையுடையனபோல பறந்து கொண்டிருந்தன. காலம் என்பது ஒரு பொருளை மாற்றுவதைப் போல உலகத்தில் வேறொன்றும் மாற்றுஞ் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. அணுவை மலையாக்குவதும்; மலையை அணுவாக்குவதும் காலத்தின் அரிய செய்கையே யாம். செல்வத்தையுடைய தனவான் கடனுக மற்றவனுக்குப் பணமுதவி அத்தனவந்தனுக்கு வட்டிப்பணத்தை அதிகமாக்குவதும் இந்தக் காலமே தான். மற்றும், ரோஜாமொக்கு பார்வைக்கு அவ்வளவு அழகையும் மனதுக்கு ரம்மியத்தையும் கொடுக்காது. ஆனுல், காலம் என்பது மொக்கை மலரச்செய்து கண்ணுக்கும் நாசிக்கும் மனதுக்கும் பெருத்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. அதுபோல சின்னஞ் சிறிய கன்னிகைக்கும் காலமென்பது மிக்க மாண்பை அளிக்கின்றது. குழந்தைப் பருவத்தில் களிப்பினுல் துள்ளித் துள்ளியோடும் இயல்பைப் பெறும் கன்னிகையைக் காலம் என்பது அன்ன நடையை நிகர்த்த நடையை கைக்கொள்ளச் சொல்லுகின்றது. அதே காலம் கன்னியின் இடுப்பை உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும் படியும், மார்பை மகா மேருவோ என்றையுறும் படி உன்னதமாக்கியும், கண்ணிணைகளை மான் மருண்ட விழிகள் போலவும், தீங்குரலை கோகிலத்தொனி போலவும் மாற்றி விடுகின்றது. சிறுபிராயத்தில் தன் வயதொத்த ஆண் பிள்ளைகளுடன் பேசியும் விளையாடியும் வந்த கன்னிப் பெண்களைக் காலம் என்பது அப்படிப்பட்ட ஆண்பிள்ளைகளின் பார்வையினின்றும், வார்த்தை யிடுவதினின்றும்; அவர்களுடன் விளையாடுவதினின்றும் தடுத்து விடுகின்றது. இஃது உலகானுபவம். இது போலவே விக்டோரியாவும்

உருண்டு திரண்ட உருவமைதியுடன் வானுலகத்தினின்றும் இறங்கி வந்த அப்ஸரஸ் போல் தோன்றினாள். அவளைக் குழந்தைப் பருவத்தில் கண்ட அவள் சுற்றத்தார்கள் அப்பொழுது அவளைக் காண நேர்ந்திடில் அடையாளம் கண்டு பிடிக்க வியலாமல் யாரோ என்று கருதுவார்கள். அவ்வளவு மாறுதலை யடைந்திருந்தாள். அடிக்கடி அவளுடன் சேர்ந்து விளையாடிய என்னுடன்கூட அவள் பேசுவதை நிறுத்தி விட்டாள். நான் நின்ற இடத்திலும் அவள் நிற்கவும் துணிவதில்லை. என்னை அயலான் போல எண்ணி அவ்விதம் நடந்து வரலானாள். என் விஷயத்திலும்கூட அவள் முற்றிலும் மாறிப் போய் விட்டாள். எனது இதழ்கள் அவளது முத்தங்களைப்பெற ஏங்கியவாறு இருந்தன. முத்தங்களே எனக்கு ஆகாரம் போல் உரமளித்து வந்தன. எனக்கு வயது அதிகரிக்க அதிகரிக்க முத்தத்தின் தாகமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அவளது வளர்ந்து கொண்டே வரும் அங்கங்கள் ஒவ்வொன்றைக் காணக்காண என்மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவளது வடிவழகைக் குறித்து நினைக்க நினைக்க எனது எண்ணமும் தினேதினே விருத்தியடையும் அவளது அழகுடன் கூடவே வளர்ந்து கொண்டு வந்தது. எனது ஆன்மா பெறும் ஒரு லட்சியமாக அவள் இருந்தாள். சிற்சில சமயங்களில் அவளை அப்படியே கையினால் பிடித்து ஆலிங்கனஞ் செய்து கொள்ளப் பிரயத்தனப் பட்டுப் பிடிக்கவும் பிடித்து விட்டேன். அப்போது அவள் தன் பலங் கொண்ட மட்டும் திமிறிக்கொண்டு என்னைக் கடூரமாகப் பார்த்தாள். அந்தப் பார்வையைக் கண்ட நான் மறுபடியும் அவளது முகத்தை ஏறிட்டுப் பாராமல் இனி அவளைக் குறித்து நினைப்பதும் மிக்க அறிவீனம் என்று தீர்மானம் செய்து கொண்டேன். என் மனத்தின் கண் பதிந்திருந்த

அழகிய உருவ பிம்பத்தை அகற்றிக் கொள்ளுவதற்கு மற்றப் பெண்களின் கூட்டுறவை நாட முயன்றேன். அம்முயற்சியும் பயனற்றதாகி விட்டது. பின்னும், அவள் மீதிருந்த காதற் தாகம் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. அடிக்கடி அவளது சுந்தரமானமுகம் என்மனத்தின் முன்னணியில் நின்று எனக்குத் தரிசனங் கொடுத்துக் கொண்டபடியே இருந்தது. அதை அகற்ற நான் செய்துவந்த தந்திரங்களெல்லாம் கானகத்தில் காய்ந்த நிலவைப் போலும், விழலுக் கிறைத்த நீரைப் போலும் வியர்த்தமாயின. ஒருமுறை அவளது ஞாபகம் என்னுள்ளத்தில் எழுந்த தக்ஷணமே புளகாங்கிதமும், உருவபிம்பமும் அப்படியே மனம் முழுமையும் நிறைந்து விடுகின்றன.

அவளிடம் அருவருக்கத் தக்கதும் வேண்டப்படாததுமான செய்கைகள் ஒன்றும் கிடையாது. அவளத் திவ்வியமான உருவமைதியானது நிறைந்த மங்கையின் அழகினையுடையதாக விருந்தது. அவளது நீலநிறம் வாய்ந்த இனிய பார்வையுடைய விழிகள் பிரகாசமாகிய சாகரத்தில் அமிழ்ந்தபடியே இருந்தன. இவைகளெல்லாம் அவளுடைய காதலின் தன்மையை வெளிப் படுத்திக் கொண்டிருந்தன. அவளது இதயத்தைக் காதலின்ப உணர்ச்சி பெறச் செய்வது மிக்க இலகுவான காரியமேயாகும். ஆனால், அவளை அணுகவும் அவளது தேகத்தினின்றும் எழும் சுகந்தத்தை முகரும் வண்ணம் நெருங்கவும் கூட என்னால் முடியவில்லை. அவ்வினிய வாசனையும் அவளது வேல் விழியின் பார்வையும், என்னை ஒவ்வொரு சமயங்களில் அயல் மாதரின் உறவை நண்ணும்படிச் செய்யும் சக்தி பெற்றிருந்தன.

என்விஷயத்தில் அவள் எவ்வளவுக் கெவ்வளவு கடுமையாயும் சங்கோஜமாகவும் இருந்தபோதிலும் எனக்கு மனைவியாக விருக்க ஒப்புக் கொண்டிருக்கிறாள். எங்களிருவரது

பெற்றோர்களும் இவ் விஷயத்தை முன்பே முடித்திருந்தார்கள். எனது எண்ணங்களெல்லாம் கோபுரம்போல் படிப்படியாக உயர்ந்து நிலையாக நிலைத்திருந்தன. இருப்பினும் நான் சந்தோஷத்தையும் சந்துஷ்டியையும் என் மனைவியிடமிருந்து அனுபவிக்கக் கொடுத்து வைக்காத நிர்ப்பாக்கியமான கணவனாக விருந்தேன். ஏனென்றால், என் மனையாட்டி தன் நிலைமையினின்றும் மாறுபட்டாளில்லை. என்னிடம் நெருங்குவதும் கிடையாது; பேசுவதும் கிடையாது. எனது பிரேமையையும் காதலையும் அன்பையும் எத்தனை விதங்களில் அவளிடம் காட்டிக் கொண்டாலும் அவைகளை யெல்லாம் அவள் சட்டை செய்யவுமில்லை; கவனிக்கவு மில்லை; மிக்க அலட்சியமாகவே யிருந்தாள். ஒருவன் என்னென்ன விதங்களில் தன் மனைவியை மன்றாடியோ, வேண்டியோ, கெஞ்சியோ கேட்கவேண்டுமோ அந்தந்தவிதங்களிலெல்லாம் நான் கேட்டுவிட்டேன். அவைகளை யெல்லாம் கேட்டு அவள் நேசப்பான்மையை அடைந்தாளே யொழிய காதலின் தன்மையை ஒரு சிறிதும் அடைந்தாளில்லை. தனக்கிருப்பதாக வெளிக்குக் காட்டிக் கொள்ளவு மில்லை.

இவ்விதமாக நாட்கள் பல கடந்தன. அந்த நாட்கள் எனக்கு நீண்டதோர் கல்ப காலமாகத் தோன்றியது. என் மனத்தின்கண் தீராத்துயரம் குடிகொண்டது. நாளாக நாளாக என் தேகமும் மெலிந்தது. பூரணமான வலிவும், நிறைந்த யௌவனமும் இதுகாறும் கொண்டிருந்த நான், பிரபஞ்சத்தின் கண்ணுள்ள பெண்களுக் கெல்லாம் அரசியாக நான் மதிக்கும் காதலியின் முன்னே தலை வணங்கி நின்று கொண்டிருந்தேன். அவளது அழகில் ஈடுபட்டு மயங்கிக்கிடக்கும் எனக்கு, என்பொருட்டு அவளுடைய வதனாரவிந்தத்தில் ஒரு சிறு புன்னகை தோன்றுமானால் அதன்பொருட்டு அரிய பெரிய தீரச்செய்கைகளையும் செய்ய நான் சக்தி

மங்கையின் முத்தம் :



எதிரே எதிரே நின்று முகத்தோடு முகம் வைத்துக்கொண்டிருக்கும் இந்த ஜதையை நாம் காணும்போது கேள்வி கேட்காமலே அவர்கள் சரியான இடத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

மங்கையின் முத்தம் :



..............ஒரு நூதன உணர்ச்சிதோன்றி நான் உட்கார்ந்த படியே அவளது பக்கந் திரும்பி அவளைப் பிடித்து அவளது இதழ்க ளில் திடீரென்று முத்தங்களைப் பதித்தேன்.

[120-ம் பக்கம் பார்க்க.]

பெறுவேன். அவள் நலம் பெற்றிருக்க நான் இறக்கவேண்டு மானால் இறக்கவும் துணிந்திருக்கின்றேன். அவளுக்குச் சொந்தமும் உரிமையுமானவைகள் என்னென்ன உண்டோ அவைகளுக்கெல்லாம் நான் உரியவனுகவிருந்தும் அவள்மட்டும் எனக்குக் கிட்டாமல் ஆகாயத்தின் கண்ணே வெகுதூரத்தில் விடாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரம்போலிருக்கிறுள். என்னுடைய சுதந்தரங்களேயும், உரிமைகளேயும் அவளிடமிருந்து வாதாடிப் பெறுவதற்கு எனக்குப் போதுமான துணிவு கிடையாது. ஏனெனில் அவளது காதலே நான் பெறும் உரிமையைக் கொண்டிருக்கின்றேன்.

எனது தேகத்தின்கண் பாவிக்கொண்டிருக்கும் உதிரம் ஒரு சமயத்தில் கொதித்துச் சூடாகியும், மற்றொரு சமயத்தில் சாந்தமடைந்து குளிர்ச்சியாகியும் மாறுதலே யடைந்து வருகிறது. இராத்திரி வேளேயில் எனக்கு உறக்கம் வருகிறதேயில்லே. படுக்கையில் புறண்டு கொண்டே இருக்கிறேன்; கனவுகள் கண்டு திடீரென்று கண்விழித்துப் பார்த்தேன். அவள் என்னே நெருங்குங்கால் எனக்குக் காதற்தாகம் தோன்றுமற் போகிறது. என்னேவிட்டு அப்புறம் அகலும்போது என் கண்களின் பார்வை குன்றிவிடுகிறது. நான் அவளுடைய சேர்க்கைக்காகப் படும்கஷ்டத்தையும் அவஸ்தையையும் கண்டு கொஞ்சமேனும் இரக்கம், ஈவு, பச்சாதாபம் ஒன்றையும் காட்டாமல் ஏதிலள்போல் செல்கின்றுள். எனக்கு உகந்த தின்பண்டங்களும் ஆகாரமும் கசக்கின்றன. எட்டிக்காய் போல் கசந்துபோகின்றன. தாகத்தைத் தீர்க்கும் தண்ணீரும் எனக்கு உவர் நீராகின்றது. இவ்வளவெல்லாம் இருந்த போதிலும் எனது மனம் மட்டும் உடைந்து போகவில்லே. என்க்கு ஆதரவு கிடைப்பது திண்ணம் என்ற உறுதி மட்டும் இருந்துகொண்டே இருக்கின்றது. அவ்வித உறுதி ஏற்படுவதற்கு ஒருவித காரணமும் எனக்குத் தெரியாது.

காதல் நோயால் பீடிக்கப்பட்ட எனக்கு மனமுவந்த இடம் உத்தியான வனமேயாகும். என் மனம் சஞ்சலப் படும் போதெல்லாம் அப்பூங்காவினுள்ளே சென்று எனது வருத்தத்தைச் சொல்லி மனந்தேறுவேன். ரோஜா மலர்களும் இனிய வாசனை தரும் மற்ற புஷ்ப வர்க்கங்களும் அந்த நந்தவனத்தில் அபரிமிதமாகப் புஷ்பித்திருந்தன. மனதைச் சாந்தப் படுத்திக்கொள்ளச் சென்ற இடத்தில் சாந்தத்தைப் பெறுமல் பின்னும் என்மனம் வருந்தத் தலைப்பட்டுவிட்டது. மறைந்திருந்த துயரமெல்லாம் ஒருருவாக வெளிக்கிளம்ப ஆரம்பித்துவிட்டது. ஒரு நாற்காலி மீதமர்ந்து என்னையும் மறந்து வெறும்வெளியை உற்று நோக்கிக்கொண்டே யிருந்தேன். எனது இருதயம் படபடவென்றடித்துக் கொள்வதைக் காதாரக் கேட்டுக்கொண்டிருப்பது எனக்கு வழக்கம். என்னுடைய இருதயத்திலிருந்து இரத்தம் பற்பல நரம்புகளின் மூலமாகத் தேகமெங்கணும் பாவிக்கொண்டிருக்கிறது. அந்த ரத்தத்துடன் விக்டோரியாவின் காதலின் வெள்ளமும் பிரவாகித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு நாள் மாலை நான் வழக்கம்போல் உய்யான வனத்தில் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தேன். மாலை நேரமும் சென்றுவிட்டது; இரவும் வந்தடைந்தது. இராப் போஜனத்தைக் கொள்ள என்மனம் ஒருப்படவில்லை. ஆகாரம் இல்லாவிட்டால் என்னதான் நிகழ்கின்றதோ பார்ப்போம் என்று அறிந்துகொள்ள அதையும் தவிர்த்துவிட்டேன். எனது மூக்கு அதுவரையிலும் அனுபவித்திராத ஒருநூதனமான பரிமளத்தை முகர்ந்தது. அதே சமயத்தில் புதிய ஆடை தரித்த ஒரு பெண் வெகு வேகமாக வரும் சத்தம் என்செவிக் கெட்டியது. எனது கண்ணிணைகள் என்றுமே கண்டிராத அழகிய காட்சியொன்றில் பதிந்துவிட்டது. பூரணசந்திரன் ஒளியில் ஓர் அங்கனை என் கண்முன் வந்து எனது பக்கத்தி

லமர்ந்தாள். அவளே என்காதல் நிலையான விக்டோரியா. அப்போது நான் அவளிடம் ஒரு பேச்சும் பேசவில்லை; வர வேற்கவுமில்லை. அவளும் என்னைக் கண்டு வார்த்தை யாடவில்லை. ஒருவர்க்கொருவர் பேச மாட்டாமல் கண்ணோடு கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தோம். 'கண்ணொடு கண்ணிணை நோக்கக்கின் வாய்ச் சொற்களென்ன பயனுமில்லை என்பதல்லவோ குறள்? தழைத்து வளர்ந்திருந்த மரங்களின் இடையில் தோன்றிக் கொண்டிருந்த நிலவைக் கண்டு களிப்பெய்தினோம். தென்றல் மெல்லென வீசிக் கீழுதிர்ந்து கிடந்த இலைகளை முத்தமிட்டன போலும். வெகு நாள் விட்டுப் பிரிந்து மீண்டும் வந்து சேர்ந்த ஆண் புறு தன் பேடுடன் சுகிக்க ஊடல் செய்து கொண்டிருந்தது. ரோஜா மலரின் நறு மணம் என் மனதைக் கொள்ளை கொண்டு மதிமயங்கச் செய்து விட்டது. இவைகளெல்லா வற்றினையும் விட எனது பக்கத்தில் நான் மனம் நைந்து நைந்துருகும் எனது பாகுக்கட்டியேயான ஆருயிர்க் காதலி அமர்ந் திருந்தும் திருப்தியடையாத காதலினுல் ஊமையாகி விட்டேன். கடைசியில், என் மனத்தாபத்தையும் மனத் திலெழுந்த சஞ்சலத்தையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு அவளது அழகிய கைகளைப் பிடித்து எனது இதழ்களில் அழுத்திக் கொண்டேன். ஆனுல் அவள் தனது கைகளை எனது பிடியினின்றும் திமிறிக்கொள்ள வில்லை. நான் விரும்பிய எண்ணம் செய்துகொள்ள சம்மதித்தாள் போலும். சக்தி யெல்லாம் ஒடுங்கி நான் அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டே மெதுவாக அவளது பெயரை உச் சரித்தேன்.

'விக்டோரியா! நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று மிக்க ஈனஸ்வரத்துடனும் தழதழத்த குரலுடனும் நாத்தடு

மாற நான் சொன்னதை அவள் தன் தலையைத் தாழ்த்தி என தருகில் அவ்வார்த்தைகளைக் கேட்க வரவேண்டிய தாயிற்று.

அவள் தன் முகத்தை என் பக்கந் திருப்பி, அவளது மணம் கமழும் சுவாசம் என் கன்னத்தில் படும்படி அவ்வளவு அருகாமையில் வந்து 'ஆம், மனிதர்கள் காதல் கொள்ளு வதைப் போல நான் தங்களைக் காதலிக்கின்றேன். பிரபஞ் சத்தின் கண் இஃது இயற்கை தானே. இதில் என்ன விசேஷம் காணக் கிடைக்கின்றது? சாதாரணமாக காதலிப் பதைப் போலவே நானும் காதலிக்கின்றேன்' என்று மறு மொழி பகர்ந்தாள்.

அவளது மறுமொழியில்தான் தன் ஜீவ்ய வாழ்க்கை அடங்கி யிருப்பது போலவும், ஒரு குற்றமும் செய்தறியாத வனைக் குற்றவாளி யென்று ருசுப்படுத்தி நியாயாதிபதியின் தீர்ப்பை அவன் எதிர்பார்ப்பது போலவும், மிக்க கவலையுடன் அவளது வாயையே பார்த்த வண்ணமாக விருந்தேன். அவளது பதிலைக் கேட்டதும் எனக்குத் தைரியமும் சந் தோஷமும் வந்து விட்டன. 'என்ன சொல்லினை? சாதாரண மான மனிதனைப் போலவா நான் உன்னைக் காதலிக்கிறேன்? அவ்வாறு சொல்லாதே. நான் உன்னைக் காதலிப்பதைப் போல இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எந்த ஆடவனும் எந்த மங்கையையும் காதலித்திருக்கவே மாட்டான். நான் கொண்டுள்ள காதலின் திறத்தை நீ உணரமாட்டாய்' என்றான்.

ஆம்! அம்மாதிரியே சில ஆடவர்கள் சொல்லியிருப்பதாக நானும் புத்தகங்களில் படித்திருக்கின்றேன். புருஷர்களின் காதல் என்பது பசியைப் போன்றதாக விருக்கும். பசியானது ஆகார முட்கொண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல மறைந் தொழிகின்றது. வயிறு நிறைந்திருக்கும் போது ஆகாரத்தின்

மீது விருப்பம் ஏற்படுவதில்லே. அதுபோலவே, புருஷர் களின் காதலும் திருப்தியடைந்த தக்ஷணமே விட்டொழி கின்றது. காதல் இன்னது என்பதை ஒரு சிறிதும் உணர மாட்டீர்' என்றுரைத்தாள் மங்கை. இவ்வார்த்தையை அதுவும் நான் காதலிக்கும் பெண்மணி யினின்றும் கேட்க மனம் பொறுதவனுகி பாதி எழுந்து கூறலுற்ருன். 'என்ன! எனக்கா காதல் என்பது தெரியாது! காதலே உணராதவனு நான்' என்று வியப்போடு கூறினுன். அவனெழுந்திருக்கப் போவதை யுணர்ந்த விக்டோரியா தன் உள்ளங் கைகளே விரித்துப் பின் தள்ளினுள். தள்ளினளேனும் கைகளே என் மார்பகத்தின் மீதே வைத்துக் கொண்டிருந்தாள். அவளது கைகள் என் மேலிருக்கின்ற வரையில் நான் உலேக் கூடத்தி னுள்ளே வைக்கப்பட்டுப் பழுக்கக் காய்ச்சப்படும் இரும்பு போலத் தகிக்கப் பட்டேன். உலேயினின் றெழும் உஷ்ணக் காற்றைப் போல பெருமூச்சு விட்டுக் கொண்டே 'யௌவன பருவமடைந்த யுவா புருஷனல்லவா? நான். உன்னேக் காதலியாகப் பெற்றுச் சுகமனுபவிக்க எத்தனே நாட்களாக என் ஆன்மா உழைத்து வருகின்ற தென்பதையாவது நீ உணருவாயா? நான் எவ்வளவு விதங்களில் அவஸ்தைப் பட்டு வருவதை நீ தெரிந்து ஒருவித சைகையையாவது எனக்குத் தெரிவித்திருக்கின்ருயா? காதல் பித்துக்கொண்டு என்னென்ன விதமெல்லாம் நான் எண்ணிக் காலங்கடத்தி வந்திருக்கிறேன் என்பதையாவது நீ சற்றும் உணரவில்லே' என்பதாகச் சொன்னேன்.

"அதுவா காதல்; காமமேயாகும். அது மனம் ஏங்கும் படியான ஏக்கமேயாம். நிலேயாக நிற்காத ஒரு ஆவலேயாகும். அது பசியைப்போன்றது. பசியாயிருக்கும்போது ஆகா ரத்தை நீர் மிகவும் விரும்பி சுவையனுபவித்து உண்பீர். உண்டபின் பசி ஆறிவிடுகின்றது. அப்போது ஆகாரத்தின்

மேல் சற்றும் உமது மனம் நாடாது; அதன் சுவையும் நன்ருக விராது. பசியென்பதும் பறந்துபோய்விடும். அதைப்போன் றதுதான் ஆடவரது காதல். காதல் என்ற பதத்தை உபயோ கப்படுத்துவது பிழையே ஆகும். மோகம் என்பதுவே சரியான வார்த்தை. மோகத்தின் நிலைத்திராத வாழ்க்கையைக் குறித் துச் சாதாரண பாமரர்கள்கூட உணர்ந்திருக்கின்ருர்களே. 'மோகம் முப்பது நாள்' என்பதாக ஒரு வசனமும் வழக்கத்தி லிருந்து வருகின்றதே" என்று விக்டோரியா பதில் கூறினுள்.

நான் என்ன சொன்னபோதிலும் உடனே என் வார்த்தைகளை யெல்லாம் ஆடிக் காற்றில் பஞ்சைப்போல பறக்கடிக்க விட்டுவிடுகின்ருய். நான் உன்னை எந்த விதத்தில் தான் காதலிப்பது என்பதையாவது சற்று தயவுசெய்து சொல்லிக் கொடு. அவ்விதமாக வாவது உன்னைக் காதலிக்க யத்தனப்படுகிறேன். என்மனப்பூர்வமாக, இப்பஞ்சபூதங்கள் சாக்ஷியாக நான் உன்னைக் காதலித்தேன்; இப்பொழுதும் காதலிக்கிறேன், இனியும் என் ஆயுள்கால முழுமையும்கூட காதலித்துக்கொண்டே இருப்பேன். ஏனென்ருல், என் மன தில் எண்ணும்படியான ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு அவாவும் உன்னைப்பற்றியதாகவே இருக்கின்றன. எனது ஆன்மா உன்னை அடையவிரும்பி உன்னையே தொடரு கின்றது; உன்னையே உற்ற தஞ்சம் என்று அடைகின்றது. அடைக்கலமென அடைந்தவரை ஆதரிப்பதே அரிவையர்க்கு அழகென அறைந்துளார் ஆன்ருேர் என்று நான் மிகச் சாதுர்யமாக மொழிந்தேன்.

எனது மறுமொழியைக் கேட்டதும் கேட்காததுமாக உடனே வாய்திறந்து 'நண்பரே! நான் அறிவேன். ஏன் என் னிடத்தில் இவைகளையெல்லாம் சொல்லிக் காலங் கடத்துகின் றீர். வேண்டாம் வேறுவழிகளில் நீர் காதல் கொள்ள முடி-

யாது. நீர்மட்டும் என்னைப்போன்ற பெண்ணாக இருந்தால் அது வேறுமாதிரியாகவே இருக்கும் என்பதை அப்போது உணருவீர்' என்றாள்.

என்ன பெண்ணா, நானா—நான் பெண்ணாக விருந்தால் இப்போதிருப்பதைவிட இன்னும் அதிகமாகக் காதலிக்க முடியுமோ என்று வியப்புடன் கேட்டேன்.

இந்த ஆச்சரியமொழிகளைக் கேட்டும் அம்மங்கை பதில் பேசாது சற்றுநேரம் மௌனம் மேற்கொண்டு அமர்ந்திருந்தாள். சிறிதுநேரங்கழித்து அவள் தொலைவிலிருக்கும் யாருடனோ பேசுவது போல பின்வரும்விதம் பேசினாள்:—

'ஒரு மாதின் காதல் மிகப் பொறுமையையும் சாந்தத்தையும் அடக்கத்தையும் ஒருங்கே கொண்டது. அது ஆடவர்களுடைய காதலைப்போல வெகு சீக்கிரத்திலும் சுலபத்திலும் திருப்தியை அடைந்து விடாது. நீர்க்குமிழிபோல புருஷர்களின் காதல் திடீரெனத்தோன்றி, எவ்வளவு அவசரமாகத் தோன்றியதோ அவ்வளவு அவசரமாக மறைந்தொழியுந் தன்மையை யுடையது. ஆனால், மங்கையரின் காதலோவென்னின் அது மெதுவாகப் படிபடியாகத் தோன்றி ஆயுள் கால அந்திவரையில் ஒரே தன்மையதாக விருக்கும். அவள் இறந்தபின்னும் அக்காதல் மேலுலகிலும் சென்று தன் நாயகனையே அடையும் அருமையான சக்தியைப் பெற்றிருக்கின்றது.

யாகத்தில் பலியிடுவதற்காகப் பூஜாலி ஆட்டுக்கிடாவை நீராட்டி மஞ்சள்பூசித் தோளின்மேல் போட்டுக்கொண்டு போகும்போது, அது மரங்களிலிருந்து இலைகளைப் பிடித்துத் தின்று கொண்டும், அவன்கையில் பிடித்திருக்கும் கத்தியை—சற்றுநேரத்துக்குப்பின் தன்னைவெட்டப்போகும் கத்தியை—நாக்கினால் நக்கிக்கொள்ளுவதைப்போல புருஷர்கள் நாயகிகளைப் பிரம்புகொண்டு அடிக்கும்போதுகூட அம்மாதர்கள்

எதிர் மொழி பகராமலிருப்பதுடன் அப்பிரம்பையும் முத்த மிடுவார்கள். தன்னை அடித்து வருத்தும் பிரம்பையும் முத்த மிட்டுப் பின்னும் தன் நாதனை அதிகமாகக் காதலிப்பாள். அடிக்கும் கையே தன்னை அணைக்கும் கை என்பதாக மாதாது வாய் மொழி; அதுவே வாய்மை மொழியுமாகும். நாதனால் இறந்து விட்ட துர்ப்பாக்கியமுள்ள நாயகி தன்னைக்கொன்ற பாதகன் என்பதாக மனதிற்கொள்ளாமல் அவனுக்கு ஒரு இடையூறும் வரக்கூடாது என்று கடவுளை நோக்கி இருகை கூப்பித் தன் நாதனை ஆசிர்வதிக்க இறைஞ்சுவாள். மாதர்கள் தம் கணவன் மார்களைக் காதலிப்பதைப்போல ஆடவர்கள் நேசிப்பார்களாயின் ஆ! என்ன வென்பேன்! இப்பூவுலகமே சுவர்க்கலோகமாக மாறிவிடுமே! தேவர்களெல்லாம் இதையே நாடிப்பெறப் பிரயத்தனமுஞ் செய்வார்கள்.!

கண்ணே! விக்டோரியா! என்னை நீ எவ்விதம் இருக்க விரும்பினும் நான் அதுவாக விருக்கத் தடையேதும் சொல்லமாட்டேன். உனது விருப்பமே எனது மனமார்ந்த விருப்பமுமாகும் என்று நான் சொல்லிக்கொண்டு வரும்போது என்னையுமறியாத ஒருநூதனஉணர்ச்சிதோன்றி நான் உட்கார்ந்திருந்தபடியே அவளது பக்கந்திரும்பிஅவளைப் பிடித்து அவளது இதழ்களில் திடீரென்று முத்தங்களைப் பதித்தேன். இவ்விதம் அகஸ்மாத்தாய் சம்பவிக்கும் என்பதை அறியாதிருந்தபடியாலும், அவளை அது சமயம் மூச்சுகூட விடமுடியாதபடி அழுத்தமாகப் பிடித்து நெடு நேரம் முத்தமிட்ட வண்ணமே யிருந்தபடியாலும், அவளுக்கு மூச்சு தடுமாறி விழிகள் பெரிதாகிவிட்டன என்றாலும், அதை என் காதலி மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாளே ஒழிய வெறுப்பாகக் காட்டிக்கொள்ளவில்லை.

வெகு சீக்கிரத்தில் தன்னுணர்வு பெற்று என்னைநோக்கி 'என் அன்பரே! கேளுங்கள். நான் உம்மிடம் கழிவிரக்கங்

கொண்டுள்ளேன். தாங்கள் சாதாரணமான மனிதன் என்பதை மறந்துவிடுவீர்களேயானால் தங்களுடைய ஆன்மா இப்பொழுதிருக்கும் நிலைமையை விட்டுப் பெயர்ந்து நூதன நிலைமையை அடைய விரும்புவீரானால் அப்பொழுதுதான் நீங்கள் காதல்கொள்ள ஆரம்பிப்பீர்கள். தாங்கள் அவ்விதம் செய்வீர்கள் என்று நான் நம்புவதற்கில்லை. ஏனென்றால் அதற்குத் தன்னடக்கமும் எல்லாப் பொருள்களையும் நிராகரிக்குந் தன்மையும் தியாக குணமும் அவசியமாக இருக்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டே எனது இதழ்களை அவளது இதழ்களால் தொடுவதுபோலவும், அவளது சுவாசம் எனது நாசியினுள்ளே புகுவது போலும் அவ்வளவு அருகாமையில் வந்து கூறினாள்.

ஆம்! ஆம்! என்னுடைய ஜயசீலியான விக்டோரியாவே! உனக்கு நான் எம்மாத்திரம்? உனது இஷ்டப்படி என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எனது தேகம் வேறாக இருப்பினும் எனது உயிர் உனது உயிருடன் ஒன்றெனக் கலந்திருக்கின்றது. உன்மீது எனக்குள்ள காதல் என்னும் எமன் இதுசமயம் என் ஆவியைக் கொள்ளை கொள்ளப் போகின்றான். அவ்விதம் போகா வண்ணம் செய்யும் அருமையான சக்தியை நீ ஒருத்தியே பெற்றிருக்கின்றாய். என்னைக் காப்பாற்றக் கடவாய் என்று மிக்கப் பரிதாபமான குரலுடன் கூறினேன்.

எனது விசனகரமான வார்த்தைகளைக் கேட்டவுடன் அவளது இதயமும் அன்லிடைப்பட்ட மெழுகுபோல் உருகியதுபோலும். தன்னுடைய மெல்லிய கரங்களை எனது கழுத்தைச் சுற்றிலும் போட்டுக்கொண்டு, அவளது மெத்தென்ற கன்னத்தை எனது கன்னத்தின் மீது படும்படி வைத்து எனக்கு இரகசியமாகச் சொன்னாள். 'நீங்கள் தாமாகவே பூரணத்தைப் பெற முடியாது என்பதைக் கவனத்தில் பதிய

வைத்துக் கொள்ளுங்கள். நான் எண்ணும் விதங்களிலெல்லாம் உம்மை ஆடும்படிச் செய்யும் வல்லமை எனக்குண்டு. நீர் எம்மையே சரணமென்றும், தஞ்சமென்றும், அடைக்கலமாக அடைந்து விடுவீரானால், எமனையும் ஏங்கும் வண்ணம் செய்து பரிகசிக்கும் மங்கையின் காதலின் சக்தியை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். அவ்விதம் அடைக்கலமாக அடையா விட்டால் உமது போக்கின்படியே உம்மைப் போகவிட்டு அலைந்து திரியும்படிச் செய்துவிடுவேன். அப்புறம் என்மீது குறைகூறி நிஷ்டூரம் செய்வதில் ஒருவித பயனும் உண்டாகாது என்பதையும் முன்னடியே எச்சரிக்கை செய்கின்றேன்' என்று கண்டிதமாய் கூறினாள்.

என்னை என்னவிதமாக வேனும் நடத்திக்கொள்ளலாம். அந்தச் சர்வ சுதந்தரங்களையும் உனக்கே அளிக்கின்றேன். எனது உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் உன்னிடமே ஒப்படைத்து விட்டேன். உன்னையே சரண மடைந்தேன். என்னைப் புறக்கணிக்காமல் ஆதரிப்பது நின் கடன் என்று சொல்லும்போது கண்களை மூடிக்கொண்டு என்ன சொல்லப் போகிறளோ என ஏங்கி உடல் நடுக்கமுற இருந்தேன்.

என் இன்னுயிர் நேசி கூறியதைப்போல தஞ்சமென வடைந்ததால் பலனும் கைகூடியது. அவளது மாதுளமலரனைய இதழ்களை என்னுடைய ஏக்கமுற்ற இதழ்களின் மேல் முதல் முதல் பதியவைத்து அங்கேயே சற்று நேரம் தங்கும்படியாக வைத்துக் கொண்டிருந்து எனது மார்பை அவளது விம்மும் மார்பகத்தின்மீது மெதுவாக அழுத்திக் கொண்டாள். எனது இருதயம் அடித்துக் கொண்டிருந்தும் அவளுடைய இருதயம் படபடவென் றடித்துக் கொள்ளுவதை நான் நன்றாக உணரும்படி அவ்வளவு உறுதியாக அழுத்திக்கொண்டாள்: அவளும் எனது இருதய வேகத்தையும் தெரிந்துகொண் டிருப்பாள் என்றே எண்ணுகின்றேன்.

அவளது சுவாசத்தின் நறுமணத்தினுலும், இயற்கையாக அவளது அங்கங்களில் உண்டான திவ்விய கந்தத்தினுலும் நான் உணர்வு கலங்கினேன். அப்பொழுது என் அறிவு என்னை விட்டகன்று விட்டது.



அவளது மார்பகம் எழுந்து தாழ்வதையும் இதயம் ஒலிப்பதையும் நான் உணர்ந்தேன். எனது நரம்புகளில் இரத்த ஓட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. பிறந்த

நாள் முதல் இதுவரைக்கும் நான் அனுபவித்திராத ஒரு நூதன உணர்ச்சியினால் எனது நரம்புகள் சுறுசுறுப்பாயிருந்தன. அவைகள் உற்சாகத்தோடு மிருந்தன. என் தேக மாத்தியங்கம் முத்துக்களைப்போல் வியர்வை எழுந்தது. அப்படிக்கிருந்தும் கூட எனது இதழ்கள் சில்லென்று அல்லித் தண்டைப் போலிருந்தன. அப்பொழுது தான் உதயமான சூரியனது பொன்னிற ஒளியில் சென்றுகொண்டிருக்கும் மேகத்தினிடையில் நான் மெதுவாகத் தள்ளப்படுவதைப்போல் காணப்பட்டேன். அந்தச் சமயத்தில் பேரானந்தத்தையும் சொர்க்க போகத்தையும் நான் அனுபவிப்பதைப் போலவே எண்ணினேன். அழிவற்ற நிலையான ஆனந்த வயப்பட்டிருந்ததால் காலம் என்பது ஒரு பொருட்டாக எனக்குத் தோன்றவில்லை. கம்பீரமும் பிரகாசமும் பொருந்திய பொன் போன்ற ஒளியிலேயே நான் இறந்திருப்பேனானால் எனக்கு இம்மாறுபாடுகள் ஒன்றும் தெரியவராது. எனது தேகத்தின் கண் பரவி வரும் இரத்தம் மின்னலின் வேகத்தையும் பின்னடையச் செய்துவிட்டது. எனது மூளையினெதிரில் சிவப்பும் பழுப்புமான பிரகாசங்கள் தோன்றிய வண்ணமாக விருந்தன. திடீரென்று எனது அகக் கண்ணின் முன்னிலையில் ஒரு ஜோதி தென்பட்டது. அதற்குமேல் எனக்கு ஒன்றுமே புலப்படவில்லை. எனது விக்டோரியா தனது இனிமை பொருந்திய இதழ்களை என்னுடையவைகளின் மேல் பதிய வைத்த தக்ஷணமே என் உணர்வு எனக்கு மீளவும் வந்தது. அவளது தேகத்தினின்றும் கமகமவென்று வீசம் பரிமளமும் அவளது அழகிய மென்மையான தேக ஸ்பரிசமும் என்னை உணர்ச்சி பெறச் செய்தன.

அவள் எனக்கு முத்தமளித்துக் கொண்டிருக்கும் போதே நான் ஈன ஸ்வரத்துடன் இரகசியமாக ‘விக்டோ

ரியா! நான் உன்னைக் காதலிக்கின்றேன் என்றேன். இந்தச் சமயம் அவள் தடை செய்யாமலும் பிணக்குக ளிழைக்காமலும் படிந்து எனது லீலைகளை விரும்பி இருந்தாள்.

'ஆர்தர்! எனதருங் காதல! காதல் என்பது இன்னது என்று தெரிந்து கொள்ள ஆரம்பித்துவிட்டீரல்லவா?' என்று அவள் கேட்டாள்.

ஹார்! எனது அருமையும் அன்பு முள்ள உத்தம மங்கையே! உனது காதலின் திறத்தையும் மாண்பையும் அறிந்துகொண்ட நான் இறக்கவும் துணிந்து விட்டேன் என்றேன். 'ஐயோ அப்படிச் செய்யாதீர் என் பிராண நாதா! வெகுநாள் இக்காத லின்பத்தைப் பெற்றுப் பிழைக்கப் பிரியங் கொள்ளுங்கள்' என்று கூறி மறுபடியும் முத்தமிட்டனள்.

## ம. 'கண்ணே! எனக்கொரு முத்தங் கொடு'

கடைசியாக, நீயும் உன் காதலியும் ஏகாந்தமாகத் தனிமையாக இருக்கின்றீர்கள். இதற்கு முன் என்றுமே இராத அவ்வளவு அழகுடனும் தேஜஸுடனும் குதூகலத்துடனும் அவள் இன்றிரவு தோன்றுகின்றாள். நீங்கள் அமர்ந்து கொண்டிருந்த அறையினுள்ளே சிவந்த பட்டுத் திரையின் கீழ் விளக்கு பிரகாசித்துக் கொண்டே செந்நிற ஒளியை எங்கணும் பரப்பிக்கொண் டிருக்கின்றது. அவளது உருண்டு திரண்ட மார்பகத்தை அழுத்திப் பிடித்துக்கொண் டிருந்த கச்சையும், இடையைத் துவண்டு போவதினின்றும் பாதுகாக்கக் கட்டியிருந்த சேலையையும் கூட செந்நிறத்தையடையச் செய்துகொண் டிருக்கின்றது.

நீ என்னென்னமோ பற்பல விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண் டிருக்கிறாய். அவைகளெல்லாம் மிகவும் பிரயோஜன மற்றவை யென்று உனக்குந் தெரியும். நீ அவளுடைய வீட்டை நாடிச் சென்று கொண்டிருக்கும் வேளையில், நீ அவளுடன் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி உன் மனத்தின் கண் நாடகமாக நடித்துக் கொண்டே செல்லுகின்றாய். அவைகளை யெல்லாம் மீளவும் கியாபகத்துக்குக் கொண்டுவரப் பிரயத்தனப் படுகின்றாய். ஆனால், அவைகளெல்லாம் ஒரு நொடியில் கலைக்கப்பட்டு கவனத்திற்கு வரமாட்டேன் என்று மறுத்துவிட்டன. அவைகளுக்குள்ள உறுதியும் கெட்டுப்போய் விட்டது. உன்னுடைய நாக்கு எவ்வளவோ பேசவேண்டுமென்று அவாவுடனிருந்த போதிலும் அதற்குள்ள சமத்காரமும், சதுர்யமும் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டன. தவறுதல்களும் பிழைகளும் தடுமாற்றமும் மலிந்துபோய் விட்டன, ஒன்றைப் பேச

வெண்ணி மற்றென்றைச் சம்பந்த மில்லாமல் பேசுகின்றாய். பிரகாசத்தோடு கூடி யிருந்த உனது கண்கள் பார்வை மழுங்கி வெறும் வெளியை உற்றுநோக்கிய வண்ண மிருக்கின்றன. எப்பொழுதும் குதூகலத்துடனும் உற்சாகத்துடனு மிருந்த உனது உள்ளம் உறக்கத்தைப் பெற்று வருந்துவதுபோ லிருக்கின்றது. அந்தச் சமயத்தில் உன்னை முன் கண்டிருந்த வர்கள் காண்பார்களானால் உண்மையில், பொலி வழிந்துள்ள உன்னை அடையாளங் கண்டு பிடிக்க மாட்டார்கள். அதா வது, அவ்வளவு மாறுதலை அடைந்திருக்கின்றாய்.

அவள் உண்மையிலேயே நல்ல மனது படைத்தவள்; மிக்க இளகிய இதயமும் பெற்றவள். ஏனென்றால், உனது தடுமாற்றங்களையும் கலவரங்களையும் அவள் தெரிந்துகொண் டிருந்தும் கூட தெரியாதவள் போல நடிக்கின்றாள். உன் னைக் காணும் போதெல்லாம் அவள் சூரியனைக் கண்ட தாமரை போல புன்முறுவல் செய்கின்றாள். அந்தப் புன் முறுவல் ஒன்றே உனக்குத் தைரியத்தை அளிக்கின்றது. உன்னை அவள் வாஸ்தவமாக நேசிக்கின்றாளா, காதலிக்கின் றாளா அல்லது காலத்தைப் போக்க உதவும் ஒரு விளையாட் டுச் சாமானைப் போல உன்னை அவள் மதித்துப் பயன் படுத்தி வருகின்றாளா என்று உன் மனதிற்குள்ளேயே கேட்டு வியப்படைகின்றாய்; ஆச்சரியப்படுகின்றாய்.

உன்மீது அவளுக்கு உண்டாயிருக்கும் காதலின் அள வைப் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளும் காலம் நெருங்கி யது என்று கடைசியில் தீர்மானஞ் செய்து கொள்ளுகின் றாய். ஒரு முத்தங் கொடு என்று கேட்கிறாய். இந்த வேண்டுகோளை மனத்தின் கண் முதன் முதலில் கவனமாக உறுதிப்படுத்திக் கொள்ளுகிறாய். பிறகு நன்றாகப் பதித்துக் கொள்ளுகின்றாய். உனக்கு அப்பொழுது உண்டான துணி வும் நிலை தடுமாறுகின்றது. மெய் வியர்க்கின்றது. உன்

புருவத்தின் மீது முத்துக்கள் போன்ற வியர்வை எழுகின்றது.

மீளவும் நீ அனுவசியமானதும் பிரயோஜன மற்றதுமான வார்த்தைகளைப் பேசப் போகின்றாய். ஆனால் உனது விழிகள் அவளது வசீகரம் பெற்ற அங்க அமைதியைக் காண்பதில் பதிந்து கிடக்கின்றன. உனது உதடுகள் அவளுடைய முத்தத்தைப் பெற ஏங்கி நிற்கின்றன. தின்பண்டத்தை விரும்பி அழும் பிள்ளை அதைப் பெறுகின்ற வரையில் அழுவதைப் போல அவளது முத்தம் உனக்குக் கிடைக்கும் வரையில் நீயும் அவஸ்தைப் படுகின்றாய் அது கிடைக்காத வரையில் சௌக்கியமும் கிடையாதென்று எண்ணி விடுகின்றாய்.

கடைசியாக உனது அறிவிற்கு ஒருவழி தட்டுப்படுகின்றது. அந்த வழியை உடனே கைக்கொண்டு அதை உபயோகப் படுத்துகின்றாய். அவ்வறையின் மத்தியிலுள்ள மேஜையின்மீது அக் குடும்பத்து போட்டோ படங்கள் வைக்கப்பட்ட 'ஆல்பம்' இருக்கின்றது. அதைப் பலமுறைகளிலும் நீ பார்த்திருக்கின்றாய். அது இந்தச் சமயம் உனக்குப் பெரிதும் பயன்படும். அதனால் உனக்கு ஜயமும் உண்டாகும். அவ்வழியை இந்தச் சமயம் கைவிடுதல் நன்றன்று. காரிய சாதனத்திற்கு மிக்க அத்தியாவசியமானதைக் கையில் வைத்துக்கொண் டிருக்கும்போது வேறொன்றைக் குறித்து நினைப்பது பெருத்த மதியீனமாகும். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டிருக்க நெய்க்கு அழுவானேன் என்று பழமொழியும் வழக்கத்திலிருந்து வருகின்றது.

அந்த 'ஆல்ப'த்தை அவாவுடன் எடுத்துக் கொள்ளும் சமயத்தில் தவறி விட்டு விடுகின்றாய். அதன் ஏடுகளை மெதுவாகத் தள்ளுகின்றாய். அவ்வாறு தள்ளும் சமயத்தில்

மங்கையின் முத்தம்:



"கண்ணே, நாம் பிரிந்துபோகுமுன் ஒரே ஒரு முத்தம். என் கைகளில் உன்னைத் தாங்கவும், ஆசையோடு கட்டிக்கொள்ளவும், முத்தங்கொடுக்கவும் விரும்புகின்றேன்"

மங்கையின் முத்தம் :



“இதோ அவர்கள் நேருக்குநேர் எதிராக நிற்கிறார்கள். மிகுந்த பிரேமையுடன் முத்தமிடுகின்றார்கள். அவர்களது வாழ்க்கை நிரந்தரமான முத்தத்தில் பிரம்மானந்தக் கனவுபோன்றிருக்கிறது”

அவளது அத்தையின் படம் எதிர் படுகின்றது. அது யாருடைய படம் என்று உனக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட தெரியாதவன் போல் விழித்து உனது அறியாமையை வெளிப்படுத்துகின்றாய். கலவரப்பட்டவன் போலும் காணப் படுகின்றாய். அந்தப் பெண் உனது கலவர நிலைமையையும், உனது முகச்சுளிவையும் கண்டு உனக்கு உதவி செய்ய வருகின்றாள்.

உனது தோளின் மீது சாய்ந்து கொண்டு இனிமையான மந்தகாசத்துடன் 'என் சலீமே! ஏன் உமக்கு இவ்வளவு மறதி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் இரண்டு மூன்று தடவைகளில் கூட அப்படம் யாருடையது என்று சொல்லியு மிருக்கின்றேனே. உமக்கு ஞாபகமில்லையோ?' என்றுரைத்தாள்.

இப்பொழுது தான் அவளை முத்தம் கொடுக்கக்கேட்க ஏற்ற சமயம்; தருணம். கண்ணே! மும்...தா...(தடுமாறு கின்றது, நா குழறுகின்றது) உனக்கு ஏதேனும் ஆக்ஷேபனை உண்டா?...ஹூம். எவ்வளவு நெருங்கிய சம்பந்தம். எல்லா உருவத்திலும் ஒத்த...நல்ல உருவம் 'அதே உருவம்' என்று தத்தித் தடுமாறி உரைக்கின்றாய்.

சரிசரி போதும்; இதை விட்டு வேறு எதையாவது நல் வார்த்தை சொல்லு வீர்களென்று எண்ணியிருந்தேன். என்றாள் மங்கை. மீண்டும் அவள், சலீம்! உமக்கு அவளைத் தெரிவதற்குக் காரணமே யில்லை. 'தாங்கள் அவளைக் கண்ட தில்லையே' என்றாள்.

இது உன்னை ஊமையாக்கி விடுகின்றது. பற்பல நிமிஷ நேரம் வரையில் ஒன்றும் தோன்றாத வண்ணம் செய்து விடுகின்றது. இந்த யுக்தி பயனற்றுப் போனதை யுணர்ந்த பின்னர் நீ மற்றோர் உபாயம் தேடுகின்றாய். இந்தச் சமயம்

சரியாக வெளிப்படையாக உன் மனத்திலுள்ளதை உள்ளபடி வெளியிட்டு ஜெய மடைய முயற்சி செய்கிறாய். 'முயற்சி திரு வினையாக்கும், முயற்சியின்மை இன்மை புகுத்திடும்,' 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்னும் பழமொழிகளெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாய் உன் மனத்தின் கண் தொடர்ந்து செல்கின்றன. முதன் முறை தோல்வி யடைந்ததைக் குறித்து நீ நினைக்காமல் மேன் மேலும் பிரயத்தனஞ் செய்து வருவதால் நீ உண்மையிலே ஜெய மடைய மார்க்கம் உண்டு.

தன்னுடைய நெற்றியின் வியர்வையை வழித்துக் கொண்டு உனக்குக் கோபம் வருமா? நான் உன்னை சுதந்தரத்தோடு...என்று நீ சொல்லிக் கொண்டிருக்கும் போது அவள் உனக்கு உதவி செய்ய வருகிறாள். 'சுதந்தரம் என்ன—வேண்டாம். உமக்கு வெந்துபோகும்படி அவ்வளவு உஷ்ணமாக விருந்தால் நானே சென்று கதவைத் திறந்து விடுகின்றேன். இதற்காகவா இவ்வளவு சங்கோஜம். இப்படி என்று முன்னமேயே சொல்லி விடக்கூடாதா' என்றாள்.

ஐயோ உன்விதி இப்படியு மிருக்குமோ. அந்தக் கதவைத் திறக்க நீ சற்றும் விரும்பவில்லை. இப்போது கதவு நன்றாகத் திறக்கப்பட்டு விட்டது. உனக்குச் சொல்லொணாத் துயரம் குடி கொண்டு விட்டது. வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் அந்தப் பெரிய கூடத்தில் சேர்ந்து உன்னை அப்படியே விழித்துப் பார்ப்பார்கள். இவ்விஷயங்களெல்லாம் உனக்கு முன்னமேயே தெரியும். இந்த எண்ணம் அதாவது மற்ற குடும்பத்தவர்கள் எதிரில் உற்று நோக்குவது என்பது ஒன்றே உனக்கு நரம்புத்தளர்ச்சியையும், மனத்தாங்கலையும் கொடுத்து விடும். என்ன செய்வாய் பாவம். ஹா! விசையான ஒரு காற்று வீசி அந்தக் கதவைச் சாத்தி அழுத்திக்கொண்

டிராதா; அயலாரது பார்வையில் படாமலிருக்க மாட்டோமா என்று நீ வேண்டிக் கொண்டிருக்கின்றாய்.

சில நிமிஷ நேரம் வரையில் இவ்விதம் மனவருத்தங் கொண்டிருக்கிறாய். என்னென்னவோ சாமானிய விஷயங் களைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறாய். அவளது மனம் உன் பக்கந் திரும்புவதாகத் திடீரென்று தெரிந்து கொண்ட வுடன் நீ எழுந்திருந்து கதவைத்தாளிடப் போகின்றாய். ஆனால் அவள் கதவைச் சாத்தாதே. இல்லா விட்டால் தன் இடம் பெயர்வதாகச் சொல்கிறாள். நீ ஒன்றுஞ் செய்யத் தோன்றாமல் திகைத்து நிற்கின்றாய்.

நீ தனியாய் அமர்ந்து உன்னை நிந்தித்துக் கொள்ளவும் வருத்தமடையும் ஆரம்பிக்கின்றாய். கடைசியாக, நீ குளிரி னால் மிகவும் வருந்துவதாகவும் கதவைச் சாத்துவது மிக்க நலமாயிருக்கும் என்று உரைத்துக் கொண்டே எழுந்திருந்து மெல்லச் சென்று கதவைச் சத்தப் படுத்தாமல் தாளிட்டு விடுகின்றாய்.

இப்பொழுது நீ மறுபடியும் ஆரம்பிக்கின்றாய். யார் வந்த போதிலும் சரி; அந்த வீடே தலைமீது இடிந்து வீழ்ந்த போதிலும் சரி; உன்னுடைய மனதிலுள்ளதை யெல்லாம் சொல்லி விடுகின்றாய். உன் வாயினின்றும் வார்த்தைகள் வெளி வருவதில் தத்தித் தடுமாறியதை நாங்கள் விவரிக்க மாட்டோம். அவ்வளவு அவஸ்தைகளி னிடையில் முத்தங் கொடு என்று கேட்டு விடுகிறாய்.

நிச்சப்தம்: எங்கும் மௌனம் குடி கொண்டிருக்கின்றது. அந்த அறையில் அந்தச் சமயத்தில் ஒரு சிறிய ஊசி கீழே விழுந்தாலும் கணீர் என்று சத்தங் கேட்கக் கூடிய அவ்வளவு நிச்சப்தமாயிருந்தது. அவள் உன்னை ஏறிட்டுப் பார்க்கவே யில்லை. இதைக் கண்ணுற்றதும் நீ வேறு என்ன மார்க்கம்

என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறாய். அவளுக்கு உன் மீது கோபமோ தாபமோ வர்மமோ என்று பல விதங்களில் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறாய். நீ முதலில் கேட்ட கேள்வியையே மறுபடியும் தழதழத்த குரலில் மிக்க தாமதத்துடன் கேட்கின்றாய்.

திடீரென்று அவள் அடியுண்ட பாம்பு போல சீறி எழுந்து உன்னைப் பார்க்கின்றாள். அந்தப் பார்வை உன்னைக் கடிந்து நிந்திப்பது போலத் தோன்றும். அந்தப் பார்வையோடு விட்டு விடாமல் 'என்ன சலீம்...நீர்...' என்று இழுத்தாப்போல் சொல்ல ஆரம்பித்து மேல் சொல்லாமல் நின்று விட்டாள்.

அவ்வார்த்தைகளை அவள் உரக்கச் சொன்னவளல்ல. ஆனால் நீ அதைக் கடுங்கோபத்தால் சொன்னதாகக் கருதுகின்றாய். அவளுடைய தகப்பனார் மேலே மாடியில் இருக்கின்றார் என்பது அவளுக்குத் தெரியும். ஆதலால் அவள் கடுமையான பார்வையாகப் பார்க்கிறாள். அவர் வந்து விடுவாரானால் உன்னைக் கொன்று விடுவார் என்று நீ உணருகின்றாய். அவளது குரல் வீட்டிலுள்ளவர்களையெல்லாம் கூவி அழைப்பது போல எண்ணுகிறாய்.

பூ வுலகில் காணக் கிடைக்காத கயவன் போல அவளிடம் மன்னிப்பு கேட்டு அவளை விட்டு அகல எண்ணுகின்றாய். அவளை மீளவும் கண்ணால் காணப் பல நாள் வரையிலும் வெட்கப் பட்டு ஒளிந்து கொள்ளுகிறாய். எப்பொழுதாவது தப்பித்தவறி காண நேர்ந்து விட்டால் 'உன்னை எவ்விதத்திலாவது நான் உபத்திரவம் செய்து வருத்தத்தை யுண்டாக்கியிருந்தால் உன்னுடைய மன்னுப்பை மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்' என்று சொல்வாய்.

அதற்கு அவள் இதற்கு முன் கடுமையாகப் பார்த்ததைப் போலக் கடுமையாகப் பார்க்கமாட்டாள். அதற்குப் பதிலாக மந்தகாச முகத்துடன் புன்முறுவல் பூப்பாள். 'என்ன! இதற்காகவா இவ்வளவு பிரமாதப் படுத்திவிட்டீர்கள். வேண்டுமென்றால் தாங்கள் முத்தமிடலாமே என்னை! ஒரே ஒரு முத்தந்தான்; அதற்கு மேல் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். இதை ஒருவரிடத்திலும் சொல்லக் கூடாது. இவ்விரண்டு உடன்படிக்கைகளின் பேரில் நான் சம்மதிக்கின்றேன்' என்றாள்.

அவ்வளவாவது அநுமதி கிடைத்து விட்டதே என்று துள்ளிக் குதித்து கூத்தாடி முத்து கொடுக்கின்றாய். என்ன அசங்கியமாக முத்தமிடுகின்றாய். அதைச் சரிவரச் செய்ய உனக்கு வகையுமுண்டோ? துள்ளும் மாடு பொதிசுமக்காது என்பதைப் போலவும்; ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு என்பதைப் போலவும் நீ செய்து விடுகின்றாய். அவள் கூறிய உடன்படிக்கையின்படி அவள் மறுமுறை முத்தங் கொடுக்க அநுமதி அளிக்கமாட்டாள். மற்றொரு முறை முத்தமிட உத்தரவு கொடு என்று அவளிடம் மன்றாடுகின்றாய்; கெஞ்சிக் கேட்கின்றாய். உண்மையில் அவளுக்கு நீ முத்தமிடுவதில் பூரணமான விருப்பம்தான். இருப்பினும் நீ அதற்குத் தகுதியற்றவனாக விருக்கின்றாய். அதைச் செய்யும் வகை தெரியாதவனாகவு மிருக்கின்றாய்.

நீ அவளை விட்டுச் செல்லும் நேரம் சமீபித்துவிட்டதென்பதை அறிந்துகொண் டிருக்கின்றாய். அவள் உனக்கு முன்னே கதவை நோக்கிச் செல்கின்றாள். அவள் உன்னை விட்டுப் போய்விடுகின்றாளே என்றுமட்டும் மனதில் வருத்தப் படுகிறாய். நிழல் பின்தொடர்வதுபோல நீ அவளைப் பின் பற்றிச் செல்கின்றாய். அவ்விதம் பின் தொடரும்போது

உனது மார்பின்மீது அவள் தன் தேகத்தைப் பின்னல் சாய்த்துக் கொண்ட மாதிரி நடந்து செல்கிறுள். அந்தச் சந்தர்ப்பத்திலாவது முத்தமிடுவோம் என்று எண்ணுகிருய். உனது காரியம் கை கூடுமென்று கருதுகின்ருய். ஆனல் அது நிஷ்பிரயோஜனமடைகின்றது. நீ அவளது தலைமயிரை முத்தமிடுகின்ருய். நீ வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் அதைக் குறித்து எண்ணியபடியே நடக்கின்ருய்.



உனக்கு நல்ல அருமையான சமயம் வாய்க்கும்போது நீ பின் கூறியுள்ளவிதம் செய்து முத்தமிட்டிருக்க வேண்டும்.

அவளது இடையை ஒரு கையினல் சுற்றிக்கொண்டும் அவளது மென்மைவாய்ந்த கையை உனதுகையால் பிடித்துக் கொண்டும் அவள் தலையை உனது தோள்பக்கமாக இழுத்துக் கொண்டிருக்கவும் வேண்டும். அவ்விதம் செய்வதனல் அவளது நீலநிறக் கண்கள் உனது முகத்தைப் பூரணமாகப் பார்த்ததன் பிறகு மெதுவாக உனது தலையைத் தாழ்த்தி உன்னுடைய இதழ்களால் அவளது இதழை அமுக்குவாய். இனிமையான இதழ்களைச் சற்றுநேரம் அவ்விடத்திலேயே பதிந்திருக்கச்

செய்வாய். இதழ்களான புஷ்பங்களிலிருந்து தேனாகிய முத்தங்களைப் பருகிக்கொண்டே யிருப்பாய். அப்படியும் அதில் தேன் அதிகமாக இருப்பதாக நீ எண்ணினால் மீளவும் மீளவும் இதழைச் சுவைத்துக் கொண்டே யிருப்பாய்.

காதல் முத்தத்தினின்றும் பிழிந்தெடுக்கப்பட்ட இனிய ரசம் போன்றதும் சொர்க்கபோக சுகம்போன்றது மானதை நீ அனுபவிக்க விரும்புவாயானால் அதைப் பெறும் மார்க்கத்தை நீ அறிந்துகொள்ளவேண்டியது மிக்க அவசியமாகும். முதன் முதலில் உனக்கு இணங்கிய மங்கையைத் தேர்ந்து எடுத்துக் கொள்வாயாக. அவளை மெதுவாகப் பிடித்துக் கொள். அவள் உன்னை விரும்புகிறாளா என்று சோதித்து அறிந்து கொள்ள உனது மார்போடு மார்பாக அவளை இறுக்கிக் கட்டிக்கொள். நீ அவளை ஆசையோடு விரும்புவதைப் போல அவளும் உன்னை மனமார விரும்புகிறாளா வென்பதை அவளுடைய இருதயம் அடிக்கும் வேகத்தினால் அறிந்து கொள்ளுவாய். அவ்விதம் உணர்ந்த பின்னர் நீ உனது இதழ்களினால் அவளுடைய இதழ்களை மெதுவாகத் தொடுவாய். நீண்டதோர் சுவாசத்தை உட்கொள்ளுவாய். இதை மேன் மேலும் செய்துகொண்டிருப்பாய். இந்த இனிமையும் மனோகரமுமான தொழிலில் முத்தத்தின் பரமானந்தம் பரிணமித்திருப்பதை நீ காண்பாய். பிரம்மானந்தமே முத்தத்தில் அடங்கி யிருப்பதாக நீ எண்ணுவாய்.

## ൰௧. மங்கையை முத்தமிடுவதெப்படி?

மங்கையை முத்தமிடுவதெப்படி? என்ற கேள்வி வெகு எளிதில் கேட்கப்படுகிறது; மிக்க லகுவிலேயே பதி லளிக்கவும் படுகின்றது. கேள்வியும் சுலபமாகி பதிலும் மிக்க எளிதில் கிடைப்பதென்றால் வெகு விந்தையாகவே யிருக்கின்றது.

சிலருக்கு மங்கையை முத்தமிடுவதின் ஞானம் இருப்ப தில்லை. அதைக்குறித்து தங்களுக்கென்றே தனியான முறை யிருப்பதாக ஓர் எண்ணங் கொண்டிருக்கின்றார்கள். முத்த மிடச் சந்தர்ப்பங்கள் நேர்ந்தபோதிலும் மங்கையை முத்த மிட்டுப் பழக்கங்கொள்ள முத்தமிடும் முறையைக் குறித்துச் சட்டை செய்வதுமில்லை; பொருட்படுத்துவதுமில்லை.

எப்படிக் கிருப்பினும் இத்தகைய ஒரு கேள்வி பிறந் திருப்பதானது முத்தமிடுவதைக்குறித்து ஏதோ சில விஷய மாவது தெரிந்திருக்கின்றது என்பதைக் குறிக்கும். இனி மேல் முத்தத்தொழிலில் ஈடுபடுவோர்கட்குத் தெரியாத விஷ யங்கள் பல உண்டு. அவைகளைக் கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ள கவலையும் ஆத்திரமும் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தற்சமயம் தெரிந்து கொண்டிருக்கும் 'சில விஷயம்' என்பது தேர்ந்த விஷயம் அல்ல. எவனொருவன் இவ்வினிய சம்பவத்தை வேண்டியபோது அடிக்கடி செய்துகொள்ளும் அருமையான சக்தியைப் பெற்றிருக்கின்றானோ அவனை எல்லோரும் அசூயையுடன் பார்ப்பார்கள். அத்தகைய அதிர்ஷ்டமுள்ளவனைக் காணவும் பொறாமைப்படுவார்கள். அவனைக் கண்ணாலேயே சுட்டு எரித்துவிடுவார்கள். நல்ல அதிர்ஷ்டம் படைத்திருக்கின்றானே யென்று சந்தோஷப்

படுவதைவிட்டு அழுக்காறும் பொச்சரிப்பும் கொண்டு அவனைக் காணவும் அவனோடு பேசவும் அருவருப்புக் கொள்ளுகின்றார்கள். இத்தகைய துரதிர்ஷ்டசாலிகளைக் காண அவன் அருவருப்புக் கொள்ளுதல் தகுதியுடைத்தாம். அதற்கு மாறாக அவன்மீது வெறுப்பை அடைகின்றார்கள்.

ஓர் அழகிய யௌவன மங்கையிடம் இந்த விஷயத்தைக் குறித்துப் பேசவும் போதுமான சாமர்த்தியத்தை அறிமுகமாக்கிய சில நிமிஷ நேரத்துக்குள்ளாகப் பெற்றிருக்கும் ஆடவன் புகழ்தற் குரித்தானவனே யாவன். தன்மீது அவள் சற்றும் ஆயாசப்படும்படியாகச் செய்து கொள்ளாமல் வெற்றி பெறுவது என்பது மெச்சத் தகுந்த செயலேயாகும். உன்னுடைய கண்களைக் கொட்டாமல் நன்றாக உற்று நோக்கியபடியே இருக்கச் செய்வாய். வெகு சீக்கிரத்தில் நல்ல காட்சியினைக் காண்பாய். அவளை விழித்திருந்து நீ காணும்போது அவன் முதன்முதலாக என்ன சொல்கின்றான் என்பதையும் என்ன செய்கின்றான் என்பதையும் கவனித்துக்கொண் டிருப்பாயாக. அவ்விதம் கவனித்துப் பிறகு அம்முறைகளை நீ கடைப்பிடித் தொழுகுவாயாக. 'குணமது கைவிடேல்' என்பதைப் போல அவைகளில் ஏதேனும் குணமிருப்பதாக நீ தெரிந்து கொண்டிருக்கும் பட்சத்தில் அம்முறைகளை அனுஷ்டித்து ஜயமடைவாயாக. அவன் பூரண வெற்றி பெற்றிருப்பானானால் நீயும் ஜயம் பெறுவாய் என்பது திண்ணம். ஆனால் உனது எண்ணம், கவனம், எல்லாம் ஒரே மங்கையைப் பொருத்ததாக விருக்கவேண்டும்.

இப்பொழுது அவளைக் கூர்ந்து கவனிப்பாயாக. அவன் எவ்வளவு மெதுவாகவும், எவ்வளவு சரியாகவும் அவளுடைய பக்கத்தைச் சென்றடைகின்றான் பார். அவளது ஜோதி போல் பிரகாசிக்கும் விழிகளையும் அவளுடைய கண்ணிணை

களையும் கவனித்துப் பார். அவன் என்ன செய்துகொண்டிருக்கின்றான் என்பதைச் சற்றும் அவள் கவனிப்பதாகத் தோன்றவே யில்லை. அவளுடைய கண்கள் பூமியை நோக்கியவண்ணமாக இருக்கின்றன. ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருப்பது போலும் காணப்படுகின்றாள். நீ அவளை இன்னும் நெருங்கி அருகில் சென்று பார்ப்பாயானால் அவளது கண்ணின் கருமணிகள் பாதி மூடியவண்ணம் இருப்பதையும் அவைகள் கண்களின் மூலையில் இருப்பதையும் தெளிவாகக் காண்பாய்.

மேல் நடக்கப் போவதை மிக்க ஆத்திரத்துடன் எதிர்நோக்கியபடியே இருக்கின்றாள். அவளது களிப்பும் உத்ஸாகமும் புளகாங்கிதமும் பின்னும் அதிகரிக்கப் போவதை யுணர்ந்திருந்தாள். அவன் தன்னுடைய கவனத்தை அவள் தன் பக்கம் இழுத்துக்கொள்ள ஏதேனும் ஒரு அடையாளம் தொண்டையைக் கனைத்தோ ஒரு இருமல் இருமியோ உபாயம் செய்வான் என்று அவள் மனப் பூர்வமாக எண்ணி அதை ஒவ்வொரு க்ஷணமும் எதிர்பார்த்தபடியே இருந்தாள்.

அன்றைய தினம் முழுவதும் அவள் ஆச்சரிய கரமான பார்வைகளைப் பார்க்கப் பழகிக் கொண்டிருந்தாள் போலும். அத்தகைய வியப்பை யளிக்கும் பார்வையை இப்பொழுது அவன் மீது அவள் செலுத்திக் கொண்டிருப்பதைப் கண்ணுறுவாய்.

அவன் ஒரு க்ஷணநேரமும் தாமதித் திருக்கவில்லை. ஆனால் அந்த ஆச்சரிய கரமான பார்வை மறைந்து போவதன் முன்னர் 'குட்டி முத்தத்தை'ப் பதியவைக்கிறான். பிறகு தான் செய்த காரியத்திற்கு மன்னிப்பை உடனே கேட்கத் தலைப்படுகின்றான். தன்னை மன்னிக்கும் இயல் பினையுடையவள் அவள் என்பதை உணருகின்றான்.

ஆகாயவாணி பூமிதேவி சாட்சி யாகத் தான் முத்த மிட்டது அது தான் முதல் தடவையென்றும், தன்னுடைய ஜீவ்ய வாழ்க்கையில் அதற்கு முன்னே முத்தம் என்பதை அறியாதவனாக விருந்தானென்றும் ஆணையிட்டுச் சொன்னான். அவளுடைய அழகிய தோற்றமும் காந்தம் போன்ற வசீகரத் தன்மையும் இன்னும் உருவமைதியும் எல்லாம் ஒன்று சேர்ந்து அடக்கமுடியாத காதலை எழுப்பி விட்டபடியால் அவன் அச்செய்கையைச் செய்தான். அவ்விதம் அவன் செய்யாதிருக்க என்ன முயன்றும் முடியாது போயிற்று.

முதன் முதலில் அவள் தன்னுடைய முகத்தைத் தன் கைகளில் புதைத்துக் கொண்டு இதற்கு முன்னமே ஒத்திகை போட்டு பழக்கப்படுத்திக் கொண்ட அழுகையை மேற்கொள்ளுகிறாள். இவ்வழுகையும் சற்று தணிவடைகின்றது. அவன் தன்னுடைய மன்னிப்பை அவளிடம் சொல்ல ஆரம்பிப்பதற்குள்ளாக—அது இன்னது என்று அவளுக்கு முன்னமேயே தெரியும்—தனது முகத்தை ஒரு நிலையில் இருத்திக் கொண்டு அடியுண்ட பாம்பு சீறி விழுந்து கடுமையான பார்வையாகப் பார்ப்பதைப் போல அவள் பார்த்து, அந்தச் சமயத்திற்குத் தகுந்தபடியும் தனக்குத் தெரிந்துள்ளதுமான கோப மொழிகளைச் சொல்லுவாளானாள்.

அவளது செருக்கும் கோபமுமுடைய பார்வையை அவனும் சந்திக்கின்றான். அவ்விதம் சந்திக்கும் போது கண்ணீர் கண்ணை மறைக்கின்றது. துக்கம் தொண்டையில் அடைக்கின்றது. கம்மிய குரலில் வார்த்தைகள் தடுமாற மன்னிப்பை இறைஞ்சி வேண்டிக் கொள்ளுகின்றான்.

'கண்ணே! என்மேல் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன். என்னை மன்னித்து விடுவாயானால் இச்சங்கதியை ஒரு வருடனும் சொல்ல மாட்டேன். இதைக் குறித்து வெளியில் ஒரு மூச்சுகூட விட மாட்டேன். என்னை க்ஷமித்து விடு'

என்று மன்னுடிக் கேட்டுக் கொள்ளுகின்றுன். இம்முறைப் பாடு அவன் எண்ணிய விதமே பலனைக் கொடுத்தது. மறு படியும் அவள் தன் கையால் முகத்தை மூடிக்கொண்டு மிகப் பிரமாதமாக அழ ஆரம்பித்து விட்டாள். அவள் தன்னை முத்தமிட்டுப் பின்னர் விட்டுப் போக விரும்புவதையும், ஒரே ஒரு முத்தம் தான் தனக்குக் கிட்டும் என்பதையும் உணர்ந்து மிகவும் வருந்தினுள்.

இதற்கு முன்னே பலதடவைகள் அவ்விடத்துக்குச் சென்றிருந்தான். ஆகவே அவளுடன் நெருங்கிப் பழகியும் தோழமை பூண்டு மிருந்தனன். எனினும் தோழமையும் அனுதாபமும் அச்சமயத்தில் பயனற்றுப்போயின. அந்தச் சமயத்தில் விரும்பப்படாததும் அழைக்கப்படாததுமான முத்தத்தை ஓர் ஆடவன் அளிக்க அதைப் பெறும் மங்கை அந்தச் சமயத்தில் எவ்வளவாக மனதில் சஞ்சலத்தையும் கலவரத்தையும் அடைந்திருப்பாள். அந்த மனக்கலவரத்தைக் கொஞ்சங் கூட அவைகள் குறைக்க முடியா. ஆகவே அவன் அவளது அருகாமையில் மறுபடியும் செல்கின்றுன். நின்றவண்ணம் சற்றுமெதுவாக வளைகின்றுன். அவன் வளைவது கொஞ்சமும் தெரியாவண்ணம் அவ்வளவு மெதுவாக வளைகின்றுன். முன்போலவே தழதழத்த குரலில் வார்த்தைகள் தடுமாறத் தான்போவதற்கு அனுமதி கொடுக்கும் படி வேண்டுகின்றுன். இனி எப்பொழுதும் அவளுடைய அழகில் மயங்கி அம்மாதிரியான செய்கையைச் செய்வதில்லை யென்று உறுதியாகக் கூறுகின்றுன். அவளுக்குத் தான் பெருந்தீங்கிழைத்ததைக் குறித்து மிகவும் வருந்துவதாகவும் தனக்கு அச்சமயத்தில் மனதை அடக்கிக் கொள்ளச் சக்தி யில்லாமற் போனதைக் குறித்து விசனப்படுவதாகவும் கூறு கின்றுன். அவ்வறிவீனமான செய்கையினுல் அவளுக்கு எத்தகைய துக்கத்தையும் மனத்தாங்கலையும் தன் அறியா

மையினுல் அனுபவிக்கும்படிச்செய்து விட்டோமென்று அவனுடைய இருதயம் வெதும்புகின்றது. அவ்விஷய மெல்லாம் வேறு அயலாருக்குத் தெரியாது. ஆனுல் அவனும் அவளும் பரஸ்பரம் உணருவார்கள்.

அவன் உண்மையிலேயே தன் செய்கையைக் குறித்து மனவாட்டத்தையும் துக்கத்தையும் கொண்டிருக்கின்ருன் என்பதை அவள் நன்குணர்கின்ருள். அதன் பின் தான் வருந்துவதையும் புலம்புவதையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தணித்துக் கொள்கின்ருள். தான் எழுந்திருந்து தானும் அவனிடம் மன்னிப்பு கேட்க முகத்தில் சந்தோஷக் குறிப்புடன் புன்முறுவல் பூத்து நிற்கின்ருள்.

இப்பொழுது உண்மையிலேயே நீ விரும்பி ஆவல் கொண்டுள்ள பொருளேப் பெறுவதற்குச் சமீபிக்கின்ருய். அதாவது முத்தத்தைப்பெற அணுகுகிருய். அவளது முகமும் மலர்ந்து தேஜஸுடன் இருக்கின்றதைக் காண்பாயாக. அவன் தன்முகத்தை என்னென்ன விதமாகச் செய்து கொள்ளுகின்ருன் என்பதைக் கவனத்தில் வைப்பாய். தன்னுடைய மல்லிகை யரும்பை ஒத்த பற்களேக்காட்ட சற்று உதட்டைத் திறக்கின்ருன் பார். அவனது வாயின் மூலேகள் மேல் நோக்கி உயர்வதை உற்றுக் கவனிப்பாய். அவளது புருவம் நெளிக்கின்றது; விழிகள் விரிவடைகின்றதையும் பார். என்னே மன்னிக்கின்ருயா? என்று ரகசியமாகக் கேட்கிருன். 'ஆம்.' என்று அவள் சுருக்கமாகப் பதிலிறுத்துத் தன்தலையைச் சற்றுத் தாழ்த்திஞள். இதைக் கண்டதும் அவனுடைய மனம் குளிர்ந்தது.

மனதிடத்துடன் அவன் முன்னே சென்று அவளது கரத்தைப் பிடித்துக்கொண்டு மெதுவாக அழுத்துகின்ருன். மாதர்க்கு அணிகலமாயுள்ள நாணத்திஞல் அவள் தன் முகத்தை அப்புறமாகத் திருப்பிக்கொண்டு வெட்டவெளியை

உற்று நோக்கிய வண்ணமிருக்கின்றாள். இவ்வளவு பாராமுகமாக யிருந்தாளே யொழிய அவளுடைய கரத்தை அவனது பிடியினின்றும் திமிறிக் கொள்ளவுமில்லை: திமிறிக் கொள்ளச் சற்றும் விரும்பவுமில்லை.

அவளுடைய வலது கரத்தை அவன் தன்னுடைய வலது கரத்தால் பிடித்துக் கொண்டிருப்பதை நீ உற்றுக் கவனிப்பாயாக. கொஞ்சங்கூட அசைவது தோன்றாமல் அவ்வளவு சாமர்த்தியமாக அவன் தன்னுடைய இடது தோளை அவளது வலது தோளின் பின்புறம் கொண்டு வருகின்றான்.

அவனுடைய இடது கரம் மெதுவாக அவளது இடையைச் சுற்றிக் கொள்ளுகின்றது. அப்போது கொஞ்சம் அழுத்துகின்றான். அந்த அழுத்தலை அவள் மனப்பூர்வமாக அங்கீகரித்துக் கொள்ளுகிறாள். இரண்டு பேரையும் அந்த அழுத்தல் என்பது ஒன்றெனச் சேர்க்கின்றது. அவளுடைய தோள் அவனது மார்பகத்தோடு உறவாடுகின்றது. இப்போது அவன் தன்பலத்தை யெல்லாம் இடது கரத்தின்மீது போடுகின்றான். மெதுவாகவும் உறுதியாகவும் அவளுடைய இடது தோளைத் தன்பக்கம் திரும்பும்படியாகச் செய்கிறான். ஒரு க்ஷணநேரத்திற்குள்ளாக அவர்கள் நேருக்குநேராக நிற்கின்றார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ளுகின்றனர். அவளுடைய தலை தானாகவே ஒருவித யோசனையும் செய்கையுமின்றி அவனுடைய தோளின்மேல் சாய்ந்து கொள்ளுகின்றது.

ஒருவர்க்கொருவர் ஒரு பேச்சும் பேசிக்கொள்ளவில்லை. அந்தச் சமயத்தில் பேச்சுக்கள் யறிவை யிழந்து இறந்து போகின்றன. மேல் நோக்கிப் பிரகாசிக்கும் விழிகளின் பாஷை பேச ஆரம்பிக்கின்றன. அத்தகைய பாஷையை நாக்கு எந்தச் சமயத்திலும் பேசியே யிருக்காது. அவன் உயிரளிக்கும் கண்ணிணைகளைப் பார்க்கின்றான். தன்னை மன்னித்த கருணைக் கடலின் ஆழத்தை அவைகளில் காண்பான் போல உற்றுநோக்கி கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னுடைய முகத்தை அவளுடைய சந்திரபிம்ப வதனத்தினருகே தாழ்த்திக் கொண்டிருக்கிறான். வெளிச்சம் கண்ணைக் கூசும்படி

அவ்வளவு அதிகமாக இருக்கிறது. ஆகவே அவள் தன் கண்களை மூடிக்கொண்டு அசைவற்றிருக்கின்றாள். இச்செய்கைகள் சாதாரணமாகவே தான் தயாராக விருப்பதை உணர்த்தும். இது சாதாரணமான சந்தர்ப்பமன்று. இம் மாதிரியே ஒவ்வொருவருக்கும் வாய்க்கும் என்பது முடியாது. ஆயினும் செய்கை எல்லாவற்றிற்கும் ஒன்றேயாகும். அதில் ஒருவித வித்தியாசமும் கிடையாது. கண்களை மூடி அசைவற்றுப் பாவைபோல நின்றிருந்த மாதிரியைக் கண்டு அதை அவளுடைய முழு அங்கீகாரம் என்று நம்பிக்கொள்ளுகின்றான். இந்தச் சந்தர்ப்பத்தைக் கண்டு ஆத்திரத்துடன் ஏதேனும் காரியஞ் செய்கின்றானோ? இல்லை; கொஞ்சங்கூட அவசரத்தோடும் ஆத்திரத்தோடும் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக மிகச் சாந்தமாகவும் பொறுமையாகவும் ஆற அமர இருக்கின்றான். 'அவசரக் கோலம் அள்ளித்தெளிக்கும்' என்பது போலிராமல் நிற்க நிதானித்து அமரிக்கையாயிருக்கின்றான்.

அவன் எப்பொழுது நல்ல சமயம் என்று கவனித்துக் கொண்டிருப்பதை நீ காண்பாய். அவனுடைய இதழ்கள் அவளுடையவைகளை மெதுவாகச் சென்றடைகின்றன. அவன் தன்னுடைய தலையை இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் எந்த இடத்தில் நல்ல தேனிருக்கிறதென்று அறிந்து அதைப்பருக அசைத்து அசைத்துக் கொண்டு வருவதைக்கவனி. அவன் அதைக் கண்டுபிடிக்கிறான். நீண்டதும் தயங்கித் தயங்கியதும் நடுக்கமுற்றதுமான முத்தம் பின்தொடருகின்றது. அந்த முத்தத்தை நிறுத்த அவன் விரும்பினானில்லை. எவ்விதம் அவன் இஷ்டப்படவில்லையோ அவ்விதமே அவளும் இஷ்டப்படவில்லை. ஆனால் அவர்கள் மூச்சுவிடவாவது வேண்டுமல்லவா? அவள் மூச்சை நிறுத்தப் பழக்கப் பட்டிருந்ததாலும்; இத்தனை நேரம் வரையில் மூச்சை அடக்கும் ஆற்றல் தனக்கு உண்டு என்பதை அவள் உணர்ந்ததாலும் அவனுடைய முத்தத்தை விட்டுப் பிரிந்தாளில்லை. ஆனால், அவனே மூச்சுத் திணறியதால் விட்டுப்பிரிய வேண்டியதாயிற்று.

## ௫௨. இருட்டில் முத்தம்.

சுருட்டுபிடிக்கும் பழக்கத்தை மேற்கொண் டுள்ளவர்கள் இருட்டில் உட்கார்ந்து சுருட்டைப் பிடிக்கக் கொஞ்சமும் விரும்புவதில்லை. ஏனென்றால், சுருட்டின் புகை இருட்டில் அவர்களுக்குத் தெரிவதில்லையாம். எனவே நல்ல பிரகாசமான வெளிச்சத்திலேதான் சுருட்டைப் பிடிப்பார்கள். ஆனால் முத்தத்தின் விஷயத்திலோ என்றால் முற்றிலும் விரோதமானது. எவ்வளவுக் கெவ்வளவு சுருட்டு நண்பர்கள் பிரகாசத்தை விரும்புகின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு முத்து நேயர்கள் இருளைப் பெரிதும் விரும்புகிறார்கள். முத்தம் என்பது கண்ணினாலே பார்க்கத் தக்கதல்ல; ஸ்பரிசத்தினாலே தெரிந்து அனுபவிப்பது. இது உண்மையாக யிராமற்போனால் ஏன் காதலர்கள் விளக்கை மிகச் சிறிதாகச் செய்து இக்காரியத்தில் இறங்குகிறார்கள்?

அறிவானந்தன் தன் இனிய காதலி அபரஞ்சிதத்தின் காதலி னளவைத் திடீரென்று பரிசோதிக்க எண்ணினான். அவ்வெண்ணம் வேடிக்கை யார்த்தம் எழுந்ததே யாகும். 'விளையாட்டு வினையாக முடிந்தது' என்பதைப்போல அறிவானந்தன் அவஸ்தைக் குட்பட்டான். ஓர் ஆடவன் நாற்பது வயதுள்ளவனாக விருந்து அவன் இருபது வயது மங்கையை மணஞ்செய்துகொள்ள விரும்புவானாயின் அவனுக்கு இத்தகைய எண்ணமும் நினைவும் உண்டாவது மிகச் சாதாரணமானதும் இயற்கையு மானதுமேயாம். அதை எல்லோரும் தெரிந்து ஒப்புக் கொள்ளுவார்கள்.

ஓர் இரவு அறிவானந்தனும் அபரஞ்சிதமும் அவர்களுக்குத் தெரிந்த நண்பனான சுகுமாரனும் மூன்று பேரும்

ஒரு நாடகசாலையில் சோபாவில் உட்கார்ந் திருக்கின்றனர். அறிவானந்தனும் அபரஞ்சிதமும் சில மாத காலங்களாக ஒருவர்க்கொருவர் காதல் கொண்டு மணவினைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சுகுமாரன் இருபது வயதுள்ள யௌவன பிராயத்தினன், நல்லழகு படைத்தவன். அவனும் அவர்களுடைய அழைப்புக்கு இணங்கி நாடகக் கொட்டகைக்கு வந்திருந்தான். அந்நாடகத்தின் நிகழ்ச்சியில் ஒரு மாந்திரீகன்து நாடகபாகம் நடந்துகொண் டிருந்தது. இருட்டில் சில காட்சிகள் நடத்தவேண்டி யிருந்தபடியால் கொட்டகையிலுள்ள எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டுப் போய் இருள் சூழ்ந்திருந்தது. அறிவானந்தன் எழுந் திருந்து வெளியில் போய்வர நேரிட்டது. இருட்டு மயமாகி விட்டது. சிகரெட் முதலியவை பிடிக்கப்பட்டிருந்ததால் அச்சமயம் இங்கும் அங்கும் கொஞ்சம் பிரகாசம் தோன்றிக் கொண்டே யிருந்தது. திடீரென்று விளக்குகள் நின்றுவிட்ட படியால் பலர் வாயில் வைத்திருந்த சிகரெட்டையும் எடுத்து விட்டுக் காட்சியைக் கவனிக்கலாயினர். அறிவானந்தன் அச் சமயத்தில் அபரஞ்சிதத்தை விட்டுப் போகச் சற்றும் மனங் கொள்ள மாட்டானென்றாலும் அந்தச்சமயம் கட்டாயமாகச் செல்ல வேண்டியது அவசிய மாகிவிட்டது. சோபாவை நாடித் தடவிக்கொண்டே வந்தான். அந்த இருட்டிலும் கூட அவன் கண்கள் அபரஞ்சிதத்தைப் பார்த்துக்கொண்டே இருப்பதாக உணர்ந்தான். சோபாவண்டையிலும் வந்துவிட் டான். பூனைபோல சந்தடி செய்யாமல் அடிமேலடிவைத்து வந்தான். சோபாவில் ஒரு முனையில் அபரஞ்சிதமும் மற் றொரு முனையில் சுகுமாரனும் அவ்விருவர்களுக் கிடையில் தானுமாக உட்கார்ந்திருந்தான். வெளியில் சென்று திரும்பி வரும்போது மெதுவாகக் கையினாலே தடவிக் கொண்டே தன் நண்பர்கள் அமர்ந்துள்ள சோபாவை

நெருங்கினான். அப்போது அபராஞ்சிதம் 'இது எவ்வளவு அச்சத்தையும் நெஞ்சு திடுக்கிடுவதையும் கொடுக்கக்கூடிய தாக விருக்கிறது பார்த்தனேயா?' என்று கேட்கலானாள். அதற்குப்பதில் 'ஆம் என்ன செய்யப் போகிறான் என்பதுவே எனக்கு மிக்க வியப்பை அளிக்கின்றது' என்றெழுந்தது. யார் மறுமொழி பகர்ந்திருப்பான், அவனே சுகுமாரன்.

அறிவானந்தன் அசந்துபோய் நின்றுவிட்டான். அப ரஞ்சிதத்திற்கும் சுகுமாரனுக்கும் அறிவானந்தன் வந்ததே தெரியாது. அப்போது அவனுக்கு ஓர் எண்ணந் தோன்றிற்று. அந்த எண்ணம் நல்ல எண்ணமல்ல. அது அவனை ஒரே பிடியாகப் பிடித்துக்கொண்டு உறுதியாகப் பதிந்துவிட்டது. அதை விட்டொழிக்க முயன்றாலுங்கூட முடியாத தாகிவிட் டது. அவனது காதலி அந்தகாரத்தில் அழகும் யௌவனமும் மிகுந்த நெருங்கிய நண்பனுடன் உட்கார்ந்திருந்தாள். அந்த நண்பன் பிரயத்தனப்பட்டால் தன்னை முத்தமிட அவள் அனுமதியும் சம்மதமும் தருவாளோ? கன்னிகைகளில் எத் தனையோ பேர் அதற்குச் சம்மதிப்பார்கள் என்பதைத் தன் னுடைய அனுபவத்திலேயே கண்டிருக்கின்றான். இருந்தா லும் தன்னுடைய அபராஞ்சிதம் அத்தகைய காரியத்துக்குக் கொஞ்சமும் உட்படமாட்டாள் என்ற நம்பிக்கை அவனுக்குப் பூரணமாகவும் உறுதியாகவும் இருந்தது. எவ்வளவுக்கு எவ்வளவு அவன் நம்பிக்கைப் படவில்லையோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அவனுக்குச் சந்தேகம் தோன்றி வாட் டத் தலைப்பட்டது.

திடீரென்று அவன் தீர்மானஞ் செய்துகொண்டான். அதன்படியும் நடக்க ஆரம்பித்துவிட்டான். அவ்விருவர்க ளும் தான் வந்ததை உணரவில்லை என்று தெரிந்து கொள்வ தற்காக ஒரு க்ஷணநேரம் பொறுத்திருந்து சந்தடி செய்ய

மல் மெதுவாக முன்னே வந்து கையை நீட்டித் தடவினன். தற்செயலாய் தான் அமர்ந்திருந்த சோபாவைப் பிடித்தான்.

சத்தம் ஒன்றுஞ் செய்யாமல் இன்னொரு அடியெடுத்து வைத்து அதில் அமர்ந்து கொண்டான். அவனது இருதயம் படபடவென் றடித்துக் கொண்டது. அவ்விருவர்களில் ஒருவராவது அவன் வந்தமர்ந்ததைக் கவனிக்கவே யில்லை. கவனித்ததாக ஒரு குறியும் காட்டிக் கொண்டவர்க ளல்ல. அவன் வலது பக்கத்தில் முன்னுக்குச் சாய்ந்தான். அவ் விடத்தில் தான் அபரஞ்சிதம் உட்கார்ந்திருந்தாள் என்பது அவனுக்குத் தெரியும்.

அவன் அவளருகில் சென்றதனல் இருட்டில் பார்க்க முடியாம லிருந்தாலும் அவளது சுவாசம் தன்மேல் பட்ட படியினலும் சுவாசம் வருவது காதில் கேட்டபடியினலும் உணர்ந்து கொண்டான். பிறகு அவன் அவளுடைய கன் னத்தில் முத்தமிட்டான். அவள் திடீரென்று இச்செய் கையை அனுபவித்தா ளாதலால் திடுக்கிட்டுப் பின்னடைந் தாள். அவள் அச்சமயம் பின்னடைந்தது எவ்விதமிருந்த தெனில் ரெயில் வண்டித் தொடர் ஒரு ஸ்டேஷனில் நின்ற பின்னர் மீளவும் ஓட ஆரம்பம் செய்யும்போது சற்றுப் பின் னுக்குச் சென்று பிறகு முன்னுக்கு வேகமாகச் செல்கின் றதை ஒத்திருந்தது. அவள் ஆத்திரத்தோடு அவனது இதழ் களைப் பிடித்து முத்தமிட்டனள். அது ஒரு க்ஷண நேரமே தங்கி யிருந்தது. பிறகு அவள் அவனைவிட்டு அகன்றாள்.

அவமானமும் கோபமும் அதிருப்தியும் கொண்டவ னய் அவன் தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு மூலையில் போ யுட்கார்ந்தான். சில வார காலத்திற்குள்ளாகத் தனக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்ட கன்னிகையும் மற்றைய மங்கை யரைப் போலவே இருந்துவிட்டாள். மற்ற காதலனுடைய

முத்தங்களை இனிதாகவே பெறும் இயல்பினையுடையவளாகி யிருந்தாள். இன்னும் கேவலமான நிலைமையிலும் அவள் இருந்தாள். எவ்வளவு ஆத்திரத்துடன் முத்தங் கொடுக்கப் பட்டதோ அவ்வளவு ஆத்திரத்துடன் திருப்பி முத்தமும் அளித்தனள். இதைக் குறித்து நினைக்க நினைக்க அவன் மனம் வெதும்பியது.

அவளை ஏன் இவ்விதமாகப் பரிசோதித்தோம் என்று அவன் வருத்தப்படலானான். அம்மாதிரி செய்தது தனது தவிற யொழிய அவளுடைய தப்பிதமாகா தென்பதை நன்ருக உணர்ந்து கொண்டான். எந்த விதமாக அவன் அபரஞ்சிதத்தைக் குறித்து நினைத்துக் கொண்டாலும் கொள்ளட்டும். அவள் மட்டும் மற்றைப் பெண்களைப் போல் நடந்து கொள்ளவில்லை; மனமும் கொண்டவ ளல்ல. அவள் அவ்விதமாக இராவிட்டாலும் அதனை அவன் தெரிந்து கொள்ளவும் விரும்பினு னில்லை. அவன் தன்னையே வெறுத் துக் கொண்டான். சுகுமாரனையும் அவன் வெறுத்தான். அவனுக்குத் திடீரென்று பொருமையும் மாற்சரியமும் உண் டாகி விட்டன.

இவ்விதமாக அவனது மனம் கலக்கத்தையும் கலவரத் தையும் கொண்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென்று நாடக மேடையிலிருந்து ஒரு வெடிச் சத்தம் கேட்டது. யாவரும் திடுக்கிட்டுப் பயந்து போயினர். உடனே விளக்குகளெல்லாம் பிரகாசிக்கத் தொடங்கின. அந்த மாந்திரீகன் ஒன்றரை நிமிஷ நேரமே இவ்வண்ணம் செய்திருந்தான். அந்தத் தொண்ணூறு விநாடிகளும் அவ னுக்குத் தொண்ணூறு மணி நேரம்போல் தோன்றிற்று.

நாடக மேடையை அவன் உற்று நோக்கினு னில்லை. ஆனல் அவனது பார்வையும் நாட்டமும் எல்லாம் அபரஞ்சி

தத்தின் மேலே பதிந்திருந்தது. அப்போது தான் சுகுமாரன் தன் இடத்தினின்றும் திரும்பினன். ஆச்சரியத்தினல் கூச்சலிட்டான். 'நீ எங்கிருந்து இப்போது குதித்தாய். நீ வரும் சத்தம் கூட எனக்குக் கேட்கவே யில்லையே. எப்பொழுது வந்து உட்கார்ந்து விட்டாய்' என்றுரைத்தான்.

அறிவானந்தன் அவனை அச்சமயம் அலட்சியம் செய்தான். கண்ணைக் கூசும்படியான ஜகஜ்ஜோதியில் அவனுடைய காதலியை உற்று நோக்கிய வண்ணமே யிருந்தான். அவள் இயற்கையான சுபாவத்துடன் வரவேற்று தன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளத் தன் கையினல் சோபாவைத் தட்டினுள். 'வாருங்கள். என் பக்கத்தில் அமருங்கள். இது ஆச்சரியகரமாக விருக்கவில்லையா' என்று வியப்புடன் கேட்டாள்.

அவள் குற்றமற்றவள்; நிரபராதியானதனல் கள்ளப்பார்வையும் உள்ளக் கிளர்ச்சியும் ஒன்று மிராதவளானபடியினல் அவள் சாந்தமாயும் நிம்மதியாயும் இருந்தாள். இது அவனைப் பின்னும் கலவரப்படும்படிச் செய்துவிட்டது. அவளிடத்தில் தான் நினைத்திருந்தபடி ஒருவிதமான குற்றமும், கலவரமும், கலக்கமும் இவைகளில் ஒன்றேனும் அவளிடம் இருப்பதாகத் தோன்றவில்லை. அவள் சந்தோஷமாக அவனைக் கண்டு புன்சிரிப்பு சிரித்தாள். மறுபடியும் அவள் 'எனது அறிவும் ஆனந்தமுமான அறிவானந்தரே! அது வியப்பாகவும் ஆச்சரியகரமாகவு மிருக்கவில்லையா' என்று கேட்கலானுள்.

அந்தச் சமயத்தில் தனது நிலைமையைச் சரிப்படுத்திக் கொண்டு முகமலர்ச்சியுடன் இருக்க அந்த நடுத்தர வயதுக் காதலன் வெகு சிரமப்பட வேண்டியதாயிற்று. அவன்

தன்னுலான வரையிலும் சந்தோஷமாகவிருக்கப் பிரயத்தனப் பட்டான். அவனது முயற்சிகளெல்லாம் வீணுயின. இருபது நிமிஷங்கள் வரையில் அக்கொட்டகையிலிருக்க அவனுக்குப் பயித்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. அவ்விருவர் சிரித்து சம்பாஷிப்பதைக் காண அறிவானந்தனுக்குப் பொறுமை மேலிட்டு விட்டது. அவன் அந்தச் சமயத்தில் அவஸ்தைப்படும் நிலைமையில் புண்ணில் வேலிட்டது போலும், எரிகிற தீயில் நெய் வார்த்தது போலும் அவர்கள் பரிகசித்து சம்பாஷணை செய்தது இருந்தது. அங்கு தங்கியிருக்க அவன் சற்றும் விரும்பினுனில்லை. அரைமணி நேரம் கடந்தபின் சகிக்கமுடியாது போனபடியினுல் அக் கன்னிகையைப் பார்த்தான். திடீரென்று 'நாம் வெளியே போய் விடலாமோ; நீயும் வருவாயோ' என்றுரைத்தான். அவள் இக்கேள்வியைக் கேட்டதும் ஆச்சரியத்தின் வசப் பட்டாள். அவளது பார்வையிலேயே வியப்பு குடிகொண்டிருந்ததைக் கண்டான். 'தலைவலி அதிகமாக விருக்கின்றது. இனி ஒரு க்ஷணமும் இங்கிருக்க மாட்டேன். இங்கே காற்றும் இல்லை நான் வெளியே போக விரும்புகின்றேன்; உனக்கு விருப்பமிருந்தால் நீ சுகமாக சுகுமாரனுடன்...... ......' என்று இழுத்தாப்போல் சொல்லி முடிப்பதற்குள்ளாக அபரஞ்சிதம் உடனே எழுந்து நின்ருள். 'எனக்கு மிக வருத்தமாக இருக்கிறது. தங்களுக்கு உடம்பு சௌகரியமில்லாததால் நான் மிகவும் வருந்துகிறேன். வாருங்கள் வெளியே உடனே போவோம்' என்று சொல்லி முன்னே நடந்தாள்.

வெளியே வீதியில் மூவரும் தனித்தனியே பிரிந்து போகலானுர்கள். சுகுமாரன் வாடகை மோட்டார் ஏறிச் சென்ருன். அறிவானந்தன் தன் அபரஞ்சிதத்திற்கு வேருெரு தனி மோட்டார் அமைத்துக் கொடுத்துத் தான்

அச்சமயம் அவளுடன் கூட வீட்டுக்குவர அசந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லி அனுப்பிவிட்டான். அம்மாதிரி அவன் தன் காதலியை விட்டுப் பிரிவது அதுதான் முதல் தடவை. எப்பொழுதும் எங்கு சென்ற போதிலும் மீளவும் அவளை வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டுப் போவது வழக்கம். அன்றைய தினம் வழக்கத்துக்கு விரோதமாக அவளைத் தனியே வீட்டுக்குத் திரும்பிப் போக அனுப்பிவிட்டான்.

அன்றைய இரவு முழுமையும் உறக்கமின்றி படுக்கையில் புறண்டுகொண்டே இருந்தான். அவனது ஆத்திரம் சற்று அடங்கித்தணிந்த பிறகு அந்தச் சம்பவத்தைப் பிரமாதம் என்றெண்ணுமல் சகஜம் என்பதாகக் கருதலானுன். அவன் மிகக் கேவலமான சூழ்ச்சி செய்தான். அதன்பலனுக மிகுந்த மன ஏக்கத்தையும், துக்கத்தையும் அனுபவித்தான். அவனது சூழ்ச்சி முடிந்துவிட்டதானுலும், மனவருத்தமும் ஏக்கமும் கலவரமும் அவனைவிட்டு அகன்ற பாடில்லை. அபாஞ்சிதத்தின் அன்றைய நிகழ்ச்சி அவளுடைய குணத்திற்குச் சற்றும் ஏற்றதன்று. அது அவனுக்குத் தெரியும். அவன் கலவரமடைந்தான்.

அடுத்த மாதத்தில் அறிவானந்தன் அபாஞ்சிதத்தை மணந்துகொண்டான். அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அழகும் மணமும் மிகுந்த ரோஜா மலரில் விரும்பப்படாததும் அருவருக்கத்தக்கதுமான முட்களிருப்பதுபோல அன்றையதினம் அவள் வேறொரு காதலனை முத்தமிட்ட விஷயம் அவனது மனதின் களிப்பைக் கெடுத்துக் கொண்டுவந்தது. சுக்கிலபட்சத்துச் சந்திரன் தினே தினே கலையிலும் ஒளியிலும் அழகிலும் விருத்தியடைவதே போன்று அறிவானந்தனுக்கு அபாஞ்சிதத்தினிடத்தில் அன்பும், காதலும், பிரேமையும் அதிகரித்துக்கொண்டே

வந்தன. இவைகள் எல்லாம் அவனுடைய மனத்தாங்கலை மட்டுப்படுத்தப் பயன்படவேயில்லை. அதுமட்டும் அவனுடைய மனத்தின் ஒருமூலையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அவனுக்கு அவள்மீது சந்தேகம்; அந்தச் சம்பவம் இன்னமும் நடந்துகொண்டுமிருக்கும் என்ற நம்பிக்கை உண்டு. தான் இல்லாதநேரத்தில் மறைவாக எப்பொழுதேனும் நடந்துவரும் என்பதாகவும் நம்பிக்கை கொண்டிருந்தான்.

கடைசியாக, இனியும் ஒரு க்ஷணங்கூட இந்த மன ஏக்கத்தை மூடிவைத்திருக்கச் சகிக்காமல் அந்த விஷயத்தை அவளிடம் சொல்லவும் துணிந்துவிட்டான். ஒருநாள் காலையில் சிற்றுண்டிகள் புசித்துக்கொண்டிருக்கும்போது திடீரென்று பின்வரும் விதம் கேட்கலானன்:—

'கண்ணே! ஏதோ ஒன்று இப்போதுதான் என் ஞாபகத்துக்கு வருகின்றது. ரொம்பநாளாக அதைக்குறித்து உன்னைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற யோசனை இருந்துவந்தது. ஆனல் சமயம் வாய்க்காமலேயே இருந்தது. அது சுத்த அசங்கியமானதேயாம். எனக்குத்தெரியும். ஒரு வேளை அதை உன்னிடம் சொன்னல் நீ நகைப்பாய் என்று ஒரு போக்காகச்சொல்லிக் காட்டினன்.

அதற்கு அவனது மனைவி 'நான் நகைக்கமாட்டேன், உறுதியாகக் கூறுகின்றேன். அது என்னவென்று என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று வணக்கத்துடன் கூறினள்.

'சரி, அன்றைய இரவு நாடகக்கொட்டகைக்கு நீயும் நானும் சுகுமாரனும் போனேமே உனக்குக் கவனத்திலிருக்கின்றதா' என்று கேட்டான்.

'ஆம் எனக்கு நன்ருகக் ஞாபகமிருக்கின்றது அந்த மாந்திரீகன் மகா சாமர்த்தியசாலி' என்ருள் அபாஞ்சிதம்.

அறிவானந்தன் சிறிதுநேரம் ஒன்றும் பேசாமல் அசந்து நின்றுவிட்டான். பிறகு அவன் தந்திரமாகத் தீர்மானித்த கேள்வியைக் கேட்கலானான். 'இருட்டில் உன்னை நான் முத்தமிட்டேனே உனக்குக் கவனமில்லையா?' என்று கேட்டான்.

அவன் கேட்ட கேள்வியினால் அவள் கல்வரத்தை யடைந்து முகத்தைச் சுளித்து மனவாட்டத்தை யடைவாள் என்பதாக எண்ணிக்கொண்டு அவளது முகத்தையே உற்று நோக்கியவண்ணமிருந்தான். அவளுடைய முகத்தில் ஒருவித குறிப்பும் தோன்றவில்லை. மனோவிகாரமும் ஒன்றும் காணப் படவில்லை. அவைகளுக்குப் பதிலாக அவள் மல்லிகை யரும் பனைய தந்த வரிசைகளைத் திறந்து புன்சிரிப்பு சிரித்தாள். 'ஆம் நாதா! நன்றாய்க் கவனமிருக்கின்றது. அன்று நீங்கள் எனக்களித்த முத்தம் மிக்க இனிமை பொருந்தியதாக விருந்தது' என்று சாந்தமாகப் பதில் மொழிந்தாள்.

அறிவானந்தன் காபியை ஸ்பூனினால் அளைந்தவண்ணம் சாதாரணப் பேச்சு வகையில் பேசத்தொடங்கினான். 'அந்த விஷயம் எனக்கு எவ்வளவு கலக்கத்தையுண்டுபண்ணிவிட்டது தெரியுமா?—சுகுமாரனல்லாது நான்தான் முத்தமிட்டது என்பது உனக்கு எப்படித்தெரிந்தது?' என்று கேட்கலானான்.

அவனது மனைவி பெருத்த நகை நகைத்தாள். 'இதை ஊகித்துக்கொள்ள முடியாதா! என்ன மதியீனம் உமக்கு' என்று களிப்பின் மிகுதியால் சொல்லிவிட்டாள்.

'என்னால் ஊகித்துணரும் சக்தி என்னிடமில்லை. எப்படி என்பதைச் சற்று தெரிவிப்பாய்' என்று மீண்டும் அவளைக் கேட்டான்.

'முதன்முதலில் எனக்கே கொஞ்சம் சந்தேகமாகத்தானிருந்தது. என்னை இருட்டில் முத்தமிட்டது தாங்கள்தானு அல்லது சுகுமாரர்தானு என்பது எனக்கும் புலப்படாமல் இருந்தது. இதை ஒத்துக்கொள்ளுகின்றேன். ஆனல் சுகுமாரருடைய முகம் நன்ருக க்ஷவரம் செய்யப்பட்ட முகமாயிற்றே. தங்களுடைய முகத்தில் அடர்ந்த மீசை வளர்ந்திருக்கின்றதே. இன்னமும் எனக்குச் சந்தேகமா. உமது முகத்தின் மீசையின் ஸ்பரிசம் எனக்குக் கிடைத்தபின்னும் உம்மை நான் உணராமலிருக்க முடியுமா' என்ருள்.

அறிவானந்தன் திடுக்கிட்டான். என்ன அறிவீனனுகவும் முட்டாளாகவும் இருந்தான்! அவனது அகக்கண்ணிற்கு எதிரில் அந்தச் சம்பவம் மீளவும் தோன்றிற்று. தான் அவளை முத்தமிட்டவுடனே அவள் எவ்விதம் விசையாகப் பின்னுக்கு முகத்தை இழுத்துக்கொண்டாளென்பதையும் மனதில் வருவித்துக்கொண்டான்.

'என்ன சந்தேகம்! நான் யாரையாவது முத்தமிட அனுமதி கொடுத்ததாக ஏதேனும் நினைக்கிறீர்களா என்ன? அவ்விதம் நான் செய்பவளேயல்ல என்பதை மனதிற் பதிய வைத்துக்கொள்ளுங்கள்' என்ருள்.

அறிவானந்தன் தன் பத்தரைமாற்றுத் தங்கமேயான அபரஞ்சிதத்தைக் கூர்ந்துபார்த்து 'கண்ணே! அவ்வாறு நான் நினைக்கவில்லை' என்று தான் நினைத்தது முழுமையும் தவறு என்று உணர்ந்து தன் மனைவி மற்றைய கன்னிகைகளைப் போன்றவளன்று என்று தெரிந்துகொண்டான். பின்னும் அவளைச் சந்தேகியாமல் சந்தோஷமாக அவளுடன் வாழ்ந்துவரலானுன்.

## ௰உ. முத்து நவமணிகள்

முத்தத்தின் மதிப்பு—நாடக முத்தம்—முத்தத்தின் விமர்சனம்—ஓர் அருமையான முறை—முத்தத்தின் விளையாட்டுக்கள்—முத்தத்தின் தனிமொழி—வேண்டாத முத்தம்—முத்தத்தின் மறுப்புகள்—கறுப்பாயி முத்தம்.

ஒரு சின்னஞ் சிறிய பள்ளிக்கூடத்துப் பெண்ணும் ஒரு வயோதிகக் கிழவியும் ஆகிய இவ்விருவர்களும் முத்தத்தின் மதிப்பு இன்னது என்று தெரிந்துகொள்ளமுடியாது என்ற அபிப்பிராயத்தைக்கொண்டிருக்கின்றார்கள். உண்மையிலேயே முத்தத்திற்குப் பெரிய மதிப்பு இருக்கின்றது. ஆடவர்களுடையவும் மகளிர்களுடையவும் ஜீவிய வாழ்க்கையையே மாற்றுந்தன்மையை முத்தங்கள் பெற்றிருக்கின்றன.

ஒரு முத்தத்தின் மதிப்பு இவ்வளவு தொகை என்பதாக அமெரிக்காவில் மதிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பாக ஒரு நடனமாது நூறு டாலர் பெற்றுக்கொண்டு ஒரு ஹிந்து ஆடவனை முத்தமிட்டனளாம். மாற்றும் விலையும் மதிக்கவொண்ணாத 'இந்த மணியை' சொற்பதொகையான நூறு டாலருக்கு விற்றதுகூட தேசாபிமானத்தாலே யொழிய வேறல்லவாம். அவ்விதம் முத்தத்தை விற்றுத் தான் பெற்ற அப்பணத்தை அப்படியே தென் ஆப்பிரிகா யுத்த நிதிக்கு அனுப்பிவிட்டாளாம்.

சமீபத்தில் நடந்த பெரிய யுத்தமான ஜர்மானியப் போர் நிமித்தம் ஆங்கிலேயர் நிதி சேர்த்தார்கள். அந்த நிதிக்கு ஏராளமான பொருளைப் பற்பல விதங்களில் வசூல் செய்தார்கள். மிக்க விந்தையான முறைகளிலும் தனம் சேகரித்தார்கள்.

ஓர் இடத்தில் ஓரிளமங்கை—மிக்க அழகும் உருவமைதியும் பெற்ற ஆரணங்கு—தன்னுடைய முத்தத்தை ஏலத்தில் விட்டு அதனால் கிடைக்கும் திரவியத்தை யுத்தநிதிக்கு உதவத் தீர்மானம் செய்துகொண்டு அவ்விதமே ஜனத்திரளைக் கூட்ட ஏற்பாடுகள் செய்தாள். யார் ஒருவர் அதிகமான பொருளைக் கொடுக்கின்றார்களோ அவர்களைத் தான் முத்தமிடுவதாகச் சொன்னாள். அங்கிருந்தவர்கள் அந்த அங்கனையைக்கண்டு அழகில் ஈடுபட்டு எந்தத் தொகையைக் கொடுத்தாயினும் அவளை முத்தமிடுவதே சரியென்பதாக முடிவுசெய்து கொண்டார்கள். ஏலத்தில் போட்டி அதிகரித்துக்கொண்டே யிருந்து பொருளும் ஏராளமாகிவிடும் போலிருந்தது. கடைசியாக முப்பது லக்ஷம் பவுன் என்பதாக ஏலம் முடிவு ஆகிவிட்டது. அவ்வளவு தொகையைக் கொடுத்த புண்ணியவானும் பாக்கியவானும் யாரோ அவரையாவது கண்டு சாந்தமடைவோம் என்பதாக அவ்வளவுபேரும் அம்மங்கையின் பக்கத்தே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிறிது நிமிஷ நேரத்திற்குள்ளாக ஒரு விருத்தாப்பியன் முதுகு கூனியும் வெள்ளிக்கதிர்போன்ற தலைமயிர் நரைத்தும், தலை ஆட்டங் கொடுத்தும் போயிருந்தவன்—அந்த ஏந்திழையை முத்தமிட்டான். சாதாரணமாக அம்மங்கையர் திலகம் அந்தத் தொண்டு கிழத்தைக் காணவும் விரும்பாள். அப்படிக்கிருக்க தன் தேசாபிமானத்தால் மனம் விரும்பாத செய்கையையும் செய்ய முன்வந்தாள். அந்த நற்குணத்தைக் கண்டு எல்லோரும் அவளைப் புகழ்ந்து போற்றினார்கள்.

அமெரிக்காவில் நியூயார்க் பட்டணத்தில் வசித்துவந்த மிக்க கீர்த்தியும் புகழும் சாமர்த்தியமும் பெற்ற நாடகாபிமானியுமான ஹில்லாரிபெல் என்னும் மேதாவி 'நாடகத்தில் முத்தம்' என்னும் விஷயத்தைக் குறித்து ஒரு பத்திரிகையில் பின்வரும் விதமாகக் கூறி யிருக்கின்றான் :—

"முத்தம் என்பது சந்தோஷகரத்தை யளிப்பதுடன் மிகுந்த திருப்தியையும் அளிக்கின்றது. அதை நன்ருக அனுபவித்தவர்கள் எல்லோரும் ஒரே மனதாக அதைச் சரிவர மன்மதனுடைய ஆதரவைப் பெற்றுச் செய்தால் அதுவே வாழ்க்கையின் இன்ப காரியமாகிவிடும். நல்ல வஸ்து உனக்கு எண்ணிக்கை யில்லாமல் கிடைக்கக்கூடும். ஆனல் ஒவ்வொருவனுக்கும் பத்து அல்லது நூறு இதழ்களை முத்தமிடும் பாக்கியம் கிடைத்திடாது. மிகச் சிலருக்கே அத்தகைய பாக்கியம் ஏற்படக்கூடும்.

பற்பல யுகங்களில் கண்டறிந்த ஞானங்களெல்லாம் சிற் சில வேளைகளில் முத்தத்தில் காணக் கிடைக்கும். எந்த இடத்தில் ஞானம் இருக்கின்றதோ அந்த இடத்தில் ஆனந்த மும் இருக்கின்றது. அதை யுணராதவர்கள் மதியீனர்களே யாவர்.

முத்தமிடப்படாத நாளெல்லாம் பிறவாத நாளே யாகும். அவ்வாழ்க்கை பயனற்றதே யாகும். மிக்க தரித் திரன் தன்னிடம் செல்வமும் அதன் பயனல் சௌக்கியமும் இல்லாதது கண்டு மிக்க தனவந்தனைக் காணவும் வெறுக் கின்ருன். அச்செல்வவந்தனைத் தனது ஜன்மப் பகைவனுகக் கருதுகின்ருன்; உலகத்திற்கே அவன் விரோதி யென்ப தாகக் கருதுகின்ருன். அதைப் போலவே முத்தம் இன்ன தென்றுணராத மங்கையர்கள் இதை இரகசியத்தில் உணர்ந்தோ என்னவோ அவர்கள் உலகத்தை வெறுத்து சற்றும் சந்தோஷமடையாமல் முத்தத்தின் செல்வத்தை யடைந்தவர்களைத் தங்கள் பகைவர்களாகப் பாவிக்கின்ருர் கள்.

முத்தம் எப்பொழுதும் இனிமையாகவே இருந்து கொண்டிருக்கும் என்று எண்ணிவிடக் கூடாது. முத்தத் தில் தேனீயின் கொட்டுதலும் தேனும் கலந்தவண்ணமிருக்

கும். காதலின் மனமார்ந்த காலப்போக்கு, விருத்தி யடையும் முத்தமே யாகும். ஓர் ஆடவன் ஒரு மங்கையைக் காதலிக்க விரும்பினால் அவன் சாதாரணமாக அவளுடைய கையைப் பிடித்து முத்தமிட ஆரம்பிக்கின்றான். உண்மையிலேயே கையை முத்தமிடுவ தென்பது குற்றமற்ற செய்கையே யாகும். அந்தக் கைமுத்தம் அவனுக்குத் திருப்தியை அளிப்பதில்லை. மெதுவாக அவளுடைய தேகத்தின் மேல் பாகத்தை முத்தமிட மிகவும் அவாவுறுகின்றான். இதைக் கண்டு அவள் முகமலர்ந்து தன் கையை இழுத்துக் கொண்டு பின் செல்கிறாள். அவ்வாறு தான் செய்வதைத் தப்பாக அவள் நினைக்கவில்லை. அதன் பிறகு அவன் அவளை அணுகி அவளுடைய மாங்கதுப்பனைய கன்னத்தில் ஒரு முத்தத்தைத் தான் கொடுக்க அனுமதி கொடுக்கும் படி வேண்டுகின்றான். அந்த மெத்தென்ற கன்னத்தில் தன்னுடைய ஒரு முத்தத்தை மட்டும் பதிய வைக்க மன்றாடுகின்றான். கேட்பதற்கு மிக்க லகுவான வேண்டுகோள் தான். ஒரு கன்னம் மட்டும் என்ன பாக்கியத்தைச் செய்ததோ; ஏன் இரண்டு கன்னங்களிலும் முத்தமிடக் கூடாது? அது மிக்க பட்சபாதமான காரியமாகும். ஒரு கண் வெண்ணெயும், ஒரு கண் சுண்ணும்புமா? கூடாது; இதிலும் ஓர வஞ்சனையா? இடது கன்னத்தினின்றும் வலது கன்னத்திற்குச் செல்லும் வழியில் காதலின் இனிய பவனம் இருக்கின்றது. அதைத் தாண்டி யல்லவா வலது கன்னத்திற்குச் செல்லவேண்டும். அந்தப் பவனத்தைக் கண்டதும் சிரம பரிகாரம் செய்து கொள்ள அமருகின்றான். முத்தங்களின் இருக்கையான இதழ்களில் தன்னுடைய முத்தத்தைப் பதிய வைக்கின்றான்.

ஒரு மங்கை தன்னுடைய இதழ்களை ஓர் ஆடவன் முத்தமளித்துக் கொள்ள கொடுத்ததன் பிறகு அவள் அவன்

கண்ணுக்கு அப்ஸரஸ் போலாகி விடுகின்றாள். அல்லது இகழப்பட்ட பிச்சைக்காரி போலும் ஆகிவிடுகின்றாள். உலக ஞானத்தைப் பூரணமாக அவள் பெற்றிருந்தால்தான் ஜய மடைய முடியும். மனித இயற்கையையும் சுபாவத்தையும் அவள் நன்றாக உணர்ந்திருந்தாலும் வெற்றி பெறுவாள். இல்லாவிட்டால் இந்தத் துறையில் நல்ல முடிவைப் பெற முடியாது. அவள் ஜயம் பெறுவதென்பது காதலனையும், அவனது நிலைமையையும், முத்தத்தையும் பொறுத்ததாக விருக்கும். அவன் தன் காதலியைப் போற்றியும், அல்லது திரஸ்கரித்தும் வரலாம். அவளைப் பூரணமாக நம்பி யிருக்கலாம். அல்லது நம்பாமலு மிருக்கலாம். அவளை நிழல் பின் தொடர்வது போல விட்டுப் பிரியாமலு மிருக்கலாம். அல்லது எப்பொழுதுமே ஒன்று சேராமல் பிரிந்துமிருக்கலாம்.

விவாகங்கள் முத்தத்தினுல் நடக்கப்படுகின்றன: அந்த முத்தமே விவாகத்தை விவாதத்தில் முடிக்கும். முத்தமே தான் ஒருவனைத் தூக்கு மரத்தோடு உறவாடச் செய்கின்றது. அதுவே தான் தன்னுடைய காதலியையும் தன்னையும் ஒன்று சேர்க்கும் தாலியை அறுக்கும் கத்தி போன்றது. இத்தகைய அருமையான சக்தியை முத்தம் பெற்றிருக்கின்றது.

ஆகவே, அபிவிருத்தி யடைந்து வரும் முத்த விளையாட்டு எவருக்குமே ஆபத்தை விளைவிக்கும் என்றாலும் அவ் விளையாட்டு அன்றைய தினம் விவாகமடைந்த மங்கையை ஒரு பொருட்டும் செய்யாது. ஏனென்றால் அன்றைய மாலையில் அவள் பள்ளியறைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு ஆயத்தமாக இருக்கின்றாளன்றோ?

ஆடவருடைய மனத்திற்கும் அரிவையருடைய மனத்திற்கும் பெருத்த வித்தியாசமிருக்கின்றது. முத்தங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும்போது அவள் அந்த

முத்தத்தை எந்த எண்ணங்கொண்டு ஏற்கின்றாளோ அதே எண்ணத்தை அவன் கொள்ளுகின்றானில்லை. அவள் தன் உணர்ச்சிகளினால் தூண்டப்படுகின்றாள். ஆனால் அவனோ மனக்கொதிப்பை அடைகின்றான். முதன் முதல் முத்தத்தை அவள் அனுபவிப்பதைப் பெருத்த காரியமாக பாவிக்கின்றாள். அவனுக்கு அதுதான் கடைசி யென்பதாகத் தோன்றுகிறது. மற்றவர்களிடமிருந்து அவள் அதை அனுபவித்திருந்தாலும் அவைகளை யெல்லாம் அவள் சீக்கிரத்தில் மறந்து விடும் சக்தியைப் பெற்றிருக்கிறாள். புதியதாக அனுபவிப்பது அவைகளைவிடச் சிறந்ததாக இருக்கும் என்றும் மற்றவர்களை விட அவன் சாமர்த்தியமாக முத்தமிடக் கூடியவன் என்றும் நம்புகின்றாள். ஆனால் அவனோ அதற்கு மாறாக அவன் முத்தமிட்ட பற்பல மங்கையர்களுடன் அவளையும் சேர்த்து விடுகின்றான். அவளது இதழ்களில் தனது முத்தத்தைப் பதிக்கும் வரையில் அவள் மற்றைய மங்கையரை விடச் சிறந்தவளாகவும் மேம்பாடு பெற்றவளாகவும் அவன் கண்ணுக்குத் தோன்றுகின்றாள்.

முத்தத்தின் நூதனமானதும் அருமையானதுமான முறை யொன்று இருக்கிறது. அதை விளக்க ஒரு படமும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அப்படத்தை ஜனங்கள் களிப்புடன் பார்த்து ஆனந்தமும் கொள்ளுகிறார்கள். அந்தப் படத்தில் மன்மதன் ஒரு பீப்பாயின் மீதமர்ந்து கொண்டு தன் கையில் ஒரு தட்டை யேந்தியும் தலையில் குல்லாய் தரித்துக் கொண்டு மிருக்கின்றான். அவ்வித கோலத்துடன் தன் முறையை எல்லோருக்கும் பிரசங்கஞ் செய்து கொண்டு மிருக்கின்றான். அவனது எதிரில் ஒல்லியாய் நீண்ட உருவம் பெற்ற வாலிபர்களும், சிறிய இடையையுடைய அரிவையர்களும் கூட்டமாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவன் முத்தமிடு

மங்கையின் முத்தம் :



"நீ என்னை முத்தமிடும்போது எல்லாம் பிரகாசமாகத் தோன்றுகின்றது உனது கைகள் என்னை அழுத்திக் கட்டிக் கொள்ளும் போது என்னை விட்டுவிட மாட்டாய் என்று தெரிந்து கொண்டதும் நான் மிக்க மகிழ்ச்சி கொண்டேன்"

மங்கையின் முத்தம் :



"என் செல்வமே! மரத்தின்மேல் ஊஞ்சலில் ஆடுவாய். காற்று வீசியடித்தால் ஊஞ்சலும் வேகமாக ஆடும். கிளை ஒடிந்து விடுமானல் உனக்குக் காயம் உண்டாகும், உன்னைப் பிடித்துக்கொள்ள எனக்கு இரண்டு கைகளிருக்கின்றன என்பதை மனதில் பதியவைப்பாய்"

வதற்குப் புதிய முறையைக் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்கிறான்.

அது பின்வருமாறு :—மைபோன்ற அமாவாசை கருக்கலுக்குக் கொஞ்சம் நிலாவைக் காட்டு. இதற்கு முன்பாக இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்துக்கொள். இரண்டு வலிவான கரங்களினால் ஒரு சிறிய மென்மையான கரத்தை அழுத்திக்கொள்ளுவாய். மெதுவாக இரண்டு சிட்டிகை ஆச்சரியத்தையும் அபிலாஷையையும் தூவுவாய். இவற்றோடு மதியீனத்தைப் பெருவாரியாகச் சேர்த்துக்கொள். ஒன்று அல்லது இரண்டு இரகசிய வார்த்தைகளை விட்டுக் கலக்குவாய். நிச்சப்தமான கிணற்றில் ஐந்தாறு பார்வைகளை விட்டுக் கரைப்பாய். சற்றுத் தியங்கியும் மயங்கியும், திமிறியும், அதிகமாக மனம் ஏற்று விரும்பியும் மலர்ந்த கன்னத்திலாவது அல்லது இரண்டு இதழ்களிலாவது முத்தத்தை வைத்துப் பதிப்பாய். சற்று ஈனஸ்வரத்தில் கத்தி, வாசனையிட்டு தானாகக் குளிர்ச்சியடைய அப்புறத்தே வைப்பாய். இந்த முறை மேற் கூறியவைகளில் பிசகாமலும் தவறுதலில்லாமலும் செய்யப்படுமாகில் உலகத்தில் எங்கும் இது ஜயமடையும். சீதோஷ்ண ஸ்திதியும், ஜாதி மதபேதமும் ஒன்றும் இதைப் பங்கப்படுத்தாது.

அமெரிக்காவில் வர்ஜினியாவின் கிழக்குப் பிரதேசத்தில் இப்பொழுதும் கூட ஆச்சரியமான ஒரு வழக்கம் இருந்து வருகின்றது. அது வெகு காலத்திலிருந்தே கையாளப்பட்டு வருகின்றதாம். ஷெப்பர்ட்ஸ் டவுன் (இடையர் பட்டணம்) என்ற விடத்தில் ஜனங்கள் அடிக்கடி வனபோஜனம் ஏற்பாடு செய்து விளையாடல்கள் புரிகின்றார்கள். அந்த விருந்துக்கு அழைப்புப் பத்திரங்களைப் பெற்றவர்கள் ஒரு கோழிக் குஞ்சையும் இன்னும் சில மரக்கறி பதார்த்தங்களையும் கொண்டு செல்வார்கள். கோழிக் கறியையும் மரக்கறி

யையும் இருபது அல்லது முப்பது காலன் பிடிக்கும் பெரிய கெட்டில்களில் போட்டு வெட்டவெளியில் அடுப்பின் மேலேற்றி பற்பல மணி நேரம் வரையிலும் சமைப்பார்கள். மிளகும் மற்ற வாசனைச் சரக்குகளையும் போட்டுக் கலக்கிறார்கள். சிறுமிகளும் சிறுவர்களும் வயது வித்தியாசமின்றி அந்தச் சாம்பாரைப் பெரிய கரண்டிகளால் கிளறுகின்றார்கள். அவ்விதம் கிளறிக் கொண்டே அந்தக் கெட்டிலைச் சுற்றி வருகின்றார்கள். ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தத்தம் கரண்டிகளால் கிளறிக்கொண்டு வருகிறார்கள். ஒரு சிறுமியின் கரண்டி மற்றொருவனுடைய கரண்டியின்பேரில் பட்டுச் சத்தத்தை யுண்டாக்கினால் அந்தச் சிறுவன் அந்தச் சிறுமியைப் பிடித்து முத்தமிடச் சுதந்தரம் பெற்றவனாகிறான். உண்மையிலேயே இந்த விளையாட்டில் சில்லரைச் சண்டைகளும் வேடிக்கைகளும் நிரம்பி யிருக்கின்றன. அதன்பிறகு அந்தச் சாம்பாரை அவர்களெல்லோரும் குடித்து விடுகின்றார்கள். அது மிக்க இனிமையும் சுவையும் பொருந்தியதென அவர்கள் யாவராலும் போற்றப்படுகிறது.

மற்றொரு முத்த விளையாட்டு இப்பொழுதும் வழக்கத்திலிருந்து வருகின்றதாம். சிறுமிகள் பலர் சேர்ந்து ஒரு சிறுவனை நடுவில் நிறுத்தி அவனைச் சுற்றிலும் வளைந்து கொண்டு பாடிக்கொண்டே நடந்து வருகின்றார்கள். அந்தப் பாட்டின் சாராம்சம் பின்வருமாறு :—

'வில்லியம் ராஜா. ஜேம்ஸ் அரசனின் குமாரன். அவன் நற்குலத் துதித்தவன். அவன் தன்னுடைய மார்பின்மேல் நட்சத்திரப் பதக்கத்தைத் தரித்துக்கொண் டிருந்தான். அப் பதக்கம் யுத்தத்தில் அவன் பெற்ற ஜயத்துக்கு அறிகுறியாக விருந்தது' என்று சிறுமிகள் பாடி வரும்போது நடுவில் நின்று கொண்டிருந்த சிறுவன் தான் விரும்பும் கன்னிகை யார் என்று யோசித்துக் கொண்டிருப்பதாகப் பாவனை.

அவ்விளைஞனுக்குப் புத்தி சொல்லிக் கொடுப்பதைப் போல அச்சிறுமிகள் பாட்டைப் பாடுகின்றார்கள்.

'கிழக்கில் பார்; இப்பொழுது மேற்கில் உன் பார்வையைச் செலுத்து; உன் மனம் விரும்பும் மங்கையை நீ தேர்ந்தெடுப்பாய்; உனக்கு உகந்தவள் இவ்விடமில்லாதிருந்தால் அதற்கு அடுத்தபடியில் நீ விரும்புபவளைத் தேர்ந்தெடு'

அதன் பிரகாரம் அவன் ஒரு மங்கையைத் தேர்ந்தெடுத்தான். அப்புறம் அப்பாட்டும் செல்கின்றது.

'கீழே விரிக்கப்பட்டுள்ள ரத்ன கம்பளத்தின் மேல் நீ முழந்தாளிடுவாய். தரையில் பசும்புல் முளைப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையாக நீ முழந்தாளிடுவாய். உன் மங்கைக்கு வந்தனஞ் செலுத்தி அவளது இதழை இனிமையாய் முத்தமிடுவாய். இப்போது நீ உன் காலை நீட்டி எழுந்திருக்க வேண்டும்.'

மற்றொரு விளையாட்டும் இருக்கின்றது. அதை 'ஊசியின் கண்' என்பதாகக் கூறுகின்றார்கள்.

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒவ்வொரு நாற்காலியின் மேல் நின்றுகொண்டு ஒருவர் கையை மற்றொருவர் நீட்டிப் பாலம்போல ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் மற்றவர்கள் ஜதை ஜதையாகச் சேர்ந்து அந்தப் பாலத்தின் மூலமாக நுழைந்து நுழைந்து வருகின்றார்கள். அவ்வாறு நுழைந்து வரும்போது பின்வரும் விதம் பாட்டைப் பாடிக் கொள்ளுகிறார்கள்.

"ஊசியின் கண் மிகச் சிறியதாக விருந்தாலும் மிக்க உண்மையா யிருக்கிறது. புன்முறுவல் பூக்கும் பல மங்கையர்களைப் பிடித்திருக்கின்றது. இப்பொழுது உன்னையும் பிடிக்கப் போகிறது. ஒன்றாகி விட்டது. இதோ இரண்டும்

ஆய்விட்டது இப்பொழுது உன்னையும் பிடித்துக் கொண்டு விட்டது."

'ஒன்றாகி விட்டது; இரண்டாகி விட்டது' என்று பாடிக்கொண்டு வரும்போது அந்தப் பாலம் அந்த ஜதை யைப் பிடித்து உடனே விட்டுவிடும். கடைசியாக, 'இப் பொழுது உன்னையும் பிடித்துக்கொண்டு விட்டது' என்று பாடும்போது அந்த ஜதையை அச்சிறுவனும் சிறுமியும் பிடித்து ஆலிங்கனம் செய்துகொண்டு முத்தமிடுவார்கள்.

முத்தமிடுவதைக் குறித்து ஒரு தனி மொழியும் இருக் கின்றதாம். அதைக் கூறுவாம்.

முத்தமிடுவதா அல்லது வேண்டாமா என்பதே கேள்வி? முத்தமிடாமல் விருப்பது சிறந்ததா; மற்று முத்தமின்னது என்பதையே யறியாத இரண்டு இதழ்களின் இம்சையைப் பொறுத்துக் கொண்டிருப்பதா—அல்லது முத்த முணா ராதவளைக் கையிலெடுத்து முத்தமிட்டு முடித்துவிடுவதா? முத்தமிட இன்னும் அதிகமாக முத்தமிட முத்தமிட்டுக் கொண்டே இதழ்களின் பசியை ஆற்று. முத்தமிடுங்கால் அல்லது இடப்படுங்கால் இதழ்கள் என்ன விதமாக ஆத்திரத் துடனிருக்கும்! அதைப்பெற ஒவ்வொருவரும் ஆசைகொள்ள வேண்டும். ஆம்; முத்தமிட விரும்பவேண்டும். முயற்சி செய்வாய். நான்கு இதழ்களில் அந்த முத்தம் என்னென்ன இனிமையான கனவுகளைக் காண்கின்றது. அந்த முத்தத் தின் தேனை முழுவதிலும் உறிஞ்சி விடுவதன் முன்னே சற்று தாமதிக்க வேண்டும்.

முத்தத்தை யார் விரும்பாமல் மறுப்பவர்கள்? சந்தர்ப் பம் வாய்த்தபோது முணுமுணுத்து திரஸ்கரிப்பார்கள்? பயங்காளி அச்சங்கொண்டு தன்னைக் கண்டு பிடிப்பார்களே யென்றும், அவளது தகப்பன் கோபிப்பானென்றும் அவ

ளது கணவன் பழிவாங்குவானே யென்றும் பயந்து அவஸ்தைக்குட் படுவான். முத்தமே நமக்குத் தைரியத்தையும் வல்லமையையும் கொடுக்கக் கூடியது. முதன் முதலில் நரம்புகள் அதன் அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டிருந்த போதிலும் எப்பொழுது அச்சு வார்ப்படமாகி நன்ருக விழுந்து விட்டதோ அப்பொழுதே சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் முத்தமிட வேண்டும்.

வேண்டாத முத்தம் என்பது எதுவென்ருல் உன்னை விரும்பாதவளை முத்தமிடாதே என்பதுவே. எவ்வளவு தான் ஒரு மங்கை அழகுள்ளவளா யிருந்தாலும் உனது முத்தத்தை விரும்பாதவளை நீயும் விரும்பக் கூடாது. அவ்விதம் நீ செய்தால் அது பல இன்னல்களைக் கொடுக்கும்.

முத்த மிடுவதில் சில மறுப்புகளும் உண்டு. அதாவது யாரை முத்தமிடக் கூடாது என்பதைக் கீழ் வருவன விளக்கும் :—

எல்லோரையும் நீ முத்தமிடக்கூடாது. முத்தமிடுங்கால் உட்கார்ந்துகொண்டு முத்தமிடாதே. ஆத்திரத்தோடிராதே. நாய்களையும் பூனைகளையும் முத்து கொடுக்காதே. ஒரு மங்கையின் முகம் முழுவதிலும் முத்தமிடாதே. முத்தமிடும்போது சத்தத்தை யுண்டாக்காதே. உனது இதழ்களை மடித்துக்கொண்டு அப்படியே வைத்திராதே. உறுமிக்கொண்டிராதே. அவளது கன்னங்களைக் கடித்திடாதே. அவளுடைய கால் கட்டை விரலை மிதித்திடாதே. நீ முத்தமிடுவது அதுதான் முதல்தடவை என்பதை அவள் உணராதிருக்கச் செய்துகொள்.

மொத்த மதிப்பையும் பெற்ற வஸ்து முத்தம் ஒன்றேயாகும். மனிதன் மற்றப் பொருள்களையும் பணம்கொடுத்துப்

பெறுகின்றான். அவைகளைப்பெற்றும் அந்த விலை அவைகளுக்கு அதிகந்தான் என்று எண்ணுகின்றான். முத்தத்தின் விஷயத்தில் அவ்விதமல்ல.

ரெயில்வே கம்பெனிக்காரர்கள் இருண்ட கணவாய்களை ஏற்படுத்தி அதனுள்ளே இருப்புப் பாதையுண்டாக்கியிருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு என்று சிலர் கருதுகிறார்கள். முக்கிய காரணமாக அவர்கள் காதலர்களின் நன்மைக்காக என்றும் கூறுகிறார்கள். காதலர்கள் அக்கணவாயைத் தங்களுடையதாகவே மதித்துப் பயன்படுத்திக் கொள்ளுவார்களாம்.

மாலையோ மிக்க ரம்மியமா யிருந்தது. அப்பொழுது மணி ஆறு இருக்கலாம். சூரியன் அஸ்தமித்து விட்டது. பூங்காவனத்தில் வெகுதூரம் சென்றுவிட்டேன். நடந்து சென்ற வழியில் நிழலும் அளவில் குறைந்துகொண்டே வந்தது. நான் தனிமையாக வழிநடந்தேன் என்று சொல்வதற்கில்லை. எனக்கு முன்னே ஒருருவம் சென்று கொண்டிருந்தது. அவ்வுருவம் கம்பீரமா யிருந்தது. அதன் முகத்தை நான் பார்த்தேனில்லை. வேடிக்கைக்காகவே அடிமேலடிவைத்து விரைவாக நடந்தேன். அவள் பயந்தவளாகத் தோற்றவில்லை. அவ்விதமிருந்தது எனக்கு மிக்க நல்லதாயிற்று. அவளைப் பின்னால் நெருங்கிவிட்டேன். ஆ! என்னவடிவம்! எவ்வளவு அழகு! இன்னும் கொஞ்சம் அணுகி அருகாமையில் காணவேண்டும் என்ற எண்ணம் என் பிடரியை உந்தித் தள்ளிற்று. இந்த எண்ணத்தை அடக்க என்னால் முடியவில்லை. எனது கைகள் அவளை அப்படியே சுற்றி ஆலிங்கனம் செய்துகொண்டன. ஆத்திரத்துடன் ஒரு முத்தம் கொடுத்தேன். அவள் விரைவாகத் திரும்பி என்னைப் பார்த்தாள். அவளது கண்களில் தீப்பொறிகள் கிளம்பின.

அவள் 'போம் ஐயா போம் மதியீனரே' என்று மொழிந்தாள். அவ்வார்த்தைகளைக் காதினால் கேட்டேன். அவளது கடும் பார்வையைக் கண்களினால் கண்டேன். அதை நான் சகிக்க முடியவில்லை. அமாவாசையைப் போன்ற ஒரு கறுப்பாயியை முத்தமிட்டு விட்டேன்.

## ௰௪. உலகத்தை மாற்றிய முத்தங்கள்.

சரித்திரங்களின் பரிதாபமான கதைகள்—முத்தம் என்பது என்ன—மஜூபாஹில் படையெழுச்சி—முத்தத்தின் மயக்கம்—நான் திருப்தியடைகிறேன் — கொலைத்தாகம் — இராச்சியத்தை ஆண்ட இரதிதேவி—

"முத்தம் அழிவற்றது. என்றும் சாசுவதமாய் விளங்குவது. இதழுக்கு இதழ் மாறி மாறி செல்லுகின்றது. யுகத்திற்கு யுகமும், வருஷத்துக்கு வருஷமும் தொடர்ச்சியாகச் சென்று கொண்டேயிருக்கிறது. அதைப் பிறருக்குக் கொடுக்கவும் இறக்கவுமே மனிதர்கள் அதைச் சேகரிக்கிறார்கள்" என்று நவீன நாகரிகமுள்ள இளைஞனொருவன் எழுதிப்போந்தான். அவன் லின்கான் என்னும் பட்டணத்தில் ஒரு குமாஸ்தாவாய் இருந்தான். அவனுக்கு வயது இருபதேயாம். தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துத் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்து விட்டான். அவன் தானாக எழுதியவையின் உண்மையைத் தானே உணர்ந்து கொண்டானோ என்பது சந்தேகமாக விருக்கின்றது.

நவீன யௌவன முள்ளவர் 'முத்தத்தில் என்ன இருக்கின்றது?' என்று கேள்வி கேட்கின்றனர். சரித்திரம் அக்கேள்விக்குச் சரியான பதிலை அளிக்கின்றது. பற்பல சந்தர்ப்பங்களில் உலகத்தையே தலை கீழாகப் புரட்டும் சக்தியை முத்தம் பெற்றிருந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன.

ஒரு முத்தத்திற்காக கிரீடங்கள் இழக்கப்பட்டன; சிம்மாசனங்கள் தவிடு பொடியாக்கப் பட்டன; யுத்தங்கள் நிகழ்ந்தன; ரத்தவெள்ளம் பிரவாகித்தது. இரண்டு ஜதை

யான இதழ்கள் ஒன்று சேர்ந்து சரித்திரப் புத்தகத்தின் புதிய அத்தியாயங்களை எழுதும் படியாகச் செய்து விட்டன. உலகத்தின் பெரிய நாடகங்களிலும் கூட ஆடவரும் மகளிரும் தத்தம் காதலை வெளிக்குக் காட்டிக் கொள்ளும் பல நிகழ்ச்சிகள் மலிந்து கிடக்கின்றன.

தென் ஆப்பிரிகாவின் சரித்திரத்தை மாற்றி விட்டது முத்தந்தான். ஒரு மங்கையின் முத்தத்திற்காக மஜூபாஹில் பாழடைந்து போயிற்று. அந்தச் சமயத்தில் ஆங்கில சேனை சின்னபின்னமாய்ச் சிதறியடிக்கப்பட்டு வீரர்கள் யாவரும் உயிரிழந்தனர். அந்த முத்தத்தை விரும்பாமலிருந்தால் அத்தனை வீரர்களின் உயிர் நாசமாகாமல் பாதுகாக்கப்படும். டிரான்ஸ்வால் பிரதேசம் ஆங்கிலேயர் வசத்தினின்றும் வெளி யேறியிராது; பலர் இறக்கும்படியாக நேர்ந்த இரண்டாம் போயர் யுத்தமும் நடவாமல் நின்று விட்டிருக்கலாம்.

மஜூபாஹில் படையெழுச்சியின் சரித்திரத்தின் கதாநாயகன் ஸர் ஜார்ஜ் கால்லி என்பவன். அவன் வெகு தீரமாகவும் திறமையாகவும் அந்தப் பட்டணத்தைத் தாக்கினன். எதிரி பக்கத்திய சேனையோ அளவிட முடியாதபடி அவ்வளவு அதிகமாக விருந்தது. கி. பி. 1881-ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 27-ந் தேதி யன்று தன்னுடைய இருநூறு வீரர்களடங்கிய மிகச் சிறிய சேனையோடு எதிர்த்தான். எதிரி சைன்னியம் தன்னையும் தன்னுடைய வீரர்களையும் சூழ்ந்து கொண்டு விட்டது. சேனவீரர்கள் உயிரைத் துறந்தார்கள். கால்லியும் சுட்டுக் கொல்லப்பட்டான்.

அட்மிரல் மார்க் என்னும் சேனதிபதி மற்றொரு பரிதாபகரமான சம்பவத்தை வெளி யிடுகிறான். தான் தன்னுடைய காதலியின் இன்ப சாகரத்தில் மயங்கிக் கிடந்த

போது தன் கடமையைத் தவிர்த்திருந்தபடியால் முற்று கைபோட்டிருந்த ஒரு பிரதேசத்திற்கு உதவிக்காகச் செல்லக் கட்டளை தனக்கு இருந்தும் அதைச் செய்யாமற் போனதனால் பல சேதங்கள் நேரிட்டன. காதலில் இறங்காமல் உடனே உதவிக்குச் சென்றிருப்பின் எவ்வளவோ ஆபத்தை விலக்கியிருக்கலாம். அப்பொழுதே செல்லாமற் போனதால் மூன்று வாரங்கள் பின்னால் போகவேண்டியதாயிற்று. அப்போது அட்மிரல்மார்க் கப்பற் தலைவனாக விருந்தான். தென் அமெரிக்காவின் சமுத்திரங்களில் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தான். மான்டிவிடோ என்னும் துறைமுகத்தில் கப்பல் அதிகாரிகள் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார்கள். கி. பி. 1881-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந்தேதி யன்று ஆங்கிலேய மந்திரி ஒரு விருந்து நடத்தினர். அதற்கு அவர்கள் அழைக்கப்பட்டிருந்ததற் கிணங்க வந்திருந்தார்கள். ஒரு அழகிய இளமங்கையும் அந்த விருந்துக்கு வந்திருந்தனள். அவளது சுந்தரத்தைக் கண்டு மதிமயங்கி அந்த மந்திரி காதல் கொண்டான். அவளை நெருங்கித் தான் அவள் மீது மையல் கொண்டுள்ள விஷயத்தைச் சொல்லும் சமயத்தில் ஒரு சேவகன் தந்தியொன்றை அவனிடம் நீட்டினன். அந்தத் தந்தியைச் சற்றும் கவனிக்காமல் தன் சட்டைப் பையில் போட்டு விட்டான். அவளும் அவன் மீது காதல்கொண்டிருந்த விஷயத்தைச் சொல்ல அவன் மனம் பூரித்துச் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்தான். தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதையும் மறந்துவிட்டான். தன் காதலியைத் தவிர வேறொன்றையும் அச் சமயத்தில் அவனது கண்கள் காணவில்லை; அவளுடைய இன் சொல்லைத் தவிர வேறொன்றையும் அவனது செவிகள் கேட்கவில்லை.

தந்திசமாசாரத்தை மறந்தே போய்விட்டான். அடுத்த நாள் அவனது சட்டைப்பையைத் தடவ அதில் தந்தியிருக்கக்

கண்டு அதைப் பிரித்துப் படித்தான். அந்தத்தந்தியில் மிக முக்கியமான விஷயம் இருந்தது. ஸர் ஜார்ஜ் கால்லிக்கு உதவியாக ஆயிரம் வீரர்களையும் எட்டு பீரங்கிகளையும் உடனே ஆயத்தப்படுத்திக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும் என்பதாகக் கண்டிருந்தது. உடனே துறைமுகத்திற்கு ஆளனுப்பிப் பார்க்க கப்பல் முன்னடியே புறப்பட்டுப் போய்விட்டது. ஒரு மங்கையின் முத்தத்தின் வசப்பட்டு மயங்கிக் கிடந்ததாலே பல சேனவீரர்கள் உயிரிழக்கவும் நாட்டை இழக்கவும் நேரிட்டது.

கெரோல் ராஜகுமாரன் ஒரு மங்கையின் முத்தங்களுக்காகத் தன்னுடைய சிம்மாசனத்தையும் தவிர்த்துவிட்டான். மாடம் லுபஸ்கு என்னும் மாதின் காதலுக்காகத் தன்னுடைய ராஜரீகத்தை ஒழித்தான். அம்மங்கையின் பொருட்டுத் தன்னுடைய உடல், பொருள், அந்தஸ்து எல்லாவற்றையும் நிராகரித்தான். அவனுக்கு ஏற்கனவே விவாகமான மனைவியுண்டு. அவளைவிட்டு அந்த வசீகரியாம் லுபஸ்குவின் மீது தணியாக் காதல்கொண்டு இருந்தான். சிலவருஷங்கள் சென்றதும் அவனது தகப்பன் அவனிடம் ஆட்களையனுப்பி லுபஸ்கு மாதை யொழித்தால் மீளவும் அவன் தன் ராஜ்யத்துக்குவந்து முடிசூட்டிக்கொள்ளலாகும் என்று தெரிவித்தான். இவ்வித ஏற்பாட்டுக்கு நீ உடன் படுவாயேல் உனது சர்வசுதந்தரங்களையும் நீ பெறலாகும் என்று அவனுக்கு அறிவித்தான். கெரோல் ராஜகுமாரன் இந்த வார்த்தைகளைக் கேட்டு நடப்பவனக இல்லை. இவ்வுலகத்தில் லுபஸ்கு மாதைத்தவிர வேறு எதையும் வேண்டினவனல்ல; அவளுடன் அமர்ந்திருப்பதுவே சக்ரவர்த்திப்பதவியென்றும் அவளிடம் தான் பெறும் காதற் சுகமே மோக்ஷத்துக்கும் மீசுரமானது என்றும் எண்ணங்கொண்டு ‘நான் அவ்விடம் வரமாட்டேன். என் மனமும் அதற்கு இடந்தராது.

என் உயிருக்கு உயிரானவளும், என் கண்ணிற்கு விழியானவளும், என் மன மோகனுகாரமுமான லுபஸ்குவை யும் நான் கூட அழைத்துக் கொண்டுவர அனுமதி யளிப்பீ ரானுல் தடையேதும் சொல்லாமல் உடனே வருகின்றேன்' என்பதாகப் பதில் கூறி அனுப்பிவிட்டான். மீண்டும் மீண் டும் அவனைப் பிரஜைகள் வேண்டினர்கள். அவர்களது வேண்டுகோளையும் அவன் நிராகரித்தான். 'நான் ருமீனி யாவுக்குத் திரும்பி வருவேனுனல் லுபஸ்கு தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுவாள். ஆகவே நான் அவ்விடம் வரமுடி யாது. இப்பொழுது இருக்கும் வண்ணமே நான் இருக்கின் றேன். இதுவே எனக்குத் திருப்தியை யளிக்கின்றது. இவ்வாறே என் காலத்தைக் கடத்துகின்றேன்' என்று உறுதியாகக் கூறிவிட்டான்.

முத்தத்தினுல் விளைந்த கெடுதிகள் அனந்தம். ரஷியா தேசத்துக் கோடீசுவரியான மேரியா டர்னேவாகி என்னும் ஏந்திழையாள் அவளுடைய பெற்றேரால் தனக்குப் பாட்ட ளுக இருக்கக்கூடிய வயோதிகமானவருக்குக் கலியாணம் செய்விக்கப்பட்டாள். அதனுல் அவளுடைய காதல் வாழ்க்கை அவமாகி விட்டது. ஒருவிதமான சுகத்தையும் அவள் அனுபவிக்காததால் ஏமாற்றத்தை அடைந்து திருப்தியற்று தன் நாயகனை வெறுக்கலானுள்.

ஓர் இரவு தன் நாயகன் ஒரு பெரிய விருந்து நடத்தி னன். அதற்கு அவனது நண்பர்களனைவரும் அழைக்கப் பட்டனர். அந்தச் சமயம் அவனுடைய அழகு மிக்க மனைவி அந்தக் கூட்டத்திலிருந்த அழகிய வாலிபனுடன் சேர்ந்து நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். தன் எதிரில் தன் மனைவி வேறெருவனுடன் காதல் விளையாட்டு ஆடிக்கொண் டிருப்ப தைக் கண்டு கோபங் கொண்டு பற்களை நறநற வென்று

கடித்தான். அக்கிழவனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு திண்டாட்டமாக இருந்ததோ அவ்வளவுக் கவ்வளவு அக்காதல் தம்பதிகளுக்குக் கொண்டாட்டமாக விருந்தது. அவனுக்குப் பின்னும் கோபம் மூண்டெழுந்தது. வேகமாகச் சென்று அவனுடைய மனைவியை இழுத்து, "அறிவில்லாத பேயே! என்ன காரியஞ் செய்தனை? கேவலமான பிறப்பையுடையவர்கள் கூட இந்தச் செய்கையைச் செய்ய மாட்டார்களே. நீ இவ்விதம் செய்வது சற்றும் அடுக்காது" என்று கூறினன்.

அதற்குப் பதிலாக அவள் ஒன்றும் சொல்லாமல் அவனது கையைப் பிடித்துத் தள்ளிவிட்டாள். அந்த யௌவன புருஷனை மீண்டும் தன் கைகளால் கழுத்தைச் சுற்றிக் கட்டிக்கொண்டு கனிவோடு முத்தங் கொடுத்தாள். அதைக் கண்ணுற்ற பிறகும் அவ்வயோதிகன் சகித்துக்கொண்டிருப்பானே? அந்தக் காக்ஷியொன்றே வலிவற்ற விருத்தியாப்பியனுக்கு மகத்தான வலிவைக் கொடுத்துவிட்டது. அவள் நினைத்த வண்ணம் அந்த முத்தம் ஆபத்தையே விளைவித்துவிட்டது. அவமானமும் கோபமும் பெற்ற பிரபு அந்த வாலிபனை வாட்போருக்கு அழைத்தான். அன்றைய இரவு நல்ல பூரண நிலவா யிருந்தபடியால் கிழவனும் குமரனும் வாட்போருக்கு எதிரெதிரே நின்றனர். கிழவன் மனக்கொதிப்புடனும் ஆவேசத்துடனும் இருந்தான். குமரன் காதலால் மனங்கலங்கி யிருந்தான். எனினும் அச்சமயம் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. கத்திகள் மின்னலைப் போலும் பிரகாசித்துக்கொண்டும் பேரிடிபோல சத்தம் செய்துகொண்டு மிருந்தன. முடிவும் தெரிந்துவிட்டது. விருத்தாப்பிய பிரபு இளைஞனுடைய இதயத்தில் தன் கத்தியை ஊடுருவிப் பாய்ச்சினன். குமரன் உயிர் துறந்தான்.

அந்த அழகி தன் காதலன் மடிந்து விழுந்திருப்பதைக் காண மிகவும் மனந்தாளாதவளாகி எந்த விதத்திலும் அக் கிழவனைக் கொலை செய்து பழி தீர்த்துக்கொள்வ தாகச் சபதம் செய்துகொண்டாள். தன்னுடைய எண்ணமெல்லாம் அவமானதைக்காண அவ்வயோதிகனை அவமானம் செய்யவும் மனந்துணிந்தாள். அவனைப் பலர் ஏளனஞ் செய்யும்படி வியாஜ்ஜியம் போட்டாள். தனக்கு நியாயம் வாதிக்க ஒரு நியாயவாதியைத் தேர்ந்தெடுத்தாள். அந்த நியாயவாதி அவளுடைய வழக்கின் நியாயத்தை வாதிக்காமல் அவளுடைய அழகின் மிகுதியினால் பாதிக்கப் பட்டான். அவனையும் தன் வலையில் சிக்கவைத்துக் கொண்டாள். அவளுடைய கனிவாய் இதழின் முத்தத்துக்கு ஏங்கி பரிதபித்துக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய மனைவியின் சேர்க்கையைத் தவிர்த்தான். அவளுடைய கூட்டுறவை விரும்பினான்.

குரங்கு ஒரு மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு அதன் மீது வெகுநேரம் தங்கியிருப்பதில்லை. ஒரு கிளையினின்றும் மற்றொரு கிளைக்குத் தாண்டும். மீண்டும் முதல் கிளைக்கே தாவும். இவ்விதமாக நிமிஷத்துக்கு நிமிஷம் சஞ்சல புத்தியும் நிலையில்லா எண்ணத்துடனும் இருக்கும். இஃது அதற்கு இயற்கையாம். அந்தக்குரங்கின் குணத்தைப்போல் டர்னோவாகியின் குணமும் ஒத்திருந்தது. நியாயவாதியைத் தற்சமயம் விட்டு வேறொரு தனவந்தனை அவள் நாடினாள். அவனிடமிருந்த செல்வத்தை யெல்லாம் தான் அபகரித்துக் கொண்டாள். அத்தனவந்தனை ஓட்டாண்டி யாக்கித் துரத்தியும் விட்டாள். தன் எண்ணம் நிறைவேறியதைக் கண்டு உவகை கொண்டு மீளவும் தன் நாட்டத்தை நியாயவாதியிடம் செலுத்தினாள்.

நியாயவாதி தன் காதலி தன்னை யடைந்ததும் மிக்க சந்தோஷப் பட்டான். அவளும் அவனும் ஆனந்தமாக

அமர்ந்திருக்கும் வேளையில் கிழவனைக் கொலை செய்யும்படி அவனை மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். அதற்கு அவன் அக்காரியத்தைச் செய்ய மறுத்துவிட்டதனால் அவள் அவனை விட்டொழித்தாள்.

அதன் பிறகு ஒரு நாடோடியைப் பிடித்தாள். பழி வாங்கும் குணம் அவனிடத்தில் அந்தச்சமயம் அளவு கடந்திருந்தபடியினால் அதைப் பூர்த்தி செய்பவனையே அவள் காதலிப்பாள். எனவே தன் காரியம் நிறைவேற கழுதையின் காலையும் பிடிப்பாள் போலும். அந்த நாடோடிக்கு அவள் முத்தமிடவே அவன் போதை மீறியவன்போல கதறிக் கொண்டு சமயம் பார்த்திருந்து கிழவனைக் குத்திக்கொன்று விட்டான். அப்பொழுதுதான் டர்ஞேவாகியின் அகம் குளிர்ந்து மனம் நிம்மதி யடைந்தது. முத்தம் என்னென்ன வேலைகளைச் செய்திருப்பதாகச் சரித்திரங்கள் வெளியிடுகின்றன.

தன்னுடைய முத்தங்களினால் ஒரு பெரிய இராஜ்யத்தை ஆண்ட அழகுவாய்ந்த மங்கையர் திலகம் லோலா மாண்டஸ் என்பவளே யாவள். அவள் ராஜப் பிரதிநிதியின் யானையின் பேரில் அமர்ந்து பவனி வருவாள். இவ்விதமாக அட்ட காசஞ் செய்து வருவாள். ஆகவே அவளது இறுமாப்பை அடக்கப் பலர் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தார்கள். அம் மங்கையை இவ்வளவுதூரம் உன்னதப் பதவியில் கொண்டு வந்ததற்கு பவேரியா அரசனை முதலாவது லூயிஸ் என்பவன் தான் முக்கிய காரணம். ஏனென்றால் லோலா அவனுக்குப் பிரதான காமக் கிழத்தி யாவாள். ஆகவே குடிகள் யாவரும் அவளை வெறுத்தார்கள். மந்திரிப் பிரதானிகளும் அவளை விரும்பாமல் ஒழிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பவேரியா குடிகளும் வீரர்களும் கலகம் செய்தார்கள்.

கொதித் தெழுந்தார்கள். அந்தக் கலகத்துக்குக் காரணம் லோலா மாண்டஸ் தான். லூயிஸ் அவளை விட்டொழிந்தால் தான் கலகம் தணிந்து முன்போல சமாதானம் ஏற்படும்.

இஃதுணர்ந்த மந்திரிப் பிரதானிகள் அரசரிடம் தெரிவித்தார்கள். தேசத்தைக் காக்கவும் குடிகளில் சமாதானத்தை உண்டாக்கவும் அரசன் ஓர் உடன்படிக்கையில் கையொப்பமிடவேண்டிய தாயிற்று. அந்த உடன்படிக்கையில் அரசன் லோலா மாண்டஸ்ஸை அறவே ஒழிக்க வேண்டும். அவளுக்கும் அரசனுக்கும் ஒருவித சம்பந்தமும் இருக்கக் கூடாது என்னும் விஷயங்கள் கண்டிருந்தன. அந்த உடன்படிக்கையில் அரசன் கையெழுத்துப் போட்டான். அதன்படியே நடந்துகொண்டான். கலகமும் தணிந்தது.

இவ்வாறாக வாழ்க்கையின் ஒவ்வொரு மார்க்கத்திலும் ஆடவர் மகளிரது முத்தத்திற்காகப் பொன்னையும் பூமியையும், உயிரையும் இழந்திருக்கின்றார்கள் என்பதற்குச் சரித்திரங்களே பெருத்த அத்தாட்சிகளாக விருக்கின்றன.

## ௫௫. அதிர்ஷ்டத்தையும் துரதிர்ஷ்டத்தையும் அளிக்கும் முத்தங்கள்.

*அதிர்ஷ்ட முத்தம்—மணக்கோலங் கண்ட முத்தம்—துரதிர்ஷ்ட முத்தம்—பிணக்கோலங் காட்டிய முத்தம்—பந்தய முத்தம் பாங்கான முத்தம்—அதிர்ஷ்டத்தின் அஸ்திவார முத்தம்.*

முத்தமே யொருவனுக்கு அதிர்ஷ்டத்தையும் துரதிர்ஷ்டத்தையும் அளிக்கவல்லது. அதை விளக்குவதற்குப் பல கதைகள்—உண்மையான சரித்திரங்கள்—வழங்கி வருகின்றன. வையோமிங் என்னும் சுரங்க பட்டணத்தில் ஒரு வாலிபன் தன்னந் தனியாய் கையில் ஒரு காசு மின்றி ஆகாரமு மில்லாமல் திரிந்துகொண் டிருந்தான். பட்டினியால் வருந்தி வாடினன். ஏதேனும் கூலிவேலை செய்து அதனல் கிடைக்கும் பொருளைக் கொண்டு வயிற்றின் கொடுமையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியும் ஒரு வேலையும் அவனுக்குக் கிடைக்கவில்லை. என்ன செய்வான், பாவம்!

ஒரு சாராயக் கடையினுள்ளே நுழைந்தான். அங்கு சிலர் பூராவாகக் குடித்து வெறிகொண்டிருந்தார்கள். அவர்களை யணுகி அவ்வாலிபன் தனக்கு ஒரு வேளை ஆகாரத்திற்காவது பணம் கொடுத்து உதவி செய்தால் அவர்களிடம் வேலையைச் செய்வதாகக் கூறினன். அதைக் கேட்ட அக் குடியர்களில் ஒருவன் அவ்வாலிபனிடம் அரை பவுன் நாணயம் ஒன்றை நீட்டி 'நீ இப்போது சொல்லியவிதம் நாங்கள் எந்த வேலை செய்யச் சொன்னலும் நீ செய்து தீர்க்கவேண்டும். அம்மாதிரியே நீயும் சற்றுமுன்னே சொல்லி யிருக்

கின்றாய். ஆகவே இந்த நாணயத்தைப் பெற்றுக்கொண்டு உன் பசிப்பிணியை முதலில் நிவர்த்தி செய்துகொள். அதற்குப் பிரதியாக இந்தக் கடைக்கு எதிரிலுள்ள பெரிய ஹோட்டலில் இன்று காலையில் வந்திறங்கி யிருக்கும் பெரிய் சுரங்க சொந்தக்காரனுடைய பெண்ணை நீ சென்று முத்தமிட்டு வரவேண்டும் தெரியுமா' என்று சொன்னான்.

பசி நோயினால் வருந்தும் இளைஞன் தான் செய்ய வேண்டிய காரியத்தை முதலில் நினைக்கவே யில்லை. எல்லாவற்றையும் மீறி வருத்தும் பசியைத் தீர்த்துக் கொள்ளப் பொன் நாணயத்தைப் பெற்றுக்கொண்டான். அவர்கள் குறித்த ஹோட்டலை நாடி இளைஞன் சென்றான். அவன் பின்னே அவர்களும் சென்றார்கள். சுரங்க சொந்தக்காரனின் மகள் மாடியின்மேல் நாற்காலியில் அமர்ந்துகொண்டு படித்துக் கொண்டிருந்தாள். வாலிபன் வேகமாகச் சென்று அவளை அணுகி ஒரு வார்த்தையும் பேசாது அவளை முத்தமிட்டு விட்டான்.

அகஸ்மாத்தாய் திடீரென்று ஓர் அயலான்—மிக்க தரித்திரன் முத்தமிட்டதை விரும்பாதவளாய்க் கூச்சலிட்டாள். என்ன ஆபத்தோ என்றெண்ணி அம்மங்கையின் தகப்பனார் ஓடோடியும் வந்து அயலானாகிய வாலிபனைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அந்த அறை அவனுக்குப் பலமாக விழுந்துவிட்டது. கிறுகிறென்று விழுந்தடித்துக் கொண்டு பத்துப் பன்னிரண்டடிக்கு அப்பால் போய் விழுந்தான். அங்கே கற்றூண் இருந்தபடியால் அதன்மேல் அவனுடைய தலை மோதிக்கொண்டு ரத்தம் பீறிட்டுக் கொண்டது. அதற்குள்ளாக அவ்வேலையைச் செய்யச் சொன்னவர்கள் தங்களுடைய வார்த்தையைக் கேட்டதன் பயனாக அநியாயமாக ஒருவன் இறக்க நேர்ந்திடும் போலிருக்கிறதே என்று மனத்தில் வருந்தி அப்பிரபுவை அணுகி விஷயத்தை விபரமாகச்

சொல்லி விட்டார்கள். அந்தப் பெண்ணும் அப்பிரபுவும் விஷயங்களை ஆவலுடன் கேட்டதும் விரைவாக அவ்வாலிபனிடம் சென்று அவனைத் தூக்கிக் கொண்டுபோய் நல்ல காற்றோட்டமுள்ள விடத்தில் படுக்க வைத்து சைத்தியோபசாரம் செய்து மீளவும் மூச்சு வரும்படிக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யலாயினர். வெகுநேரம் சென்று அவ்வாலிபனுக்குப் பிரக்ஞை வந்தது. அதன் பின்பே பெண்ணும் பிதாவும் நிம்மதியை யடைந்தனர். அவனது காயங்களெல்லாம் பூரணமாக ஆறிக் குணமடையவேண்டிய வைத்திய உதவிகளை யெல்லாம் அந்தப் பிரபுவே செய்து கொடுத்தான். நன்றாகத் தெளிந்தபின் அவ்வாலிபனைத் தன்னுடைய சுரங்க உத்தியோகசாலையில் ஒரு பெரிய உத்தியோகத்தில் அமர்த்திக் கொண்டான். அவ்விளைஞன் வேலையில் மிக்க சாமர்த்தியசாலியாகவும், யாவரையும் வசீகரிக்குந் தன்மையுள்ளவனாகவு மிருந்தான். அவனை எல்லோரும் விரும்பிப் போற்றினார்கள். இதை யறிந்த பிரபு அவ்விளைஞனை ஒரு சுரங்கத்திற்கே அதிபதியாக நியமித்து விட்டான்.

அவன் சுரங்கசாலைக்கு வந்த நாள்முதல் அதிகமான லாபம் கிடைக்கலாயிற்று. சொந்தக்காரனுக்கு இளைஞன் மீது மிகுந்த அன்பும் நன்மதிப்பும் ஏற்பட்டுவிட்டன. கடைசியில் தன் ஒரே ஒரு மகளை அவனுக்கு மனைவியாக்கிப் பார்க்கப் பெரிதும் விரும்பினான். தன் எண்ணப்படியே அவ்வாலிபனுக்குத் தன் பெண்மணியை விவாகஞ் செய்து கொடுத்துத் தன் ஆஸ்தி எல்லாவற்றையும் ஸ்ரீதனமாகக் கொடுத்துவிட்டான். அவன் முதல் முதலில் தனவந்தனது மகளை முத்தமிட்ட நேரம் நல்ல நேரமாக விருந்துவிட்டதோ என்னமோ அதே மங்கை அவ்வாலிபனுக்கு மனைவியாக வாய்த்துவிட்டது. விளையாட்டாகப் பசியைத் தீர்த்துக் கொள்ளப் பணம் உதவிய குடியர்களின் வாய் மொழியைக்

கேட்டு உடன்படிக்கையின்படி செய்தது உண்மையாகவே ஆகிவிட்டது.

மேற் கூறியதைவிட மிக்க ஆச்சரியகரமானதும் ஆபத்தை விளைவித்ததுமான முத்தமும் இருந்திருக்கின்றது. மேலே மணவினையை முத்தம் முடித்தது. பின்னால் சொல்லப் போவது சந்தோஷத்தை விளைவிக்காமல் பிணமாக்கி விட்டிருக்கின்றது. ஒரு சமயத்தில் ஆங்கிலேய பத்திரிகையில் ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பதாக வெளியிடப்பட்டிருக்கின்றது. அது பின்வருமாறு:—

லண்டன் பட்டணத்தில் வசித்துவந்த ஒருவன் ஒரு சாலையினூடே சென்றுகொண்டிருக்கும்போது ஒரு மங்கையைக் கண்டு அவளது கன்னத்தில் தன் முத்தத்தைப் பதித்தனன். பகிரங்கமான சாலையில் அத்தகைய செய்கையை அவன் செய்ததனால் அவன் குற்றவாளியென மதித்து மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் நிறுத்தப்பட்டான். அந்தச் சமயத்தில் அவன் தன்னுடைய செய்கையை நிலைநாட்டி அதற்குக் காரணமும் சொன்னான். நான்கு வருஷங்களுக்கு முன் தான் விரும்பி காதலித்திருந்தவள் அம்மங்கையென்ற எண்ணங் கொண்டதனால் அச்செய்கையைத் தான் செய்ய நேர்ந்தது என்று உரைத்தான். அக்காரணம் சரியானதாக மாஜிஸ்டிரேட்டுக்குப் புலப்படவில்லையாதலால் அவனுக்கு இரண்டு பவுன் அபராதம் விதித்தான்.

அந்த வர்த்தமானம் பத்திரிகையில் பிரசுரமாயிருந்தது. நியூஜீலண்டுக்கும் அப்பத்திரிகை சென்றது. அங்கு ஒரு பெருத்த தனவந்தனுடைய மனைவி அந்த பத்திரிகையைப் படிக்கலானாள். அவள் ஒரு சமயத்தில் லண்டன் பட்டணத்தில் அபராதம் விதிக்கப்பட்டவனைக் காதலித்திருந்தாள். ஆகவே, அவள் உடனே ஒரு கடிதம் வரைந்து தன் காதல

னைத் தன்னூருக்கு வரும்படியும் தன் கணவன் இறக்குந் தருணத்தி லிருப்பதால் அவன் இறந்ததும் தானும் அவனும் சுகமாக வாழலாம் என்றும் தெரிவித்தாள்.

அக்கடிதத்தைப் பெற்ற காதலன் பெரிதும் மகிழ்ச்சி யடைந்தான். பழந்தன மிழந்தன படைத்தவன் போலவும், மலடி மகப்பேறு பெற்றது போலவும் மட்டிற் கடங்கா களிப்பெய்தினன். உடனே நியூஜீலண்டுக்குப் புறப்பட்டுப் போனன். அங்குப் போய்ச் சேர்ந்ததும் அவன் கைது செய்யப்பட்டுச் சிறையி லடைக்கப் பட்டான். அவனது சந் தோஷமெல்லாம் துக்கமாக மாறியது. மின்னமைச் இடி இடித்துவிட்டது. அவனுக்கு ஒரு காரணமும் தெரியாது. அவன் காதலித்த மங்கை தன் புருஷனுக்கு விஷம் வைத்துக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அவளும் சிறையி லடைக்கப்பட்டாள் என்று பின்னர் தெரியவந்தது. அவள் எழுதி அனுப்பிய கடிதம் அக்காதலனுடைய பெட்டியி லிருந்ததைப் போலீஸ் கண்டு பிடித்து அவளுடைய குற் றத்தை ருஜுவாக்கி விட்டது. அவள் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு நீண்ட கால தண்டனையை அடைந்தாள். அவ்விஷயத்தைக் கேட்டதும் அக்காதலன் தன் கைத் துப் பாக்கியை எடுத்துத் தன்னைச் சுட்டுக்கொண்டு கீழே விழுந்து இறந்தான்.

பந்தயத்தின் பேரில் களவாடிய முத்தம் வேறு மாதிரி யான முடிவைத் தந்திருக்கின்றது. ஒரு வாலிபன் தன் வயதொத்தவர்களுடன் இரவெல்லாம் கண்விழித்து வீதிகள் தோறும் திரிந்துகொண் டிருந்தான். அவனோடு சேர்ந்தவர் கள் எல்லோரும் நல்ல நிலைமையிலும் நல்லொழுக்கத்திலும் பிறழ்ந்தவர்கள். வீதிகளிலுள்ள சாராயக் கடைகளில் புகுந்து குடித்தவண்ணம் சென்றனர். அதன் பயனக ஒவ்

வொருவனும் வாயில் வந்தபடியெல்லாம் உளறிக்கொண்டிருந் தார்கள். அந்த வாலிபன் தன் நேயர்களிடம் ஒரு பந்தயம் கட்டினான். அந்தப் பந்தயம் என்னவென்றால், அந்தப் பட்டணத்தின் முக்கியமான வீதியில் மறுநாள் காலை எட்டு மணிக்குச் சென்று கொண்டிருக்கும்போது தான் முதன் முதலில் காணும் மங்கையை முத்தமிடுவதாகக் கூறினான். அவ்விதம் தான் செய்யாவிட்டால் பத்து ரூபாய்களைக் கொடுப்பதாகச் சொன்னான். தான் கூறிய விதம் செய்து ஜயித்துவிட்டால் அவர்கள் தனக்குப் பத்து ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டான். அவ னுடைய நண்பர்களும் அந்தப் பந்தயத்திற்குச் சம்மதித்தார் கள்.

காலை எட்டுமணிக்குச் சரியாக அவன் தன் நண்பர்க ளுடன் பெரிய வீதி வழியாக நடந்துகொண் டிருக்கும் போது முதன் முதலாக ஓர் அழகிய இளமங்கையைத் தற் செயலாகக் கண்டான். கண்டதும் அவ்வாலிபன் தான் கட்டிய பந்தயத்தைக் கெலிக்கவேண்டுமே யென்ற எண்ணத் தைக் கொண்டவனா யிருந்தபடியினால் தான் முத்தங் கொடுத்த மங்கை யார் என்பதைத் தெரிந்து கொள்ளவு மில்லை. தெரிந்துகொள்ள விரும்பவுமில்லை. அவன் விரும் பியதெல்லாம் பந்தயப் பணமாகிய பத்துரூபாய் தான். அவ னது நண்பர்களும் ஒப்புக் கொண்டதற் கிணங்க பந்தயப் பணத்தை வாலிபனுக்குக் கொடுத்து விட்டார்கள். வாலி பன் அதை மிக்க மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டான்.

சிறிதுநேரங் கழித்ததும் தான் முத்தமிட்ட மங்கை தன்னுடைய யஜமானனுடைய மகள் யென்று அவ்வாலிபன் தெரிந்துகொண்டான். தெரிந்து கொண்டதும் அவன் வருத்தப்படலானான். தான் யஜமானத் துரோகியானதைக்

குறித்துப் பெரிதும் விசனப்பட்டான். 'உப்பிட்டவரை உயிருள்ள வரையிலும் நினைக்கவேண்டு மென்பார்களே! அன்னமிட்டவருக்கு இன்னல் செய்யலாமா? உண்ட வீட்டுக்கு இரண்டகம் எண்ணுவாரும் உண்டோ? ஐயோ என்ன பிழை செய்தேன்! இவ்வடாத செய்கைக்குக் கடவுளும் என்னை மன்னிப்பாரோ! ஐயோ என்ன செய்வேன் இதற்கு' என்று பரிதபித்தான். பிறகு ஒருவாறு மனந் தேறி தன்னைப் போஷிக்கும் யஜமானனிடம் சென்று தான் செய்த காரியத்தையும் அது செய்ய நேர்ந்த விதத்தையும் ஒன்றையும் விடாமல் உள்ளதை உள்ளபடியே சொல்லிவிட்டான். அதற்காகத் தான் மிகவும் வருந்துவதாகவும் அந்தத் துராக்ருதமான செய்கையைச் செய்த அதமாதமனை தன்னை எவ்விதத் தண்டனைக்குள்ளும் தாங்கள் செய்து கொள்ளலாம். அந்தத் தண்டனையை தான் ஏற்றுக் கொள்ளுவதாகக் கூறி மிக்க வணக்கமாகப் பணிந்து நின்றான்.

அந்த யஜமானன் இவைகளைக் கேட்டதும் அவ்வாலிபன் மீது கருணை கொண்டான். ஏனென்றால் அவன் உண்மையைச் சொன்னானன்றோ? மேலும் அவன் தன் செய்கைக்கு வருந்தி மன்னிப்பைக் கேட்க முன் வந்திருக்கின்றானல்லவா? மன்னிப்பை இறைஞ்சு வேண்டுவார்கட்கு உடனே மன்னிப்பைக் கொடுத்தலே முறைமை. அதுவுந் தவிர சரணம் என்று அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பதே ஆன்றோர்க்கழகு. ஆகவே அப்பிரபு அவனை மன்னித்து விட்டார் என்றாலும் அந்தப் பட்டணம் மிகப் பெரிதானபடியினாலும், உலைவாயை மூடினாலும் மூடலாம்; ஊர்வாயை மூட இயலாதென்னும் பழமொழிப்படி விஷயம் பகிரங்கமாகாதபடிச் செய்யத் தன் மனதிற்குள்ளேயே ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். அவ்வாலிபனைத் தன் வேலையினின்றும் நீக்கி வருவதல்லாமலும் அந்தப் பட்டணத்தை விட்டே

அகற்றிவிடத் தீர்மானங்கொண்டு தனக்கு நண்பரானவரும் தூரதேசத்திலிருப்பவருமான ஒருவருக்குச் சிபாரிசு கடிதம் கொடுத்து அவ்வாலிபனை அனுப்பி விட்டான். அந்த வாலிபன் அவ்விதம் மிக்க இலேசாகத் தன்னைத் தண்டித்ததற்கு மிகக் களிப்பெய்தி அடுத்த நிமிஷமே அவ்வூரை விட்டு வெளியேறி விட்டான்.

அந்தச் சிபாரிசு கடிதத்தில் அவ்வாலிபனது நற்குணத்தைக் குறித்தும் உண்மை பேசும் அரியகுணமும், உழைப்பும், நன்றியறிவும் மிகுதியுமுள்ளவன் என்பதாக எழுதப்பட்டிருந்ததால் உயரிய உத்தியோகத்தை அந்தத் தனவந்தன் கொடுத்ததுமன்றி, லாபத்தில் பங்காளியாகவும் சேர்த்துக் கொண்டான். சில வருஷகாலத்திற்குள்ளாக ஆயிரக்கணக்காகப் பணத்தைச் சேர்த்துக் கொண்டான். மேலும் சம்பாதித்துக் கொண்டே யிருந்தான். ஆனால் அவன் தான் முத்து கொடுத்த மங்கையை மணந்து கொண்டானில்லை. ஏனென்றால் அவனுக்கு உண்மையிலேயே அவள் மீது காதல் உண்டாகவில்லை. விளையாட்டுக்காகச் செய்த செய்கையாகும். ஆனபோதிலும், தரித்திர நிலைமையிலிருந்த அவ்வாலிபனுக்கு அவ்வளவு மகத்தான செல்வமும், அந்தஸ்தும் செல்வாக்கும் வந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தது மங்கையின் முத்தம்தான் என்பதை எவராவது மறுக்க முடியுமா? முடியவே முடியாது. முத்தமே அதிர்ஷ்டத்தை அளிக்கவல்லது என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

லண்டன்மா நகரத்தில் ஒரு வாலிபன் ஒருநாள் சுருட்டுக் கடைக்காரனுடைய புத்திரியுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தான். அவளிடமிருந்து சுருட்டு வாங்கிக் கொண்டுமிருந்தான். அந்த வாலிபன் சுருட்டைப் பெற்றுத் தன் வழியே செல்லாமல் திடீரென்று அம்மங்கையின் கொவ்வைக் கனியை நிகர்த்த இதழில் தன்னுடைய முத்தத்தைப்

பதிய வைத்தான். அம்மங்கை தேள் கொட்டியதுபோல வீறிட்டுக் கொண்டே அவ்வாலிபனது கன்னம் புளித்துப் போகும்படி பலமாக அறைந்தாள். அதற்குள்ளாக அவனுடைய தந்தையும் வெளியே வந்து வாலிபனை மேலும் அறைந்தான். அந்த வாலிபன் தான் செய்த செய்கைக்கு அவர்கள் அறைந்தது அதிகமான தண்டனையாகும் என்று எண்ணினன். ஆகவே அந்தச் சுருட்டுக் கடைக்காரன் பேரில் தாவா செய்தான். அந்நகரவாசிகள் எல்லாரும் வாலிபனைத் திட்டி ஏளனஞ் செய்தார்கள். அந்தப் பக்கத்தில் அவன் தலை காட்ட முடியாதபடி யாகிவிட்டது. கண்டவர் நகைக்கும்படியாக அவனுடைய நிலைமையாகி விட்டபடியால் தன்னுடைய ஊரைவிட்டுத் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நெட்டாலுக்கு ஓடிப்போனன். நெட்டாலுக்குச் சமீபத்தில் கிம்பர்லி என்னும் இடத்தில் நிலத்தை விலைக்கு வாங்கினன். சிறிது காலத்துக்குப் பிறகு அவன் வாங்கிய நிலத்திற்கருகே வைரக் கல் அகப்படுவதாகத் தெரிந்துகொண்டு ஒரு கம்பெனிக்காரர் அவனுடைய நிலத்தை அனேக ஆயிரம் பவுன் கொடுத்துப் பெற்றுக் கொண்டார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு அவ்வாலிபன் வேறு நிலத்தை விலை கொடுத்து வாங்கிக் கொண்டான். கொஞ்சகாலம் கழித்து அந்த இடத்தில் தங்கம் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதையும் ஒரு பெரிய கம்பெனிக்காரர் லக்ஷக்கணக்கான பவுன்களைக் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள். எனவே, அவ்வாலிபன் எந்த நிமிஷம் சுருட்டுக்கடைக்காரனுடைய காரிகையை முத்தமிட்டானே அந்த நிமிஷமே உடனே கைமேல் பலன் போல அறைகளை வாங்கிக்கொண்டான். அந்த அறைகளே அவனுடைய அதிர்ஷ்டத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டியது போலாயின.

## ௰௬. முத்த சரித்திர விமர்சனம்.

ஆதி சரித்திரம்—வந்தனக்குறி—மத சம்பந்தம்—பாரசீக முத்தம்—அபிவீனியந்து முத்தம்—இந்திய முத்தம்—கிறிஸ்தவாது முத்தம்—ஆச்சரியகரமான முத்தம்—மூக்கு முத்தம்—'வெள்ளையர் முத்தம்'—ருமேனியா முத்தம்—முத்தத்தால் தண்டனையும் அபராதமும்—

ஆங்கில பத்திரிகைளில் ஒன்றாகிய ஸிட்னி ஸன் என்னும் பத்திரிகையில் 'முத்தத்தின் சரித்திர விமர்சனம்' என்று தலையங்க மிடப்பட்ட ஒரு வியாசம் விவரமாக வெளியிடப்பட்டுள்ளது. அதன் சாரம்சத்தைக் கீழே சுருக்கமாகக் கூறுவோம்:—

பிரபஞ்சத்தின் கண் உணவு கொள்ளுவது என்பது எவ்விதம் இன்றியமையாத செய்கையாக ஏற்பட்டிருக்கின்றதோ அவ்விதம் முத்தமிடும் வழக்கம் என்பதும் சர்வ சாதாரணமான செய்கையாக வழங்கி வருகின்றது. அவ்வளவு பிரபலமாக ஒவ்வொருவரும் கையாண்டு வரும் முத்தத்தின் ஆதி சரித்திரம் எது? முதன் முதலில் முத்தமிட்டது யார்? என்னும் இவைகளைக் குறித்துத் தெரிந்து கொள்ள அவர்கள் முன் வந்திருப்பதாகக் காணப்படவில்லை.

எப்பொழுது கடவுள் ஆடவரையும் மகளிரையும் படைத்தனரோ அப்பொழுதே முத்தமும் சிருஷ்டிக்கப்பட்டது என்றுரைக்கலாம். எனவே, மனித உற்பத்தி சமயமே முத்தத்தின் உற்பத்தி என்று உள்ளங்கை நெல்லிக்கனி யெனப் புலனாகின்றது. ஆயினும் சிலர், முத்தம் என்பதை மிருகங்கள் ஒன்றுக்கொன்று கவ்விக் கடித்துக்கொண்டு களிப்படைவதிலிருந்து மனிதர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று அபிப்பிராயப்படுகின்றனர். மற்ற மிருகங்களுக்கு

இராத பகுத்தறிவு மனிதனுக்கு இருப்பதனால் கடிப்பதை விட்டு முத்தமிடுகின்றான் என்றும் கருதுகின்றனர்.

லோம்பிரோஸோ என்னும் புலவர்சிகாமணி முதன் முதலில் ஒரு தாய் தன் குழந்தையின் மீது தனக்குள்ள அன்பை, வாத்சல்யத்தை முத்தத்தினால் வெளியிட்டாள் என்பதாகக் கூறுகின்றான். பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் மனிதவர்க்கம் அநாகரிகத்தில் மூழ்கிக் கிடந்தது. காடுகளில் நிர்வாணமாகத் திரிந்து கந்த மூலங்களைத் தின்று காலங்கடத்தி வந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுக்குச் சமையல் செய்வது என்பதே தெரியாது. பாத்திரங்கள் இத்தகையன வென்பதும் அறியார்கள். ஆகவே தாகவிடாய் தீர்க்க மிருகங்களைப்போல நீர் நிலையுள்ள இடங்களில் சென்று வாயினால் நீரைப் பருகுவார்கள். தங்களுடைய குழந்தைகளுக்குத் தாய்மார்கள் அவ்விதம் பருகியதை உட்கொள்ளாமல் வைத்திருந்துத் தங்கள் குழந்தைகளின் வாயில் விடுவார்கள். அதைப் போலவே முத்தமும் தாயினிடமிருந்து குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்ததாம்.

ஒருவர்க்கொருவர் சந்தித்துக் கொள்ளும்போது வந்தனையாக முத்தமிட்டு வந்தார்கள் என்று சிலர் கூறுகின்றார்கள். முத்தத்தின் பூர்வோத்திரம் எதுவாக விருப்பினும் நாகரிகத் தேர்ச்சி யடைந்த எல்லாத் தேசங்களிலும்—என் மனித சஞ்சாரமிருக்கும் பிரதேசங்களிலெல்லாம்—இந்த முத்தமிடும் வழக்கம் இருந்து வருகின்றது. தாய் தந்தை சகோதரர் மற்ற உறவினருடைய முத்தங்களுக்கும் காதல காதலியருடைய முத்தங்கட்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. அந்த முத்தத்திற்கு ஒப்பும் உயர்வும் வேறு ஒன்றும் இவ்வுலகத்திலேயே கிடையாது என்று ஒரு மொழியில் கூறி விடலாம். அவர்கள் முத்தமிட்டுக் கொள்ளுவதால் தங்களுடைய அன்பை வெளிப்படுத்திக் கொள்கின்றார்கள். ஆதலால் முத்தம் என்பது காதலின் முத்திரையாகும்.

முத்தத்துக்குப் பற்பல விதமான பெயர்களும் வழங்கி வருகின்றனவாம். அவை பின் வருவன : 'காதல் நோய் அருமருந்து,' 'மன்மதனது முத்திரைக் கணையாழி,' காதலரது கூலி,' 'மகிழ்ச்சி

யின் ஆதியும் அந்தமும்,' 'இதழ்களின் கப்பம்,' 'காதலின் பிரதான குறி,' 'காதல் பாஷை,' 'காதலின் தங்கசாலே,' 'காதலின் முத்ராக்ஷசாலே,' 'மோக்ஷத்துக்கும் நரகத்துக்கும் செல்லும் நேர்ப் பாதை.'

முத்தத்தின் சக்தியை அளவிட முடியாது. அதன் அருமை பெருமையைக் குறித்துப் பாடியிராத கவிஞர் யார்? ஆயினும் உலகின் பல பாகங்களில் கையாளப்பட்டு வரும் இம் முத்தமிடும் வழக்கம் காதலேக் குறிப்பதாக மட்டும் இல்லே. அனுதாபம், நன்றி யறிதல், அடக்கம், வணக்கம், வஞ்சகம் இக்குணங்களேயும் வெளிக் காட்டி வந்திருக்கின்றதாகத் தெரிய வருகின்றது.

ஆதிகாலத்தில் முத்தத்தின் தத்துவம் மதசம்பந்தமாக விருந்தது. பண்டைக் காலத்தில் டியூடானியரும், யூதரும் தங்கள் அன்பையும் மரியாதையையும் முத்தத்தின் மூலமாக வெளிப்படுத்தி வந்தனர். அதாவது இக்காலத்தில் கை குலுக்கும் வழக்கம் இருந்து வருவதுபோல அக்காலத்தில் முத்தமிடும் வழக்கம் இருந்து வந்தது. முற்காலத்தில் அராபியர்கள் முத்தமிட்டே தங்கள் கடவுளேத் தொழுது வந்தார்கள். அக்காலத்திய அராபியர் காலேயிலெழுந்திருந்து சுத்தி செய்துகொண்டு தங்கள் தங்கள் வீடுகளிலிருக்கும் கடவுளது திருச்சின்னங்களே முத்தமிடுவார்களாம்.

பாரசீகர் முத்தத்தை ஒரு தேசீய வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தனர். ஹெரோ டொடஸ் என்பவர் பாரசீகர்களுடைய பழக்க வழக்கங்களேப் பற்றிக் கூறியிருப்பதாவது :—பாரசீகர் ஒருவரை யொருவர் சந்தித்தால் இருவரும் எத்தகையினர் என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். இருவரும் சம அந்தஸ்துள்ளவர்களாயிருந்தால் அவ்விருவரும் வாயை முத்தமிடுவார்களாம். ஒருவரைவிட மற்ருெருவர் தாழ்ந்தவரா யிருந்தால் கன்னத்தில் முத்தமிட்டுக் கொள்வார்களாம். மிகவும் அந்தஸ்தில் தாழ்ந்தவராயிருப்பாராளுல் அவர்கள் மேல் அந்தஸ்துள்ளவர்களது பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவார்களாம்.

அபிஸீனியர்கள் ஒருவர்க்கொருவர் அன்பைக் காட்டக் கீழே முழந்தாளிட்டுப் பூமியை முத்தமிடுவார்களாம். இந்தியாவில் பிறர் பாதங்களை முத்தமிடுதல் மரியாதையையும் பக்தியையும் காட்டும் ஓர் அறிகுறியாக இருக்கின்றது.

புராதன கிறிஸ்தவர்களில் முத்தமிடுவது என்பது ஞானனுமானதுக் குரியதாக விருந்தது. ஐந்தாவது நூற்றாண்டு வரையில் மாதா கோயில்களில் கூடும் கிறிஸ்தவர்கள் ஒருவரை யொருவர் முத்தமிட்டுக் கொள்வதுண்டாம். இவ்வழக்கம் இப்போதும் கூட கிரேக்க மாதா கோயில்களில் நடந்து வருகின்றதாம். சில மாதா கோயில்களில் கிறிஸ்தவர்கள் பாதிரிகளின் கைகளை முத்தமிட்டு வருகின்றனராம். இன்று வரையிலும் கூட நியாய சபைகளில் கிறிஸ்தவர்கள் பிரமாணம் செய்யும் போது வேதபுத்தகமாகிய பைபிலை முத்தமிட்டு வந்து கொண்டிருக்கிறார்கள்.

எஸ்கிமோ ஜாதியாரும், மடகாஸ்கர் தீவிலுள்ளவர்களும் டியிராடெல் பிஜோவிலுள்ளவர்களும் ஸவுத் சீ தீவிலுள்ளவர்களும் நம்மைப் போல காதலுணர்ச்சியை முத்தமிட்டுத் தெரிவித்துக் கொள்ளுவதில்லையாம். அவர்கள் மூக்குகளிலாவது, கன்னங்களிலாவது வாயை வைத்துத் தேய்க்கின்றனர். இல்லா விட்டால் புஜங்களிலாவது வயிற்றிலாவது நாக்கால் தொடுகின்றார்கள். அல்லது இருவரது வலது காதுகளை ஒன்றாக வைத்துத் தேய்த்துக் கொள்ளுகின்றனர். ஆனால் முத்தமிடுவது கிடையாது.

கிரீன்லாண்டு தீவிலுள்ளவர்களும் மலாய் நாட்டு வாசிகளும் முத்தத்துக்குப் பதிலாக மூக்கால் ஒரு மாதிரி வணங்குகின்றார்களாம். மலாய் நாட்டு முத்தத்தை டார்வின் என்பவர் பின்வரும் விதம் வர்ணிக்கின்றார். 'ஸ்த்ரீகள் தங்கள் முகங்களை மேலே உயர்த்திக் கொண்டு உட்கார்ந்தனர். எனக்கு சிச்ருஷை செய்தவர்கள் அவர்கள் மீது சாய்ந்து கொண்டு தங்கள் மூக்குகளை அவர்கள் மூக்குகள் மீது வைத்துத் தேய்க்கத் தொடங்கினர்.''

சீனதேசத்தவர்கள் வெள்ளையரின் முத்தத்தை நரமாமிச பக்ஷிணிகளின் வழக்கமென இழிவாக மதிக்கின்றனர் என்பதாக

ஹாவ்லெக் ஹெல்லிஸ் என்பார் வெகு விவரமாக வரைந்துள்ளார். பிரெஞ்சு குடியேற்ற நாடுகளிலுள்ள, சீனத்தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப் பயமுறுத்த வேண்டுமானால் 'வெள்ளையர் முத்தத்தைக் கொடுத்து விடுவேன்' என்கிறார்களாம். அழுது கொண்டிருக்கும் குழந்தையும் உடனே வாயை மூடி அழுவதை நிறுத்தி விடுமாம் குழந்தைகளும் அதை விரும்பாதென்பது புலனாகின்றதல்லவா?

ஜப்பான் தீவில் முத்தமிடும் வழக்கமே யில்லையாம். விவாகம் செய்து கொள்ளுவதற்கு முன்பாக காதல காதலியர் தத்தம் காதலை வெளிப்படுத்திக் கொள்வது கூட கிடையாதாம். இங்கிலாந்திலோ வெனின் முத்தம் என்பது பண்டைக் காலந்தொட்டு தொடர்ந்து வருகின்றது. அங்கு ஒருவரை யொருவர் மரியாதையாக வரவேற்பது முத்தமிடுவதன் மூலமாகத்தானாம். அதைக் குறித்து சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு முன்னர் ஒரு கிரேக்க தேசசஞ்சாரி எழுதியிருப்பது பின் வருமாறு :—ஒருவன் தன் நண்பனுடைய வீட்டிற்கு விஜயம் செய்தால் அவன் முதன் முதலில் செய்யும் காரிய மென்ன வென்றால் நண்பனுடைய மனைவியை முத்தமிடுவானாம். அதன் பின்னரே விருந்தாளியாகின்றான் :

ருமேனியா தேசத்தில் வருஷா வருஷம் முத்தமிடும் திருவிழா ஒன்று ஹெல்மாகேன் என்னும் பட்டணத்தில் நடக்கின்றது. இவ்விழாவின் பொழுது புதிதாக மணம் முடித்த பெண்கள் தங்கள் கைகளில் சாராய ஜாடிகளை வைத்துக் கொண்டு தங்கள் மாமியாருடன் கூடியிருந்து தங்கள் பக்கமாகச் செல்வோர்களை யெல்லாம் முத்தமிடுவார்கள்.

தங்கள் கணவன்மார் சண்டை போடுவதை நிறுத்தும் வரையில் தாங்கள் அவர்களை முத்தமிடுவதில்லை என முடிவுசெய்து ஏதென்ஸ் மாதர்கள் ஒரு யுத்தத்தை நிறுத்தி விட்டார்கள். முத்தம் ஒரு யுத்தத்தை உண்டாக்கக் காரணமாயிருந்தது. அந்த முத்தமே ஒரு யுத்தத்தை நிறுத்தவும் காரணமாக விருந்தது.

கள்ளத்தனமாக ஒரு மங்கையை முத்தமிட்டதற்காக எண்ணிலாத பேர் சிறை புகுந்தும் அபராதம் விதிக்கப்பட்டும் இருக்கின்றார்

கள். பம்பாய் நகரத்தில் பெயர் போன கண் வயித்தியர் டாக்டர் பார்டன் என்பவர் ஒரு மங்கையை அவளது உத்தரவின்றி முத்த மிட்டதனால் மூன்றுமாதம் சிறைத்தண்டனையும் ஆயிர ரூபாய் அபாரதமும் விதிக்கப்பட்டிருக்கின்றார். அதன் விவரம் பின் வருமாறு :—

அழகும் யௌவனமும் மிகுந்து இருபது வயதுள்ள அமீபாய் கர்கரியா என்னும் பார்ஸீ மங்கை கண் வைத்தியத்திற்காக டாக்டர் பார்டனிடம் ஒரு நாள் சென்றாள். அவள் தனியாகவே சென்றாள். அவளுடன் வேறு துணையொருவரும் இல்லை. மங்கையர் துணையின்றி வெளிச்செல்வதால் பல இன்னல்கள் விளைகின்றன. அதற்குப் பல அத்தாட்சிகளைத் தினமும் நாம் பத்திரிகைகளில் படிக்கின்றோம். பலர் தமது அனுபவங்களைச் சொல்லக்கேட்கின்றோம்.

நிற்க, டாக்டர், கர்கரியாவின் எழிலையும் தனிமையையும் உணர்ந்து அவள் மீது ஆசை கொண்டான். அவளது கண்ணைப் பரிசோதித்த பின் அம்மங்கையின் கையைப் பிடித்துக்கொண்டே தன்னிடத்தில் பல மாதிரியான தங்கமோதிரங்களும் வைர மோதிரங்களும் இருக்கின்றதாகச் சொன்னான். அவள் அந்தச் சமயத்தில் சற்றும் அவனது செய்கையை விரும்பாமல் திமிறிக் கொண்டாள். அந்த அவசரத்தில் டாக்டர் மங்கையை முத்தமிட்டுவிட்டார். அந்தச் செய்கையை அவன் கள்ளத்தனமாக அயோக்கியத் தனமாகச் செய்து விட்டதனால் நாகம்போலச் சீறி ஓவென்று கத்தி அண்டை அயலிலுள்ளவர்களை யெல்லாம் ஒன்றுகச் சேர்த்து அவன் முத்தமிட்ட விஷயத்தைச் சொல்லி நேராகத் தன் வீட்டுக்குவந்து சகோதரரிடத்தும் தாயிடத்தும் சொல்லிப் போலீஸில் பிராது செய்தாள். அந்தக் கேஸில் பல சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பின்னர், மாஜிஸ்டிரேட் அந்த டாக்டரின் செய்கையைக் கண்டித்து அவன் செய்தது மிகுந்த அக்கிரமமான செயல் என்றும் பல பொது ஜனங்கள் முழு நம்பிக்கை கொண்டிருக்கும் படியான ஒரு வைத்தியர் எவ்வளவு கௌரவமும் மேலான ஒழுக்கமும் உடையவராக விருக்கவேண்டும். அப்படிக் கில்லாமல்

சுத்த அயோக்கியர்களும் கயவர்களும் செய்யும்படியான ஒழுக்க மற்றதைச் செய்தார் என்பதை ஆலோசித்து மற்ற வைத்தியர்களும் அம்மாதிரியான அக்கிரமங்களுக்கு ஆளாகாமலிருக்கவும் அவர் களுக்கு அறிவுறுத்தவும் அந்தப் பார்டன் என்னும் வைத்தியருக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறினால் இன்னும் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனையும் அதிகமாக விதித்தார்.

தற்கால விஞ்ஞான சாஸ்திரிகள் முத்தத்தை ஆட்சேபித்து வந்தாலும் முத்தத்தை நிறுத்தும் சங்கங்கள் ஏற்பட்டு வந்தபோதி லும், ருஷிய சுகாதார சங்கத்தால் முத்தமிடுதலைத் தடுத்திருந்த போதிலும் உலகத்திலுள்ள காதல காதலியர்கள் ஒருவரை யொரு வர் முத்தமிட்டுக் கொண்டுதானிருப்பார்கள். அதை மாற்றவும் விரும்பார்கள். சூரிய சந்திரர்கள் பிரகாசத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் வரையிலும், கடல் நீருள்ள வரையிலும், பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டே இரவையும் பகலையும் உண் டாக்கிக் கொண்டு வருகின்றவரையிலும் மனித சிருஷ்டி இப்பிர பஞ்சத்தின் கண் தோன்றி யிருக்கின்றவரையிலும் இந்த முத்தம் என்பதும் கூடவே யிருக்கும். அதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

# இரண்டாம் பாகம்



லீலா விநோத ஸ்ரீ கிருஷ்ணன்



## டீஎ. ராதா கிருஷ்ணன்.

---

ஸ்ரீ கிருஷ்ணனது திவ்விய சரித்திராம்ருதத்தைப் பருகாதவர்கள் இப்புவியிலேயே இருக்கமுடியாது. சித்திரம் எழுதுவதில் திறமையும் வேலைப்பாடும் பெற்ற ஓவியக்காரர்களும் தங்களுடைய சித்திரங்களுக்குக் கிருஷ்ணனையே பிரதானமாகக்கொண்டு பலதிறப்பட்டச் சித்திரங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். ராஜா ரவிவர்மாவின் ஓவியத்தின் சிறப்பையும் அழகையும் மேம்பாட்டையும் குறித்து நமது ஆயுட்கால முழுமையும் பேசிக்கொண்டிருந்தாலும் நமது ஆவல் அடங்காது என்று சொல்லினும் பொருந்தும்.

ஸ்ரீ கிருஷ்ணன் மகாவிஷ்ணுவின் அவதாரம். கிருஷ்ணவதாரத்தைப் பூர்ணவதாரம் என்பதாகக் கூறுவர். மற்ற அவதாரங்களைவிட கிருஷ்ணவதாரம் பலவாற்றாலும் சிறந்ததாகவும் கூறுவார்கள். அதற்குப் பல காரணங்களையும் ஆதாரங்களையும் சொல்லுவார்கள். அவைகளைக் குறித்துப் பேசுவது நமது வேலையல்ல. அதை விவரிப்பதாகவிருந்தால் நாம் எடுத்துக்கொண்ட விஷயம் தடங்கலைப் பெறும். ஆகவே நமது தற்கால நோக்கத்தை முதலில் பூர்த்திசெய்து கொள்வோமாக.

ஸ்ரீ கிருஷ்ணன் காயாம்பூ மேனியர்; கார்முகில் வண்ணர்; மாதுளம் பூவணைய செய்யவிதழ் பெற்றவர்; கமலக் கண்ணனர்; சர்வாபரணலங்கிருதர்; பீதாம்பரதாரி; வேணுகானப்பிரியர்; லீலாவினோதர்; சற்குண சம்பன்னர்; சாதுர்ய வாக் விலாஸர். அவரைக் கண்டமாத்திரத்தில் மங்கையர் அவரை அடையவிரும்பிச் சொக்கிச் சோர்ந்து போவார்கள் என்பது மிகையாகாது.

ஆனிரைமேய்த்து வீட்டுக்குத் திரும்பிவரும் கண்ணனைக் கண்டு கன்னியர்கள் காமுறுவார்கள். சதாசர்வகாலமும் குழலூதி கானம் எழுப்பிவரும் கோவிந்தன் வருகின்ற கூட்டத்தைக்கண்டு 'மழைகொலோ வருகின்றதென்று சொல்லி மங்கைமார் சாலேக வாசல்பற்றி நுழைவனர் நிற்பனராகி யெங்கும் உள்ளம் விட்டுண்மறந்தொழிந்தனரே.' வீட்டினுள்ளே புகுகின்ற கன்னியர்களும் சற்றுநின்று தங்கள் மனத்தைக் கொள்ளைகொண்ட கோவிந்தனைப் பார்த்த வண்ணமாகத் தங்கள் ஆகாரத்தையும் மறந்துவிட்டார்கள். அவ்விதம் கண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கும் பெண் தன்னுடைய தோழியைக் கூப்பிட்டு அக்காட்சியைக் காணச் செய்து தன்னுடைய அனுபவத்தையும் கூறியிருக்கின்றாள்.

"குன்றெடுத் தானிரைகாத்த பிரான்கோபாலனாய்க் குழலூதியூதி
கன்றுகள் மேய்த்துத் தன்றோழரோடு கலந்துடன் வருவானைத் [தெருவில் கண்டு
என்றுமிவனை யொப்பாரை நங்காய் கண்டறியே னேடிவந்து [காணாய்
ஒன்றுநில்லாவளை கழன்று துகிலேந்திள முலையு மென்வச மல்லவே."

கோவர்த்தன கிரியைத் தன் சிறுவிரலால் தூக்கிக் குடைபோல பிடித்து ஆனிரையைக்காத்த ஸ்ரீ கண்ணபிரான் புல்லாங்குழலை யூதித் தன்னுடைய நண்பர்களுடன் தெருவினூடே வந்துகொண்டிருப்பதைக் கண்ட ஒருமங்கை அத்தகைய அழகனைத் தான் அதுவரையிலும் கண்டதில்லை என்று ஆச்சரியப்பட்டுத் தன்னுடைய தோழியை விரைவினில் கூப்பிட்டுக் காணச்செய்தாள். அம்மங்கை கண்ணனது அழகில் ஈடுபட்டு அவனிடம் காதல்கொண்டாள். அதுகாறும் மிக்க அழுத்தமாயிருந்த அவளுடைய கைவளையல் நெகிழ்ந்து முழங்கையுடன் உறவாடத் தலைப்பட்டது. அவளது இளமை வாய்ந்த தனங்கள் அவளது வசத்திலில்லை.

மற்றொரு சமயத்தில், ஒரு அன்னை தன்னுடைய ஏக புத்திரி மணிவண்ணன்மீது மாலுறுகின்ற கோலத்தைக் கூறியிருக்கின்றாள். எனது அருமருந்தன்ன மகள் ஸ்நானஞ் செய்யாமல் உடம்பு புழுதிபடிந்து வார்த்தையும் சொல்லாமலிருக்கின்றாள். தன்னுடைய ஆடை சோர்ந்து அவிழ்ந்து கிடப்பதையும் கவனியாதிருக்கின்றாள். இன்னும் இவளுக்கு வயதோ சரியாக ஆகவில்லை. வாயில் பற்கள் இன்னும் எழுந்தில; முன் மயிரும் சரியாகக் கூடவில்லை; சகவாச தோஷத்தினால் சில தோழிகளுடன் சேர்ந்து மாயன் மாமணி வண்ணன் மேலிவள் மாலுறுகின்றாளே! இவளுக்கோ கொங்கையின்னம் குவிந்தெழுந்தில. அப்படியிருக்கக் கோவிந்தன் இவளை ஆட்கொள்ளுவான் என்பதே எனக்குப் பெருஞ் சந்தேகமாக என் மனத்தை உளுப்பிக் கொண்டிருக்கின்றது. என் செய்வேன்!

"ஏழைபேதையோர் பாலகன்வந் தென்பெண் மகளையெள்கித்
தோழிமார் பலர்கொண்டுபோய்ச் செய்தகுட்சியை யார்க்குரைக்
ஆழியானென்னு மாழமோழையிற் பாய்ச்சி யகப்படுத்தி [கேன்!
மூழையுப்பறியாத தென்னுமூதுரையு மிலளே.

நாடுமூருமறியவே போய்நல்ல துழாயலங்கல்
சூடிநாரணன் போமிடமெல்லாஞ் சோதித்துழி தருகின்றாள்
கேடுவேண்டுகின்றார் பலருளர் கேசவனோடிவளைப்
பாடுகாவலிடுமி னென்றென் றுபார் தடுமாறினதே.

பேசவுந் தரியாதபெண்மையிற் பேதையேன் பேதையிவள்
கூசமின்றி நின்றார் கடம் மெதிர் கோலகழிந்தான் மூழையாய்க்
கேசவாவென்றுங் கேடிலீயென்றுங் கிஞ்சுகவாய்மொழியாள்
வாசவார் குழன்மங்கைமீர்! இவள் மாலுறுகின்றாளே.

காறைபூணுங் கண்ணாடி காணுந் தன்கையில் வளைகுலுக்கும்
கூறையுடுக்கு மயர்க்குந்தன் கொவ்வைச் செவ்வாய்திருத்தும்
தேறித்தேறி நின்றாயிரம் பேர்த்தேவன் றிறம்பிதற்றும்
மாறில் மாமணிவண்ணன் மேலிவள் மாலுறுகின்றாளே

கைத்தலத்திலுள்ள மாடழியக் கண்ணாலங்கள் செய்திவளை
வைத்து வைத்துக்கொண்டென்ன வாணிப நம்மைவடுப்படுக்கும்
செய்த்தலை யெழுநாற்றுப்போலவன் செய்வனசெய்துகொள்ள
மைத்தட முகில்வண்ணன் பக்கல் வளரவிடுமின்களே.

பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து பேணி நம்மில்லத்துள்ளே
இருத்துவானெண்ணி நாமிருக்க விவளுமொன்றெண்ணுகின்றாள்
மருத்துவப்பத நீங்கினாளென்னும் வார்த்தை படுவதன்முன்
ஒருப்படுத்திடு மினிவளை யுலகளந்தானிடைக்கே.”

என்று தன் மகள் மணிவண்ணனிடத்திற் கொண்டுள்ள காதலின் திறத்தைச் சொல்லி அதைத்தான் தடுக்கமுடியாத நிலைமையி லிருப்பதையும் வெளிப்படுத்திவிட்டாள். ஞாலமுற்று முண்டு ஆலிலைத்துயிலும் நாராயணனுக்கே இவள் மாலதாகி மகிழட்டும் என்றுரைத்து அவ்விதமே செய்தனள்.

இவ்விதமாக ஸ்ரீ கிருஷ்ணன் தன்பார்வைக்குள் சிக்கிய மங்கையர்களைக்காதல் வயப்படுத்தி அவஸ்தைக்குட்படுத்திச் சிலகாலந் துன்புறுத்திப் பின்னர் சந்தோஷத்தை அளித்து வருவானாயினான். கிருஷ்ணனுக்குப் பட்டமகிஷிகள் இருவர். அவர்கள் ருக்மினியும் ராதையுமாவார்கள். ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்குப் பத்தினிகள் ஸ்ரீ தேவி பூதேவி என்பவர்கள். ஸ்ரீதேவியான லக்ஷ்மிதான் சர்வசிலாக்யம் பெற்றவளாகயிருப்பினும் விஷ்ணு பூதேவியினிடம் மிக்கப் பிரேமையும் காதலும்கொண்டிருந்ததாகப் பல ஆன்றோர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றார்கள். அதுபோல ருக்மினியும் ராதையும் பத்தினிகளாகப்பெற்ற கிருஷ்ணன் ருக்மினியைவிட ராதையை அதிகமாக விரும்பினான். ருக்மினி பதிபக்திக்கு விசேஷ புகழ்ப் பெற்றவள். ராதையோ யெனின் பதிப்பிரேமைக்குக் கீர்த்தி வாய்ந்தவள்.

ராதை கிருஷ்ணனை ஒரு கணமும் விட்டுப்பிரிய மனங் கொள்ளாள். அது போலவே கிருஷ்ணனும் ராதையும்

விட்டுப் பிரிந்திருக்க மனந்தாளான். ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்கக் கனவிலும் கருதார்கள். அவ்விருவர்களும் மிக்கப் பிரேமையுடன் வேடிக்கையாக விளையாடிப் பொழுது போக்குவார்கள். அவர்களது விளையாட்டுத்துக்கு உகந்த இடம் யமுனைககரையோரமே. அந்த யமுனாதீரத்தில் கிருஷ்ணனைக்கண்டால் அவனுடன் கட்டாயமாக ராதையையும் காணலாம். அது அவ்வளவு பரம ரகசியமாக விருந்தது.

ஒரு நாள் யமுனைக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் பட்டு பிதாம்பரதாரியாக, சர்வாபரணாலங்கிருதனுப் திருக்கரத்தில் குழலைத்தாங்கி மிக்க இனிமையாகக் கானம் எழுப்பிக்கொண்டிருந்தான்.

"இடவணரை யிடத்தோளொடு சாய்த்திருகை கூடப்புருவம் நெரிந்தேறக்
குடவயிறு படவாய் கடைகூடக் கோவிந்தன் குழல் கொடூதினபோது
மட மயில்களொடு மான்பிணைபோலே மங்கைமார் கள்மலர்க்கூந்தலவிழ
உடைநெகிழவோர் கையாற்றுகில் பற்றியொல்கி யோடரிக்கண்ணோட நின்றனரே.

"வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன் மதுரைமன்னனந்த
கோனிளவரசு கோவலர் குட்டன் கோவிந்தன் குழல் கொடூதினபோது
வானிளம் படியர்வந்து வந்தீண்டி மனமுருகி மலர்க்கண்கள்பனிப்ப
தேனளவு செறிகூந்தலவிழச் சென்னிவேர்ப்பச் செவிசேர்த்து நின்றனரே.

"சிறுவிரல் கட்டவிப் பரிமாறச் செங்கண்கோடச் செய்யவாய்க் கொப்பளிப்பக்
குறுவெயர்ப்புருவங்கூடலிப்பக் கோவிந்தன் குழல் கொடூதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்துவந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிவிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே.

"திரண்டெழுதழை மழைமுகில்வண்ணன் செங்கமல மலர்சூழ்
[வண்டினம்போலே
சுருண்டிருண்ட குழல்சூழ்ந்தமுகத் தானூதுகின்ற குழலோசை
[வழியே
மருண்டு மான் கணங்கள் மேயகை மறந்து மேய்ந்த புல்லுங் கடை
[வாய்வழிசோர
இரண்டு பாடுந்துலுங்காப்புடைபெயரா வெழுது சித்திரங்கள் போல
நின்றனவே"

ஸ்ரீ கிருஷ்ணன் குழலூதியபோது இளமங்கையர்கள் தம் நிலைமை பிறழ்ந்தார்கள். மலர்க்கூந்தல் அவிழ்ந்து, இடையில் கட்டியிருந்த ஆடையும் நெகிழ்ந்தது. அவ்விதம் நெகிழ்ந்த தம் ஆடையைச் சீர்திருத்திக்கொள்ளாமல் அப்படியே ஒரு கையாற் பிடித்துக்கொண்டு ஆச்சரியத்தின் வசப்பட்டவராய் நின்றுவிட்டார்கள். திறந்தவாயால் சங்கீதத்தைப் பருகுவார்கள் போலுமிருந்தது அக்காட்சி.

மாலை நேரமாகியபின்பு தத்தம் கூடுகட்குத் திரும்பிய பறவைகள் யாவும் மீளவும் தமது கூடுகளை விட்டு முகில் வண்ணன் எதிரில் கிடந்தன. பசுக்கள் எல்லாம் மெய்மறந்து அப்படியே சங்கீதத்தின் வசப்பட்டு நின்றன. களிப்பின் மிகுதியால் அவைகள் உணராமலேயே பால்சுரந்து விட்டது. பாலைப்பருகும் இளங் கன்றுகள் வாயிற்கொண்டபாலை விழுங்காமல் பாட்டில் மயங்கியிருந்தமையால் பெருகிக் கீழ்வழிந்து கொண்டிருந்தது. இன்னும் மான்கள் மேய்வதை நிறுத்தி விட்டன. மேய்ந்துகொண்டேயிருந்த மான்களும் மேய்ந்த புல்லை மெல்லாமல் அப்படியே வைத்துக் கொண்டிருந்ததால் கடைவாய் வழியாக விழுந்து போய்விட்டது. பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிகள் எல்லாம் குழலூதினபோது அதிலேயே மயங்கிக் கிடந்தவெனில் ராதையும் அதற்கு அடிமையாகாமலிருக்க முடியுமோ?

ராதை தன் காதலனைக்கண்டு ஆநந்தங்கொள்ள வரும் போது காதலனின் இனிய கீதத்தைக்கேட்டுச் சந்தடி செய்யா மல் பின்னாலேவந்து நின்று கேட்டுப் புளகாங்கிதமடைந்து சற்று நேரம் கழித்து மெதுவாகத் தனது இரண்டுகைகளால் கிருஷ்ணனுடைய தாமரைக் கண்களை மூடினாள். அவ்விதம் மூடிய வண்ணமே உட்கார்ந்து விட்டாள். கிருஷ்ணனுடைய இரண்டு கைகளும்பக்கத்தில் சரிந்தன. இடது கரத்தில்குழலைப் பிடித்துக் கொண்டான். வலது கையை உயரத்தூக்கினான். மெத்தென்றிருக்கும் தொடையின் மேரில் சாய்ந்திருந்தான். ராதை கிருஷ்ணனை ஆச்சரியப் படுத்தினாள். தன்னை அவ்விதம் செய்யக்கூடியவள் யார் என்பதையும் கிருஷ்ணன் அறியாம லிருக்க முடியுமா? ஆகவே அந்தக்கையை எடுத்துக் கொள் ளச் செய்வதற்கும், மூடினது யார் என்பதைத் தெரியப் படுத்துவற்கும் 'ராதா! ராதா! போதும் எடு கையை, உன் னையும் நான் தெரிந்து கொள்ளாமலிருக்க முடியுமோ? கண்ணே' என்றுரைத்தான்-(படம் பார்க்க). அவ்வார்த்தை கள் வெளிவந்தனவோ இல்லையோ உடனே ராதை தன் கையை எடுத்து எதிரே நின்று தன் காதலை வெளிப்படுத்தி னாள். அது முதற்கொண்டு ராதைக்குக் கிருஷ்ணனை முழுவ திலும் தான் வென்று விட்டதாக எண்ணம். தன்னிடந்தான் கிருஷ்ணன் அதிகவிசுவாஸத்தோடும் காதலுடனும் இருக் கின்றான்; வேறெவரிடத்திலும் அத்தகைய காதலோடிருப்ப தில்லை என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. கிருஷ்ணன் தன்னைவிட்டுப் போகமாட்டான்; தனக்கே அடைக்கலம் என்று எண்ணி மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாள்.

மற்றொரு சமயம் ராதை தன் காதலனை நினைத்தவாறே தனிமையான பூம்பொழிலில் அமர்ந்து அவளது அழகி லீடுபட்டுக் கொண்டிருந்தாள். அவளது அளகபாரம் அவிழ்ந்து தொங்கியது. கண்ணிணைகள் வெறும் வெளியை

உற்று நோக்கிய வண்ணமிருந்தன. மேலாடை தன் நிலை விட்டுப் பெயர்ந்து கீழ் தொங்கியது. கச்சும் தனம் விம்முவதால் தளர்ந்தது; விரக தாபமேற் கொண்டு இன்னது தான் செய்வதென்றுணராமல் உட்கார்ந்திருந்தாள். அப்பொழுது குயில் ஒன்று இனிய கீதம் பாடியது. அக்கானத்தைக் கேட்டதும் தன் நினைவுபெற்று அக்குயிலைத் தூதனுப்புவோம் எனத்தெளிந்தாள்.

"மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணிவண்ணன் மணிமுடி [மைந்தன்
தன்னையுகந்தது காரணமாக வென்சங்கிழக்கும் வழக்குண்டே
புன்னைகுருக்கத்தி ஞாழல் செருந்திப் பொதும்பினில் வாழுங்குயி
பன்னி யெப்போது மிருந்து விரைந்தென் பவளவாயன் வரக் [லே!
[கூவாய்.

"வெள்ளை விளிசங்கிடங்கையிற் கொண்ட விமலனெனக் குருக் [காட்டான்
உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளுமுயிர்ப்பெய்து கூத் [தாட்டுக் காணும்
கள்ளவிழ் சண்பகப் பூமலர்கோதிக் களித்திசை பாடுங்குயிலே!
மெள்ளவிருந்து மிழற்றி மிழற்றுதென் வேங்கடவன் வரக்கூவாய்!

"மாதலிதேர் முன்பு கோல்கொள்ள மாயனிராவணன்மேல் சரமாரி
தாய்தலை யற்றற்று வீழத்தொடுத்த தலைவன்வர வெங்குங் காணேன்
போதலர் காவிற்புது மணநாறப் பொறிவண்டின் காமரங் கேட்டுன்
காதலியோடுடன் வாழ்குயிலே! என்கருமாணிக்கம் வரக்கூவாய்!

"என்புருகியினவே னெடுங்கண்க ளிமை பொருந்தாப்பலநாளும்
துன்பக்கடல் புக்கு வைகுந்தனென்பதோர் தோணிப்பெறாதுழல் [கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறு நோயது நீயுமறிதிகுயிலே!
பொன்புரைமேனிக்கருளக் கொடியுடைப் புண்ணியனை வரக்கூவாய்.

"எத்திசையுமமரர் பணிந்தேத்து மிருடிகேசன் வலிசெய்ய
முத்தன்ன வெண்முறுவற் செய்யவாயு முலையு மழகழிந்தேனான்
கொத்தலர் காவின் மணித்தடங்கண் படைகொள்ளு மிளங்கு
[யிலேயென்
தத்துவனை வரக்கூவிற்றியாகிற்றலையல்லாற் கைம்மாறிலேனே.

"பொங்கிய பாற்கடலில் பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையி
[னுலென்
கொங்கைகிளர்ந்து குமைத்துக் குதுகலித்தாவியை யாகுலஞ்
[செய்யு
மங்குயிலே யுனக்கென்ன மறந்துறைவாழியுஞ் சங்குமொண் டண்டும்
தங்கிய கையவனை வரக்கூவி நீ சாலத் தருமம் பெறுதி"

"பூஞ்சோலையின் கண் இனிதே வாழுங்குயிலே! என் பவளவாயன் இங்குவரக் கூவுவாய்! இடது கரத்திற் சங்கைப் பிடித்த விமலன் எனக்குத் தன்னுடைய உருவத்தைக் காட்டாமல் என்னுள்ளத்தைப் பெருந்துயரத்தில் உழலும்படிச் செய்கிறான். இன்னிசைபாடும் இனிய குயிலே! என் வேங்கடவன் என்னை நாடிவரக் கூவுவாய். என் தேகம் மெலிந்தது; என் கண்கள் உறக்கத்தை அறவே யொழித்தன. பற்பலநாட்களாக நான் துன்பக்கடலில் ஆழ்ந்து கிடக்கின்றேன். வைகுந்தன் என்னும் ஒரு தோணி எனக் ககப்படாமல் வருந்துகின்றேன். அறிவுள்ள குயிலே! காதலர்களின் துன்பம் இன்னது என்பதை நீயும் மறந்திருக்கின்றாய். உனக்குப் புதியதல்ல. என் புண்ணியனும் கண்ணியனுமான கண்ணனை இவ்விடம் வரக்கூவுவாய். எனது மேனியும் குன்றிப் போயது. என்னுடைய கனிவாயினழகை யிழந்தேன். என் கொங்கையினழகையுமிழந்தேன். இளங்குயிலே! நான் உண்மையாய்க் காதலித்திருக்கும் தத்துவனைக் கூவி வரவழைக்காவிட்டால் என்னுயிர் நில்லாது. ஆகவே அடியாள் மீது கருணைகூர்ந்து வரக்கூவுவாய். பாற்கடலின் கண்

அரவணையின் மீது பள்ளி கொண்டிருக்கும் மணிவண்ணனைப் புணரும் ஆசை மிகக் கொண்டவளாய் எனது கொங்கை விம்மியும், என் கனிவாயிதழ் ஏங்கியும் நிற்கின்றன. அருமை வாய்ந்த குயிலே! சங்குசக்கர கதாபாணியை என்னிடம் வரக் கூவுவாய். அதனால் உனக்குப் பெருத்த புண்ணியம் உண்டு" என்றிவ்வாறுகச் சொல்லி தன் அவஸ்தையைப் பொறுத்துக் கொண்டிருப்பாளாயினள்.

குயிலோடு குயில்போலும் இசையெழுப்பிக் கொண்டிருந்த ராதையைக் கிருஷ்ணன் பார்த்துவிட்டான். ராதையை விட்டுப் பிரிந்திருக்க கிருஷ்ணனால் முடியாதல்லவா? ஆகவே அம்மங்கையைத் தேடிக் கொண்டு வந்தபோது அவளது அலங்கோலத்தைக் கண்டான். கூந்தலவிழ்ந்தும், ஆடை கலைந்தும் காதல்நோயால் மிக வருந்தும் காட்சியைக் கண்டான். தாமதிக்க அவன் விரும்பினாலும் அவனுடைய மனம் மட்டும் இடந்தரவில்லை. சத்தம் செய்யாமல் பின் பக்கமாக வந்து அவளது தோண்மீது கையை வைத்தான். அவனது தாமரை போன்ற கரங்கள் அவள்மீது பட்டதும் ஒருவித மான புளகாங்கிதமடைந்தாள். தலையை நிமிர்த்திக் காதல் ததும்பும் பார்வையால் தன் உயிரேயான கிருஷ்ணனைப் பார்த்து தழதழத்த குரலில்,

"வருக வருக வருக விங்கே வாமனநம்பீ! வருக விங்கே
கரியகுழற் செய்யவாய் முகத்தன் காகுத்த நம்பீ! வருக விங்கே
அரியனிவனெனக் கென்று நங்காயஞ் சனவண்ண வசலகத்தார்
பரிபவம் பேசத் தரிக்கிலேன் பாவியேனுக் கிங்கே போதராயே"

"என் கண்ணே வருக! என் கருத்தே வருக! மணி வண்ணா வருக! என்னிதய கமலமே வருக! என்னைக் கண்டு அயல் மாதர்கள் பரிபவம் பேசுவதைக் கேட்கச் சகியேன். என்னை விட்டுப் போவது தங்களுக்குக் கொஞ்சமும் அழகாகாது. இவ்விடம் வந்தமர்ந்து எனது துயரத்தைப் போக்கத்

தங்களை மிகவும் இறைஞ்சுகின்றேன்" என்று மொழிந்தாள். கிருஷ்ணனும் அந்தச் சமயம் அவளது காதலைத் தீர்த்து சாந்தப்படுத்தினன்.

இவ்வாறாக ராதாகிருஷ்ண காதல் வாழ்க்கை நடந்து கொண்டு வந்தது. அந்நாளில் ராதா கிருஷ்ணனைத் தான் அடிமைகொண்டு விட்டதாகச் செருக் கடைந்தாள். தான் கீறின கோட்டை முகில்வண்ணன் தாண்ட மாட்டான்—தான் எழுந்திரு என்றால் எழுந்திருப்பான்; உட்கார் என்றால் உட்காருவான் என்று சொல்லிச் சொல்லிக் கர்வப்படுவாள். அறிதுயில் கொள்ளும் அரவணைச் செல்வனுக்கு அம்மங்கையின் எண்ணம் தெரியாது போகுமா? கிருஷ்ணனுக்கு அவளுடைய அந்தரங்கமான எண்ணம் நன்றாகத் தெரிந்து விட்டது. தெரிந்து கொண்டபின்னர் அவளிடம் வேடிக்கை செய்ய வேண்டும் என்று பூரணமாக விரும்பிவிட்டான். அதற்குச் சரியான சந்தர்ப்பம் எப்போது வாய்க்கும் என்று மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அக்காதல காதலியர் சரச சல்லாபமாகக் காலங்கழிக்கத் தனிமையில் அமர்ந்திருந்தார்கள். அந்தச் சமயமே அவளை வேடிக்கை செய்ய ஏற்றதென்று எண்ணி கமலக் கண்ணன் சற்று நேரம் ஒன்றும் பேசாதிருந்து திடீரென்று சிரித்துப் பின்னால் மௌனமாக இருந்தான். அதைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த ராதை, 'இதென்ன! என்றுமில்லாத விதமாக இன்று என் காதல் துரை இவ்விதம் சிரித்துப் பேசாமலிருப்பதற்கு யாது காரணமோ கேட்டறிவோம்' என்று மனத்திலெண்ணி மெதுவாகக் கேட்டாள். அதற்கு கிருஷ்ணன், 'பவழ நிற இதழ் பாவாய்! ஒன்றும் காணேன், ஒருகாரணமுமில்லை. வெறுமெனவே நான் சிரித்தேன். சதி பதிகளினிடையில் சிரிப்பதற்கென்று ஒரு தனிக் காரணமுண்டா? ஒன்றுமில்லை. இந்த அகில உலகமும் என்னுடைய

ஆணையின் கீழ் எப்படி அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன என்பதை நான் சற்று எண்ணினேன். அதனால் சற்று சிரிப்பை அடைந்தேன். அதுவே யொழிய வேறொன்றும் இல்லை' என்பதாகப் பதில் கூறினான்.

சில நிமிஷ நேரங்கழித்து ராதை திடீரென்று கலகலவெனநகைத்து மௌனமாக விருந்தாள். அவள் நகைத்ததற்குக் காரணம் என்ன வாயிருக்கக்கூடும் என்று அறிந்துகொள்ள கிருஷ்ணன் பெரிதும் அவாக்கொண்டான். தன் உள்ளக் கருத்தை ராதையிடம் வெளியிட்டான். அதற்கு ராதை "ஒன்று மில்லை. என்னவோ பைத்தியக் காரத்தனமாகச் சிரித்தேன். அதன் காரணத்தைக் கட்டாயம் தெரிந்து கொள்ளத் தான் வேண்டு மென்றால் சொல்லி விடுகிறேன். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சராசரப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் தாங்கள் அரசராக விருக்கின்றீர்கள். தங்களுக்கு நான் ராஜாவாக விருக்கின்றேன். நான் தங்கள் மீது அதிகாரம் செலுத்தும் சக்தியைப் பெற்றிருக்கின்றதை நினைத்தேன். எனக்கே அடக்கமுடியாமல் சிரிப்பு உண்டாயிற்று. அதுவே தவிர வேறு ஒன்றுமில்லை" என்றாள். அம்மொழிகளைக் கேட்ட கிருஷ்ணன், "மாதே! ராதா! உனக்கு அடிமையாகாதவரும் இவ்வுலகத்தில் உண்டோ? உனது வடிவழகில் சொக்கி விழாத புருஷனும் இருப்பானோ? உன்னைக் காணாதவன் தன் முகத்தில் இருகண்களைப் பெற்றவனல்ல; ஆனால் புண்களைப் பெற்றவனாவான். செவ்வரிபடர்ந்து கருணாரசம் ததும்பும் உன் விழிகளின் கடாக்ஷவீக்ஷண்யத்தால் திரிலோகத்துள்ளவர்களும் அடிமையாவர்களென்றால் நான் மட்டும் என்ன? கண்ணே! ராதா! நான் உண்மையிலேயே உனக்கு அடிமைதான். நான் உனது சேவைக்குக் காத்துக் கொண்டிருக்கும் தாசனே யாவேன்" என்று சொல்லிக்கொண்டே அருகில் சென்று இருகைகளால்

அவளை ஆலிங்கனம் செய்து கொண்டு கனிவாயிதழில் முத்த மிட்டு நின்றான். சிறிது நேரம் வேறு விஷயங்களைச் சம்பாஷித்து விட்டுக் கிருஷ்ணன் பிரிந்து போயினான்.

சின்னாள் கழிந்த பின்னர் ராதை தன் காதலனுக்குத் தன் உயிர்த்தோழியை அனுப்பி யமுனைநதிக் கரையில் மாலை வேளையில் வெண்மணல் மேட்டில் தனியாகச் சந்திக்கும் படிச் சொன்னாள். தான் தன் மனத்திற்குகந்த மண வாளனைக் காணப்போகின்றோம் என்று களிப்பு மிகக்கொண்டு குதூகலித்திருந்தாள். காதலன் முன்னர் மிக்கச் சுந்தரத் துடன் தான் விளங்கவேண்டும் என்றெண்ணங்கொண்டு நல்லாடையும் அணியும் பூணலானாள். அன்றைய பகல் முழுமையும் அலங்காரம் செய்து கொள்ளுவதிலேயே தன் கவனத்தைச் செலுத்தினாள். தன் தோழியர்கள் தன் எண்ணத்தின்படி அழகு பெறச் செய்ய மாட்டார்களென்று கருதி தானே அவ்வேலையை மேற்கொண்டாள். பச்சை நிறச் சேலையைத் தரித்து பாங்குடன் நிலைக்கண்ணாடியில் பார்த் தாள். அவளது அழகு பின்னும் அதிகரிக்காதிருப்பதை உணர்ந்து உடனே அந்த ஆடையை நிராகரித்து வேறு சேலை யையும் கச்சையும் தரித்து, விதவிதமான ஆபரணங்களையும் அணிந்துக் கொண்டாள். அதுவும் அவளது மனத்திற்குத் திருப்தியளிப்பதாகக் காணோம். அலங்காரம் செய்துகொள் வதில் இங்கும் அங்கும் ஓடி அலுத்து வியர்த்துப்போனாள். மாலை நேரமோ வந்துவிடுகிறேன் என்று பயமுறுத்திக் கொண் டே யிருந்தது. கடைசியாகத் தன் காதலன் விரும்பும் ஒரு ஆடையை அணிந்துகொண்டு யமுனாதீரத்துக்குச் செல்ல ஆயத்தமாகவிருந்தாள். அழகே யுருவான மங்கையர் தில கத்திற்கு அழகு படுத்த வேறு அழகென்பதும் உண்டோ? பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பாரு முண்டோ? யாரே அழகிற்கு அழகுசெய்வார்?

ராதை சர்வாபரணாலங்கிருதையாகித் தன் நறுமணங் கமழும் கூந்தலைப் பின்னிப் பற்பல விதமான பரிமளமிகுந்த புஷ்பங்களைச் சொருகிக் கொண்டுமிருந்தாள். நீலோத்பல மலரை நடுவில் பதித்துக் கொண்டு அதைச்சுற்றிலும் பலத் திறப்பட்டப் புஷ்பங்களைச் சொருகிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ணுறின் நீலமேக ச்யாமளனான நந்தகோபனைச் சுற்றிலும் அப்ஸர மாதர்கள் சூழ்ந்துகொண்டிருப்பதுபோல வும் தோற்றும். அவள் தன் தலையை வாரி ஒரு விதமாகப் பின்னிக்கொண் டிருக்கும்போதே 'இதுவே சரியான கண்ணி யாகும். கண்ணனைப் பிடிக்கத்தக்க வலையாகும்' என்று வேடிக்கையாகச் சொல்லி நகைத்துக்கொண்டாள். அவ் வளவு விசேஷமான அலங்காரத்தோடு விளங்கிய ராதை கண்ணாடியில் தன் அழகை மறுமுறையும் பார்த்தாள். ஜாஜ்வல்யமாயும், அழகெல்லாம் திரண்டு ஒருருவமாய்த் தோன்றுவதாகவும் கண்டு ஒருவிதமாகத் திருப்தியடைந் தாள். அந்த நிலைக்கண்ணாடி உயிரற்றதாக விருந்தாலும் ராதையின் சுந்தர லக்ஷணத்தைப் பிரதிபலிப்பதாலே பெருத்த கவுரவத்தை அடைவதுபோலவு மிருந்தது. சுந்தரத்தின் மந்திரமாகவும், காதலின் உறைவிடமாகவும், அப்ஸரமாதைப் போன்றும் விளங்குவாளாயினள். தன் உயரம் எவ்வளவு உண்டோ அவ்வளவு கம்பீரமாக எழும்பி நின்று தன் அழ கிய உருவத்தைக் கண்ணாடியில் கண்டு வாய்விட்டுச் சொல் லுவாளானாள். 'தோகை மாமயில் போன்று மல்லவா காண்கிறேன். கிருஷ்ணன் எனக்கே சொந்தம். எனக்கே ஐக்கியம்; அதுவே என் பாக்கியம். அவரைக் கண்டு இவ் விதமாக நின்று காண்பேன். அது கூடாது; இந்த விதமாகப் பார்ப்பதுதான் சிறந்தது. அன்னநடையை மானியவளாய் வெகு அழகாக நடந்து செல்வேன். அந்த அழகிலேயே கிருஷ்ணன் சொக்கிச் சோர்ந்து விழுந்து விட வேண்டாமா?

குயிலும் வெட்கியோடும் வண்ணம் இனிய கீதங்களைப்பாடி கவர்ந்துவிட மாட்டேனா? கிள்ளைபோலும் மழலைச்சொல் லால் மயக்கி விடுவேனே. அவரது இரண்டு கைகளையும் என் இருகரங்களால் பற்றிப்பிடித்துக் கொண்டு அப்படியே என் இதழ்களினால் முத்தமிடுவேன். கிருஷ்ணன் எனக்கே உரியவர்; உயிர்போன்றவர்; வேறு ஒருவர்க்குஞ் சொந்த மல்லர்; நானே அவரை வென்றவள்; ஜெயித்த ஜெயசீலி நானே. என்போன்ற சாமர்த்தியமுள்ள காரிகையும் இம் மகிதலத்தி லிருக்கின்றாளோ? சாகசத்தில் விஞ்சிய வஞ்சிக் கொடியாள் வேறொருத்தியும் உண்டோ உலகத்தில்?' என்று ராதை தன்னைக் குறித்துத் தானே புகழ்ச்சியாகக் கூறிக் கொண்டு நேரமாவதையும் கவனியாதிருந்தாள்.

சூரியனும் மலைவாயில் விழும் நேரம் சமீபித்து விட்டது. மெதுவாக அடிமேலடி வைத்துத் தோகை மயிலாள் மிக்க ஒயிலாக நடந்து யமுனையை நாடிச்சென்றாள். அவ்விதம் செல்லும்போது ஒரு சுவர்ணத் தட்டில் புஷ்பமாலையையும், கனிவர்க்கங்களையும் வைத்துக் கையிலெடுத்துச் செல்லலானாள். தன்னுடைய வீட்டு வேலைகளை யெல்லாம் அப்படியே போட்டு விட்டு ஒருவர்க்கும் தெரியாமல் ரகசியமாக யமுனைக் கரையை அடைந்தாள். வழக்கமாகத் தானும் முகில் வண்ணனும் மாலைப்போதைக் கழிக்கும் பிரதேசத்தை நெருங்கினாள். கம் பீரமான நதியும், அழகிய மணல் மேடும், பின்னால் இருண்ட வனமும், தாங்கள் அமர்ந்து கொள்ளும் பளிங்கு மேடையும், நிழலைத் தந்து ஆகாயமளாவிய விருக்ஷங்களும், தங்களுடைய சான்னித்தியத்தினால் மகிழும் மயிலும், குயிலும், மானும், நனமணங்கமழும் மலர்களும், சங்கீத மெழுப்பும் மூங்கில் மரங்களும், நாணற் புதர்களும், பக்கத்திலுள்ள கரடு முரடான கற்பாறைகளும், சிறு குழந்தைகள் விளையாடுவது போலச் சிறிய அருவிகள் அவைகளினின்றும் உதித்து யமு

னைக்கு ஜலப் பெருக்கைக் கொடுக்கும் சிற்றாரல்களும், இவைகளெல்லாம் அவ்விடத்தே இருந்து அந்தப் பிரதேசத்திற்கு ஏற்கனவே யிருந்த அழகைப் பின்னும் அதிகரிக்கச் செய்து விட்டன. ஆனால் ஆச்சரியகரமானவனும், அவைகளெல்லாவற்றினையும் விட மிக்க அழகும் வசீகரமுமுள்ளவனுமான கிருஷ்ணன் மட்டும் அவ்விடத்தில் காணப்படவில்லை. சற்று நேரத்துக்கு முன் களிப்பெய்தியிருந்த ராதை, கிருஷ்ணனை அவ்விடத்தில் காணவில்லை. காணாததால் மிக்க வியப்படைந்தாள். அன்று வரையிலும் தான் அவ்விதம் கண்டதில்லை. எப்பொழுதும் கிருஷ்ணன் தனக்கு முந்தியே வந்திருப்பது வழக்கம். வழக்கத்துக்கு விரோதமாகச் சம்பவித்திருப்பதைக் காண ஆச்சரிய மடைந்தாள். இன்னும் சில நிமிஷ நேரத்துக்குள்ளாக வந்து விடுவார் என்று நம்பிக்கை கொண்டு தாமதித்தாள். ஐந்து பத்துப் பதினைந்து நிமிஷங்களும் கடந்தன. அரைமணி சாவகாசமும் ஆய்விட்டது. அப்பொழுதும் கிருஷ்ணன் அங்கு வந்து சேரவில்லை. திடீரென்று புதரின் பக்கத்திலிருந்து யாரோ வரும் சத்தம் கேட்டது. தனக்கு முன்னேயே வந்திருந்து ஏமாற்ற எண்ணங்கொண்டு மறைந்து கொண்டிருக்கின்றாரோ என்று எண்ணினாள். கூப்பிட்டாவது பார்ப்போம் என்று கருதியவளாய்த் தன் இனிய குரலெழுப்பி, 'என் மனமோகனமே! மரகதக் கண்ணனே! மணிவண்ணா! கோபாலா! கோவிந்தா! முகுந்தா! ராதாரமணா!' என்று பலதிசைகளிலும் திரும்பித் திரும்பிப் பலதரம் கூப்பிட்டாள். அவ்வளவு கூப்பிட்டும் பயனில்லை. கானகத்தில் காய்ந்த நிலவைப்போலும், விழலுக்கிறைத்த நீரைப்போலும், இலவங்காத்தக்கிளியைப்போலும் பிரயோஜனமற்றுப் போய்விட்டது. சூரியனும் அஸ்தமித்துவிட்டான். கிருஷ்ணனோ வரக்காணோம். ஆகாயமோ நீல நிறமாகிக் கொண்டேவந்தது. ஆனால், எவன் மிகுந்த நீலநிறமாயும்

ஆயிரம் ஆகாயங்களைப்பெறக்கூடியவனுமாக விருக்கின்றானோ அவன் அப்பொழுதும் வரவில்லை. பட்சி ஜாலங்கள் தத்தம் கூடுகளைநாடி வந்துவிட்டன. பசுக்கள் தத்தம் தொழுவத்தை நாடின; வேலையாட்கள் யாவரும் தத்தம் இல்லத்திற்கும் மனைவியிடத்திற்கும் சென்றடைந்தார்கள். ஆனால், முராரிமட்டும் அவளுடைய இருதய கமலமாகிற வீட்டிற்கு மீண்டும் வராமல் திரிந்து கொண்டிருக்கின்றான் போலும்.

அன்றைய மாலைப்பொழுது மிக்க சாந்தமாயும் அமைதியாயும் இருந்தது. சுற்றிலுமுள்ள எல்லாப் பொருள்களும் பரிபூரணமான சாந்தத்துடன் இருந்தன. காம்பீரியமாயுள்ள யமுனைநதி மெதுவாகச் சத்தமின்றிப் பிரவாகித்து வந்தது. பட்சிகள் யாவும் பாடுவதை நிறுத்திவிட்டன. அசேதனமான விருக்ஷஜாலங்களும் மௌனமாகவிருந்தன. மேல் வியாபித்திருக்கும் ஆகாயமும் அலை எழும்பாத சமுத்திரம்போல் கலக்கப்படாத நீல நிறத்தோடு இருந்தது. இயற்கைப் பொருள்கள் யாவும் சமாதி நிலையிலுள்ள தபசிபோல மௌனமாக விருந்தன. எவ்வளவுக்கு எவ்வளவு வெளியே மௌனம் காணப்பட்டதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக ராதையின் இருதயத்தில் சஞ்சலம் அதிகமாக ஏற்பட்டது. 'அவர் வரமாட்டாரோ? இல்லை; இல்லை கட்டாயமாக வருவார். வராமலிருக்கவேமாட்டார். நான்தான் அவரை இங்குவரச் சொல்லி அனுப்பியிருக்கின்றேனே. சந்திரன் உதயமாகும் போது அவரும் வந்துவிடுவார்' என்று சொன்னாள். அவள் சொன்னதற்காகவோ என்னவோ உடனே சந்திரன் சோடச கலையுடன் ஆகாயத்தின்கண் தோன்றினான். பட்டுபீதாம்பரம் அணிந்த கிருஷ்ணனைத் தன்கூட அழைத்துவராமல் அதற்குப்பதிலாகச் சந்திரன் தன் வெண்மையான கிரணங்களைப் பரப்பி ராதையின் வருத்தத்தைக் கண்டு சந்தோஷப் பட்டான். சற்றும் ஈவிரக்கமற்ற சந்திரனை ஏறிட்டுப்பார்த்து

ராதை ஓடிப்போயிருக்கும் தன் காதலனை நிந்திக்கத் தொடங்கினாள். 'இவ்விதம் என்னை மனத்தாபத்திற்குள்ளாக்கியதை நான் மன்னிக்கமுடியாது. ஹா! என்ன இந்த நிலவு என்னைத் தகிக்கின்றதே! நிலவு தண்மைபொருந்தியதென்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். என் விஷயத்தில் அது பொய்த்துவிட்டது. வெந்தணல்போலல்லவா நிலவு என்னைத் தகித்துக்கொண்டிருக்கின்றது. இருக்கட்டும்: இனி அவரிடம் எனக்கென்ன இருக்கின்றது? அவர் வந்ததும் நிந்தித்துத் திரும்பி விடுகிறேன். வெந்தணலை வீசி என்னை இந்தச் சந்திரன் தகிக்கவும்; மன்மதன் மலர்ப்பாணங்களை என்மீது எய்யவும் விட்டுவிட்டு தான்மாத்திரம் எங்கோ சந்தோஷமாகக் காலங்கழிக்கின்றாரே. என்னை அவர் என்னவென்று நினைத்துக்கொண் டிருக்கிறாரோ தெரியவில்லை. நானும் கொரமாக இருக்கமுடியும். அவர் என்னிடம் சரணமென அடைந்து கெஞ்சிக் கூத்தாடும்படிச் செய்யக்கூடும். அவர் என்னை வேண்டுவார்; பல்லைக்காட்டி இளிப்பார்; நான் தலையை அசைத்து அவரிடமிருந்து திருப்பிக் கொள்ளுவேன். ஒரு திருப்பு திருப்பிக்கொண்டு அசட்டை செய்வேன்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு இறுமாந்திருந்தாள். இவ்வளவு கோபவார்த்தைகளும், அலட்சியமொழிகளும் வீணே வியர்த்தமாயின. ஏனெனில் கிருஷ்ணன் அவ்விடம் வரவில்லை. தன்வீட்டுக்குத் திரும்பிவிடுவோம் என்று பலமுறை எண்ணினளே யொழிய அவளது மனம் அப்படிச் செய்ய இடந்தரவில்லை. தன் மனத்தினுள்ளே ஏதோ ஒன்று இன்னும் சற்றுநேரம் அவ்விடமே இருக்கத் தூண்டியது— கிருஷ்ணன் மீதுள்ள தன்காதல் தூண்டவில்லை யென்றுரைத்தாள். கிருஷ்ணன் மீதுள்ள காதலெல்லாம் ஆடிக்காற்றில் பஞ்சுபோல் பறந்தோடிவிட்டது. அப்படிக்கிருக்க ஏன் அவள் அங்குத் தங்கினாள்? மெதுவாக அவளது கோபமும்

தணியலாயிற்று. அந்தச்சினம் விசனமாக மாறியது. தன் அங்கங்களைப் பார்த்தாள். புஷ்பமாலைகளைப் பார்த்தாள். தன்னைப்போலவே அவைகளும் சோகமுற்றிருப்பதைக் கண்டாள். உண்மையிலேயே அவரை அடைய நான் அருக னல்ல. நான் அவருக்கு எம்மாத்திரம்? மங்கையர்கட்டுக் காதல் தெய்வம் போன்ற அவருக்கு நான் எவ்வளவு? நான் அவரை என்வசத்தில் வைத்திருக்க எண்ணி யிருந்தேன். அவ்விதமே நான் அவரிடம் சற்றும் அச்சமில்லாமல், சொல்லியும் விட்டேன். இப்பொழுதல்லோ என் குற்றம் எனக்குப் புலனாகின்றது. யானை தன் தலைமீது மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதுபோல நானே துன்பங்களை வர வழைத்துக் கொண்டேனே. நானே என் தலைக்குத் தீம்பு வைத்துக் கொண்டேனே. நான் யாரை நோவேன்? என்னையே நான் நிந்தித்துக் கொள்ளவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு விசன மதிகரித்ததால் அழவும் தொடங்கி விட்டாள்.

கொர்வமும் ஆடம்பரமும் அவளைவிட்டு அகன்றன. தன் குற்றத்தைத் தானுணர்ந்து வருந்தினாள். ஒரு பாறை மேலமர்ந்துகொண்டு கிருஷ்ணனைத் தன்னிடம் விரைவினில் வரச்செய்ய தன் தேவதைகளை யெல்லாம் துதித்தாள். அந்தச்சமயம் அவளது வதனம் மிக்கப் பரிதாபகரமாகத் தோன்றியது. எந்தவழியாக கிருஷ்ணன் வருவதுவழக்கமோ அந்தப்பாதையின் மீதே தன் நாட்டத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள். அப்படியே பார்த்துப் பார்த்து அவ ளுடைய கண்களும் பூத்துப்போயின. விழியை அவ்வழியே வைத்தாளே ஒழிய மனம்மட்டும் கிருஷ்ண உருவத்தைச் சுற்றிக்கொண் டிருந்தது.

திடீரென்று அவளது அளக பாரத்தின்மீது மெத் தென்று தாமரையொத்த கிருஷ்ணனது கரங்கள் பட்டன

போல் உணர்ந்தாள். தன் பின்னல் குழலின் இனிய ஓசை தொடர்ந்துவந்து தன் காதினருகில் நின்றது போலுமுணர்ந்தாள். உடனே பின்பக்கந் திரும்பிப் பார்த்தாள். மின்னலினும் கடிய வேகத்துடன் திரும்பினாள். அவளது கைகளும் முகமும் வெகுவேகமாகத் திரும்பின. நாலாப்பக்கங்களிலும் திரும்பினாள். பம்பரம்போல் சுழன்றாள். பம்பரத்தின் ஆணி நிலையாக நிற்கவும் மற்ற மரப்பாகம் சுழல்வதுபோல அவளது மனமாகிய ஆணி நிலையாகக் கிருஷ்ணன்மீது லயித்திருந்தது. தேகம் மட்டும் பம்பரத்தின் மரப்பாகம்போல ஆட்டங் கொடுத்துக்கொண் டிருந்தது. கிருஷ்ணனுடைய உருவம் அவள் எந்தப்பக்கந் திரும்பியபோதிலும் அவளுக்குப் பின்னாலேயே இருந்தது. அவளுடைய கண்களுக்குத் தென்படவேயில்லை. என்றாலும், கிருஷ்ணனது ஸ்பரிசத்தையும் குழலினிய கீத ஒலியையும் உணர்ந்தவாறே இருந்தனள். அவள் தன்னுடைய பின்னலைக் கிருஷ்ணன் இழுப்பதையும் உடனே விடுவதையும் உணர்ந்தாள். ஒரு சமயத்தில் மெல்லெனவும் மற்றொரு சமயம் வலியெடுக்கும் விதமாக இழுப்பதாகவும் தெரிந்துகொண்டாள். தனக்கு இன்னலையும் துன்பத்தையும் விளைவித்துக்கொண்டு வரும் துன்மார்க்கனைக் கையினால் பிடிக்கவெண்ணித் தன் கையைப் பின் பக்கமாக நீட்டினாள். அவன்மீது கோபங்கொண்டவள் போலும் நடித்தாள். ராதை பின்பக்கமாகச் சாய்ந்துகொண்டு வரும்போது அவன் இன்னும் பின்பக்கமே சென்றான். உடனே ராதைப் பின்புறமாகத் திரும்பினாள். ஹா! என்ன காட்சியைக்கண்டாள். தன்காதலன் ஆகாயத்தின்கண் பறந்து செல்வதைக்கண்டாள். பின்னும் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். கிருஷ்ணனைச் சுற்றிலும் கோபிகா ஸ்த்ரீகள் சூழ்ந்துகொண்டிருக்கக் கண்டாள். அப்பொழுது அவளது மனத்தின்கண் பலவிதமான உணர்ச்சிகள் தோன்றி அவளைக்

கலக்கிவிட்டன. சில நிமிஷநேரம் ஒன்றுமே தெரியாதவளாகப் பிரமித்து நின்றுவிட்டாள். அவ்விதத் தோற்றம் சில க்ஷணநேரம் மட்டுமே யிருந்து கலைந்துவிட்டது. அதன் பிறகு கிருஷ்ணன் தனியாக இருப்பதைக் கண்டாள். ஆனால், அவள் எந்தப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் அந்தப் பக்கத்தில் கிருஷ்ணன் தரிசனம் கொடுத்தான். அது அவளுக்குப் பின்னும் பிரமிப்பை அதிகப்படுத்தியது. அவன் தன் எதிரிலும் காணப்பட்டான்; வலது பக்கத்திலும் அவனே, இடதுபக்கத்திலும் அவனே, முன்னேயும் அவனே, பின்னேயும் அவனே; மேலேயும் அவனே, கீழேயும் அவனே எங்கும் கிருஷ்ண மயமாக விருந்தது. பார்ப்பதற்குக் கண்ணிற்கு அழகிய காட்சிதான் என்றாலும் அவளுக்கு இன்பத்தைப் பயக்கவில்லை. அதற்குப்பதிலாகத் துன்பத்தைக் கொடுத்து வந்தது. அக்காட்சியைக் காணவும் சகிக்கவில்லை. காணக் காண துக்கம் மூண்டெழத் தலைப்பட்டது. மிக்க ஏங்கிய மனத்துடன் கிருஷ்ணனை வேண்டினாள். கீதையில் அர்ஜ்ஜுனன் மிகப் பரிதாபமாக வேண்டிக் கொண்டது போல ராதையும் இறைஞ்சினாள். 'ஹே! கிருஷ்ணா! ஹே! கோவிந்தா! ஹே! முராரி! ராதாரமணா! வேண்டாம் இந்த ஏமாற்றமான விளையாட்டு. உமக்கு இது கொண்டாட்டமாக விருக்கின்றது போலும். அந்தோ! எனக்குத் திண்டாட்டமாகவன்றோ இருக்கின்றது. தேவரீர் திருவுளமுவந்து எங்கு இருக்கின்றீர் என்பதைத் தெரிவித்தருளும். தாங்கள் என்மீது அன்பு கொண்டிருக்கின்றீர் என்பதை வார்த்தையால் சொல்லிவிட்டாலும் போதுமெனக்கு. நான் பயந்து போயிருக்கின்றேன். ஹே! பிரபோ! என்னைக் காப்பாற்றி அருள்வீர். தேவரீருடைய திருமேனியை நான் தரிசிக்கச் செய்வீர். தங்களுடைய அழகிய உருவத்தை எனது கண்கள் பார்க்க ஏங்கி நிற்கின்றன. எனது கனிவா

யிதழ்கள் தமது செவ்விய அதரத்தைச் சுவைக்க வாடி நிற்கின்றன. எனது தேகம் தமது திவ்விய ஆலிங்கனத்துக்காக மழையில்லாப் பயிர் மழையை ஏக்கத்துடன் எதிர்பார்ப்பதுபோல ஏங்கித் துவண்டு நிற்கின்றன. கேவலம் பேதமையான அடியாளுக்குத் தேவரீரை எதிர்க்க என்ன சக்தி உண்டு? சூரியனது பிரகாசத்தின்முன் மின்மினியின் ஒளி என்னுகும்? அதுபோல தங்களுடைய பேராற்றலில் எனது சக்தி எவ்வளவு? அஜகஜாந்திரமல்லவா? நான் தங்களை முழுவதிலும் வென்றுவிட்டதாகவும் தங்களை எனது அடிமையாகவும் பாவித்தேன். கோபால! எனது கர்வத்தை மன்னித்து இவ்வேழையைத் தடுத்தாட்கொள்ள வேண்டுகின்றேன். தேவரீருடைய திருமுக மண்டலத்தை அடியாளுக்குக் காட்டியருளல் வேண்டும். என்னை ஆதரிக்கவும் இறைஞ்சுகின்றேன்' என்று மிக்க பரிதாபமாய்க் கூறினுள்.

அவள் அவ்வார்த்தைகளைக் கூறிமுடித்ததும் முடியாததாயிருக்கும்போது குழலின் இன்னேசையைத் தான் கேட்பதாக உணர்ந்தாள். அவளுக்கு ஒருவிதமான தேகபுளகாங்கிதம் ஏற்பட்டது. எப்படியோ கிருஷ்ணனுக மாறிவிட்டாள். அது தெய்வீகமாக இருந்தது. முழுவதும் தெய்வீகமாகவே இருந்தது. அவள் ராதையல்ல; அவளது உருவம் கிருஷ்ணனுக மாறியது. அவளே கிருஷ்ணன்; கிருஷ்ணனே அவள்; தானே அவன், அவனே தானுக ஆகிவிட்டாள்: அவளுக்குப் பிரம்மானந்தம் ஏற்பட்டுவிட்டது. ஆனந்தத்தால் வார்த்தைகளும் வெளிவரவில்லை. தன்னைத்தானே மறந்துவிட்டாள். தன் கிரக கிருத்தியங்களை அறவே யொழித்துவிட்டாள்; தன்னுடைய இன்பங்களையும், துன்பங்களையும், இவ்வுலகத்தையுமே மறந்துவிட்டாள். இவைகளெல்லாம் அவளுக்குக் கிடையாதனவாயின. ஏனென்ருல் அவள் தன் காதலனேடு ஐக்கியமாகிவிட்டாள். அம்மாதிரியான பிரம்மானந்த நிலை

மையில் எத்துணைப்போது இருந்தாள் என்பது அவளுக்குத் தெரியாது. ஆனால், அவள் தன் நினைவுக்கு வந்தபோது காலைப்பொழுதாகி இருந்ததை உணர்ந்தாள். கதிரவன் குண திசை சிகரம் வந்தணைந்ததைக் கண்டாள். காலையம் பொழு தாய் மலர்களிலிருந்து மது ஒழுகுவதைக் கண்டாள். தாம ரைப் புஷ்பம் தன் காதலனை சூரியனைக்கண்டு புன்முறுவல் செய்யத் தன் செய்ய இதழ் விரித்திருப்பதைக் கண்டாள். ராதை தன்னைச் சுற்றிலுமுள்ள அழகிய காட்சிகளைக் காண் கையில் அதியாச்சரியமான மற்றோர் காட்சியையும் கண்டாள். அவளது பக்கத்தில் கிருஷ்ணன் படுத்துக் கொண்டு உறங்கு வது போல நடித்தனன். அவனது திவ்விய முகத்தில் கள்ளங் கபடு ஒன்றுந் தோன்றவில்லை. அவள் கிருஷ்ணனைக் கண்ட தும் பெருமகிழ்வெய்தி எழுப்பினாள். அவன் உறங்கவில்லை என்ற விஷயம் அவளுக்கு நன்றாகத் தெரியும். யாவற்றையும் அறிந்தே துயில்கொள்ளும் திறமை வாய்ந்தவன் அவன் என்று அவள் உணர்ந்திருந்தாள். ஆகவே, அவனை எழுப்பி னாள். அவனும் துயில் நீத்தவன்போலத் தன் கண்களைப் பிசைந்துகொண்டு எழுந்திருந்து இதற்குள்ளாகப் பொழுதும் விடிந்துவிட்டதோ என்று கேட்டான். ராதை அவனுடைய கரங்களைத் தன்னுடைய கைகளில் பிடித்து நன்றாக அழுத்திக் கொண்டு 'இனிமேல் என்னை ஏமாற்றத் தங்களால் முடியாது; தங்களைப் பிடித்துவிட்டேன்' என்று சொன்னாள். பின்னும் அவள் பேசத்தொடங்கினாள். 'தாம் பெருத்த அயோக்கியர் என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். தாங்கள் விழித்திருக்கும் போதே உறக்கங்கொண்டவர் போலப் பாசாங்கு செய் கின்றீர்கள். பகல் இரவு என்ற காலத்துக்கு அதீதமானவர் தாங்கள்; சதாசர்வகாலமும் ஜாக்கிரதையாகக் கண்விழித் துக்கொண்டிருக்கின்றவர்; சத்து சித்து ஆனந்தமிவைகளைப் பூரணமாகப் பெற்றவர். அவ்விதமிருந்தும்கூட உறங்கவும்

குறட்டைவிடவும் பாசாங்கு செய்கின்றீர்களே! தாங்கள் அயோக்கியத் தன்மையை யுடையவ ரல்லவா?"

அதற்குக் கிருஷ்ணன் மறுமொழி பின்வரும் விதமாகக் கூறினுன்—ஆம்! நான் அயோக்கியன்தான். யார் என்னை அயோக்கியன் என்று எண்ணிக்கொள்ளுகிறார்களோ அவர் களனைவருக்கும் நான் அயோக்கியனே.

**ராதை:**—தாங்கள் பொய்யர். உலகத்தில் இந்தப் பொய்யைத் தாங்கள் படைத்திருக்கின்றீ ரல்லவா?

**கிருஷ்ணன்:**—நான் பொய்யன்தான்; அதையும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். நான் முழுவதிலும் பொய்யனல்ல. ஏனெனில் பொய்பேசுகின்றேன் என்பதை ஒத்துக்கொள் வதனுல் மெய்யையே பேசுகின்றேன். இதுவும் தவிர, என்னை நாடித் தேடுவார்களிடம் நான் பொய்பேசுவது கிடையாது. அவர்கள் பொய்யனைக் கண்டதும் உலகத்தின் பொய்மறைந் தொழிந்து விடுகின்றது.

**ராதை:**—தாங்கள் ஏமாற்றுகிறவர் என்பதையும் முழு மனதாக ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனென்ருல் தங்களி னின்றும் நாங்கள் வேறு என்ற எண்ணத்தால் எங்களை ஏமாற்றி யிருக்கின்றீர்.

**கிருஷ்ணன்:**—நான் பெருத்த ஏமாற்றக்காரனே! ஆனுல், நான் யாரை ஏமாற்றுகின்றேன் என்ருல் யாரொரு வன் தான் வேறு என்று எண்ணுகின்ருனே அவன் தானுக ஏமாற்றப்படுகின்ருன். அப்படிப்பட்டவன் பின்னும் ஏமாற்றத்தை யடைய விருப்பமுடையவனு யிருப்பான்.

**ராதை:**—தேவரீர் கள்வர் என்பதை ஒப்புக்கொள்வீர். ஏனென்ருல் மனிதர்களிடமிருந்து தாமே தம் நிலை அறியும் ஆனந்தத்தை மாயையினுல் மறைத்துக் களவாடுகின்றீர்.

கிருஷ்ணன்:—நான் சாதாரணமான கள்ளனல்ல; ஆனால் கள்ளர்களின் தலைவனாவேன். வேதங்கள் முறையிடும் வண்ணம் நான் தஸ்கரானாம் பதி யாகின்றேன். நான் யாரைக் களவாடுகின்றேன் தெரியுமா? தன் ஆத்ம ஜாக்ரதையற்றிருப்பவர்களையே களவாடுகின்றேன்.

ராதை:—இதுமட்டுமா? தேவரீர் கொடூர சிந்தையும், ஈவு இரக்கம் பச்சாதாபம் முதலியவைகளற்றவர் என்றும் கண்டிப்பாய்க் கூறுவேன். பிராணிகள் மிகவும் வருந்தி அவஸ்தைப்படுவதைக் கண்டு பரிதாபப்படாமல் சந்தோஷங் கொள்ளும் இயல்பினையுடையவர் தாங்கள்: எது தமக்குச் சந்தோஷத்தையும் கொண்டாட்டத்தையு மளிக்கின்றதோ அது பிராணிகளுக்கு மரணத்தை யளிக்கக்கூடியது.

கிருஷ்ணன்:—உண்மையே; என் விஷயத்தில் கொடுமையாக இருக்கிறவர்களுக்கெல்லாம் நானும் கொடூரமாகவே இருப்பேன். உலகப்பற்றில் உழலும் மாந்தருக்கெல்லாம் கொடியவனாகவே யிருப்பேன். இன்னும் ஆத்ம ஹானி செய்வோர்கட்கும் கடுமையாகவிருப்பேன். இதில் இன்னும் ஒரு விசேஷமிருக்கின்றது. நான் கொடுமையாக விருந்தாலும் பட்சமாக இருப்பேன். துக்கத்திலும் கூட சுகமிருக்கின்றதல்லவா? இதோடு கூட எல்லாரையும் காலக்கிரமத்தில் என் பக்கம் சேர்த்துக்கொள்ளுகின்றேன். எவரையும் கவனிக்காமலும் ஆதரிக்காமலும் நான் விட்டுவிடுவதில்லை. பிரபஞ்சத்தின் கண்ணுள்ள சகல சராசரப் பொருள்களையும் நான் காப்பாற்றி ஆதரித்து வருகின்றேன் ஆகையினால் அவைகளின் க்ஷேமமே எனது முக்கியமான தொழில்.

ராதை:—தாங்கள் வியபிசாரத்துவம் உடையவர். தங்களுக்கு இன்பக்கிழத்தியர்கள் பலருண்டு. சமுத்திரக் கரையிலுள்ள மணலை எண்ணினாலும் எண்ணிவிடலாம்; தம்முடைய காதலிகளைக் கணக்கிட்டுப் பார்க்கவோ முடியாது.

கிருஷ்ணன்:—நான் வியபிசாரத்தின் உருவே யானவன் என்று ஒப்புக்கொள்ளுகின்றேன். பிரபஞ்சத்தின் கண்ணுள்ள சகலபொருளும் என்னுடைய குழந்தைகளே. அவைகளிலுள்ள ஒவ்வொரு ஆன்மாவும் என்னுடைய பிரேமை வாய்ந்த காதலியாகும். அவர்களுடன் நான் வேடிக்கையாக விளையாடுகின்றேன்; முகஸ்துதி செய்கின்றேன்: ஹிம்சை செய்கிறேன் ; பரிகாசம் செய்கிறேன். இவ்விதம் மாறிமாறி செய்து வருகிறேன். அவர்கள் தாங்களே மேலானவர்களென்றும் அகங்காரங்கொண்டுள்ளவரையில் மேற்கூறியபடி அவர்களுக்கு அவஸ்தைகளை யுண்டாக்கிக் கொண்டுவருவேன். நீ இப்பொழுது என்னை நேசிப்பதுபோல அவர்களும் என் பொருட்டு நேசித்தார்களானால் அவர்களெல்லோரையும் என்னில் ஐக்கியப் படுத்திக் கொள்ளுவேன்.

இவ்விதமாகக் கிருஷ்ணன் ராதை கூறியவைகளெல்லாவற்றினையும் ஒத்துக் கொண்டு மிகச் சாந்தமாகவும், சாதுர்யமாகவும் மறு மொழி பகர்ந்தான். அவைகளைக் கேட்டு ராதை மிகவும் களி கூர்ந்தாள். "என் தெய்வமே! தாங்கள் அயோக்கியராய் இருப்பதைக்காண மகிழ் வெய்துகின்றேன். தேவரீர் பொய்யராயும், ஏமாற்றுகிறவராயும், கொடியவராயும், வியபிசாரியாகவும் இருப்பதை உணர மிகவும் சந்தோஷப்படுகின்றேன். தாங்களே நானுகவும், நானே தாங்களாகவும் பேத மின்றி அபேதமாக இருப்பதைத் தெரிந்து கொண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்று உரைத்தாள்.

வாசகர்களே! மேல் விவரிக்கப்பட்ட விஷயங்களை நன்ருகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். அவ்விதம் தெரிந்து உணர்ந்த பிறகு அதைக் குறித்துத் தர்க்கம் செய்ய வேண்டுமானல் செய்யலாம். ராதை தான் கிருஷ்ணனை

வென்று விட்டதாகக் கர்வத்தால் எண்ணிய போது அவள் கிருஷ்ணனை ஜெயிக்கவில்லை. அவளால் ஜெயிக்க முடியாமற் போய் விட்டது. தன்னுடைய கர்வத்தையும் ஆணவத்தையும், ஆடம்பரத்தையும், அகங்காரத்தையும் ஒழித்து விட்டு மிக்க அடக்க வணக்கத்துடன் இருந்த போது தான் கிருஷ்ணனை அடைந்தாள். அடைந்தது மட்டுமா? தானே கிருஷ்ணனாக மாறி விட்டாள். உபநிஷத்து வாக்கியங்களில் உரைக்கவேண்டுமானால் பின் வரும் விதமாகக் கூறலாம் "எவனொருவன் பிரம்மத்தைத் தான் தெரிந்து கொள்ள வில்லை என்றெண்ணுகின்றானோ அவனே பிரம்மத்தை அறிந்தவனாகின்றான். பிரம்மத்தைத் தான் தெரிந்து கொண்டதாக எவன் நினைக்கின்றானோ அவன் பிரம்மத்தைத் தெரிந்து கொண்டவனாக மாட்டான்."

அயோக்கியதை, பொய், ஏமாற்றம், களவு, குரூரம் முதலிய குணங்களைப் பெற்றும் ஜார சோர சிகாமணி என்ற பெயரை வகித்துமுள்ள கிருஷ்ணன் மீது நம்மவர்கள், கொண்டிருக்கும் அன்பும், வாஞ்சையும், காதலும், பக்தியும் செப்பத்தரமன்று. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய மனோபீஷ்டத்திற்குத் தகுந்தபடியாக கிருஷ்ணனை வழிபடுகின்றார்கள். ராதை கிருஷ்ணன் மீது கொண்டுள்ள காதல் எத்தகையதாக விருந்தது என்பதை நம் வாசகர்கள் ஒருவாறு தெரிந்து கொண்டிருப்பார்களென்று நம்புகிறோம்.

## ௰அ. ஆண்டாள்—அரங்கநாதர்.

வில்லிப்புத்தூரில் விஷ்ணுசித்தர் என்னும் வேத வேதியர் பெருமாள் மீது அத்தியந்த பக்தி பெற்று வாழ்ந்து வந்தார். அவர் பகவானுக்குக் கைங்கர்ய மியற்றுவதில் ஈடுபட்டுத் தமது காலத்தைக் கழிப்பாராயினர்.

மிதிலைக்குச் சக்ரவர்த்தியாக விளங்கியவரும், மகா தத்துவசிகாமணியுமான ஜனகர் யாக சாலைக்காகப் பொன் ஏர் கட்டி உழும்போது உழுபடைச் சாலில் ஒரு பெண்மகவைக் கண்டெடுத்து சீதை யென நாமகரணமிட்டு வளர்த்து வருவாராயினர். சீதை யென்னும் மங்கையர் திலகத்தையே பின்னால் சக்ரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீராமன் மணஞ் செய்து கொண்டான். அது போலவே, விஷ்ணுசித்தர் பகவானுக்குப் ப்ரீதியான திருத்துழாய் உண்டாக்கப் பூமியைக் கிளறிக்கொண்டிருக்கும் போது அந்தயிடத்தில் கோடி சூரியப் பிரகாசம்போன்ற ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்துத் தமக்கு வேறுமகப் பேறில்லாமையால் மிக்கச் செல்வமாக வளர்த்து வருவாராயினர். முன்னே கூறியுள்ளபடி ஸ்ரீமகா விஷ்ணுவிற்குப் பூமகளிடமே அத்தியந்த பிரேமை என்ற விஷயம் இங்கு கூட சிறப்பாகப் பொருந்தியிருக்கின்றது.

விஷ்ணுசித்தர் கண்டெடுத்த குழந்தைக்குக் கோதை என்பதாகப் பெயரிட்டுப் போஷித்து வரலானர். கோதை மிகச் சிறியவளாக இருக்கும்போதே மகா விஷ்ணுவிடத்தில் அதிகமான பக்தி கொண்டவளாக இருந்தாள். எப்பொழுது பார்த்தாலும் ஸ்ரீகிருஷ்ணனைத் தியானித்த வண்ணமாக

இருப்பாள். சிறு குழந்தைப் பருவத்திற்கு ஏற்ற விளையாடல்களான "மலர்க்கொய்யுதல்" சிற்றில் கட்டுதல் முதலியவைகளிலும் கூட கண்ணனை நினைத்துப் பாடிப் பரவுவாள்.

"இன்றுமுற்று முதுகுநோவ வருந்திழை விச்சிற்றிலை
நன்றுங்கண்ணுற நோக்கிநாங் கொளுமார் வந்தன்னைத்
[துணிகிடாய்
அன்றுபாலகனாகி யாலிலை மேற்றுயின்ற வெம்மாதியாய்
என்றுமுன்றனக் கெங்கண் மேவிரக்க மெழாததெம்பாவமே."

"குண்டு நீருறை கோளரிமதயானை கோள்விடுத்தா யுன்னைக்
கண்டுமாலுறு வோங்களைக் கடைக்கண் களாலிட்டு வாதியேல்
வண்டனுண் மணற்றெள்ளி யாம்வளைக் கைகளாற் சிரமப்
[பட்டோம்
தெண்டிரைக் கடற்பள்ளியா யெங்கள் சிற்றில்வந்து
[சிதையேலே!

"பெய்யுமாமுகில் போல்வண்ணா! உந்தன்பேச்சுஞ் செய்கையு
[மெங்களை
மையலேற்றி மயக்கவுன் முகமாய மந்திரந்தான் கொலோ!
நொய்யர் பிள்ளைகளென் பதற்குன்னை நோவநாங்களுரைக்
[கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள்சிற்றில் வந்து
[சிதையேலே!

"பேதைநன் கறிவார்களோடிவை பேசினாற் பெரிதென் சுவை
யாதுமொன்றறியாத பிள்ளைகளோமை நீ நலிந்தென் பயன்?
ஓதமாக்கடல் வண்ணா? உன் மணவாட்டிமாரொடு சூழ்தரும்
சேது பந்தத்திருத்தினா யெங்கள் சிற்றில்வந்து சிதையேலே!

"வட்டவாய்ச் சிறுதூதையோடு சிறுசுளகு மணலுங் கொண்டு
இட்டமாய் விளையாடு வோங்களைச் சிற்றிலீடழித் தென்பயன்?
தொட்டுதைத் துனியேல் கண்டாய்! சுடர்ச்சக் கரங்கையி
[லேந்தினாய்!
கட்டியுங் கயிற்றுலின் னாமையறிதியே கடல் வண்ணனே!

முற்றத்தூடு புகுந்து நின்முகங் காட்டிப் புன்முறுவல் செய்து
சிற்றிலோடெங்கள் சிந்தையுஞ் சிதைக்கக் கடவையோ?
[கோவிந்தா!
முற்றமண்ணிடந்தாவி விண்ணுற நின்றளந்து கொண்டாய்!
[எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக் காலிந்தப்பக்க நின்றவரென்
[சொலார்?

"சீதைவாயமுதமுண்டாய்! எங்கள் சிற்றில் நீ சிதையேலென்று
வீதிவாய் விளையாடு மாயர் சிறுமியர் மழலைச்சொல்லை
வேதவாய்த் தொழிலார்கள் வாழ்வில்லிபுத்தூர் மன்விட்டு
[சித்தன் றன்
கோதைவாய்த் தமிழ்வல்லவர் குறைவின்றி வைகுந்தஞ்
[சேர்வரே!

கோதை தன்னுடைய வயதொத்தச் சிறு பெண்களோடு மணலில் சிறு வீடு கட்டி விளையாடி வரும் போது கண்ணன் அந்தச் சிற்றிலைச் சிதைப்பதாக எண்ணிப் பாடுகின்றாள். அன்றையதினம் முதுகெல்லாம் வலி யெடுக்கும் படி அவ்வளவு சிரமப்பட்டுக் கட்டிய சிற்றில்லாகும். உலகப்பிரளய காலத்தில் நீ பாலகனாகி ஆலிலை மேல் துயில்கொண்ட எம் ஆதியாய்! பேதையாகிய எங்கள்மீது தமக்கு இரக்கம் உண்டாகாததேன்? அதுவும் எங்களது பாவமோ? தெள்ளிய அலை கடலில் பள்ளிகொண்டிருக்கும் தேவனே! உன்னைக்கண்டு மையலுறுகின்ற எங்களைக் கடைக் கண்ணால் பார்த்து வாட்டவேண்டாம். வளையலணிந்துள்ள சின்னஞ் சிறிய கைகளினால் கட்டி முடித்த சிற்றிலைச் சிதைக்க வேண்டாம். முகில்வண்ணா! உனது பேச்சும் செய்கையும் எங்களை மயக்கி மையல் கொள்ளும்படிச் செய்து விட்டனவே! உன்னுடைய முகம் என்ன மாய மந்திரம் பெற்றுள்ளதா என்ன? சிவந்த தாமரைக் கண்களையுடையவனே! எங்கள்

சிற்றிலைச் சிதையாதே. கடல்வண்ணா! மணலினால் சிற்றில் சமைத்து விளையாடும் எங்களது சிற்றிலை அழிப்பதால் என்ன பலனை நீ அடையப்போகின்றாய்! என் கோவிந்தா! உன் முகத்தைக் காட்டிப் புன்சிரிப்பு சிரித்து எங்களுடைய சிற்றிலைச் சிதைத்தது போதாதென்று எங்களுடைய சிந்தையையும் சிதைக்கக் கடவாயோ? முன்னொருகால் பூமியையும் வானத்தையும் அளந்துகொண்டவா? அத்தகைய சாமர்த்தியம் பொருந்திய நீ பேதையாகிய எங்களிடத்தில் பிணக்கு செய்தால் பக்கத்திலுள்ளவர்கள் பரிகாசம் செய்யமாட்டார்களா? சீதையின் கனிவாயிதழ் முத்தம் பெற்றவனே! எங்களுடைய சிற்றிலைச் சிதையாதே யென்று விளையாடும் சிறுமியராகிய எங்களுடைய மழலைச் சொல்லை வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தன் மகள் கோதை வாய் மொழியால் சொன்னாள். (இந்த மொழிகளைக் கற்று வல்லவர்கள் யாதொரு குறையுமின்றி வைகுந்தம் சேர்வார்கள்.)

இவ்வண்ணம் கோதை கிருஷ்ணன் மீது மிக்க பிரேமை பாராட்டி சதா சர்வகாலமும் அவனைத் தியானித்துக் கொண்டிருந்ததால் உறக்கத்திலும் அவனையே மணம் புரிவது போலும் கனவு காண்பாள். தான் கண்ட கனவின் மாட்சியைப் பற்றித் தன் தோழியினிடத்தில் சொல்லிச் சொல்லி மனம் சாந்திப் பெறுவாள்.

"வாரண மாயிரஞ் சூழவலஞ் செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரண நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

"நாளை வதுவை மண மென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற் கீழ்
கோளரி மாமனன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

" இந்திரனுள்ளிட்ட தேவர் குழா மெல்லாம்
வந்திருந் தென்னை மகட் பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்திரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

" நாற்றிசைத் தீர்த்தங் கொணர்ந்து நனி நல்கிப்
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாண் டெடுத் தேத்தப்
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னைக்
காப்பு நான் கட்டக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

" கதிரொளி தீபங்கலசமுட னேந்திச்
சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள
மதுரையார் மன்னனடி நிலை தொட்டெங்கும்
அதிரப்புகுதக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

" மத்தளங் கொட்ட வரிசங்க நின்றூத
முத்துடைத் தாமநிரை தாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துன னம்பி மது சூதன் வந்தென்னைக்
கைத் தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

" வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணற் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சின மாகளிறன்னான் என் கைபற்றித்
தீவ லஞ் செய்யக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

" இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயண நம்பி
செம்மையுடைய திருக் கையான் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

" வரிசிலை வாள் முகத்தன்னைமார் வந்திட்டு
எரி முகம் பாரித் தென்னை முன்னே நிறுத்தி
அரிமுக னச்சுதன் கைமேல் கை வைத்துப்
பொரி முகந்தட்டக் கனாக் கண்டேன் தோழீ ! நான்.

"குங்கும மப்பிக் குளிர் சாந்த மட்டித்து
மங்கல வீதி வலஞ் செய்து மணநீர்
அங்கவ னோடும் உடன் சென்றங் கானை மேல்
மஞ்சன மாட்டக் கனக் கண்டேன் தோழீ! நான்.

கோதை தான் கண்ட கனவில் மணவினைச் சடங்குகள் ஒவ்வொன்றும் தவறாமல் தன் தோழிக்கு உரைத்தாள். கலியாணத்திற்குப் பந்தலிடப்பட்டது முதல் விவரமாக சங்கீத வாத்தியங்கள் மற்றுமுள்ள யெல்லாவற்றினையும் வரிசைக் கிரமமாகக் கூறினாள். இவ்வித ஏற்பாடுகளை யெல்லாம் தன் தோழிக்கு உணர்த்தினாள். பிராமணர்கள் மந்திரம் ஓதவும், நாணல் படுத்தி ஓமம் வளர்த்தி தன் கணவன் தன் கைபற்றித் தீவலஞ் செய்த விதத்தையும் அழகாகக் கூறினாள். அதன் பின்பு கோவிந்தன் தன் தாள்பற்றி அம்மி மிதிப்பது போலவும், தன் கைமேல் பொரி வைத்துத் தட்டுவது போலவும் கனவு கண்டதை உரைத்துக் கடைசியில் மண முடிவாகிய வசந்தமாடுவதையும் பாங்காக மொழிந்தாள். இவைகளினால் கோதை கோவிந்தனை எவ்வளவு காதலித்திருந்தாள் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது.

நிற்க, விஷ்ணு சித்தர் தினமும் மாலை தொடுத்துப் பெருமாளுக்குச் சமர்ப்பிப்பார். அவர் தொடுத்த மாலையை அவர் அறியாமல் கோதை அணிந்து தன் அழகைக் கண்ணாடியில் பார்த்து ஆனந்தப்படுவது வழக்கமாக இருந்தது. இந்த சங்கதி பட்டர்பிரானுக்குத் தெரியவாது. அந்த மாலையைப் பெருமாள் அன்புடனேற்று மகிழ்ந்து வந்தார். ஒருநாள் கோதை அந்த மாலையை அணிந்து கொண்டிருக்கத் தான் பார்த்து, 'கோதாய்! என்ன காரியஞ் செய்து விட்டாய்! அபசாரமன்றோ இழைத்து விட்டாய்! நாம் அணிந்து பகவானுக்குச் சாத்தலாமோ மாலையை! இனி அம்மாதிரி செய்

யாதே' என்று புத்தி கூறி அன்றைய தினம் மாலையைப் பெருமாளுக்குச் சாத்தாமல் இருந்து விட்டார். அன்றைய இரவு பட்டர் நித்திரை கொண்டிருக்கும் சமயத்தில் பெருமாள் அவருடைய கனவிற் தோன்றி 'அன்று மாலை தனக்குச் சாத்தாததன் காரணத்தைத் தான் அறிவதாகவும்; கோதை சூடிக் கொடுக்கும் மாலையே நான் விரும்புவதாகும்; ஆகவே, இனிமேல் அவள் சூடிய மாலைகளை நீ எனக்குச் சமர்ப்பிக்கவேண்டும்' என்று சொல்லி மறைந்து விட்டார். அதுபோல விஷ்ணு சித்தரும் செய்துவந்தார். அது முதல் கோதைக்குச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும் சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் பெயர்கள் வழங்கலாயின. பட்டர் பிரான் கோதையைச் சாக்ஷாத் பூதேவி என்பதாக எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். கோதையை ஆண்டாளே எனக் கூறி களிப்பெய்தார்.

விஷ்ணு சித்தர் எவ்வளவுக் கெவ்வளவு கோதையின் மாட்சிமைக்கு மகிழ்ச்சி யடைந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அவளுக்குக் கணவனைச் சம்பாதிக்கச் சஞ்சலப்பட்டார். யாதொரு வழியும் தோற்றுதபடியினால் அவர் தன் புத்திரியைக் கூப்பிட்டு அவள் மனத்திலுள்ளதை அறிந்து கொள்ள 'கோதாய்! நீ யாரை உன் கணவனாகத் தேர்ந்தெடுத்துளாய். அதைச் சொல் பார்ப்போம்!' என்று கேட்டார். அதற்கு அம்மங்கையர் திலகம் 'எந்தாய்! அடியாள் வரித்திருக்கும் கணவர் திருவரங்கத்து எம்பிரான் தான், அவரையே நான் மணம்புரிவேன். மனதைக் கவர்ந்த காதலர் அவரேயாகும்; என்னரங்கத்தின் இன்னமுதர் குழலழகர்; கண்ணழகர்; கொம்பூழில் எழுகமலப் பூவழகர். திருவரங்கத்துச் செல்வரையே திருமணம் புரிவேன்' என்பதாகக் கூறிவிட்டாள். அவ்வார்த்தைகளைப் கேட்டு விஷ்ணு சித்தர் பெரிதும்

கவன்றார். அந்த விவாகம் எப்படி நிறைவேறப் போவது என்பதாக ஆலோசித்து ஒரு முடிவுக்கும் வராதிருந்தார்.

சூடிக்கொடுத்த சுடர் கொடியாளுக்கோ பின்னும் காதல் நோய் வருத்தத் தலைப்பட்டது. கண்ணன்மீது கடுங்காதல் கொண்டிருந்ததால் கோதையைத் தகிக்க ஆரம்பித்தது. அந்த நோய்க்குக் காரணமாக விருந்தவர் எவரோ அவராலேதான் அது குணப்படவேண்டும் என்றும் அவள் உணர்ந்திருந்தபடியினால் அவருக்குச் சொந்தமாக விருக்கும் பொருள்களைக் கொண்டாவது தணியுங்கள் என்று தன் தோழிகளுக்கு உரைக்கின்றாள்.

"கண்ணனெனும் கருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனைப்,
புண்ணிற்புளி பெய்தார்ப்போலப்புற நின்றழகு பேசாதே
பெண்ணின் வருத்த மறியாத பெருமானரையிற் பீதக
வண்ண வாடை கொண்டென்னை வாட்டந்தணிய வீசிரே.

"பாலாலிலையிற்றுயில் கொண்ட பரமன் வலைப் பட்டிருந்தேனை
வேலாற்றுன்னம் பெய்தாற் போல் வேண்டிற்றெல்லாம் பேசாதே
கோலானிரை மேய்த்தாயனாய்க் குடந்தைக் கிடந்தகுடமாடி
நீலார் தண்ணந்துழாய் கொண்டென் னெறிமென் குழன்மேற்
[சூட்டிரே.

"கஞ்சைக் காய்ந்த கருவில்லி கடைக் கண்ணென்னுஞ் சிறைக்
[கோலால்
நெஞ்சூருவ வேவுண்டு நிலையுந் தளர்ந்து நைவேனை
அஞ்ச லென்னனவனொருவனவன் மார்பணிந்த வனமாலை
வஞ்சியாதே தருமாகில் மார்பில் கொணர்ந்து புரட்டிரே.

"ஆரேயுலகத்தாற்றுவார்? ஆயர்பாடி கவர்ந்துண்ணும்
காரேறுழக்க வுழக் குண்டு தளர்ந்து முறிந்துங் கிடப்பேனை
ஆராவமுத மனையான் தன முதவாயினூறிய
நீர் தான் கொணர்ந்து புலராமே பருக்கியிளைப்பை நீக்கிரே.

"அழிலுந் தொழிலுமுருக்காட்டா நெஞ்சே லென்னுனவனொருவன்
தழுவி முழுகிப் புகுந்தென்னைச் சுற்றிச் சுழன்று போகானல்
தழையும் பொழில்வாய் நிரைப்பின்னே நெடுமோலூதிவருகின்ற
குழலின் துளைவாய் நீர் கொண்டு குளிர முகத்துத்தடவீரே.

"நடை யொன்றில்லாவுலகத்து நந்தகோபாலன் மகனென்னும்
கொடிய கடிய திருமாலார் குழப்பக் கூறுகொளப்பட்டுப்
புடையும் பெயரகில் லென் நான் போடக்கன் மிதித்தவடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசீர்காள் போகாவுயிரென்னுடம்
[பையே.

"வெற்றிக் கழலுக் கொடியான் தன் மீமீதாடா வுலகத்து
வெற்ற வெறுதே பெற்றதாய் வெம்பேயாக வளர்த்தாளே
குற்ற மற்ற முலை தன்னைக்குமான் கோலப்பணைத் தோளோடு
ஒற்ற குற்றமவைதீர அணைய வமுக்கிக் கட்டீரே.

"உள்ளே யுருகி நைவேனை உள்ளோ இலளோ வென்னுத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனென்றில்லாத கோங்கை தனைக் கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பினேறித் தென் அழலைத்தீர்
[வேனே"

கண்ணனை என் அகக் கண்ணினாலே பார்த்துப் பார்த்து பழகி யிருக்கின்றவளாதலால் அவரது அழகை மேன்மேலும் பேசினல் புண்ணிற் புளி பெய்ததுபோலப் பின்னும் என் நோய் அதிகரிக்கின்றது. நான் படும் வருத்தத்தைச் சற்றும் அறியாத என் பெருமானுடைய பீதக ஆடையைக் கொண்டு என் காதல் அழல் தணிய வீசுங்கள்: திருப்பாற் கடலில் அரவணை மீது அறிதுயில் கொள்ளும் பரமனது வலையில் பட்டிருந்தேன். என் மீது அம்பெய்தது போல வேண்டிய தெல்லாம் பேசாதேயுங்கள். அழகு பொருந்திய ஆனிரையை மேய்க்கும் கோவிந்தனது தண்மை பொருந்திய துழாய் கொண்டு என் கூந்தலிற் சூட்டுவீராக. கடைக்

கண்ணென்னும் சிறைக்கோலால் என் மனத்தில் ஊடுருவிப் பாய்ச்சியதால் என் நிலை தளர்ந்து வருந்துகின்றவளை அஞ்சனவண்ணன் மார்பில் அணியும் வனமாலையைக் கொண்டுவந்து எனது மார்பகத்தில் புரட்டுங்கள். அதனுலாவது காதல்நோய் தணியும் என்றெண்ணுகின்றேன். ஆராவமுதன் வாயிலூறிய அமுத நீரைக்கொண்டு என் களைப்பினை நீக்குவீர்களாக. ஆனிரை பின்னே நெடுமால் குழலூதி வருகின்றான். அக்குழலின் துளைவாயில் தங்கியிருக்கும் நீரையாவதுகொண்டு வெந்தணலால் எரியும் முகம் குளிர்ச்சி பெறத்தடவுங்கள். அல்லது திருமால் நடந்து சென்றவழியில் அவர் பாதச் சுவடுபட்ட மண்ணையாவது கொண்டுவந்து என் உடம்பின்மீது பூசுவீர்களாக. எனது குற்றமற்ற கொங்கைகளை அழகுபொருந்திய மணிவ்ண்ணனது தோளிலணைத்து அமுக்கிக் கட்டிவையுங்கள்". இவ்வளவு சைத்தியோபசாரம் செய்தும் தணியாத காதல்நோய்கொண்டு நைந்துருகினள். கோவர்த்தனனை தான் காண நேர்ந்தால் "கொள்ளும் பயனொன்றுமில்லாத தன் கொங்கைதனை அடியோடு கிள்ளி எடுத்து அவன்மீது வீசியெறிந்து என் காதல் நோயைத் தீர்த்துக்கொள்ளுவேன்", என்றிவ்வண்ணமாகக் கூறி அரங்கநாதன்மீது தனக்குள்ள காதலை வார்த்தைகளாலும் இனியபாட்டுக்களாலும் வெளியிட்டாள்.

பட்டர்பிரானது கனவில் அணியரங்கர் தோன்றி 'கோதையை நாம் விரும்பி பிராட்டியாக அங்கீகரித்தோம். ஆகையால் அவளை எம்மிடம் அழைத்துவர வேண்டும். நீர் உமது கவலையை ஒழியும். உம்மை எனது மாமனாராகக்கருதி ஏற்றுக்கொள்ளுகின்றேன்' என்றுரைத்தார். அந்தச்சமயம் பட்டர்பிரான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையுமுண்டோ?

அடுத்தநாளே ஸ்ரீரங்கத்திலுள்ள அர்ச்சகர்களுக்கும் அரங்கநாதர் கனவில் தோன்றி 'வில்லிபுத்தூருக்குத் தகுந்த

திருப்பல்லக்கு முதலிய ஆடம்பரத்துடன் சென்று கோதை நாயகியை அழைத்துவரும்படிக்கு ஆக்யாபித்தார். அது போலவே பிரதான அர்ச்சகரும் மற்றவரும் வில்லிபுத்தூருக்குச் சென்று கோதை நாயகியை பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி ஸ்ரீரங்கம் பெரியகோயிலுக்கு கொண்டுபோயினர். கோதை தன் எண்ணம் நிறைவேறப்போவதையும், அரங்கநாதரது அருள் தாமதித்துவந்தாலும் கட்டாயம் கிடைக்கும் என்ற உறுதியினுலும் உவகை பூத்தாள். தன் மனதைப் பொறுக்கும்படிக்கு நற்புத்தி சொன்னாள். என்ன தான் அவள் அடக்கிக்கொண்டாலும் அவளது இதயம் படபடவென்றடித்துக் கொண்டிருந்தது. விழிகள் அரங்கநாதனது அழகிய மேனியைக்காண அலைந்துகொண்டிருந்தது.

கோதை கோயிலை அடைந்ததும் தக்க மரியாதைகளுடன் உள்ளே அழைத்து வரப்பட்டாள். அரங்கநாதனது எதிரில் வந்து நின்றாள். சற்று நேரம் தேகம் பரவசமடைந்து அப்படியே நின்றுவிட்டாள். அவளது வாயினின்றும் ஒரு வார்த்தையும் எழுந்தில. அவ்விதம் மயங்கியிருந்த கோதையை அரங்கநாதர் தன்னிடம் வரக் கூப்பிட்டார். அவரது ஆக்ஞையை எதிர்பார்த்த கோதைநாயகியும் விரைவாக அவரிடம் சென்று அரவணையின் மேல் ஒருகால்வைத்து வேகமாக ஏறினாள். அதைத்தான் எல்லோரும் கண்டார்கள். அவள் அரங்கநாதருள் ஐக்கியமாகிவிட்டாள். அரங்கநாதன் வேறு கோதை வேறு என்பதில்லாமல் தன்னிலே அவளைக் கலந்து கொண்டார். என்னே அவரது அன்பு? அவரது கருணை தான் என்னே; என்னே!

ராதை கிருஷ்ணனாக மாறினாள். ஆனால், கோதையோ எனில் அரங்கநாதரில் ஒன்றெனக்கலந்து கொண்டாள்.

---

## ௰௬. கங்கா—சந்தனு

பூர்வ காலத்தில் குருநாட்டுச் சக்ரவர்த்தியாயும், சந்திர வம்சத் தோன்றலாயுமுள்ள சந்தனு என்பவன் அஸ்தினபுரத்தில் வாழ்ந்து வந்தான். அவன் பிரதீபன் என்ற பார்த்திபனது புதல்வன்; பராக்கிரமசாலி; சகலவிதமான அஸ்திர சஸ்திரங்களிலும் பயின்று தேர்ந்தவன்; அழகிலும் ஆண்மையிலும் மிகுந்தவன்; மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவித்து ராஜ்யபாரம் வகித்து வந்தான்.

அவ்விதமாக யாவரும் போற்ற வாழ்ந்து வருநாளையில் ஒருநாள் சந்தனு கானக வேட்டைக்குப் போயிருந்தான். அதனால் அவன் களைத்துப் போனதால் தன் தாக விடாயைத் தீர்த்துக் கொள்ளவும் சிரம பரிகாரஞ் செய்துகொள்ளவும் கங்கைநதிக் கரையை நோக்கிச் சென்றான். அந்நதியின் பெருக்கி னழகைக் கண்ட வண்ணமே வெகு தூரம் சென்று அங்கிருந்த ஒரு அழகிய பூஞ்சோலையினுள்ளே நுழைந்து மேற்சென்று கொண்டிருந்தான்.

"மருவருங் குழல்விழி வதனம் வார்குழை
யிருதனந் தோள்கழுத் திதழொ டின்னகை
புருவம் வண்புறவடி பொற்பப் பாவையர்
உருவுகொண்ட னடன துடைமை தோன்றவே"—

"கங்கையின் வெள்ளமேற் கருத்து மாறியிம்
மங்கைதன் பேரொளி வனப்பின் வெள்ளமே
தங்கிய சோகமுந் தாபமுங் கெடப்
பங்கய விழிகளாற் பருகினனரோ"

சந்தனு அப் பூங்காவின் கண் ஒரு மங்கையைக் கண்டான். அவளது அங்க அமைதிகளையும் உருவ நிதானத்தையும் கண்டு வியப்படைந்தான். கங்கை நதியின்மீது அது

காறும் கவனங் கொண்டிருந்தது பறந்துபோய் விட்டது. அப்பொழுது அங்கு நின்றிருக்கும் மங்கை நல்லாளின் வனப்பாகிய வெள்ளத்தில் அது சமயம் அவனது நோக்கம் சென்று லயித்துவிட்டது. அவளை விழித்து நோக்கியபடியினாலாவது தான் கொண்ட தாபம் குறையுமோ என்று எண்ணினான். ஆனால் அது குறையாமற் அதிகரித்து விட்டது.

"வையக மடந்தை கொல்! வரைமடந்தை கொல்!
செய்ய பங்கயமலர்த் திருமடந்தை கொல்!
துய்யவண் கலைவிதச் சொன்மடந்தை கொல்!
ஐய முற்றனன் இவளார் கொலென்னவே"

"பூதேவியோ இவள்; மற்று மலைமகளோ யிவள்; தாமரை மலரில் வீற்றிருக்கும் அழகு பொருந்திய லக்ஷ்மியோ இம்மங்கை! அன்றி கலைவாணியோ! இவளாரோ தெரியவில்லையே" என்று சந்தேகப்பட்டான். அவ்விதம் ஐயமுற்றபின் சற்று தேற்றமடைந்தவன் போலக் கூறுவானாயினான்.

"கண்ணிமைத் திருநிலங் காலுந் தோய்தலால்
பெண்ணிவள் மானிடப் பிறப்பினளென
எண்ண முற்ற வளருகெய்தி யாவர்செய்
புண்ணிய நீயெனப் புகழ்ந்து போற்றினன்"

அவ்வடி வழகியின் தாமரை யொத்த மெத்தென்ற இரு பாதங்கள் நிலத்தில் தோய்ந்திருப்பதால் அவள் தேவ மாதல்ல வென்றும், மலைமகளல்ல வென்றும், திருமகளுமல்ல வென்றும் தெளிந்தான். அவ்விதம் தெளிந்து தேற்ற மடைந்த பின்னர் சற்று தைரியங் கொண்டு அவளருகில் சென்று 'தங்கத்தை யுருக்கி வார்த்து கடைந்தெடுக்கப்பட்ட பாவை போன்றவளே! சுந்தரம் மிகுந்தவளே! லக்ஷ்மியின்

பிறப்பினால் திருப்பாற்கடல் பெருமை பெற்றது போல நீ பிறந்ததால் எந்தக் குலம் பெருமையைப் பெற்றது ? உன்னைப் போன்று அழகும் சாயலும் மென்மையும் உடைய வேறொரு மங்கையை இதுகாறும் நான் கண்டவனே யல்ல. எத்தனையோ விண்மடந்தையர்களையும், மண்மடந்தையர்களும் கண்டிருக்கின்றேன். ஆனால் அவர்களெல்லாம் உன் அழகில் எம் மாத்திரம். உன்னுடைய கண்ணின் அழகு ஒன்றிற்கு அவர்களுடைய மொத்த அழகையும் உவமை சொல்லவும் முடியாதென்றால் உன்னுடைய வனப்பின் மேன்மையை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ '?

> " கன்னியே யாம்எனின், கடிகொள் பான்மையை
> என்னின்மற் றுயர்ந்தவர் இல்லை மண்ணின்மேல் ;
> உன்னினை வுரையென உசாவினன், இக்கல்
> மின்னிலை வடிகொள்வேல் வேந்தர் வேந்தனே "

' என் உள்ளங் கவர்ந்த காரிகையே ! நான் யார் என்பதையும், என் ஊர் எது என்பதையும் தெரிந்துகொண்டிருப்பாய். நான் சந்திர வமிசத்தவன், சந்தனு என் பேர். பல பார்த்திபர்கள் என் அடிபணியும் பாக்கியம் பெற்றவன். என் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற வந்த தேவதை நீ என்பதாக என் உள்ளத்தில் உன்னுகின்றேன். உலகத்தில் பிறந்துள்ள ஒருவன் உன்னை மனைவியாகப் பெறும் பாக்கியம் பெற்றிருப்பானேல் அவனே பலவிதத்திலும் உயர்ந்தவனாவான். எல்லா ஐச்வர்யங்களையும் ஒருங்கே அமையப் பெற்றவனாவான். நீ இதுகாறும் மணக்கோலத்தையுடையாதவளாக விருக்கும் பட்சத்தில் என்னை விவாகம் செய்து கொள்வாய். நான் உனக்குச் சரியான அழகையும், ஐச்வர்யத்தையும் பெற்றிருக்கின்றேன். என்னைவிட வேறெவனும் உனக்கு இணையாக மாட்டான். ஆகவே, நீ என்னை

மணஞ்செய்து கொள்ள மனங் கொள்ளவேண்டும்' என்று உரைத்து அவளது பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தான்.

சக்ரேச்வரனும், மன்மதாகாரமுமுடைய சந்தனு தன்னைப் புகழ்வதையும் தன்னுடைய மறு மொழியை மனத் தாங்கலுடன் கேட்க விரும்புவதையுங் கண்டு,

"நாணினள், ஒதுங்கினள் நதி மடந்தையும்;
பூணுறு முலைமுகம் பொருந்த நோக்கினள்;
சேணுறு தனதுமெய்த் தேசு போல்நகை
வாணில வெழச்சில வாய்மை கூறுவாள்"

அம்மங்கை தான் அதற்குமுன் அறியாத ஆடவர் தன்னிடம் பேசவும் அருகில் வருவதை யுணர்ந்து மிகவும் நாணி அவனுடைய பார்வையினின்றும் ஒதுங்க ஒரு மரத்தின் பாதி யுடலை மறைத்துக் கொண்டு நின்று தன் காலால் நிலத்தைக் கிளைத்துக் கொண்டே புன்முறுவல் பூத்தனள். அதன் பிறகு குயிலையும் வெட்கி யோடச் செய்யும் இனிய குரலில் 'வேந்தர் திலகமே! தேவரீர் எவ்விதம் என்பால் விருப்பங் கொண்டிருக்கின்றீர்களோ அவ்விதமே அடியாளும் விருப்பங் கொண்டிருக்கின்றேன். ஆனால், நான் தங்களை வரிக்க வேண்டுமானால் சில நிபந்தனைகட்கு உட்பட்டால் மட்டுமே அது நிறைவேறும். அந்த நிபந்தனைகட்கு உட்படாவிட்டால் நமது மணமும் கைகூடாது.

'இரிந்து மெய்ந் நடுங்கிட யாதியாது நான்
புரிந்தது பொறுத்தியேற் புணர்வலுன் புயம்
பரிந்தெனை மறுத்தியேற் பரிவொடன் றுனைப்
பிரிந்த கன்றிடு வனிப் பிறப்பு மாற்றியே.'

'நான் என்ன மெய்ந் நடுங்கும் செய்கையைச் செய்தபோதிலும் என்னை ஒன்றும் கேட்கக்கூடாது. என் செய்கையைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். அவ்விதம் இருந்தால் நான்

தங்களைப் புணர உட்படுவேன். எந்தச் சமயம் தாங்கள் என து செய்கைகளை மறுக்கின்றீர்களோ அந்தச் சமயம் என் பிறப்பை மாற்றிக்கொண்டு தங்களை விட்டு அகன்று விடு வேன். இன்னும் எனது பிறப்பு வளர்ப்பைப் பற்றியும் என் னைக் கேட்கக்கூடாது. இந்த நிபந்தனைகட்கு உட்படுவீராகில் இந்த க்ஷணமே நமதெண்ணம் கைகூடும்' என்றுரைத்தாள். அவள் கூறிய நிபந்தனைகளுக்கெல்லாம் ஒப்புக்கொண்டு 'கை தருகெனப் பெருங்காதலாளனும் உய்வரிதென விசைந்து உடன் படுத்தினன். 'என்னுயிரனையாய்! எனதுயிர், அரசு வாழ்வு என்பன யாவும் நின்னதே யாகும். யானும் நீ விரும் பும் வண்ணம் உன் ஏவற்படி நிற்பன்' என்று அஷ்டைசுவரிய மும் பொருந்திய மகிபனுன சந்தனு அவளை மணந்துகொள்ள மொழிந்தான்.

சந்தனு கங்கை யென்னும் திவ்வியப் பெயருடைய அம் மங்கையை மணந்து கொண்டு மணமும் மலரும் போலவும், இரதியும் மதனனும் போலவும் உலகத்தவர்கள் புகழ்ந்து கூற இனிதாக வாழ்ந்து வந்தார்கள். இவ்விதமாகச் சரச சல்லாப உல்லாசமாகக் காதல் வாழ்க்கை செவ்வனே நடந்து வரும் போது கங்கை அவ்வாழ்க்கையின் பயனைக் கைமேல் பெற்ற னள்.

'மருவுறச் சிலபகல் மணந்துமான் விழி
கருவுயிர்த்தன ளெனக் களி கொள் காலையிற்
பருவ முற்றன்புடன் பயந்த மைந்தனைப்
பொரு புனற் புதைத்தனள் புவனங் காணவே.'

சந்தனு தன் காதற் கிழத்தியுடன் சோலைகளிலும், செய் குன்றுகளிலும், வனத்திலும் சென்று இன்பநுகர்ச்சியைத் தெவிட்டாமல் அனுபவித்துக்கொண்டுவரும் காலையில் கங்கை கர்ப்பவதியானுள். சந்தனு தனக்கு மகப்பேறு கிடைக்கப்

போவதை எண்ணி யெண்ணிப் பரவசப்பட்டான். களிப் பென்னும் கடலில் ஆழ்ந்திருந்தான். பிரசவகாலமும் சமீ பித்தது. மான் விழியாள் கங்கையும் பத்துமாதங் கடந்து ஓராண் மகவைப் பயந்தனள். அவ்வாண் மகவு மிக்கப் பொலிவுடனிருந்ததையும் காணுமல் திடீரெனக் கங்கை யாற் றில் வீசி எறிந்தனள். அக்குழந்தை இறந்தொழிந்தது. அச்செய்கையைக் காண சேடியர்களும் மற்றவர்களும் நடு நடுங்கினர். அப்படியும் ஒரு தாயின் செய்கை யிருக்குமோ' என்று வியப்பும் திக்பிரமையும் அடைந்தார்கள். சந்தனுவும் தன் அந்தப் புரத்தை யடைந்து கங்கையின் செய்கையைத் தெரிந்துகொண்டு சோக முற்றுனெனினும் அவளைக் கடிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் உடன் படிக்கைக்கு மாறுபாடு வந்து விடுமே யென்று வாளா விருந்தனன்.

'பின்னரு மறுவரைப் பெற்ற தாய்மன
முன்னரின் மும்மடி முரண்டு மாய்க்கவே
மன்னவன வற்றிலும் வாய் திறந்திலன்
அன்னகர்ச் சன மெலா நடு நடுங்கிடவே.'

'வழுவறு குருகுல மன்னன் மைந்தரோர்
எழுவரை முருக்கினளீன்ற தாயெனப்
பழுதறு மகப்பல பயந்த மங்கையர்
அழுதனர் கட்புனலாறு பாயவே.'

சந்தனு தன் மூத்தகுமாரன் கங்கையிலெறியப்பட்ட பின் கங்கை மாதுடன் இன்பம் நுகர்ந்து முன்போல களிப்பெய்தி வருங்கால் புத்திர சந்தானத்தைப் பெற்றுன். வரிசைக் கிரம மாக அறுவர் பிறந்தனர். அந்த குழந்தைகளையும் பிறந்த வுடனே கங்கை புனலில் எறிந்து விட்டாள். அவ்விதம் செய்ததால் தான் சற்றும் சஞ்சலத்தையும் சோகத்தையும் அடைந்தவளாகத் தோற்றவில்லை. ஆனல், அந்நகர்ச் சனங்க

ளெல்லாம் தத்தம் கண்களினின்று நீரை ஆறுகப் பெருக்கித் தமது துயரத்தைக் காட்டிக் கொண்டார்கள். அரசியின் அக்கிரமச் செய்கையை அனைவரும் கடிந்தனர். மாசு மரு வில்லாத உயர்ந்த குடியிற் பிறந்த சந்தனு மன்னனின் எழு மக்களையும் கழுத்தை முருக்கிக் கங்கையில் எறிந்த மாபாவி யான தாய் இவளே யாவள் என்று பற்பல மக்களைப் பெற்று ஈன்றெடுத்த அன்னைமார்களெல்லோரும் இருகன்னம் வீங்க அழுதனர், கண்ணீரை ஆறுய்ப் பெருக்கினுர்கள். அவ் விஷயங்களையும் அறிந்த அரசன் இனி தன் காதலியின் செய் கைக்கு உடன்படாதிருக்கத் தீர்மானங் கொண்டான். கங்கை எட்டாம் பிரசவத்தை அடைந்தாள். அந்த எட்டாவது சிசுவையாவது காப்பாற்றித் தன் குலத்தை விருத்தி செய்ய எண்ணங்கொண்டு சந்தனு பிரசவகாலத்தை எதிர் பார்த்த வண்ணமிருந்தான். எட்டாம் மகவு பிறந்ததென்ற உரை கேட்டதும் அவன் உடனே பிரசவ அறையினுள் புகுந்து அதற்கு இடர் உண்டாவதினின்றும் தடுக்க அக்குழந்தை யைத் தான் கையிலெடுத்துக் கொண்டான்.

‘மதலையைப் பயந்தனண் மடந்தை யென்றலுங்
கதுமெனச் சென்று தாய் கைப்படாவகை
யிதமுறப்பரிவுட னெடுத்து மற்றவள்
பதயுகத் தாமரை பணிந்து பேசுவான்.’

கங்கையைப் பணிந்து தழதழத்த குரலுடன், நாத்தடுமாற நெஞ்சம் பதைக்கத் தன் விழிகளில் நீர் வார சந்தனு பேசுவா னயினன் :

‘நீறுத்துக மாபினை நிலை பெறும்படி
வெறுத்தனை முனியினும் வேண்டு மாவிது
மறுத்தனன் யான் என மனஞ் செய்யாது இனிப்
பொறுத்தருள் புரிக, இப்புதல்வன் தன்னையே.’

'தர்மநெறி வழுவாத தருணியே! நமது சந்ததி நிலை பெற்றிருக்கவும், ஓங்கி வளரவும் இது சமயம் இந்தப் புதல்வனை உன்னிடமிருந்து யாசிக்கின்றேன். இக்குழந்தையை எனக்கு உவந்து அளிப்பாய்' என்று மிகவும் இறைஞ்சி வேண்டிக் கொண்டான்.

இதற்கு முன் எழுவரை ஆற்றில் போட்டபோது மறுக்காமலிருந்து இந்த எட்டாம் சிசுவை மட்டும் காப்பாற்ற முன் வந்த காரண மென்ன வென்பதை அறிந்து கொள்ள எண்ணினவளாய் கங்கை சந்தனு மன்னவனை நோக்கி,

'என்று பற்பல மொழி யிவ னியம்பவே
நன்று நன்ற வனிப நவின்ற வாசகம்
இன்று நின் றிரங்கினை யெழுவர் மைந்தரைக்
கொன்றவன் றென் செய்தாய்? கொடியை யென்னவே'

'நராதிப! என்னைப் பற்பல விதமாக இது சமயம் வேண்டிப் பரவுவதேன்? நீர் கூறும் மொழிகள் ஒன்றும் நன்றெனப் புலப்படவில்லை. முன்னே ஏழு குழந்தைகளை நான் கொன்ற போது மட்டும் ஏன் வாயை மூடி மௌனமாகி வாளாவிருந்து விட்டீர். இப்போது என்னைச் சினந்து உரைப்பதில் யாது பயன்?' என்று கூறினாள்.

'பிரியமுள்ள நங்கையே! பேய்கள் கூடத் தாம் பெற்ற குழந்தைகளிடத்தில் பட்சம் பாராட்டுகின்றன. கொடிய வன விலங்குகளும் தங்களது குட்டிகளிடத்தில் வாஞ்சை பெற்றிருக்கின்றன. ஆனால், நீ மட்டும் உன் வயிற்றில் பிறந்த குழந்தைகளைப் பட்சமின்றிக் கழுத்தை முறுக்கி ஆற்றில் வீசி எறிந்து விட்டனையே' என்று உரைத்தான்.

'அரசனுமுணர்ந்து நீயார்கொல்? பாலரைத்
திரைசெறி புனலிடைச்செற்ற தென்கொலாம்!
உரைசெயவேண்டு மென் றுரைப்ப வஞ்சியும்
வரிசையினுயர்ந்த தன்வரவு கூறுவாள்'

சந்தனு மன்னவன் கங்கை செய்த செய்கைக்கு ஆற்றுமல் கடிந்து உரைத்தான். அம்மாற்றத்தைக் கேட்டுச் சற்றும் தடுமாற்ற மில்லாமல் அம்மங்கை நல்லாள் தன்னுடைய உத்கிருஷ்டமான வரலாற்றைத் தெரிவித்தாள். (கங்கை சந்தனுவை மணந்தது ஒருடன்படிக்கையினுல் தான் என் பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.)

'மன்னவரேறே! தாங்கள் விரும்பிய படியே இந்த மகவை நான் கொல்லுவதில்லை. உமது இஷ்டப்படியே வைத்துக் கொள்ளுங்கள். ஆனுல், நம்மிருவருக்கும் இடையி லிருந்த உடன் படிக்கை இன்றோடு ஒழிந்தது. அதன் நிபந்தனையின்படி என்னைத் தாங்கள் மறுத்து காரணங்கேட்ட படியினுலும், நான் செய்த செய்கையைத் தாங்கள் விரும்பாத படியினுலும், இனி நான் தங்களுடைய காதலியல்ல; மனைவியு மல்ல; இன்றோடு என் சாபமும் விமோசனமாயது. எனது விருப்பத்துக்குச் சற்றுகிலும் ஏறுமாருக விருப்பீராஞல் 'பிரிந்து அகன்றிடுவன் இப்பிறப்பு மாற்றியே' என்று முன்னமேயே தங்கட்கு உரைத்திருந்தபடித் தங்களைப் பிரிந்து சென்றிடுவேன்' என்று கங்கை உரைத்தாள். சந்தனு அவ்வார்த்தைகளைக் கேட்கப் பெரிதும் வருந்தினுன். எனினும், கங்கையின் சாபம்' எவ்விதம் வந்துற்றது என்ப தைத் தெரிந்து கொள்ள விரும்பி அதை விவரமாகத் தனக் குரைக்கும்படி கங்கையைக் கேட்டனன். அதற்கு அவளும் சொல்லத் தொடங்கினுள்.

'அரசர்திலகமே! முன்னெரு காலத்தில் இக்ஷ்வாகு வம் சத்தில் மகாபிஷக் என்ற சக்ரவர்த்தி வாழ்ந்து வந்தார். அவர் மகா பராக்கிரமசாலி; தெய்வபக்தி பெரிதும் உடையவர்; அனேக யாகங்கள் செய்து தேவர்களுக்குச் சமானமாக இருந்தார். அவர் பூலோகத்தில் இருந்த பின்னர் தேவ லோகத்தை யடைந்து தன் ஸ்தூல சரீரத்தோடு சகல

போகத்தையும் அனுபவித்து வந்தார். அவர் சத்திய லோகத்தில் பிரம்மாவோடு சபையில் வீற்றிருக்கும் அருமை யான பாக்கியத்தைப் பெற்றிருந்தார். ஒரு சமயத்தில் ஒரு பெரிய சபை கூடிற்று. அந்தச் சபையில் புண்ணிய புருஷர் களும் முனி ஸ்ரேஷ்டர்களும் நிறைந்திருந்தார்கள். மகா பிஷக் என்பவரும் அதற்கு வந்திருந்தார். நானும் அந்த சபைக்குப் போயிருந்தேன். வழக்கப்படி நான் செல்லு வதைப் போல அன்றும் நான் சென்றேன்.

'வான்முக மதியமும் புதியமாலிகைக்
கான்முக விதழியுங் கமழுங் கங்கையாள்
தேன்முகம் பொழிதரு செய்யதாமரை
நான்முகன் பேரவை நண்ணினளரோ!

நான்முகனர் சபைக்கு நான் அலங்காரம் செய்து கொண்டு சென்றேன். அப்போது நான் உடுத்திருந்த சேலை மார் பகத்தின் மீதிருந்தபாகம் காற்றினல் விலகிப் போய் விட்டது.

'திருத்தகும் அவயவந் திகழ்ந்து தோன்றவே
கருத்துடன வைக்கணோர் கண்புதைக்கவும்
அருத்தினே மனனுறமகிழ்ந்து காதல்கூர்
உருத்தகுமுரிமை யோடொருவன் நோக்கினன்'

என் மார்புதுகில் அகன்றிடவே எனது எழில் மிகுந்த மார் பகத்திலுள்ள குவிந்திருந்த அவயவம் மிக்கப் பொலிவுடன் தோன்றியது. அது தோன்றுதலும் சபையிலுள்ள தேவர் யாவரும் அது தமக்குற்றதே போல எண்ணி தாம் கவனியா தவர் போலத் தம் கண்களைப் புதைத்துக் கொண்டார்கள். ஆனல், மகாபிஷக் என்னும் மன்னவனயிருந்து தேவனக மாறியவர் அக்காட்சியைத் தவற விடாமல் விழித்த கண்ணை அப்புறத்தே செலுத்தாமல் என்னுடைய கொங்கைகளின்

அழகிலீடுபட்டு அதைக் காண்பதிலேயே தன் பார்வையையும் மனதையும் செலுத்தித் தன்னை மற்றவர்கள் கவனிப்பார்களே என்பதையும் மறந்து லயித்திருந்தார்.

அவ்விதம் காமமிகுந்த பார்வையால் நோக்கிய மகாபிஷக் மன்னவனை நான்முகன், 'காமாதுரனே! அறிவில்லாதவனே! தேவனுக நீ மாறியும் கூட இன்னும் அந்த அற்ப குணமான சிற்றின்ப நுகர்ச்சியில் உன் பிரீதி உன்னை விட்டு அகலவில்லையன்றோ? நீ இங்கு இருத்தல் ஒரு க்ஷணம் கூட இயலாது. பூலோகத்தில் பிறந்து நெடுங்காலம் வரையில் இருந்து நீ இப்போது அனுபவிக்க ஏங்கிவாடும் இந்த கங்கையை மனைவியாக அடைந்து, எவ்விதம் அவள்விரும்பாத ஒரு செய்கையை நீ இங்கு செய்து கொண்டிருந்தாயோ அது போலவே அவள், நீ விரும்பாத செயல்களை அந்தப் பூலோகத்தில் செய்து கொண்டிருப்பாள்' என்று சபித்து விட்டார். அவ்வளவு ஆற்றலும், தெய்வபக்தியும் பெற்ற ராஜரிஷியின் கௌரவமெல்லாம் எப்படிப் பாழாகிப் போய் விட்டது பார்த்தீரா? ஓர் அற்ப சுகத்திற்காகப் பெரிய பதவியை இழந்து விட்டார். அவர் சந்திரவமிச சக்ரவர்த்தியான பிரதீப மகாராஜரைப் பிதாவாக அடைந்தார். அவ்விதம் பதவியை இழந்த அரசர் யார் என்பது தமக்குத் தெரியுமோ? அவரே தாங்கள். தங்களை நானும் மனைவியாக அடைந்து தாம் சற்றும் விரும்பாத செயல்களைப் புரிந்து இதுகாறும் வந்தேன். இனி யான் உம்முடன் தங்கியிருப்பது கூடாத காரியம். ஆகையால் எனக்கு விடை கொடுத்தனுப்புங்கள். என்னை மறந்து விடுங்கள்' என்றார்.

'எழிலாரணங்கே! என் மீதன்பு கூர்ந்து உலகியருணராவியலார்த ரகசியங்களை எனக்குச் சொல்லினை. அதனால் நான் மட்டிற்கடங்கா மகிழ்ச்சி யடைந்துள்ளேன். உனது

பெருமையை நான் என்னென்று உரைக்கவல்லேன். திரிலோகத்திலும் தடையின்றி சென்று சஞ்சரிக்கும் ஆற்றல் உனக்குண்டு. இன்னும் உனது புனித நீரில் படிந்தவர்களின் எண்ணரிய பாவங்களைத் தொலைக்கும் பேராற்றலும் உனக்குண்டு. மற்றும் சந்திர சூடாமணியும் ஜடாமகுடதாரியுமான பரமசிவனின் சிரத்தில் தவழ்நடை பயில்பவளான கங்கையாம் உன்னை நான் என் இன்பக் கிழத்தியாகப் பெற்று எய்தும் மகிழ்ச்சிக்கு எல்லையும் அளவுமுண்டோ! என் பிரியமுள்ள நங்காய் கேள்.

‘மன்னவர் தொழுகழன் மன்னன் மைந்தனோடு
இன்னமு மொருவனையினி தளித்து நாம்
பன்னக நெடு முடிப்பார் களிக்கவே
பொன்ன கரிருவரும் போது மென்னவே.’

‘போயிருந் தென்பயன் ; போகம்பல் வகை
யாயிருந்தன ; எலாம் அருந்தி இன்னமும்
மாயிருந் தரணியில் மன்னுசில் பகல்
நீ யிருந்தரசியல் நிறுத்தி மீளுவாய்’

நமது குலம் உலகத்தில் ஓங்கி விளங்கி யிருக்க சில காலம் வரையில் இவ்வரண்மனையிலிருந்து இன்ப நுகர்ச்சி எய்தி இல்லறம் நடத்தி வருவோம். உன்னிடமிருந்து நான் பெறும் மகிழ்ச்சியும், தேகபுளகாங்கிதமும், குதூகலமும் அந்த தெய்வ பதத்தில் கூட எனக்குக் கிடைத்திலது. ஆகவே, உன்னுடைய சேர்க்கையை நான் எப்போதும் விரும்பியவனாயிருக்கின்றேன். போகத்தில் எத்தனை விதங்களிருக்குமோ அத்தனையையும் நாமிருவரும் ஒன்றெனவிருந்து அனுபவித்து இப்பூவுலகத்தில் இன்னும் சில காலம் தங்கியிருந்து அதன் பயனால் மற்றொரு மகனையும் எனக்குத் தந்தருள்வாய்.

அதுவே நான் உன்னை வேண்டிக்கொள்ளுவதாகும்' என்று சொன்னான்.

மனிதர்கள் எத்தனை காலந்தான் உலகத்தில் வாழ்ந்திருந்தாலும் அதைவிட்டுப் போவதாக விருந்தால் அதை விரும்பார்கள். பூவுலகப்பற்று அவர்களைப் பிடித்து அடிமை கொள்ளும். ஆனால், கங்கையோவெனின் தெய்வப்பிறப்பையுடையவள். அவள் பூவுலகத்தை வெறுத்துத் தன் உயர் நிலைக்குச் செல்ல வெகுவாக இஷ்டப்பட்டாள். ஆகவே, தன் சந்தனுவைப் பார்த்து 'அரசர் திலகமே! நான் செல்லும் நேரம் சமீபித்துவிட்டது. தயைசெய்து கருணைகூர்ந்து எனக்கு விடைதந்தருளும். இந்தக் குழந்தையையும் என் வசமொப்பித்துவிடும். இவன் தேவலோகத்தில் என்னோடிருக்கட்டும். இந்தக்குழந்தைப்பருவத்தில் தாயற்று இருக்கவேண்டாம். நான் இவனைத் தேவர்களிடம் இந்தச் சமயமே ஒப்புவித்து என் இருக்கைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கச் செய்கின்றேன். எந்த வாயுபகவான் நம்மிருவரது சேர்க்கைக்கும் பூலோக வாழ்க்கைக்கும் காரணமாக இருந்தானோ அதே வாயுபகவான் இந்தக் குழந்தையைத் தேவலோகத்தில் என்னிடம் சேர்க்கக்கடவன்' என்றியம்பியவாறு குழந்தையைத் தன் கையிலெடுத்து வாயுபகவானிடம் வீசியளித்தனள். அதைக் கண்ணுற்ற சந்தனு இனிதன் இன்பக்கிழத்தியைக் காணும் பாக்கியமும் தனக்கிராமற்போவதைக் குறித்து வருந்தி **'என தருமையான கங்கா! என்னையும் விட்டுப்போக உனக்கு மனமும் வந்ததோ? வேண்டாம்; என்னைப் பரிதவிக்கவிட்டுப் போதல் உனது இளகிய மனதுக்கு நேரோ?'** (படம் பார்க்க) என்று மிக்கப் பரிதாபமான பார்வையுடன் தன் உயர் நிலைமையையும் கருதாதவனுய் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டவன் நீதிபதியிடம் அதை ரத்துசெய்ய இறைஞ்

சும் பான்மையையும் மீறியதுபோல் அவ்வளவு பரிதாபத்துடன் வேண்டிக்கொண்டான்.

இனிமேல் அவ்விடமிருந்தால் இன்னும் அவனது கஷ்டத்தைப் பார்க்கச் சகியாதவள்போல கங்கை ஆகாயத்தில் உயரச் செல்லத் தனது கால்களையும் தூக்கினாள். அப்போது சந்தனு, எந்த சேலை பிரம்மசபையில் அவளுடைய மார்பகத்தைவிட்டு நெகிழ்ந்ததோ அந்தசேலையின் தலைப்பின் நுனியைத் தன்கையால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஏங்கிய பார்வையோடு வார்த்தைகள் ஒன்றும் பேசாமல் ஏறிட்டுப் பார்த்தான். அதற்கு கங்கையும் தன் கனிவும் கருணையுமுள்ள பார்வையால் அவனைப்பார்த்துத் தன் வலது கையால் அவனைச் சாந்தப்படுத்தித் தன் இடது கையால் அவளுணராமலே தன்சேலை நெகிழ்ந்து விழாமல்படிக்குப் பிடித்துககொண்டாள்.

அவளது வதனாரவிந்தத்தைச் சந்தனு தன் விழிகளால் அவ்வண்ணம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தன் கைப்பிடியும் மெதுவாகத் தளர்ந்தது. ஆகாயத்தின்கண் மேலே கங்கையும் எழும்பிச்சென்றாள். அப்போதும்கூட சந்தனு தன் கண்ணெதிரே கங்கை யிருப்பதாக உணர்ந்தான்.

## உம. சுபத்திரா—அர்ஜுனன்

**பஞ்சபாண்டவர்கள்** வனவாசம் செய்யும்படி நேர்ந்து விட்டது. திரௌபதியுடன் அவர்கள் கானகத்தில் செவ்வனே காலங் கழித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வித மிருக்கும் நாளில் ஒருநாள் அவர்கள் வாழ்ந்து வரும் ஆசிர மத்தின் வாயலில் ஒரு வேதியன் தான் ஆபத்திலிருப்பதாக வும் அந்தச் சமயம் தனக்குத் துணைபுரிய வேண்டும் என்றும் உரக்கக் கத்தினன். அந்த அபய மொழிகளைக் கேட்ட அர்ஜுனன் விரைவாக ஓடி காரணத்தைத் தெரிந்துகொண்ட வுடன் மீண்டும் தன் ஆசிரமத்தினுள்ளே சென்று வில்லைக் கொண்டுவரப் போனன். அவ்வாறு வேகமாகச் சென்ற போது அங்கே தருமரும் திரௌபதியும் அளவளாவி சரச சல்லாபமாய் காலங் கழித்துக் கொண்டிருப்பதையும் கவனியாமல் அபயம் என்று அடைக்கல மடைந்த வேதிய னைக் காப்பாற்றும் நன்நோக்கம் கொண்டிருந்ததால் வில்லை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து வேதியனது பகைவனை வென்று துணைபுரிந்து காப்பாற்றினன்.

அதன் பின்னர் தனது செய்கையைக் குறித்து வருந்தி னன். தனது சகோதரன் ஏகாந்தத்தில் காதல் கொண் டிருந்த இடத்திற்குத் தான் சென்றதால் அதற்குப் பரிகாரம் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதே யாகும் என்பதை அர்ஜுனன் நன்கு அறிந்தவனுனபடியினல் அப்பொழுதே தன் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு விட்டான். சகல பாவங்களையும் போக்க வல்ல கங்காநதியில் முதன் முதலில் நீராடி எழுந்திருக்கும்போது ஓர் அருமையான காட்சியைக் கண்டான். ஒரு நாகலோக நங்கை எதிரில் நிற்பதைக் கண்டு அவளிடம் மிக்க அனுராக மெய்தி நின்றுன்.

“ ஓடுங் கயல்விழி யாரிலு லூபிப்பெய ரவளோடு
ஆடும் புனலிடை நின்றவ னநுராக மிகுந்தே
நாடும் பிலவழியே யவள் பின்சென்று நலத்தால்
நீடுங் கொடிமண மெய்தினன் முகில்போலு நிறத்தான் ”

அவ்வாரணங்கு கயல்விழி படைத்தவள்; மானின் மருண்ட விழிகளின் நேர்மையைக் கண்டு அர்ஜுனன் மிக்க காதல்கொண்டு அவளது சேர்க்கையில் அதிகப் பிரியங் கொண்டு அவள் பின்னே தானும் சென்றான். அவள் ஒரு பிலத்தின் வழியே செல்வதை யறிந்து தானும் உருவத்தைப் பின்தொடருகின்ற நிழல்போல விடாமல் பின் தொடர்ந் தான். அம்மங்கை — நாகலோகக் கன்னிகை — அவளும் சியாமள மேனியனுன விஜயனை மணங்கொள்ள மனங்கொண் டாள். அவ்விருவரும் சதிபதிகளாயினர். காதலரது இரண்டு இருதயங்களும் ஒன்றெனச் சேர்ந்து ஒலித்தால் தடை செய் வாரு முண்டோ? அத்தம்பதிகள் தத்தம் மனப் போக்கின் படி போகசுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அர்ஜுனன் “செம்மென் கனி இதழாளொடு சின்னுள் நலமுற்றான்; அம்மென் கொடி யனையாளும் அராவானை யளித்தாள்.”

“ நாகாதிபன் மகண் மைந்தன் நலங்கண்டு மகிழ்ந்து
நாகாதிபன் மகன் மீளவு நதியின் வழிவந்து
நாகாதிபன் வண் சாரலின் நன்னீர்கள் படிந்து
நாகாதிபன் விடுமும் மதநாறுந் திசைபுக் கான் ”

வாள் விஜயன் தனக்கும் நாகக் கன்னிக்கும் பிறந்த மைந்தனது அழகையும் வடிவையும் கண்டு மகிழ்ந்தான். மேகத்திற்கு அதிபனுன இந்திரனுடைய மகனுன அர்ஜு னன் கங்கையின் வழியாக வெளிவந்து மலையரசனுன இமய மலைச் சாரலிலுள்ள பற்பல புண்ணிய தீர்த்தங்களி லாடிய

பின்னர் யானைகளுக் கெல்லாம் அரசனாகிய அளகாபுரி திசையை நாடிச் சென்றான். அதன் பிறகு களிந்தா நதி முதலியவைகளிலும் நீராடினான்.

"பத்திக்கு வரம்பாகிய பார்த்தன் பலதீர்த்த
மத்திக்கினு மெத்திக்கினு மாமென்றவை யாடிச்
சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை யணுகித்
தத்திச்சொரி யருவித்தட வரவக்கிரி சார்ந்தான்"

அதன் பின்னர், பக்தி விசேஷமாகக் கொண்ட பார்த்தன் பற்பல புண்ய தீர்த்தங்களில் படிந்தெழுந்து சித்திக்கு முக்கியமான விதை போன்ற தென்னாட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான். அவ்விதமாக வந்து அரவக்கிரி என்ற திருவேங்கடத்தை அடைந்தான்.

பின்னர், "முத்திதரு நகரேழிற் முக்கியமாம் கச்சி" என்னும் பெயர் பெற்ற காஞ்சீபுரத்தை அடைந்தான்.

"இச்சைப் படிதன் போறமெண் ணான்கும் வளர்க்கும்
பச்சைக் கொடி விடையோ னொருபாகந் திறைகொண்டாள்
செச்சைத் தொடை யிளையோனுகர் தீம்பால் மணநாறும்
கச்சைப் பொருமுலை யாளுறை கச்சிப்பதி கண்டான்."

ஆடவரும் மகளிரும் தத்தம் இச்சைப்படி முப்பத்திரண்டு வகையான தான தர்மங்களை வழுவாமல் நடத்தி வரும் பெருமை வாய்ந்த நகரம் கச்சிமா நகரமாகும். அந்தத் திவ்வியமான திருப்பதியின் கண்ணே ரிஷப வாகனரான பரமசிவன் தன் இடது பாகத்தை வஞ்சிக் கொடியாளான பார்வதிக்கு உரியதாக்கி விட்டார். இன்னும் அம்மலை மங்கை இளையவனாகிய பால சுப்பிரமணியனுக்குத் தன் இனிய பாலைக் கொடுத்ததால் அது வடிந்து பால் மணம் கமழும் கச்சைத் தரித்துக் கொண்டிருக்கும் பார்வதி வசிக்

கும் கச்சியம்பதியைப் பற்குனன் கண்டு மகிழ்ச்சி பெற்ருன். அந்நகரின் புனித நீரில் படிந்தான்.

அர்ஜுனன் தென் கயிலாயம் என்று சொல்லப்பட்ட தில்லையை அடைந்தான். அந்தத் தில்லையின் மகத்துவம் செப்பத் தரமன்று.

" இன்னம் பலபல யோனியி லெய்தா நெறிபெறவே
முன்னம் பலரடி தேடவுமுடி தேடவு மெட்டா
வன்னப் பலபயில்வார் புனலணி தில்லையு ளாடும்
பொன்னம்பல நாதன் கழல்பொற் போடு பணிந்தான் "

முன்பு அரியும் அயனும் அரனது அடியையும் முடியையும் தேடிக் காணப் பெருதவர்களாய்த் தயங்கினர்கள். அப்படிப்பட்ட அருமையும் பெருமையும் வாய்ந்த ஈசனர் தில்லையின் கண் எழுந்தருளி யிருக்கின்றூர். அவர் பொன்னம்பலத்தில் நர்த்தனஞ் செய்துகொண்டி ருக்கின்றூர். இனி மேன்மேலும் இப்பூவுலகத்தில் பிறந்து தோன்றி அல்லல்படாம லிருக்கக் கிருபை பாலித்தருள வேண்டு மென்று தில்லைநாதரின் பொற்கழலிணைகளில் பணிந்து வேண்டினன். அதன் பின்னர், இருபுறமும் காவிரி நதி பாய்ந்தும், அரவணையின்மேல் அறிதுயில் கொள்ளும் அரங்க நாதரின் தாமரைத் தாள்களை அந்நதி வலமாக வந்தும், பூ மடந்தை அவரது பாதத்தில் வீற்றிருந்தும் அலங்கார மளிக்கும் திருவரங்கத்தைத் தேவேந்திர னுடைய தனயனை அர்ஜுனன் கண்டான்.

அதற்கப்புறம் அர்ஜுனன், தமிழில் எழுதிய ஏடு வைகை நதியில் நீரோட்டத்திற்கு எதிரே ஏறிச் சென்ற பெருமையையுடைய கூடலம்பதியாம் மதுரைமா நகர் வந் தடைந்தான். அந்நகரில் வாடைக்காற்று வீசும்போதெல் லாம் கொன்றைப் புஷ்பத்தின் நறுமணம் வீசும்: மந்த மாருத

மான தென்றல் தவழும்போது செழுஞ் சாந்தின் நன் மணங் கமழும்; மாடமாளிகை கூட கோபுரங்களில் செல்வவந்தர் கள் மிக்க ஐச்வர்யத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அவ்வள நகரை யாளும் வெற்றிவேல் பாண்டிய மன்னனை வானவர் கோன் மதலையான அர்ஜுனன் கண்டான். அர்ஜுனன் அவ்வரசனுக்கு ஆசி கூறினன். ஆனல் அரசனுக்கு அவன் அர்ஜுனன் என்பது தெரியாது. காவி வஸ்திரந் தரித்து சன்னியாசி போலிருந்ததாலும் தனிமையாயிருந்தபடியாலும் தெரிந்து கொள்ளச் சாத்தியப்படாதிருந்தது. ஆகவே, அம் மன்னவன் 'தவச்ரேஷ்டரே! நீர் எங்கிலத்திர்! எப்பதியினீர்! எத்திசைக்குப் போகின்றீர்' என்னும் இவ்விஷயங்களைத் திருவுளமிருந்தால் திருவாய் மலர்ந்தருள்வீர்' என்று பணி வாகக் கேட்டதற்கு 'கன்னியைக் கண்ணுற்று வந்தன னென்றனன் மெய்மைக் கடவுள் போல்வான்'. அது கேட்ட தும் பாண்டியன் மிகவும் மகிழ்ந்து அத்தவ ச்ரேஷ்டர் தங்கி யிருப்பதற்கு ஓர் ஆசிரமம் பூங்காவினிடையில் அமைத் துக் கொடுத்தான்.

அவ்விதம் அர்ஜுனன் எழில் வாய்ந்த பொழிலில் வதிந்து வரும்போது ஒருநாள் ஓர் அதிசயச் சம்பவம் நிகழ்ந்தது.

'வேதிய ரோடக் காவிலைப் பாறி யிருந்தளவின் மின் குழாம் போல
தாழிபருஞ் சேடியருந்தற் சூழ்ச்சிலை மதனன் தனி சேவிக்கச்
சோதியரிச் சிலம்பரற்றத் துணை நெடுங்கண் செவியளப்பத் தொடித்தோள் வீசி
யாதி யரவிந்தை யென நிருபன் மகள் விளையாடற்கு ஆங்கு வந்தாள்.'

அக்காவில் மின்னற் கூட்டம்போல பிரகாசம் பொருந்திய தாதியர்கள் தன்னைப்புடை சூழ்ந்து வரவும், சிலம்பு ஒலிக்க

வும், செவியளாவிய நெடுங்கண்களைப்பெற்றும் அழகு வாய்ந்த நிருபனது மகள் விளையாடுவதற்கு அங்குப் போந்தாள். அம்மங்கையின் மாண்டழகு வனப்பைக் கண்டு மன்மதனும் மயங்கித் தன் உணர்வை இழப்பானெனில் அவளது வடிவழகை விவரிக்கவும் சொற்களால் முடியுமோ?

சித்திரவாகனன் என்னும் அப்பாண்டிய மன்னனுக்குச் **சித்திராங்கதை** என்ற புத்திரி இருந்தாள். அவளே நந்தவனத்தில் தாதியர் புடைசூழ வந்தனள்.

'பச்சென்ற திருமுகமும் சேயிதழும் வெண்ணகையும் பார்வை
யென்னு
நச்சம்பு மமுதூற நவிற்றுகின்ற மடமொழியு மாணும் பூணும்
கச்சின் கண் அடங்காத கன தனமும் நுண்ணிடையும் கண்டு
சோர்ந்து
பிச்சன் போலாயினன் அப்பெண் கொடி மெய்ந் நல முழுதும்
பெறுவான் நின்றான்.'

அவ்வெழில் மிக்க ஏந்திழையாள் மதியைப் பழித்த வதனமுடையவள்; கொவ்வை நிகர்த்த இதழ் பெற்றவள்; வேல் விழிகளின் பார்வை விஷமுள்ள அம்பு போன்றது; அவள் வார்த்தையில் இன்னமுதூறும். ஆபரணங்களைத் தாங்கியும், கச்சினுள்ளே பொருந்தாமல் அடங்கியிராமல் மிகக் கனமதாகிய தனத்தையும், உண்டோ இல்லையோ என்று ஐயுறும் படியான இடையையும் கண்டு சோர்ந்து, தன்னுணர்வு கலங்கிப் பித்தன் போலாயினான். மதியிழந்தப் பித்தன் போலாகியும் அவளது அலங்காரத்தையும் நலத்தையும் அப்படியே விழுங்கி விடுவான்போல் பார்த்த வண்ணம் நின்றான்.

**சித்திராங்கதை** தன் தந்தையின் பூசைக்கு வேண்டிய மலரைக் கொய்து கொண்டிருந்தாள். சித்திரவாகனுக்குப் புத்திரனில்லாத குறை நெடுங்காலமாக வருத்திக் கொண்

டிருந்தது. நறுமலர்கொண்டு பரமனை அர்ச்சிப்பதே சிறந்த வழிபாடு என்றுணர்ந்த் அம்மன்னனுக்கு அவனது மகள் அவ்வழியில் துணை செய்து வந்தாள். 'பத்திரமும் நறுமலரும் அவயவம்போல் விளங்குவன மலருங் கொய்து மித்திரமாம் மகளிருடன் விரவி ஒரு செய்குன்றின் மேயினள்.' அவள் தனித்து செய்குன்றின்மேல் செல்வதைக் கண்டு அர்ஜுனன், ஒரு சண்பகமரத்தின் கீழ் மின்னுருவ நுண்ணிடையாள் விழி களிக்கும்படி கம்பீரமாய் நின்றான். அவ்விதம் பொலிவுடனும் காம்பீர்யத்துடனும் நின்ற ஆணழகனைக் கண்டு உள்ளம் உருகினள். தன் பார்வையை அவனது அழகிய அவயவங்களைக் காண்பதிலேயே பதிய வைத்தாள். அந்தச் சமயம் அவ்விருவர்களது இருதயங்களும் ஒன்றையே நாடி உழைத்தன. ஒரே விஷயத்தைக் குறித்து ஒலித்துக்கொண்டிருந்தன. அம்மங்கை நல்லாள் அக்குமரனை, அழகில் ஈடில்லாதவனைப் பெற்று சுகம் பெற மனம் மொழி காயத்தாலும் விரும்பினள்.

'செந்திருவை யனையாளும் திருமாலை யனையானும் சிந்தை
யொன்றாய்
வந்திருவர் விலோசனமும் தடையின்றி யுறவாடி மகிழ்ச்சி
கூர்ந்து
வெந்து உருவ மிழந்த மதன் மீளவும் வந்துரதியுடன் மேவு
மாபோல்
கந்தருவ முறைமையினற் கடவுளர்க்கும் கிடையாத காமந்
துய்த்தார்.'

லக்ஷ்மிபோன்ற அழகுடைய சித்திராங்கதையும் மகாவிஷ்ணு போல சியாமளமேனியுடையனான அர்ஜுனனும் சிந்தையில் ஒன்றையே நாடி விரும்பி யிருந்தனர். முன்னொரு காலத்தில் பரமசிவனார் மதனனைத் தமது நெற்றிக் கண்ணினால் எரித்துச் சாம்பராக்கினார். அந்த மதனன் மீண்டும் ரதி

தேவியுடன் அவ்விடத்திற்கு வந்து தனது மலர் அம்புகளையும், பாணங்களையும் அவர்கள் மீது வீசி இன்னல் விளைவித்து வந்தான். அந்த இன்னலைத் தவிர்க்க அவர்களிடம் அருமையான சஞ்சீவியும் இருந்தது. உடனே அக்காதல காதலியர்கள் கந்தருவ முறையினால் காந்தருவ மணம் செய்து கொண்டார்கள். அம்மாதிரியான காந்தருவம் கடவுளர்க்கும் கிடைக்காதாம். அவ்வளவு காமமும், காதலும் ஒன்றெனக் கலந்த சம்போகம் வேறெங்குமே கிடைக்காது என்பதாக உறுத்திக் கவி சொல்லிப் போந்தார்.

இருவரும் ஒருவரெனக் கூடி இதயங் கலந்ததன் பின் அர்ஜுனன் தன் வரலாற்றை மெதுவாகச் செப்பினான். தான் பஞ்சபாண்டவர்களில் நடுப்பிறந்தோனான அர்ஜுனன் என்றும், நீராடுவான் பொருட்டு யாத்திரை செல்வதாகவும் கூறினான். இனி அதிக நேரம் அங்கு அவள் தங்கியிருந்தால் சந்தேகப்படுவார்கள். ஆனபடியினால் அவ்விடத்தை விட்டு அகன்று விடும்படிக்கும் சொன்னான். அவ்விளமானும் அவ்வண்ணமே செய்து சேடியர்களிருக்கும் இடம் சென்று தான் நுகர்ந்த இன்பத்தைச் சொல்லிச் சொல்லிக் களிப்பை யடைந்தாள். அதன் பின்பு தினந்தோறும் பூக்கொய்யத் தானே தனியாகப் பூம்பொழிலுக்குச் செல்வாள். அவளது மனம் முழுதும் சுந்தராங்கனது உருவமே இடம் பெற்றிருந்தது. சதா சர்வகாலமும் அவனையே நினைப்பாள். பூக்கொய்து அக்குடலையைத் தன்னுடைய வலது கரத்தில் பிடித்துக்கொண்டு ஒரு விருக்ஷத்தின் மீது சாய்ந்தபடி மிகப் பொலிவுடன் இடது கரத்தைச் சிரமிசைப்படுத்தி அளகம் சோர வெறும் வெளியை உற்று நோக்கிய வண்ணம், இனிய குரலில், "ஆ! என் உள்ளத்தைக் கவர்ந்த கட்டழகனை எத்தனை நாழிகையாக நினைத்தாலும் என் மனம் திருப்தி யடையவில்லையே' என்று சித்திராங்கதை கூறினாள்.

"கோமடந்தை களிகூரப் புகழ்மடந்தை களிகூரக்
கொற்ற விந்தை
மாமடந்தை களிகூர மணவினை யொப்பனைக்குரிய
மடந்தை மார்கள்
பூமடந்தை யனையாளைப் பூட்டிய வெண்தரள
மணிப் பூண்களாலே
நாமடந்தை நிகராக்கி நாயகன் தன்வலப்பாக
நண்ணு வித்தார்."

சித்திராங்கதை அர்ஜுனன்மீது அளவில்லாத காதல் கொண்டு தன் ஊண் உறக்கம் ஆடல் பாடல் முதலிய எல்லாவற்றையும் ஒழித்து அந்த ஆணழகனுடைய சேர்க்கையை விரும்பி இருந்தாள். இராப்போதை நிந்தித்தாள்; கோழி கூவாதிருப்பதைக் குறித்து வருந்தினாள். விரகதாபம் தணியத் தோழிகள் எவ்வளவோ சைத்யோபசாரங்கள் செய்தனர். என்ன செய்தபோதிலும் காதல் தணியாமல் மூண்டெழுந்து கொண்டே யிருந்தது. சித்திராங்கதையின் சித்தம் முழுவதும் பார்த்தனது உருவத்தால் நிரம்பியிருந்தபடியால் தேக மிளைத்தது. வளையல்கள் முழங் கை வரையிலும் சென்றன. இவைகளைக் கண்டு சேடியர்கள் அரசனுக்கு உணர்த்தினார்கள். அவ்வரசனும் உண்மையை அறிந்து சித்திராங்கதையி னிஷ்டப்படியே அர்ஜுனனுக்கு மணஞ் செய்வித்து மகிழ நினைத்தான். தாமரை மலரில் வீற்றிருக்கும் லக்ஷ்மிபோல் அழகு மிகுந்தவளான மணமகளுக்கு விலையுயர்ந்த திவ்வியாபரணங்களையும், ஆடைகளையும் அணியும்படிச் செய்து மகிழ்ந்திருந்தார்கள். வெண் பட்டாடையையும், வெண் முத்துக்களாலான ஆபரணங்களையும் அம்மங்கை நல்லாளுக்கு அணிவித்து நா மடந்தையான சரஸ்வதிதேவி போல் விளங்கச் செய்து மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். ச்யாமளமேனியும் மன்மதாகாரமுமா யிருந்த

அர்ஜுனனது வலது பக்கத்தில் சித்திராங்கதையை அமரச் செய்து மணக்கோலம் நிகழ்த்தினர்கள்.

" இந்திரனுஞ் சசியுமென இறையோனும்
உமையுமென எம்பிரானும்
செந்திருவுமெனக் காமதேவும் இரதியுமென
வெஞ்சிலைவ லோனுஞ்
சந்தணிபூண் முலையாளுஞ் சதுர்மறையோர்
சடங்கியற்றத் தழல்சான்றாகத்
துந்துபியின் குலமுழங்கச் சுரிசங்கின் குழந்தழங்கத்
துலங்க வேட்டார்."

தேவேந்திரனும் அவனது இன்னுயிரனைய மனைவியாம் சசிபோலவும்; பரமேச்வரனும் வாமபாகத்தி லமரும் உமையாள் போலவும்; அரவணையில் அறிதுயில் கொள்ளும் மகா விஷ்ணுவும் லக்ஷ்மிபோலும்; கரும்பு வில்லையும் மலர்ப்பாணமும் கொண்ட மதனனும் இரதியும் போலவும்; வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற அர்ஜுனனும், விரகதாபத்தால் வருந்தி குளிர் சாந்தம் தனத்தின் மீது அப்பியுள்ள காதலியாம் சித்திராங்கதையும் திருமணக்கோல மடைந்து பந்துமித்திரர்கள் சூழ அமர்ந்திருந்தனர். மறையவர்கள் மந்திரம் ஓதவும், துந்துபியும் மற்ற வாத்தியங்களும் அருமையாக வாசிக்க அர்ஜுனன் சித்திராங்கதையின் சங்கம் போன்ற கழுத்தில் திருமங்கல்ய தாரணம் செய்தான். அவ்விரு தம்பதியினர் பிரிவு ஆற்றாமல் உயிரொன்று உடலிரண்டு போல ஒன்றெனக் கலந்திருக்க மிகவும் எண்ணுவார்கள்.

'நோக்கிய கண்ணிமையா மனேக்கி நோக்கி நுண்ணிய மென்
புலவியிலே நொந்து நொந்து
தேக்கிய செங்கனி இதழார முதுண்டுண்டு சேர்த்தியகை
நெகிழாமற் சேர்ந்து சேர்ந்து
தூக்கிய பொற் றலையி னநுராக மேன் மேற் றொடரவரும்
பெரும் போகந் துய்த்தார் முன்னைப்
பாக்கியம் வந்திருவருக்கும் பவித்த தல்லாற் பாய வைத்திப்
படியார் பயன் பெற்றாரே.'

முத்தம் :—



Radha surprised Krishna

ராதா ! ராதா ! போதும் எடு கையை. உன்னையும் நான் தெரிந்து கொள்ளாமலிருக்க முடியுமோ ? கண்ணே !



“ கண்ணே ! சுபத்திரா ! பாராயோ எந்தன் முகம்; பார்த்தொருக்கால் என் காதல்தீர ஒரு வார்த்தையாவது சொல்லாயோ ”

அவ்விரு காதலர்களும் ஒருவர்க்கொருவர் பார்த்துப் பார்த்து ஒருவர் அழகில் மற்றவர் ஈடுபட்டு விரும்பி புலவியிலே அனுப வித்துச் செங்கனிவாய் இதழ் அமுதத்தை உண்டு உண்டு, பற் பல முறைகள் முத்தமிட்டு இருகைகளாலும் பிடித்து விடா மல் சேர்த்து இறுகக் கட்டித் தேகப்புளகாங்கித மடைந்து இன்பம் நுகர்ந்தார்கள். இவ்வாறுகப் போகத்தில் இருவரும் ஒரு மனதாய் பிணக்கின்றி விரும்பி உழைத்தார்கள். பூவுலகிலேயே அவ்விரு தம்பதிகள் காதலின்பம் நுகர்ந்த மாதிரியாக ஒருவரும் அனுபவித்திருக்கவே மாட்டார்கள். அந்தப் பாக்கியம் இவர்களுக் கென்றே தோன்றியது போலும். மற்றவர்கட்கு அப்பாக்கியம் கிட்டவே கிட்டாது என்பதாகக் கவிச்ரேஷ்டர் கூறிப்போந்தார். என்னே! அவ்விரு புண்ணிய தம்பதிகள் செய்த பாக்கியம்!

'பன்னுளி னெடும்போகம் பயின்ற பின்னர்ப்
பப்புருவாகன னென்னும் பைதற்றிங்கள்
அன்னுனை யவள் பயந்தாள் பயந்த போதே
யம்மகவை யுவகையுட னவனு மீந்தான்
தென்னு வென்றளி முரல வேம்பின்றண்டார்த்
தேம்பரிசில் வழங்கு புயத் தென்னர் கோவு
நின்னு லென் மாபு நிலை பெற்ற தென்று
நேயமுடன் கவர்ந்து துயர் நீங்கினுனே'

அவ்விரு தம்பதிகளும் சம்போகம் என்னும் ஆனந்த வாரிதி யிற் மூழ்கிப் பல நாளாக இன்பம் நுகர்ந்தனர். அதன் பல னும் புத்திரக் கனியையும் பெற்றனர். அப்புத்திரனுக்குப் பப்புருவாகனனென்னும் பாங்கான பெயரையும் சூட்டினர். அம்மதலையும் சுக்லபட்சத்துச் சந்திரன்போல தினே தினே விருத்தி யடைந்து வருவானுயினன். வெகு காலமாகப் புத் திரப்பேறு கிடைக்குமோ என்று ஏங்கி வாடியிருந்த சித்தி ராங்கனுக்குப் பௌத்திரன் கிடைத்தது பிரம்மானந்தமாகி

விட்டது. அர்ஜுனனைக் கண்டு, 'வீரரேறே! உன்னால் என்னுடைய தொன்று தொட்டு உலகத்தில் நிலையாக நின்று வந்த குலம் என்னோடு அற்றுப்போகாமல் பின்னும் தோன்றியிருக்கப் புத்திரனை நல்கினையே! அதனால் என் உள்ளம் பூரித்தது. என்னை இதுகாறும் வருத்தி வந்த கவலை இன்றோடு ஒழிந்தது. இம்மதலையை எனக்கே உவந்தளிப்பாய்' என்று உரைத்தான். அர்ஜுனனும் தேவரீர் திருவுளப்படியே நடந்துகொள்ள அடியேன் சம்மதப்படுகின்றேன் என்று பணிவுடன் மொழிந்தான்.

'பார்த்த னருச்சுனன் கரியோன் விசயன்
பாகசாத னிசவ்வியாசி பற்குனன் பா
ரேத்து தனஞ் செயன் கிரீடி சுவேதவாக
னெனு நாமம் படைத்த பிரான் யாழோ ரின்பம்
வாய்த்த விதழமுத மொழிப் பேதை தாதை
மனையிருக்கத் திருவழுதி வள நாட்டுள்ள
தீர்த்த முழுவதுமாடி யன்பாற் றென்பால்
திருமலையுங் கைதொழு சிந்தித்தானே.'

அர்ஜுனனுக்குப் பற்பல திவ்விய நாமங்கள் உண்டு. பார்த்தன், கரியோன், விஜயன், பாகசாதனி, சவ்வியாசி, பற்குனன், தனஞ்செயன், கிரீடி, சுவேதவாகன் என்னும் பற்பல நாமதேயங்கள் பெற்ற அர்ஜுனன் தன் இன்பவல்லியான சித்திராங்கதையின் கனிவாய் இதழை முத்தமிட்டு அவளை அவளது தந்தையிடமே விட்டுத் தான் மட்டும் பின்னும் பற்பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடச் சென்றான்.

அர்ஜுனன் பற்பல தீர்த்தங்களில் ஆடிக் கடைசியில் துவாரகை வந்து சேர்ந்தான். அந்தச் சமயத்தில் சப்த மேகங்களும் மிக்கச் சந்தோஷ மடைந்து,

"இந்திரற்குத் திருமதலை மன்ற லெண்ணி யாதவர் கோன்
வளம்பதியி லெய்தினு னென்று
அந்தரத்தை நீலத்தால் விதானமாக்கி
அண்டமுற கடிமுர சமார்ப்பவார்ப்ப
வந்திரட்டை வரிசிலையாற் பஞ்சவண்ண
மகரதோரண நாட்டி வயங்கு மின்னுன்
முந்துறத் தீபமு மெடுத்துத் தாரை முத்தான்
முழுப்பொரி சிந்தின காலமுகில் களம்மா.'

காளமேகங்க ளெல்லாம் ஒன்றெனச் சேர்ந்து தமது தலைவனும் இந்திரனது மகனுன அர்ஜுனனுக்கு விவாகம் யாதவர் பட்டணமான துவாரகையில் நெருங்கியது என்றெண்ணி ஆகாயத்தை நீலநிற விதான மாக்கியும், தத்தம் பேரிடி யென்னும் முரச வாத்தியங்களை முழக்கியும், பஞ்சவர்ணமுள்ள தனுசை மகரதோரணமாக நாட்டியும், மின்னலினுல் பிரகாசப்படுத்தியும், நீர்த்தாரையாம் முத்துக்களை எங்கணும் சிந்தின.

துவரை வேந்தனுன பலராமன் யாரோ யதிச்ரேஷ்டன் தமதிடம் வருவதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி யடைந்தான். அந்த யதியின் பாதங்களில் விழுந்து வழிபட்டான். ஆனல் கிருஷ்ணனுக்கு அந்த யதியின் உண்மை யுருவம் நன்கு தெரியுமானுலும் அதை வெளிப்படுத்தாமல் தனியாக அந்த யதியைக் காணும் சமயத்தை எதிர் பார்த்தவண்ண மிருந்தான்.

'யதியாகியவ னிருந்த தோழன் றன்னை
யதுகுல நாயகன் பரிவோடி றைஞ்சவன் பால்
அதியான நெடுஞ் சுருதியாசி கூறி
யாக முறத்தழீஇ மகிழ்வுற்றுல நீழன்

மதியார் செஞ்சடை முடியோ னென்ன
வைகிவந்த வாறுரைப்ப நெடுமாலுங் கேட்டுத்
துதியாடிக் காலையிலே வருது மென்று
சொற்றிமைப் பின்மீளவும் போய்த் துவரை சேர்ந்தான்.'

தவவேஷமணிந்திருந்த அர்ஜுனன் அவனுடைய அருந் தோழ னென்பதை யுணர்ந்த யதுகுல நாயகனான கிருஷ்ணன் பரிவோடு இறைஞ்சி அவனுக்கு வேதோக்தமமான ஆசீர் வசனங்களைக் கூறித் தன் தேகத்தோடு தேகமாகத் தழுவிக் கொண்டு மகிழ்ச்சி யடைந்தான். வடவிருக்ஷத்தின் கீழ் சந் திரனை சடையில் தாங்கிக்கொண்டிருக்கும் பரமேச்வரன் போல் தோன்றும் அர்ஜுனைத் தவசியை அவ்வேஷமணிய வேண்டிய வரலாற்றை வினவ அதன் காரணத்தை ஆதி யோடந்தமாகப் பார்த்தனும் மொழிந்தான். அவற்றினைக் கேட்டு உள்ளம் பூரித்து 'மறுபடியும் காலையில் வருதும்' என்று சொல்லிச் சென்றான்.

மறுநாள் சூரியோதயத்திற்கு முன் துவாரகையில் விசேஷமான கொண்டாட்டம் நடந்தது. மழைக் கதிபதி யாம் இந்திரனுக்கு ஒரு விழா நடந்தது. அதற்கு அந்நகர்ச் சனங்கள் யாவரும் ஒரு குன்றின்மே லேறிப் பூசைப்போட லாயினர்.

'ஆதவன் வந்துதிப்பதன் முன் மற்ற நாளி
லணி நகர் வாழ் சனமனைத்து மர்தக் குன்றின்
மாதவனது ஏவலினுல் மழைக் காலத்து
வாசவற்கு விழாவயர்வான் வந்த காலை
யாதவரிப் போசரின் மற்றுமுள்ள வேந்தர்
யாவருஞ் சூழ்வர நறுந்தாரி ராமன் வந்தான்
சூதடர் பச்சிளங் கொங்கைப் பச்சை மேனிச்
சுபத்திரையுந் தோழியர்கள் சூழவந்தாள்.'

யாதவ ராஜனை பலராமனும் தன் குடும்பத்தோடு சூழ்ந்து வரவும் அவனுடைய சகோதரியாம் சுபத்திரையும் தன் தோழிகளுடன் வந்தாள்.

அர்ஜுன சன்யாசியும் அவ்விடத்தே தங்கியிருந்த படியால் யாவரும் அவரிடம் சென்று ஆசி பெறலாயினர்.

'முக்கோலுங் கமண்டலமும் செங்கற்றூசு
முந்நூலுஞ் சிகையுமாய் முதிர்ந்து தோன்றும்
அக்கோலம் அனைவரும் கைதொழுது நோக்கி
யருணலம் பெற்றகன்ற தற்பி னனைத்து லோகத்து
எக்கோல யோனிகட்கு முயிராய்த் தோற்றம்
ஈரைந்தாய்ப் பாற் கடலினிடையே வைகும்
மைக்கோல முகில் வண்ணன் தானு மெய்தி
மன வணக்கம் புரிவோனை வணங்கினனே.'

முக்கோலும் கமண்டலமும் கைக்கொண்டு முந்நூலும் சிகையும் தாங்கி வேஷமணிந்துள்ள அர்ஜுனத்தவசியை எல்லோரும் கைதொழுது நலம்பெற்றுச் சென்றனர்கள். அதன் பின்பு அகில உலகத்தையும் படைத்துக் காக்கும் தொழிலை மேற்கொண்டவரும், தசாவதாரங்களாகத் தோன்றியவரும், பாற்கடலில் பள்ளிகொண்டவருமான கிருஷ்ணனும் அந்தத் தவசியை வணங்கினன்.

அவ்விருவரும் அவ்விதமாகக் கலந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது அக்குன்றின் ஒரு சார்பில் சுபத்திரையாள் மிக்கப் பொலிவுடன் விளங்குவதைக்கண்ட தவசியின் மனம் அவள்பால் சென்றுவிட்டது. அவனது தேகம் புளகாங்கிதமடைந்தது. அவளது மருண்ட விழியம்பினால் எய்யப்பட்டுக் கலவரமடைந்தான். அக்காட்சியைக் கண்டதும் மாதவன், அம்மாதவத்தோனைத் தன் சுபத்திரைக்குக் கணவனாகக் கொள்ள மகிழ்ச்சி கொண்டான்.

தன் உடன்பிறந்தாளைக் கூப்பிட்டு அம்மாதவருக்குப் பணிவிடைசெய்யத் திட்டம் செய்தான். அவளும் அவ்வாக் கினைகளைச் சிரசாக வகித்து உடன்பட்டாள்.

"அடிகள் திருவுளத்தெண்ண மெம்மனோர்க
ளறியினிசையலர் பலரிங்கறிவுறுமற்
கடியயர்வுற்றும் பதிகொண்டடைக லென்றுங் காவலர்க்குக்
கடனென்றுங் கசியச்கூறிக்
கொடியிடை வெங்களப முலைக்கன்னிமானைக் கூயணங்கே
மெய்மையுறக் கொண்ட கோலப்
படிவமுனிக் குருபருவம்பணித்த தேவல் பரிவுடனீ புரி
யென்று பணித்திட்டானே."

சுபத்திரையைத் தவசிக்குப் பணிவிடைபுரிய நியமித்துவிட்டு மாதவன் சென்றனன். தனிமையாகக் கன்னிகையும் இருக்க, அக்கன்னிகையின்மேல் அளவுகடந்தக் காதல்பெற்ற வேடச் சந்நியாசி மனதிற்குள்ளேயே பரவசமடைந்தான். கிருஷ்ண னது சாகசத்தை உன்னி உன்னி மகிழ்ச்சியடைந்தான்.

'உள்ளடங்கிய காமவெங்கனல் புறத்தோடிக்
கொள்ளைகொண்டுடன் மறைத்தெனக் கூறையுந்தானும்
மெள்ளவந்து தன்கடிமனை மேவியவேடக்
கள்ளவஞ்சனை யறிந்திலள் கற்புடைக்கன்னி'

அவ்வேஷதாரி தன் காமத்தை உள்ளே யடக்கிக்கொண்டும் எவ்விதமாயினும் அக்கன்னியைத்தான் கடிமணம் புரிதல் வேண்டும் என்றும் எண்ணிக்கொண்டிருந்தான். அவ் வெண்ணத்தை அந்தக் கற்புடைக் கன்னியான சுபத்திரை அறிந்தாளில்லை. அவளது மனதில் கள்ளங்கபடு ஒன்றுமே யில்லையாதலால் சந்தேகப்படவுமில்லை. ஆனால் அர்ஜுன சந்நியாசியோவெனின் அங்கு வந்தது தன் தவப்பயனை யென்று கருதிக் களிப்பு மிகக் கொண்டிருந்தான்.

'ஈங்குவந்த தென்தவப்பயனென்று கொண்டெண்ணி
யாங்குவந் தொருமனையிடை அருந்தவன் துயிலத்
தூங்குகண்ணினள் சுபத்திரை தோழியர் பலரும்
பாங்குவைக மற்றொருமனைபுகுந்து கண்படுத்தாள்.

அன்றையிரவு அருந்தவன் துயில்கொள்ளமுடியாமல் புறண்டு புறண்டுப் பின்னர் உறங்கினான். தோழிமார்கள் எல்லோரும் அவ்விடமே படுத்துறங்கினர். தவசிமேல் சற்று விருப்ப முடைய மாதுதானனபடியால் மறைவாகச் சென்று சுபத் திரை படுத்தாள். அவ்விதம் படுத்தாளேனும் அவளுக்குக் காதல்நோய் விரைவில் உண்டாயிற்று.

'மதனலீலையிற் பழுதற வழிபடும்பாவை
வதனவாண்மதிவந்து முன்னிற் கவுமருண்டச்
சதனமேவருந் தபோதனன் தனக்குவெம்மோக
விதனவல்லிருள் விடிந்தில தாரிருள் விடிந்தும்'

'அற்றைநாள் முதலநேகநாளகின் மணங்கமழுங்
கற்றைவார் குழற்கன்னிகை வழிபடக் கருத்தால்
இற்றைமாமதன் பூசனுக்கென்செய்வோ மென்றென்று
ஒற்றையன்றில்போல் மெய்ம்மெலிந்து உள்ளமுமுடைந்
[தான்'

சுபத்திரைக்கு மதனனது லீலையிற் மிக்க விருப்பமுண்டெனி னும் தபோதனருக்குத் தன்மீது காதலுள்ளதோ இல்லையோ என்று ஐயப்பாட்டையடைந்தாள். அவளுக்கு அம்மாதவன் பேரிலுண்டான வெம்மோகம் தணிந்திலது.

சுபத்திரை தன் பணிவிடைக்காக நியமிக்கப்பட்ட அன்றுமுதல் பற்பல நாள்கள்வரையிலும் சற்றும் பிசகாமல் இயற்றிவந்தாள். எனினும் தபோதனனுக்கு அவள்மேல் காதல் வளர்பிறை மதியம்போலத் தினே தினே விருத்தி யடைந்து கொண்டிருந்தது. 'மன்மதனுடைய பூசைக்கு

என் செய்வேன். நான் தனியாகவன்றே இருக்கிறேன். தனக்குச்சரியான இணையொன்று இருக்கவேண்டும். ஒற்றையன்றில் எதற்குப் பிரயோஜனம் அதுபோல நான்மட்டும் மதனனை வழிபடுவது எதற்கு?' என்று மிக்க மனமுடைந்தவன் போலானான்.

அத்தபோதனனின் மனநிலைமையை விரைவினில் சுபத்திரை தெரிந்துகொண்டாள். அவனைப் பாதாதி கேசம்வரையில் உற்றுப்பார்த்தாள். ஏதோ சந்தேகப்பட்டே இம்மாதிரி செய்யலானாள். அவ்விதம் கவனிக்கும்போது அவன் பல நல்ல லக்ஷணங்கள் பொருந்தியிருப்பதை யுணர்ந்தாள்.

'நல்லிலக்கணம் பலவுடைய வயவநலத்தால்
வில்லிலக்கணத் தழும்புடைக் கரங்களால் மிகவும்
தொல்லிலக்கணம் பலவுடைச் சுபத்திரை யொருத
னில்லிலக்கணவனை யிவன்யார் கொலென்றயிர்த்தாள்'

மலையொடுமலைக்கும் வலிமிகுபுஜத்தையும், அகன்ற மார்பையும், செவ்வரி படர்ந்த நயனங்களையும், துடைவரையிலும் நீண்டுள்ள கைகளையும், வில்லைப்பிடித்தத் தழும்புடைய கரங்களையும் கண்டாள். நற்குலத்திலுதித்த சுபத்திரையாளுக்கு அந்த லக்ஷணங்கள் இவர்க்கு இருக்கும் என்பது தெரியாது போகுமோ. இவ்வித லக்ஷணங்களைப் பொருந்திய அம்மாதவன் யாராக இருக்கக்கூடும் என்பதறியாமல் சந்தேகப்பட்டாள். அவ்வளவு லக்ஷணங்கள் பொருந்திய மன்மதாகாரமுடையவனைத் தனக்குக் கணவனாக வாய்க்கும்படித் தன் தெய்வங்களை யெல்லாம் வழிபட்டாள்.

'மங்கையங்கொரு நாளவன்மலரடி வணங்கி
யெங்கும் வண்புனலாடுதற்கேகி னீரென்னுந்
தங்குமாநகர் யாதெனத் தபோதனன்றானு
மெங்கண்மா நகரிந்திரப் பிரத்தமென்றிசைத்தான்'

சுபத்திரை ஒருநாள் தான்கொண்ட சந்தேகத்தை அகற்றிக்கொள்ளவேண்டி மர்தவனது மரைடியில் வணங்கி 'தபோதனரே! தேவரீர் புண்ணியத் தீர்த்தங்களிலெல்லாம் நீராடி வந்திருக்கின்றீர்கள் என்றாலும் தங்களுக்கென்று ஓரூர் இருக்குமல்லவா? அந்த ஊர் எது? அதைக் கேட்டறிய மிக்க ஆவலுள்ளவளாக இருக்கின்றனன்' என்றாள். அதற்கு அம்மாதவன் 'எனது நகரம் இந்திரப்பிரஸ்தம்' என்று சட்டென உரைத்தான்.

தன் ஊரின் பெயரை அர்ஜுனன் சொல்லியதும் பஞ்ச பாண்டவர்களில் நடுப்பிறந்தவனும் இந்திரனது புத்திரனுமான அர்ஜுனனைத் தவிர மற்ற நால்வர்களின் க்ஷேமசமாசாரங்களைக் குறித்துக் குசலப்ரச்னம் பண்ணினாள். அது கண்டு அர்ஜுனனான தபோதனன் வியப்படைந்து,

> "வென்றி மன்னர் யாரையும் வினவினை மின்னே
> மன்றலர்தொடை விசயனைமறந்த தென்னென்றான்"

ஆணழகனும், வெற்றிவீரக்கழல் அணிந்தவனுமான விசயனை மறந்தக் காரண மென்ன வென்றான்.

தவசி கேட்ட கேள்விக்குப் பதில் தானாக சொல்வதற்கு வெட்கப்பட்டாள். அவளது கலவரத்தை மிக்க நுட்பமாக அறிந்த அவளது தோழிகளி லொருத்தி மறுமொழி பகர முன்வந்தாள்.

> "யாழின் மென்மொழி யெங்கள்நாயகி இளவனுக்கு
> ஊழினன் புடைமன்றலுக்குரிய ளாதலினால்
> வாழிவெஞ்சிலை விசயனைமறைத்தன ளென்றுத்
> தோழிநின்றவளொருத்தி கைதொழுதனள்சொன்னாள்"

சுபத்திரையின் தோழிகளில் ஒருத்தி கைதொழுதவண்ணமாக "வீணைகானம்போன்ற இன்மொழியாளாகிய எங்கள் நாயகி அந்த விசயரை மணஞ்செய்துகொள்ளப் போவதால்

அவருடைய நாமதேயத்தை மறைத்தனள். கணவரது நாமத்தைக் கற்புடைய காரிகையர்கள் வாய்திறந்து சொல்லமாட்டார்கள் அல்லவா?" என்றுரைத்தாள். இன்னும் அவ்வரிவை தொடர்ந்து கூறுவாள் :—

" பங்குனன்பெருந்தீர்த்தநீர் படிவதற்காகப்
பொங்குதெண்டிரைப் புவிவலம்போந்தனரென்றே
யங்குநின்றுவந்த வருரைத்தனர வனிப்போ
தெங்குளானெனத்தெரியுமோ அடிகளுக்கென்றாள் "

பற்குனன் புண்ணியத்தீர்த்தங்களில் படிந்துவர யாத்திரையாகச் சென்றவர் இப்போது எந்த இடத்திலிருக்கின்றார் என்பது தங்களுக்குத் தெரியவருமோ? தெரிந்திருப்பின் கிருபைகூர்ந்து தெரிவிக்கவேண்டுகிறேன் என்றாள்.

அப்பாங்கி கேட்டகேள்விக்கு விஜயன் மறுமொழியும் பகர்ந்தான் :—

பாங்கிசொல்லுரைதன் செவிப்படுதலும் விசயன்
தீங்கிலன் பலதிசைகளுஞ்சென்று நீராடிக் [பொருட்டா
கோங்கிளங் கொழுமுகைநிகர் கொங்கையாள்
வீங்குவந்து நம்மில்லிடை யிருந்தன னென்றான்

விஜயனுக்கு வழியில் ஒரு தீங்கும் எதிர்படவில்லை. பற்பல திசைகளிலுஞ் சென்று புண்ணியதீர்த்தங்களில் நீராடி யாத்திரை செய்துகொண்டேவந்து கடைசியாக இளமையும் கொழுமையும் ஒருங்கே அமையப்பெற்றுத் தாமரை முகை போன்ற கொங்கைகளையுடைய உங்கள் நாயகியாம் சுபத்திரையாள் பொருட்டு இந்நகரடைந்து அவன் உங்களது நடுவில் இது சமயம் அமர்ந்திருக்கின்றான் என்றான். அவ்வார்த்தைகளைக் கேட்டதும் மங்கைமார்களெல்லோரும் அதி யாச்சரியமடைந்தார்கள்.

"யதியுரைத்தசொற்கேட்டலும் யாதவிநுதல்வாண்
மதிவியர்த்தது துடித்தது குமுதவாய்மலரும்
புதியகச்சணி குரும்பைகளரும் பினபுளகம்
பதியிடத்தரிவையர்க் குளமாகுலம்படாதோ"

அந்த யதிச்ரேஷ்டர் உரைத்த மொழிகளைக்கேட்டு யாதவர் குலத்துதித்தவளும், சந்திரனைப்பழித்த நெற்றியுடைய வளுமான சுபத்திரையாளின் முகத்தில் வியர்வைத்துளிகள் எழும்பின. குமுதமலர்போன்ற வாயும் துடித்தது. புத்தம் புதிதாக அணிந்துள்ள கச்சினுள்ளே பொருந்தி அடங்கியிருந்த தெங்கினிளங்காய்போன்ற தனமும் விம்மிப்புளகிதமடைந்தது. அளகமும் சோர்ந்தது. அவளது மூங்கிலனைய இருகரங்களும் அவ்வழகனது ஆலிங்கனத்தைப்பெற ஆயத்தமாகவிருந்தன. பதிகளிடத்தில் அரிவையர்களுக்கு சகஜமாகவே மனத்தில் ஒருவிதமான ஏக்கமும் வருத்தமும் குடிகொண்டிருக்கு மன்றோ?

ஆடவர்களைவிட அரிவையர்கள் காதலின் விஷயத்தை மிக நுட்பமாகத் தெரிந்துகொள்ளும் அரும் சக்தி பெற்றவர்கள். மற்ற கன்னிகையின் மனத்திலெழும் காமவெழுச்சிகளை அவர்களது பார்வையினின்றும் உணரவல்லவர்கள். ஆனதால் சுபத்திரையின் மனோ நிகழ்ச்சிகளை உணர்ந்து தோழிகள் அவளைவிட்டுத் திடுமென அகன்றார்கள். அவர்கள் அந்த சமயம் விட்டுச்சென்ற நிகழ்ச்சியானது சர்க்கரைப்பந்தலிற் தேன்மாரி பொழிந்தது போலிருந்தது.

"உகவைமுத்தமென்பவளமு நீலமுமொளிர
அகவுபச்சிளங்தோகை போனின்ற அவ்வணங்கை
மிகவிருப்பநோய் வளர்தலின் மெலிந்ததோள் விசயன்
தகவுடைத்தன தடக்கையால் வளைக்கரந்தகைத்தான்"

பச்சிளங்தோகைமயில்போலும் சாயலுடைய சுபத்திரைமீது அதிகமாக மையல் கொண்டிருந்ததால் விசயன் காதல் நோயால் பீடிக்கப்பட்டான். அம்மங்கையின் பவளவாய் முத்தத்தை விரும்பி நின்றான். அவளது சம்சர்க்கத்தை மிக ஆவலோடு எதிர்நோக்கியவண்ணமிருந்தான். அவ்விதம் இருக்கும்போது அவனது பராக்கிரமம் பொருந்திய தோள்களும் அசைதியாகிவிட்டன. மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. மெதுவாக அவளது இடதுவளைக்கரத்தைத் தனது வலது தடக்கையினால் பிடித்து, தனது இடதுகரத்தை அம்மங்கையின் இடது தோள்மீது போட்டுப் பிடித்துத் தன்னருகே கொண்டுவர முயன்றான். அக்காதலர்களில் ஒருவரது தேகம் மற்றொருவரது தேகத்தில் சம்பந்தமாக ஸ்பரிசம் பெற்றபோது இருவரது இதயங்களும் புளகாங்கித மடைந்தன. சுபத்திரையாள் விசயனது செய்கைக்கு உட்பட்டாளேனும் பிணக்குசெய்தாள். தன் கடைக்கண்ணினால்நிலத்தை உற்றுநோக்கினாள். பூமியை உற்றுநோக்குவதைக் காதல் நோயால் வருந்தும் கட்டழகன் தன்னை உதாசினம் செய்வதாக எண்ணி அவளை நோக்கிக் கூறுவான் :—“ கண்ணே ! சுபத்திரா ? பாராயோ எந்தன்முகம் ; பார்த்தொருக்கால் என் காதல்தீர ஒருவார்த்தையாவது சொல்லாயோ ” (படம் பார்க்க) என்று தழதழத்தகுரலில் கூறினான். அவ்விதங் கூறக் கேட்ட அரிவையர் திலகமான சுபத்திரையும் உடன் பட்டாள். அன்றிலின் ஜதைபோல இருவரும் கூடி முயங்கினர். அச்சேர்க்கையில் அவர்கள் இப்பூவுலகவநிகழ்ச்சிகளை மறந்தனர்.

அக்காதல காதலியர் இன்பம் நுகர்ந்த விஷயத்தை உணர்ந்ததும் கிருஷ்ணன் ஆங்கடைந்தனன். தன் சகோதரியாம் சுபத்திரை அர்ஜுனனையே மணக்கவேண்டு மென்று முகில் வண்ணன் முழுமனதாக விரும்பி தனது எண்ணம்

கைகூட இவ்வாறு அவர்கள் தனியே ஒருவர்க்கொருவர் காதல் கொண்டு கந்தருவ மணம்புரிந்து கொள்ளச் செய்தான்.

> "முன்னம்யாவையு முடித்தருண் மொய்துழாய் முடி
> [யோன்
> கன்னனுருயிர் கொளவளர் காளையைத்தழீஇ க்கொண்டு
> அன்னமென்னடை யரிவையர் பொருட்டுநீ யின்ன
> மென்னவென்ன மாதவ உருக்கொள்ளுதி யென்றான்"

"அர்ஜுனா! இன்னமும் இக்கோலமேன்! களைந்தெறிவாய் இவ்வேஷத்தை. நீ விரும்பிய எண்ணம் கைகூடியபின்பும் இது எதற்கு? அன்னநடையாள் பூவை சுபத்திரையைப் பெற எடுத்த வேஷம் இனிதே நிறைவேறிற்றல்லவா? "என்று முன்னாலேதான் விரும்பியவிதம் முடித்த முகில்வண்ணன் கூறினான். அர்ஜுனனும் தன் தவக்கோலத்தை மாற்றினான். விசயனுக்கும் சுபத்திரைக்கும் அபிமன்னியு பிறந்தான்.

## உக. சுகப்பிரம்மா.

மகா பாரதத்தை வடமொழியில் உலகத்தார்க்கு வெளியிட்ட உத்தம மகரிஷியான வியாசர் ஒரு சமயம் கடுமையான தவமியற்றினார். வியாசர் வேதத்தையே அங்கமாகப் பெற்றிருந்தவரான படியினால் அவருக்கு வேத வியாசர் என்ற திவ்வியமான பெயரும் உண்டு. வியாசரே விஷ்ணுவாகவு மிருக்கின்றார் என்பதாகப் பொருள் படும்படி 'வியாசாய விஷ்ணுரூபாய' என்று வேதங்கள் முறையிடுகின்றன. அத்தகைய மகிமைகளைப் பெற்ற வியாச பகவான் பார்வதி பரமேச்வரனைக் குறித்து அகோரமான தவம் செய்தார். வியாசர் தவம் செய்வதற்கு முக்கியமான காரண மென்ன வெனில் தன்னுடைய யோக சக்தியினால் தன் ஆத்மாவிலே தான் அடங்கினவராய் ஒரு புத்திரனைத் தான் அடைய வேண்டு மென்பதே. அவரது தவத்துக்கு மகிழ்ந்து ஈசனார் தரிசனந்தந்தபோது அவர் பார்வதி மணாளரை நோக்கி, 'சர்வசக்தி வாய்ந்த தயாமூர்த்தியே! பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபூதங்களின் சக்திகளையும் ஒருமிக்கப் பெற்ற ஒரு தனயனை எனக்கு அருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அப்பிரார்த்தனையை அங்கீகரித்து முக்கண்ணர் மகிழ்ச்சி யடைந்து 'வியாசரே! உமது அகோர தவத்துக்கு அகமகிழ்ந்தனம். உமது திருவுளப்படியே ஒரு புத்திரனை உமக்கு அளித்தோம். பஞ்சபூதங்கள் போலப் பரிசுத்தனாகவு மிருப்பான். அவனது அறிவும் ஆத்மாவும் எப்போதும் பிரம்மத்தினிடத்திலேயே யிருக்கும். பிரம்மத்தை அனுசரித்தவனா யிருந்து பிரம்மத்துள் லயம் ஆவான்' என்று வரமளித்த பின் அந்தர்த்தானமானார்.

அவ்வரம் பெற்ற பின்னர் ஒரு நாள் வியாசர் அக்னி மூட்ட மரக்கட்டைகளை ஒன்றோடொன்று இழைத்துக்

கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் கிருதாசி என்னும் பெயருடைய ஓர் அப்ஸர மாது தோன்றினாள். அவளது ரூபலா வண்யத்திற்கு அடிமையாகி அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவளது வடிவழகைத் தன் இருகண்களினால் அப்படியே பருகி விடுவார் போலவும் தோன்றினார். அம்மகரிஷியின் உள்ளத்தை நன்றாக அந்த அப்ஸரமங்கை அறிந்து கொண்டாள். உடனே அவளும் தன் உருவத்தை மாற்றி கிளியாகிவிட்டாள். அவ்விதம் உரு மாறியிருந்தால் மகாரிஷி தன்மீது கவனத்தை நாட்டம விருப்பரோ என்றெண்ணினாள். அவ்ளது எண்ணம் அவமாகிவிட்டது. கிளியான பின்புங்கூட அத்தபோதனர் தமது பார்வையை அகற்றிக்கொள்ளவில்லை. அந்தக் கிளியின்மீதும் தமது நாட்டத்தைச் செலுத்தினார். அந்தக்கிளியே அப்ஸரஸ் என்றும் அவர் தெரிந்துகொண்டார். காமவெழுச்சியை அடக்கிக்கொள்ள முடியாமல் தவித்தார். அந்தச்சமயத்தில் அவரது வீர்யம் வெளிப்பட்டுவிட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் அருமையான குமாரன் அங்குத்தோன்றினன். அவன் பிறப்பதற்குக் காரணமாக விருந்தது சுகம் (கிளி) தான். ஆனபடியினால் அவனுக்குச் சுகர் என்பதாகப் பெயரிட்டார். கங்கை தன்புனித நீரினால் சுகனை ஸ்நானஞ் செய்வித்தாள். ஆகாயத்தினின்றும் சந்நியாசிகளுக்கு உதவும் தண்டமும் மான்தோலும் விழுந்தன. கந்தர்வர்களும் கின்னரர்களும் தங்கள் சந்தோஷத்தைக் கானமெழுப்பி கீதம் பாடினர். வேதங்களெல்லாம் அவரை அடைக்கலமடைந்தன. சுகர் தேவகுருவான பிரகஸ்பதியைத்தாம் குருவாக அடைந்தார். சகலவிதமான ஞான நூல்களையும் கற்றுத் தெளிந்தார். பிரம்மசரியமே சிறந்ததென்று எண்ணி அதன்படி நடந்தார். மோக்ஷத்தை யடையும் மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதிலேயே முயன்று வந்தார்.

வியாசர் தமதருமையான மைந்தன் உலகத்திற்கே திலக மாயிருக்கவேண்டுமென்று விரும்பினார். அவரைக் கூப்பிட்டு 'மைந்தா! நீ எண்ணரிய சாஸ்திரங்களையும் ஞானத்தையும் அடைந்திருந்தபோதிலும் உலகத்து ஞானத்தையும் நீ பெற வேண்டியது அவசியம். ஆகையினால் நீ மிதுலாபுரியை யாளும் ஜனகமகாராஜனிடம் சென்று அவர் சொற்படி கீழ்படிந்து நடக்கவேண்டும். அவர் நீ அடைய முயலும் மோட்சமார்க் கத்தை உனக்குப் போதிப்பார். அதை நீ கவனமாக ஏற்றுக் கொள்ளுவாய். நீ போகும்போது ஆடம்பரத்துடன் தவ மகிமையால் ஆகாயமார்க்கமாகச் செல்லாதே. கால்நடையாகப் போகவேண்டும் என்றார். பிதாவினது ஆக்கினைகளைச் சுகர் சிரசாகவகித்து அதன்படி கால்நடையாகவே காடு வனம் வனாந்திரங்களைக் கடந்து மிதுலாபுரியை நோக்கி வந்துகொண் டிருந்தார். வழியில் எத்தனையோ காட்சிகள் இருந்தபோதி லும் அவைகளொன்றிலும் சுகருடைய புத்தி செல்லவில்லை. பற்பல நாட்கள் சென்று மிதுலாபுரியை அடைந்து அரண் மனை வாயிலில் நின்றார்.

அரண்மனை காப்பான் சுகரை உள்ளே புக அனுமதி யளிக்க மறுத்தனன். ஆகவே சுகர் தன் பெயரைச் சொல்லி தன் தகப்பனார் அவ்விடத்திற்கு அனுப்பினார் என்பதையும் சொல்லி அரசருக்குத் தெரிவிக்கச் சொன்னார். அவ்வாறே அவ்வீரனும் மகாராஜாிடம் தெரிவித்தான். மகா தவ ஸிரேஷ்டரான ஜனகர் அவ்வீரனுக்கு உத்திரவிடாமல் சும்மா இருந்துவிட்டார். சுகருடைய பொறுமையைப் பரிசோதித் தறியவேண்டி அவ்விதம் செய்தார். ஒருநாள் கழிந்தது, இரண்டு நாட்களும் கழிந்தன. இவ்வாறு ஏழு நாட்கள் கடந்து சென்றன. அப்பொழுதும் ஜனகர் சுகரை அழைக்க வில்லை. அந்த ஏழு நாட்களும் சுகர் தாம் எந்த விடத்தில் முதன் முதலில் நின்றிருந்தாரோ அதேயிடத்தில் அசை



கண்ணாளா! என்னை இதுசமயம் ஆதரியும். என் ஆவியைக்கொள்ளை கொண்ட என் காதல! என்மீது கருணைகூர்ந்து பார்த்தருளும்.



எனதருமையான கங்கா! என்னையும் விட்டுப்போக உனக்கு மனமும் வந்ததோ? வேண்டாம்; என்னைப் பரிதவிக்க விட்டுப்போதல் உனது இளகிய மனதுக்கு நேரோ?

வற்றுப் பதுமைபோல நின்றுகொண்டிருந்தார். அல்லும் பகலும் உணவின்றி பெருத்த தியானத்தமர்ந்து விட்டார்.

எட்டாம் நாள் காலை ஜனகமகாராஜர் தாம் இன்னும் பரிசோதித்தறிய வேண்டி சுகரை உள்ளே வரவழைத்தார். அதற்கு முன்பாக, அவ்வாலிபரது மனத்தூய்மை எவ்வா றிருக்கின்ற தென்பதைப் பரிசோதிக்க நல்ல வடிவழகுடைய யௌவன விலைமாதரை ஏற்படுத்தி யிருந்தார். அப்பாரத்தை யர்கள் எப்படிப்பட்டவரையும் தத்தம் ஆடல் பாடல்களினு லும் சாகசங்களினுலும் மயக்கித் தம் மையலில் சிக்க வைக் கும் ஆற்றல் படைத்தவர்கள்.

சுகர் ஜனகமகாராஜரைக் கண்டதும் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "பெரியோய்! என்னை ஆட்கொண்டருள வேண்டும். மோட்சத்தின் மார்க்கத்தை அடியேனுக்கு உப தேசிக்க வேண்டும். எனதரும் பிதா வியாசர் தம்மிடம் என்னை அனுப்பி யிருக்கின்றூர். தேவரீர் ஆக்கினைகளுக்கு நான் எதிர்பார்த்தவனுகக் காத்துக்கொண் டிருக்கிறேன். என்று பணிவாக மொழிந்தார். அதற்கு தத்துவ சிகாமணி யாம் ஜனகர் "அவ்விதமே யாகுக. சற்று சிரம பரிகாரம் செய்து கொள்வாய்" என்று சொல்லி சுகரை அழகும் அலங்காரமும் மிகுந்த பள்ளி யறையினுள்ளே இருக்கும்படி யாக அனுப்பிவிட்டார். சுகருக்கு ஒன்றுமே தெரியாது. அவர் அவ்விதமாக அமர்ந்திருக்கும்போது ஒரு எழில் மிகுந்த ஏந்திழையாள் எதிரில் தோன்றி இன்னிசையாகக் கானம் எழுப்பிப் பாடினுள்; அபிநயஞ் செய்து ஆடினுள்; தன் விழிகளால் மயக்கினுள். அவரது பக்கத்தே அமர்ந்து கையைப் பிடித்துக் கெஞ்சினுள்; மேல் விழுந்தாள். என்ன செய்தாலும் சுகர் கண் விழித்துப் பார்த்துக் கொண்டிருந் தாலும் அச்செய்கைகளில் ஒன்றிலும் தான் கலந்து கொள்ளாமலும், விருப்பமற்றும் இருந்தார். அந்தக்

காமினி தன் சக்தி அவரிடத்தில் பலியாதது கண்டு வெட்கிப் போய் ஜனகரிடம் தன்னுடைய தோல்வியைக் கூறினாள். அந்த மாதை விட அதிக சமர்த்தையை அனுப்பினார். அவளும் அபஜயமே அடைந்தாள். இவ்வாறாக விலை மாதர்களில் பலரும் ஏமாற்றத்தை யடைந்தனர். ஜனகமகாராஜர் பின்னும் ஒரு முறையில் சுகரது ஆற்றலைப் பரிசோதிக்க வெண்ணினார். சுகருடைய கையில் ஒரு வாயகன்ற கிண்ணத்தின் நிறையப் பாலை ஊற்றிக் கொடுத்து அந்நகரை மூன்று முறை வலம் வர ஆக்கியாபித்தார். அவ்வாறு சுற்றி வரும்போது ஒரு துளி பாலும் கீழே சிந்தக்கூடாது என்று கட்டளையிட்டு அவருடன் இரண்டு பக்கத்திலும் இரண்டு வீரர்களைக் காவலாக அனுப்பினார். அந்நகரத்தில் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இருந்தன. எண்ணிறந்த, எழில் வாய்ந்த மகளிர் வீதிகளில் நின்றிருந்தனர். சுகர் கையில் பாற்கிண்ணத்தைப் பிடித்த வண்ணமாக தம்மைச் சுற்றிலுமுள்ள விஷயங்களில் ஒன்றிலும் மனதைச் செலுத்தாமல் நடந்து சென்றார். மூன்றாம் முறையும் நகர் வலம் வந்தாகிவிட்டது. கிண்ணத்திலிருந்து ஒரு துளியும் பால் சிந்தவில்லை. சுகர் ஜனகரிடம் சென்று பணிந்து நின்றார். அப்போது அம்மகான் சுகரைப் பார்த்து, "சுகரே! வழியில் கவனித்த விஷயங்கள் என்னென்ன" என்று கேட்டார். அதற்குச் சுகர் ஒன்றும் தனக்குத் தெரியாது என்றார். அதன் பின்னரே ஜனகர் சுகரின் பக்குவ திசையின் மேன்மையைக் கண்டார். மோட்ச மார்க்கத்தை உபதேசிக்கத் தகுந்த மாணவர் அவரே என்று உணர்ந்து உபதேசமும் செய்தார்.

சுகர் அதன் பின்பு ஜனகரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தவமியற்ற இமயமலைச் சாரலை யடைந்தார். அங்கு ஒரு மலை யருவியின் பக்கத்தே ஓரிடத்தில் யோகாசனமிட்டு

அமர்ந்து நிஷ்டையி லிருந்தார். அவ்விதமாக அகோராத்திரி யாகத் தியானத்தில் இருந்தார். தேவேந்திரனும் மற்ற தேவர்களும் சுகரின் தவ வலிமையைச் சோதித்தறிய விரும்பினர். ஜனகமகாராஜன் அபஜய மடைந்த விஷயம் அவர்களுக்குத் தெரியாம லிருக்குமோ? அவர்களுக்கும் தெரியும். தெரிந்தே, இந்திரன் தன்னுடைய ஊர்வசியை சுகரின் தவத்தைக் கெடுக்க அனுப்பினன். ஊர்வசி அழகே யுருவாக வந்தவள். திவ்விய அங்கங்களைப் பெற்றவள். ஒவ்வொரு உறுப்பும் தந்தத்தில் கடைந்தெடுக்கப்பட்டது போலத் தோன்றும். அத்தேவமாது திவ்வியாபரண பூஷிதையாகி சுகரின் எதிரில் தோன்றி இனிய கீத மெழுப்பி நாட்டிய மாடினள். விழிகளால் மயக்கினள்; மாற்றி மாற்றித் தன் வளைய லணிந்த கரத்தை மேலுக்கு உயரத் தூக்கித் தன் மார்பகத்தை நன்றாகத் தெரியும்படிச் செய்துகொண்டாள். காமவெழுச்சியையும் காதலையும் தூண்ட எத்தனையோ சாகசங்களை மேற்கொண்டாள். தன்னுடைய கைச் சரக்குகள் ஒன்றும் அவரிடத்தில் பலிக்காமற் போகவே மிகவும் வருத்தப்பட்டாள். அதுவரையிலும் அவ்விஷயத்தில் அவள் அபஜயத்தை யடைந்தவளே யல்ல. அவ்வண்ணமிருக்க தோல்வியை அடைந்தபோது வருத்தப்படாமலிருக்க முடியுமோ? இன்சொல் பேசியாவது பார்ப்போம் என்றெண்ணி சுகர் கண் விழித்துத் தன்னைப் பார்க்கும் சமயத்தை எதிர்பார்த்த வண்ணமாக யிருந்தாள். சுகர் ஊர்வசியைக் கண்டார். அதுவே தகுந்த சமயம் என்று நினைத்து ஊர்வசி தன் இனிய குரலை யெழுப்பி மிகுந்த வணக்கத்துடனும் காதல் வயப்பட்டு அவஸ்தை யுறுவதுபோலும் மொழி குழற அளகம் சோர, "கண்ணளா! என்னை இது சமயம் ஆதரியும். என் ஆவியைக் கொள்ளை கொண்ட என் காதல! என்மீது கருணைகூர்ந்து பார்த்தருளும்." (படம் பார்க்க)

என்று சொன்னாள். அவற்றிற் கெல்லாம் சுகர் மகிழ்ந்து விடுவாரோ? ஆடிக் காற்றின் முன்னே இலவம் பஞ்சுபோல பறந்து போயின. ஊர்வசியும் வெட்க மடைந்து தன் இருப் பிடம் சென்றாள்.

ஒரு சமயம் சுகர் காட்டின் வழியே சென்றுகொண் டிருந்தார். அவரைப் பின்தொடர்ந்து வியாசரும் வருகின் றார். ஆனால் சுகர் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந் தார். அவ்விதம் வருகின்ற வழியில் ஒரு பெரிய தடாகத் தில் பற்பல இளமங்கையர்கள் தமது ஆடைகளை யெல்லாம் கரையில் களைந்து வைத்துவிட்டு நிர்வாணமாய் ஜலத்தி லிறங்கி ஜலக்கிரீடை யாடிக்கொண் டிருந்தார்கள். அம் மங்கைமார் தேகக்கட்டும் யௌவனமும் மிகுந்த சுகரைக் கண்டும் சற்றும் நாணமின்றி நிர்வாணமாக ஆடிக்கொண் டிருந்தார்கள். சுகரும் அவர்களைக் கண்டு மனத்தில் ஒரு கல்மிஷமு மில்லாமல் வழி நடந்தார். அவர் பின்னே வியாசர் வருவதை யுணர்ந்த அம்மடந்தையர்கள் சிலர் ஆடைகளைத் தரித்துக் கொண்டனர். மற்றும் சிலர் தண்ணீருக்குள் அமிழ்ந்த வண்ணம் இருந்தனர். அதைக் காண வியாசருக் குச் சினமூண்டது. 'இளையவனும், அழகு மிக்கவனுமான சுகன் சென்றபோது நிர்வாணமாய் அவனை நோக்கி களிப் படைந்த நீங்கள் விருத்தாப்பியனான என்னைக் கண்டதும் லஜ்ஜை மேலிட்டவர்களாய் ஆடை தரிக்கக் காரணமென்ன' என்று கேட்டார். அம்மங்கையர்களி லொருத்தி நகைத்துப் பரிகாசம் செய்தாள். 'அந்த யௌவனனுக்கும் இந்தக் கிழத் திற்கும் வித்தியாசத்தை உணர்ந்தீர்களா' என்று தன் தோழிகளிடத்தில் சொல்லிக் கொண்டாள். சுகருக்கு ஒரு வித உள்ளக் கிளர்ச்சியும் உண்டாகவில்லை. ஆனால் வியாச ருக்கோ காம விச்சை தோன்றி அவ்விதம் தோன்றியதை வெளிப்படையாகக் கேட்கவும் கேட்டுப் பரிபவத்தை யடைந்

தார். வியாச பகவானை விட எத்தனையோ கோடி மடங்கு திடசித்தமும் ஒழுக்கமும் சீலமும் அதிகமாகச் சுகர் பெற்றிருந்தார் என்பது இதனால் விளக்கமுறுகின்ற தல்லவா?

பரமேச்வரர் வரமளித்தபடியே சுகரும் பிரம்மத்தில் லயம் ஆவதற்கு வேண்டிய முயற்சிகளையும் தவங்களையும் அனுஷ்டித்து வந்து இறுதியில் பிரம்மத்திலேயே ஜோதியாகி ஒன்றெனக் கலந்துகொண்டார். அதன்பின் தாம் வேறு பிரம்மம் வேறு என்று சொல்ல முடியாது. சுகப்பிரம்மா என்ற திவ்விய நாமத்தைப் பெற்றார். பார்வதி நாதரது வார்த்தையும் பொய்க்குமோ?

* * * *

கைலையங்கிரி நாதன் ஒருநாள் சரசோல்லாசமாய் தம் பத்னியுடன் வீற்றிருக்கும்போது, "ஹே! ஹிமா! என் முடியி லிலங்கும் மதியை விழுங்க வானின் வழியாக இராகு வருகின்றான். நிறை மதியைப் பழிக்கும் நின்மல முகத்தாளே! நின் முகத்தை மதியென்றே யெண்ணி மதி மழுங்கி அப்பொல்லான் தவறிக் கவரப் போகின்றான்" என்றார். தன் பிராணநாதர் கூறிய மொழிகளைக் கேட்ட பார்வதி ஆகாயத்தை உற்று நோக்கினாள். அது தருணம் அரனார் இதுதான் சமயம் என்று பார்வதியி னிரு கன்னங்களிலும் ஆனந்தத்துடன் முத்தமிட்டார்.

## ௨௨. ஸ்ரீ சுப்பிரமணியரின் காதல் விஷயம்.

**ஸ்ரீ சுப்பிரமணியர்** அழகில் மன்மதனையும் வென்றவரானபடியினால் **குமாரன்** என்ற பெயரினையும் பெற்றார். (கு+மாரன் = மன்மதனைத் தன் அழகினால் குறைவு படுத்தியவன்). அதோடும் கூட பல அருமையான பல நாமதேயங்களையும் பெற்றிருக்கிறார். கிருஷ்ணனைப் போலவே சுப்பிரமணியரும் லீலா விநோத விஷயங்களில் ஈடுபட்டு இன்பம் நுகர்வார். திரிலோக சஞ்சாரியும், யாழ்வல்லோருமான நாரதர் 'வள்ளி'யின் வடிவழகைக் குறித்துக் குமாரனிடம் சொல்லி யிருந்தார். எவ்விதத்திலாவது பூவுலகத்தில் தோன்றி அந்தத் திவ்விய மங்கையை மன்றலாட வேண்டுமென்று மனமார விரும்பி ஒரு வேடனது வேஷம் பூண்டு நம்பிராஜன் ஆட்சி புரிந்துவரும் பிரதேசத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

நிற்க, நம்பிராஜன் என்பவன் வள்ளியின் தகப்பனார். அவன் வேடர்களுக்கெல்லாம் அரசன். அவனது குலாசாரப்படி தன் அருமையான மகளை—வள்ளியை—தினைப்புனம் காக்கும்படிச் செய்திருந்தான். அம்மங்கை நல்லாள் தன் பிதாவின் கட்டளையைச் சிரசாக வகித்துத் தன் குயிலனைய சாரீரத்தை எழுப்பி இன்னிசைகளைப்பாடி ஆயாலோட்டி மிக்க கவலையுடன் புனங்காத்து வந்தாள். அவ்விதம் அவ்வங்கனை தினைப்புனம் காத்துவரும் நாளில் ஒரு அதிசயமான சம்பவம் நடந்தது. அன்றையதினம் அவள் விடியற்காலையில் துயில் நீத்து எழுந்திருந்தபோதே தன் இடது கண் துடித்ததை யுணர்ந்தாள். தனக்கு யாது நன்மை அன்று கிடைக்கப் போகின்றதோ என்பதை யுணராமல் சும்மா விருந்து விட்டாள். வள்ளி பரண்மேலிருந்தபடி பாடிய வண்ணம் இருப்பதை அவ்வழியே வந்து கொண்டிருந்த குமாரன் கேட்டு

ஆனந்தமடைந்தான். சற்று அருகில் வந்ததும் அவள்து மேன்மையான அழகைத் தன் விழிகளின் ஆசை தீரப்பார்த் தான். அப்படிப் பார்த்தபோது ஐயமேற்பட்டு விட்டது. உண்மையிலேயே பூமடந்தை தானோ அல்லது,

“ முக்கண்ணர்பாகத் துமையோ ! முராரிதன் மொய்குழலோ !
வக்கா ரூபமதா விதிநாவி லமர்ந்தவளோ !
திக்கடங்கப் புகழுஞ் சசியாதிய தெய்வமின்னே !
மிக்க செந்தூர்க்குகன் றன்னருளோவிந்த மெல்லியலே !

‘உமாதேவியோ! ஸ்ரீ மகா லக்ஷ்மியோ! பிரமனது நாவி லுறையும் சரஸ்வதி தேவியோ! எட்டுத் திக்குகளிலும் புகழ் பெற்ற இந்திரனது தேவியான சசி தேவியோ! மற்று விண் மடந்தையர்களில் சேர்ந்தவளோ! இம்மெல்லியலாள் யாரென் பதையும் இச்சமயத்தில் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கின் றேனே’ என்று தன்னுள்ளேயே கூறிக்கொள்வானாயினன். வடி வழகியான வள்ளி அவனைக் கவனியாதவளாகிப் பரண் நின்றும் கீழிறங்கி உலாவிக் கொண்டிருந்தாள். அதைக் கண்டு குமாரன் மனத்தெளிவடைந்தனன்.

‘ கண்ணிமைக்கின்றன கானிலந்தோய்ந்தன கார்குழலி
வண்ணியதார் மலர் வாடினவேர்வை யரும்பினவால்
விண்ணின ளல்லள் வியன் செந்தில்வாழ் குகன் மெய்யருளால்
மண்ணிடை யென்னிமித்தம் பிறந்தாளிந்த மாதரசே ’

‘என் மனதைக் கவர்ந்துகொண்ட காரிகையின் கால்கள் நிலத் தில் படுகின்றன ; அவள் கயல் விழிகள் இமைக்கின்றன ; கூந்தலிற் சூடிய மலரும் வாடியிருக்கின்றன. மதிமுகத்தில் முத்துப்போல வேர்வை யரும்புகின்றன. இத்தியாதி கார ணங்களினால் அவள் விண்மடந்தை யல்லள். இப்பூவுலகில் எனக்காகவே அம்மாதர் திலகம் தோன்றி யிருக்கின்றாள். மணஞ்செய்து கொண்டால் இம்மங்கையை யல்லவோ மணம்

புரிதல் வேண்டும்' என்று கூறினன். எழில் மிக்க ஏந்திழை யின் ஒவ்வொரு அங்க அமைதியையும் கண்டு வியந்து களிப் பெய்தி அத்தகைய சுந்தராங்கியை,

'தொட்டாலும் போதும் மடமாதிவள் பாத தூசி யென்மேற்
பட்டாலும் நல்ல பதமே கிடைக்கும் பழிசுமந்து
கெட்டாலும் நன்றென்றிவளோடு சேரக்கிடந்துயிரை
விட்டாலும் நல்லகதி மோக்ஷ மாகும் விதியிதுவே'

என்று ஒரு தீர்மானத்துக்கு வந்தான். அவ்வித முடிவுக்குக் குமாரன் வந்ததும் தைரியமும் கொண்டான். துணிந்தபின் எண்ணுவது இழுக்காகு மன்றோ? அம்மங்கையை அணுகி இனிமையான குரலில் அவளை நோக்கிக் கூறுவான் :—

'காயாத கானகத்தே நின்று லாவு நற்காரிகையே !
மேயாத மான் புள்ளி மேவாத மான் விழிமானந்த மான்
சாயாத கொம்பிரண்டே யிருந்தாலுந் தலை நிமிர்ந்து
பாயாத மானென்று பட்டதுண்டோ உந்தன் பார்வையிலே.'

'நற்பாவாய்! இவ்வருங்கானகத்தில் உலாவுவதேன்? இவ் விடத்தே ஒரு மான் சற்று முன்னே வந்ததை நீ கண் டாயோ? அந்த மான் எப்படிப்பட்ட அடையாளத்தையுடை யது என்பதையும் கூறுகின்றேன். அம்மான் புள்ளி மான் அல்ல; தரையில் வளர்ந்துள்ள புல்லை மேயாத மான் அது. மருண்ட பார்வையைப் பெற்றிருக்கும் அம்மான். அந்த மானுக்கு இரண்டு கொம்புகளிருந்தாலும் சாயாமல் நிமிர்ந் திருக்கும். அக்கொம்புகள் நிமிர்ந்திருப்பினும் பாயாது. அப்படிப்பட்ட நேர்த்தியான மானை நீ பார்த்ததுண்டோ? சொல்வாய்' என்றான். மானிற்கும் அம்மடமாதிற்கும் இரண் டுக்கும் பொருள் படும்படி சிலேடையாகக் கூறினன். சாயாத கொம்பிரண்டு என்று கூறியது கொழுமையுடனிருந்த இரு கொங்கைகளைக் குறித்ததாகும். அவ்விதமாகச் சிலேடை

யாகப் பாடியதைக் கேட்ட வள்ளியும் தைரியமாகப் பதில் கூறினாள் :—

'எந்த மானிட வேடன் நீ காண் வேட்டைக்
கேற்ற மான் மலையிலுண்டு இம்மான் நம்பி
தந்தமானனது வலைக் ககப்படா மான்
தைரியமான், சௌர்யமான், ஜாதிமான் யான்
அந்த மானென் றெண்ணி என்னிடம் வந்
தாண் பிள்ளை பெண்பிள்ளைக் கபயம் போட்டு
சொந்தமான் மகள்போல் ஏதோ சொன்னாய்
தோழியை விட்டு யினி யடித்துத் துரத்துவனே:'

'தனியாக அயல் மாது புனங்காத்திருக்க அவளிடம் பேசுவதும் அடாது என்று தெரிந்து கொண்டிருந்தும் மான் வந்ததாகச் சாக்கு சொல்லி இங்கே வருகின்றவன் மானிட வேடனா? அப்படியிருப்பின் வேட்டையாடப்படும் மான் மலையிலுண்டு; அங்குப்போய் வேட்டையாடுவாயாக. இவ்விடத்திலிருப்பதாக நீ எண்ணிக் கொண்டிருக்கின்ற மான் மலைமானல்ல; நம்பிராஜன் மகளான வள்ளிமான். இந்த மான் மலைமானைப்போல் உன் வலைக்குள்ளே அகப்படாது; தைர்ய மிகுந்தது; சௌர்யமுடையது; உத்தமமான குலத்தி லுதித்தது. ஆகையினால் இவ்விடம் நின்று இன்னும் தகாத வார்த்தைகளைச் சொல்லி வருத்தப்படுத்துவாயானால் எனது தோழிகளை இந்தக் கணமே கூப்பிட்டு உனக்கு அவமரியாதை செய்யச் சொல்லி துரத்துவேன். இவ்விடத்தை விட்டு அகன்று செல்வாய்' என்பதாகக் கடுமொழி பகர்ந்து தன் கம்பீரமான முகத்தை ஒரு திருப்பு திருப்பித் தான் அசட்டை செய்வதாகக் காட்டிக் கொண்டாள். அவ்வாறு முறுக்கிக் கொண்ட மங்கை தனக்கு இசைவது திண்ணம் என்பதாகக் குமரன் நிச்சயப்படுத்திக் கொண்டான். தோழியைக் கூப்பிட்டுத் துரத்துவேன் என்று அவள் சொல்லியபோது அந்த

லீலா விநோதன் புன் முறுவல்கொண்டு உள்ளம் பூரித்தான். 'சேடியர்கள் வந்தால் அதற்கு நான் பயந்து விடுவேன் என்று எண்ணி விடாதே என் இளந்தோகையே!

'சேடியர் வந்தாலென்ன செய்குவார் தோடி ராகம்
பாடினல் வராளி போல பதப்படுவார்கள் சகஜமாய்
மோடி செய்யாம லென்றன் மோகனராஜமே!
நாடி நாயகியைப்போல நயந்தென்னைச் சேரவாராய்'

உனது தோழிகளைக் கண்டு நான் பயங்கொள்ள மாட்டேன். அத்தனை பேர்களையும் நான் தோடி ராகம் பாடிச் சுருண்டு விழுந்து விடும்படிச் செய்து விடுவேன். ஆகவே, ஒரு தடையும் சொல்லாமல், மோடி செய்யாமல் என் மனமோகன மாணிக்கமே! எனக்குச் சல்லாபத்தை யளிப்பாய். உனது இதழமுத முத்தத்தை எனக்கு உவந்தளிப்பாய்' என்று காம வெழுச்சியைத் தரும் மொழிகளைப் பகர்ந்தான். அப்பொழுதும் அம்மங்கை வழிக்கு வாரதது கண்டு நயமாக அவளை இன்சொல்லால் மயக்க வெண்ணி அவ்வேடன் பின்னும் கூறுவான் :—

'அறிவுள்ள நங்காய்! உனக்குத் தெரியாத உண்மையும் வேறு உண்டோ? யௌனம் என்பது நீண்ட காலந்தங்கியிருக்காது. அது நிலையாக நிற்பதில்லை. அது சிறிது போது மட்டுமே நின்று நீங்கிப்போகும். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டும் என்பதைப் போல அப்பருவத்தை உடனே அனுபவித்து விடவேண்டும். ஆகவே,

"சத்தான யவ்வன காலத்திற் செய்யும் சரசசுகம்
செத்தால் வராது கிடையாது தேகபலம் குறைந்தால்
வித்தாரமான பலனிது போல வேறொன்றில்லை யுன்
கைத் தாமரை கொண்டு கட்டியணைக்க நற்காலமிதே."

இந்த யௌவனம் மாறுவதற்கு முன்னமேயே அச்சுகத்தை

அனுபவித்து விடவேண்டும். முதுமையாகித் தேகப்பலம் குறைந்து விட்டாலும் சரசசுகம் ரசமற்றுப் போகும். உன திரண்டு கைகளாம் தாமரைகளைக் கொண்டு என்னை ஆலிங்கனம் செய்து கொண்டு முத்தமிடக்கடவாய். அப்போது தான் நம்மிருவரும் பெற்ற யௌவனம் நற்பயனைப் பெற்றது போலாகும்' என்றான்.

'சித்தர்குழாம் புகழ் செந்தூர்க்குமரன் சிலம்பிடத்திற்
பைத்தவராவுற மல்குன் மின்னுண்முலைப் பாரந்தொட்டுப்
புத்தமிழ்தன்ன விதழுண்டு கொஞ்சிப் போருவில்கவுண்
முத்தமிட்டின்ப முற்றேனும்பர் மாதரு மோகிக்கவே'

தேவமாதர்கள் என்னைக் கண்டு மையல் மிகக்கொண்டு மோகிக்க நான் அவர்களிடம் இன்பம் நுகர்ந்துள்ளேன். ஆனால், இம்மங்கையோ என்னை அவளிடம் நெருங்கவும் மறுக்கின்றாளே. அப்படியிருக்கும் போது அவளது இதழை முத்தமிடுவதுதான் எவ்வாறு முடியும்?

" மலயக்கிரியில் வருமரமாதர்தம் வாள்பொருகட்
கலக்கத்தினுமயங் காதவென் சிந்தை கடவுளர்தந்
திலகத்துயர்ந்த செந்தூர்க்குகன் வெற்பிற்றிகழ்மனிதக்
குலமைக்குழன் மடவாண்மையல்வாரி குளிக்கின்றதே."

மலயபருவதத்தில் வருகின்ற தேவமாதர்களின் வாளைநிகர்த்த விழிமடமாதரைக் கண்டும் கலங்காத மயங்காத மனத்திடம் கொண்டநான்,இச்சமயம் பூவுலகின் மடந்தையாம் மைக்குழல் மாதான வள்ளியைக் கண்டு காதலாம் கடலின் கண் மூழ்கிக் கரையேறத் தெரியாது வருந்துகின்றேனே! எனது ஆற்றலை நீ அறியமாட்டாய். காதல் நலத்தை உனக்கு இனிதே நல்கும் படிச் செய்ய வல்லவன் நான்.

'தனிவேலன் செந்திற் றடவரை மீதொரு சற்றிரங்கிற்
கனிவாயிதழுண் டிறுகத்தழுவிக் கடித்து முத்தப்
பனிமால் வரைநிகர் கொங்கை நெருடிப் பகமளைந்து
குனிவார் சிலைமதனுடல் செய்வேனடி கோமளமே!'

என் விஷயத்தில் இவ்வாறு கடுமையாக விராமற் கருணை கூர்ந்து மனமிரங்குவாயானால் உனது கொவ்வைக்கனியை நிகர்த்த செவ்வாயின் இதழை உண்டு முத்தங்கள் பல நல்கி இறுகக்கட்டிக் கொண்டு மந்தரகிரிபோலும் உயர்ந்து திரண்டுள்ள உனது கொங்கையை நெருடி, அரவப்படம் போன்ற பகத்தில் அளைந்து சரச லீலைகளாடிக் கொக்கோக ரீதியில் சம்போகமும் செய்வேனடி என் கோமளமே! என்னுடைய காதன் முறையில் நீயும் இணங்கு வாயானால் அந்த மன்மதனும் இரதியும் மிகவும் வெட்கமடைந்து தலை குனிந்து பரிதியின் முன்னர் பனிபோலும் மறைந்தொழிவார்கள். வள்ளி தன்னை வலிதில் முன்னம் கனவில் அணைந்ததாகச் சொல்லுவோம் என்று எண்ணிக் குமாரன் கூறுவான் :—

'கொன்றைச் சடைத்தம்பி ரான்மைந்தன் செந்திற் குமரன்வெற்பி
லின்றைக் கெனையறியார் போல நின்றனை யாதினுக்கோ
லன்றைக் கொருதரம் நீயே வலிதி லணைந்தசுக
மென்றைக் கினியடி யேனடை வேனடி யேந்திழையே'

என்னை இதற்கு முன்னே யறியாதவள் போலவும் நீ இருக்கின்றனையே! அது சற்றும் ஒவ்வாது. நீயே என்னை வலியவந்து அணைந்து எனக்குச் சுகத்தைக் கொடுத்திருக்கின்றாய். அப்பொழுது நான் அடைந்த போக சுகத்தை மீளவும் நான் அடையக்கிருபை செய்யாயோ? என் ஏந்திழையே!

"பைந்தோகையூர் செந்தி லான்சந்தவெற்பிற் பனிமொழியே!
சந்தோடமாயொரு சொல்லுஞ் சொல்லாதெனைத் தள்ளிவிட்டால்
வெந்தோட முன்றனக் கெய்துமதன்றியும் மேதினியோ
ரந்தோ வெனமட லூர்ந்தேனுமுன்னை யணைவதுண்டே"

எனது இன்பமொழி சரசாங்கியே! களிப்புடன் எனக்குத் தேறுதலான வார்த்தையைச் சொன்னால்தான் எனதுயிர் தங்கும். இன்றேல் நான் உயிர் நீக்க நேரிடும். ஓருயிரைப் போக்கிய பாபம் உன்னை அடையும். ஆகவே உன்னை அணைய விரும்பும் எனக்கு அனுமதியும் தருவாய் என்று நம்பியிருக்கின்றேன்' என்றியம்பினான்.

எறும்பூரக் கல்லும் குழியும் என்பது போலும் மேன்மேலும் காமகரமான மொழிகளைச் சரமாரியாகப் பொழிவதனால் ஏந்திழையின் மனமும் சற்று இரங்கியது. அவளது உள்ளம் லீலையின்வசம் திரும்பியது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களன்றோ? அது போல உள்ளத்தின் நிகழ்ச்சிகள் புறச்செயலினால் வெளிப்படும்:

'சேயெனச்சற்குரு வென்னச்சிவன்பகர் சேந்தன்செந்தில்
மேயெம்மையாளும் பிரான்சந்த வெற்பில் விளங்குமின்னே!
நீ யென்னைப்பார்த்திலை நின்கொங்கை மென்றுகினீக்கியுன் றன்
றுயெனப்பார்த்து மறைந்ததன்னுவி தவிக்கின்றதே.'

'வலந்தாங்கும் வேலுடைச் செந்தூரன் சந்தவரைத் தலத்திற்
பொலந்தோய்ந்த பூண்முலைப் பூவைநல்லாய் தொய்யில்
[பூத்தமென்றோர்
கலந்தார்வமெய்திக் கனியிதழுண்டு களிப்பதனுக்
கலந்தேனந்தோ வறியாயோ விரங்கிரங்கன் புவைத்தே.'

பூவை நல்லாய்! உனது ஆலிங்கனத்தை விரும்பி மிக்க ஏக்கத்துடன் எனது தோள்கள் துயருறுகின்றன. நின் இதழில் முத்தமிட்டுக் களிக்க வருந்தும் என் மீது இரக்கங் கொள்ளுவாய். நீ இது காறும் நின்று கொண்டிருக்கும் அந்த நிலம் செய்த பாக்கியத்தையும் நான் பெறுதிருக்கின்றேனே.

‘ கற்கும் புலவர் களிகூர் செந்தூர்வளர் கந்தன்வெற்பிற்
பொற்கும் பனேர்முலைப் பாரஞ் சுமந்து புவியிடத்தி
னிற்கின்ற நின்னடி யென்றலை மேற்சற்று நோமுற்று
லெற்கின்ப மெய்து மிதுபாவமோசொல் விளங்குயிலே.!

பொற் கும்பம் போன்ற தனத்தின் பாரத்தோடு நிலத்தின் மேல் நின்றிருக்கும் அத்தாமரை யொத்த பாதங்களை என் தலை மீதுத்தாங்கிக் கொள்ளுவேன் உன்னுடைய சரச சல்லா பத்தைப்பெற. அவ்விதம் நான் செய்வதனுல் ஒரு பாவமும் எனக்கு நேராது. அதற்கு மாருக நற்புண்ணியமே சேரும். உனது கலவியின்பத்தை அனுபவித்தறியாதவர்கள் கல்வியே யின்பம் என்பார்கள்.

‘ வல்விற் காத்தர் பலர்போற்றுஞ் செந்தில்வாதன் வெற்பிற்
செல்விக்கு நேரெழிற் சேயிழையே ! நின் றிரண்முலைசெய்
மல்வித்தையைக் கனிவாய்த் தேனைக் கண்டுண்ணும் வாழ்வறியார்
கல்விப் பயனுந் தவப்பேறு மேலெனக் காண்பவரே.’

என்று பற்பல விதங்களில் கன்னியின் மனம் தன் மீது நாடும் படிச்செய்து அவ்விதம் தன்னை அவள் விரும்பும் வண்ணம் செய்ததன் பிறகு மேலொன்றும் காமவார்த்தைகளைக் கூருமல் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவான். அம் மங்கையைப் பயந்த உத்தமப் பெற்ருேர்கள் யார் என்றும் எந்நாட்டினர் என்பதையும் தெரிந்து கொள்ளவெண்ணினன். முதலில் தன் ஊரையும் தன் பெயரையும் சொல்வதுதான் நேர்மையானது என்றெண்ணிக் கூறுவானுயினன் :—

‘ மந்தரக் கொங்கைமயிலே ! செந்தாமரை வாழன்னமே !
சுந்தரக் கோகிலமே ! என்றனூரினைச் சொல்லிடக்கேள்
கந்தன் வைவேற்படை யொன்றேந்திக் காக்குங் கவினுடைத்தாய்
செந்தமிழ்ச் சந்தனவெற் போடொளிருந் திருச்செந்திலே.’

என்றுரைத்த பின்னர் இவ்வளவு தூரம் சம்பாஷித்துக் கொண்டிருந்த அம்மங்கை வேருெருவனுக்கு மாலையிட்ட

வளாயிருந்தால் என்ன செய்வது? அவ்விஷயத்தை உணர்ந்து கொள்ள வேண்டிப் பின்னும் அவ்வணங்கை நோக்கி கேட்கின்றான்.

'மன்றந் தொறும்புகழ் செந்தூரன் சந்தனமால் வரையின்
மின்றங்கல் போற்றிகழ் மெல்லிநல்லாய்! உன்னை வேறொருவர்க்
குன்றந்தை தாய் நல்கவுன்னில வாற்றிற்கு மொப்புவையோ
வென்றன் புணர்ப்புரைப் பாயோ வென்றேங்கிய தென்மனமே!

'பொன்னூர்ப் புத்தேளிரைக் காத்த செந்தூரன் பொருப்பிடத்திற்
றென்னூரனோர் விழிச் சிற்றன்னமே! மலர்ச் செந்திருவே!
என்னூர்க் கென்னொடு மின்னே வந்துவாழ்வதற்கிசைவதோ
உன்னூர்க் கெனைவரச் சொல்கின்றதோ? உன்றனுட் கருத்தே.

'சேய்துவர்க் குன்றன்ன செந்தூரன் சந்தச் சிலம்பிடைவா
ழாய்துகிற் கோமளமே யன்னமேயென தாருயிரே
நீதுயிலா தென்வரவே கருதுநன் னேரமுநின்
தாய்துயில் வேளையுஞ் சொல்லி வைத்தானந் தமக்கு நன்றே'

என் கோமளமே! என் அன்னமே! என தாருயிரே! என்னைக் குறித்துக் காதல் நோய் கொண்டு துயிலாமல் என் வரவை எதிர்பார்க்கும் நேரத்தையும் உனது அருமையான தாயார் உறங்கும் வேளையையும் எனக்குத் தெரிவித்தால் மிக்க நலமாயிருக்கும்.

'பாவியர் காணருஞ் செந்தூர்க் குமரன் பருப்பதத்திற்
காவியங் கண்மயிலே! உனதாசைக் கடற்கடவேன்
வாவியின் பாங்கர் வரவோ? தண்சோலை வயின்வரவோ?
நீவிரும்புங் குடிற்பால் வரவோ? எது நின்னிசைவே!'

'பொழிலுறை அழகிய மயிலே! உன்மீது எனக்கேற்பட்டிருக்கும் காதல் கடலைக் கடக்க முடியாதவனாயிருக்கின்றேன். உன்னுடைய சேர்க்கையை விரும்பும் நான் அதைப் பெற நடவாவியின் கண்ணே வரட்டுமா? அல்லது நந்த

வனத்திடையில் வரட்டுமா? மற்று நீ வசிக்கும் வீட்டினுள்ளே வந்து சேரட்டுமா? இவற்றில் நான் எந்த இடத்தில் வந்தால் நம்மிருவரது இருதயமும் ஒன்றுபட்டு இன்ப சுகத்தைத் தடையின்றிப் பெறும் என்பதை வெளியிடுவாய்' என்பதாகக் குமரன் வள்ளியைக் கேட்டு மிக்க வாதனைப் பட்டுக் கொண்டிருந்தான்.

மற்றொரு சமயத்தில் எவ்விதம் குமரன் மங்கையைக் குறித்துத் துயர்வாய்ப்பட்டிருந்தானோ அவ்விதம் வள்ளியும் குமாரனைக் குறித்துப் பலவிதமாகக் காதல் நோயினால் வருந்தினாள். 'நல்ல சமயத்தைக் கைவிட்டோமே. கையிலிருந்த வெண்ணெயை விட்டு எறிந்தபின் நெய்யின் பொருட்டு அழுவதாற் பயனென்ன? எனினும் என் மனம் ஆறுமுகனிடமே அடைக்கலம் புகுந்துவிட்டது.

'அன்பழியார் மிகுஞ் செந்தூர் புரக்கு மறுமுகவா
முன் பழிக்கஞ்சிய நீதி கெடாதொரு முத்த நல்காய்
வன் பழிக்குங் கணைக் காமன் செய்தீமை மலிந்த தந்தோ!
என் பழி யேற்றுக் கொள்ளாதே பெண்பாவ மெளிதல்லவே!'

என் ஆறுமுக வேலனே! ஒரு முத்தம் நல்காய். மன்மதன் என் மீது கணைகளைத் தொடுக்கின்றான். அந்தோ! என் பழியை ஏற்றுக்கொள்ள வேண்டாம். பெண்ணாய்ப் பிறந்த என்னையும் புறக்கணிக்க வேண்டாம். பெண்பாவம் பொல்லாது.

'சங்கரற்குங் குரு வாகிச் செந்தூரிற் றழைக்கும் வைவேற்
புங்கவனே! மதன் பொல்லாங்கு மிஞ்சிப் புலர்ந்தடைந்தேன்
செங்கனற் கண்ணிரு மூன்றையு மூடித் திருவருட் சீர்ப்
பங்கய மன்ன கண் பன்னிரண் டானன்கு பார்த்தருளே.'

சங்கரனார் தமக்கும் குருவானவனே! வேலைத்தரிக்கும் புங்கவனே! மதன் செய்யும் தீமையால் மிகவும் மெலிந்தேன்.




ஆ! என் உள்ளத்தைக் கவர்ந்த கட்டழகனை எத்தனை நாழிகை யாக நினைத்தாலும் என்மனம் திருப்தியடையவில்லையே.



என் உயிரே! என்னைக்காதலித்து மணக்கிறேன் என்று சொன்னால்தான் என் உயிர் நிலைத்திருக்கும்.

உன்னுடைய பன்னிரண்டு விழிகளையும் திறந்து என்னைக் கருணையோடு பார்த்தருளுவாய். விழிகளாற் பார்ப்பது மட்டும் போதாது.

"பெண்ணுளைப் பாகம்வைத் தார்க்கொரு தாரகம் பேசியப்பால்
விண்ணுடரைப் புரந்தாண்டு செந்தூரிடை மேயவனே!
பண்ணார் மலர்க்கணைக் கஞ்சாம லென்னைப் பரிந்துனது
கண்ணாரப் பார்த்துன் கையாற்றழுவிக் கருணை செய்யே!"

உன்னுடைய வலி மிகுந்த கைகளால் என்னைத் தழுவிக் கொண்டு உனது குன்றமனையே புஜத்தோடு சேர்த்துக் கட்டிக்கொள்ளுவாய். உன் மேலெனக்கு ஆசைமிக்கெழுந்தமையாலே என் மார்பகம் பெருத்தது. மதனனுல் அளவில்லா கிலேசமடைந்துள்ளேன். இன்னமும் கருணைபுரியாதிருப்பது உமது கருணைத் திறத்திற்குச் சற்றும் அழகல்லவே!

'கொம்பாரனைச் செந்தினகராதிபா! சந்தக் குன்றுடையாய்!
நம்பாரறி வரியாயடி யாளுன்னை நாடிமதன்
அம்பால் மெலிந்து நொந்தேனையகோ! இனியாற்ற கில்லேன்
வம்பாயிறக்க விடாதே! என்பாற் சற்று வந்தருளே!

'சூரனந் நாளுனைத் தோத்திரஞ் செய்துடன் றூறுதற்குங்
காரண நின்றிருக் கண்ணு தலானைக் காதலித்து
மாரனுக் கஞ்சியென் னெஞ்சேங்கச் செய்வது மற்றுளதோ?
கூரயிற்கைக் குகனே! செந்தின் மேவுக்குணக் கொண்டலே!

செந்தி நகர்க்கதிபரே! அடியாளும்மையே நாடி மதனனது அம்பினுல் மெலிந்து நொந்தேன். என்னுல் இனிச்சகிக்க முடியாது. நான் உயிர் பெற்று இருக்கவேண்டின் என் அருகில் சற்றே வந்தருளல் வேண்டும். கூரான வேலைக் கையில் தாங்கும் குகனே! பகைவனும் சூரனை வேரறுத்தீர். இது சமயம் என்னை வருத்தும் பகைவனுன மாரனை ஒழித்து

எனக்குக் களிப்பை யுண்டாக்குவாயோ? என்று பற்பல விதங்களில் வள்ளி குமாரனைக் குறித்து நினைத்தும் வாய் விட்டுப் பேசியும் காலங்கிடத்தி வந்தாள்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் கந்தனை நேரில் சந்தித்தாள். அப்போது மிகக்கடுமையாக அவரை உற்று நோக்கிக்கூறு வாளாயினள். அவளது காதல் அளவு கடந்து அதிகரித் திருந்ததால், அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் நஞ்சு என்பது போல அதிகரித்த காதலும் நிஷ்டூரத்துக்கிடமாய் விடும். காதல் தான் விரும்பியதை விரும்பியபடியே அளிக்கத் தவறினல் பெரிய அனர்த்தங்களும் நேரிடுகின்றன. ஆகவே வள்ளியும் கந்தனைக் காதல் கொண்டிருப்பதனுலும் அது தனக்குத் திட்டமாய்க் கிடைக்கும் என்று அவள் எண்ணி யிருந்தபடியாலும், ஊடல் காமத்துக்கு இன்பம் என்று பொய்யா மொழியும் கூறுவதாலும் சற்று ஊடல் செய்ய முன்வந்து கூறுவாள்:—

குன்றைத் துளைத்துக் கடலைக் குடித்துயர் கொற்றவைவே
லொன்றைப் புனைந்த செந் தூர்க்கந்தரே யுள்ளுரிமை மழுத்
தின்றைக்கு மெல்லச் சருவுகின்றீர் வெட்கமில்லை கொல்லோ!
அன்றைக்கு வந்தவள் பாற் சென்றிடாதிங் கடுத்தென்னே?

வேல் பிடித்த செந்தூர்க் கந்தரே! இன்றைக் கென்ன என்று மில்லாதபடி என் மேல் காதல் கொண்டுள்ளீர். உமக்கு வெட்கமில்லையா? அன்றைக்குச் சல்லாபம் புரிந்த அம்மங்கையி னிடம் செல்லாமல் இங்கு என்னிடம் வரக்காரணம் என்ன? என்ருள்.

தேவரீருடைய சாமர்த்தியத்தைக் குறித்து என்ன வென்றியம்புவது! அடியாள் மிஞ்சினல் தாம் கெஞ்சுவீர். நான் கெஞ்சினல் தாம் மிஞ்சுவீர்.

'பூட்கைப் புகர்முகப் புத்தேள் பிற்றேன்றும் புகழ்ச்செந்திலீர்!
கேட்கையிற் சற்று நல்கீர் சினந்தால் மெல்லக் கெஞ்சிக் கொள்வீர்
வாட்கைவல் வீரர் விண்ணேர் முனிவோர்கவ வாணரன்னர்
வேட்கை யெவ்வாறருள் வீரருள் வீரென்கை மெய்மையன்றே.'

மேலும் தேவரீர் கொடுமை சொல்லத்தரமன்று. முன்னளில் சூரனைக் கொன்றீர். யாரேனும் முத்தமளிக்கின் அதைப் பெற்றுச் செல்வீர். பொன் கேட்கின் மறுப்பீர். அருகில் வந்தால் பிடிப்பீர் ஓட்டம்.

'சட்டியிற் சூரனைக் கொன்று செந்தூரிற் றலைமையுற்றீர்
கட்டிமுத்தந்தரிற் கொள்வீர் பொன் கேட்கிற் கடக்கநிற்பீர்
கிட்டிவந்தாலு மெட்டாதோடு வீரிவை கேட்டு முன்னள்
செட்டி யென்றோர் பெயரிட்டார் வல்லோரிற் சிறந்தவரே!'

செந்தூர்க்குமரா! உமது சேர்க்கையை விரும்பி நான் அனுபவித்து வரும் இன்னல்கள் இவ்விதமானவை என்று சொல்லும் தகைத்ததன்று. உமது காதல் பார்வையில் நான் பட்டு உமது வலி மிகுந்த தோளுடன் எனது இரு கொங்கைகளும் படும்படிச் செய்து களிப்படையும் நாள் எந்த நாளோ? இதற்கு முன்பாக அத்தகைய பாக்கியத்தை உம்மிடமிருந்து பெற்ற மங்கையர்கள் இந்த சமயத்தில் தம்மிடத்தில் நான் அனுபவிப்பதைப் பார்க்கவும் நாணுகின்றார். அஃது ஓர் அற்புதமேயாம்.

"உன்றனக் கென்றனைப் போல்வாரனே கருலகிலுள்ளார்
என்றனக்கு உன்னை யொப்பாரிலைக் காணிவை யெண்ணிடிலென்
றன்றன் நின்றிருத் தோள்சேரச் செய்த துன்தண்ணருளே
மின்றியங்குங் கதிர் வேலா! செந்தூர் வளர்வித்தகனே."

வித்தகரே! உமக்கு என்போன்ற மங்கைமார்கள் கோடிக் கணக்காகக் கிடைப்பார்கள். ஆனல் அடியாளுக்குத் தேவரீரைப் போல் கிடைப்பது துர்லபம்.

சுப்பிரமணியரும் வள்ளியும் ஒருவர்க் கொருவர் மாசில்லாத காதல் கொண்டு ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்கவும் மனமாற்றாது வருந்திக் கொண்டிருந்தார்கள். இருவரும் கடைசியில் மணம் புரிந்து நீண்ட காலமாகக் கிடைக்கப் பெறாதிருந்த அந்த சரசவின்பத்தை நன்றாகப் பெற்றனர். அப்போதுதான் ஒவ்வொருவரது இதயமும் குளிர்ந்தது; இதழ் ஏக்கம் தணிந்து இன்பம் பெற்றது; தேகம் புளகித மடைந்தது.

* * * *

முத்துக் குமாரனுக்கு பற்பல ஆசை நாயகிகள் உண்டு. அவ்விஷயம் அனைவர்க்கும் தெரிந்ததேயாம். மங்கையர்கள் ஒவ்வொருவர்க்கும் தெரிந்த ரகசியம். அவர்களில் பலர் பொறாமைக் காரர்கள். தங்களது காதலனை மற்றவள் மயக்கிக் கொண்டு விடுவாளே என்பது அவர்களிடத்தில் தணியாத அஸூயையை உண்டாக்கி விட்டது. அவர்களினிடையில் குமரன் அகப்பட்டு சாமர்த்தியமாய்த் தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொண்டு புளியம் பழம் போல ஒட்டினும் படாமலும் அதைவிட்டுவெளியே வந்து விடாமலும் இருப்பது போல அவர்களுக்கு அடங்கின வனுயிராமலும் அடியோடு அவர்களை வெறுத்து உதறியது போலும் இராமலுமிருப்பது பெருத்த சாகசமே.

முத்துக் குமாரன் தனது காமக் கிழத்தியரில் ஒருத்தியினது இல்லத்தில் புகுந்து தன் காதலியைக் கண்டான். அம்மங்கைக்கு அவர் மீது சற்று வெறுப்பு இருப்பது போலக் காட்டிக் கொண்டாள். அதற்கு ஒரு காரணம் வேண்டுமே. அதற்காக ஒரு கற்பனையாக அச்சமயத்துக்கு ஏற்ற விதமாக ஒன்று முடிவாகத் தீர்மானித்துக் கொண்டாள். அவ் விஷயத்தை அவரிடம் தெரிவிக்கச் சமயம் வாய்த்ததற்கு மகிழ்ச்சி யடைந்து இனிமையான குரலில் பாடினாள்.—

இராகம்: உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நேற்றந்தி நேரத்திலே நீராடுங் கரைதனிலே
நெருங்கியும்மை சாடை காட்டி யழைத்தவளாரையா?

அநுபல்லவி.

நேர்த்திமாம யிலேறுங்கந்தா நீருமவளு மெதிர்முழியாய்
நிற்கமையலிலே சொக்கயிலே பக்கந்தனிலிருந்தேன் சாமி

சரணங்கள்.

பச்சிளந் தேமல்படர்ந்த கிண்ணம் போல ஸ்தனமும்
பவளவாயுங் கருங்குழலும் கபடமில்லா மனமும்
இச்சகத்திற் சாணேனந்த லக்ஷணத்தைப் போலே பெண்கள்
இந்திரலோக ரம்பையில் எந்த உலகரிவையோ சாமி (நே)

முன்னுளி லென்னிடத்திற் சொந்தம் போலே வந்து
முத்துமுத்தாய் சரசமாடி மோகமதைத் தந்து
மன்னவா யுன்னினைவு கொண்டு வண்ணங் கண்டொரு [மாதமும்
வாருமையா என்றுரையே! தீருமையா யென்கவலை (நே)

பிள்ளைமதியுடைய பெண்கள் பேதைமையைக் கண்டு
பேருலகி லாட்கொள்ளுவர் புருஷரிதுவுண்டு
தெள்ளுதமிழ்ச் சுப்பராமன் செய்பதத்துக் கருளுந்
திருவிடை யோயினி சகியேன் சேவலங் கொடியுடையோய் (நே)

என்று அம்மங்கை பாடி முடித்ததும் முத்துக் குமாரனுக்குக் கலவியின் மீது விருப்பமேற் பட்டு விட்டது. அதனால் தாபம் மிகக் கொண்டு அத்தையலை வேண்டுகின்றான்; கெஞ்சுகின்றான். அவள் கூறிய வார்த்தைகளெல்லாம் சுத்தப் பொய் யென்று கூறினான். அதன் பின்னர் தன் இன்னிசை யெழுப்பிக் கலியாணி ராகத்தில் பாடுவானாயினான்.

இராகம் கல்யாணி—தாளம் ஆதிதாளம்.

பல்லவி.

தையலே யுன்னை நினைந்து நினைந்துருகித்
தயங்குகிறேனேடி மானே!

அநுபல்லவி

வையகம் புகழ்வோக்கும் வேலூர் தனில் மேவு
மையன் முத்துக் குமாரனுய்யா மையலி னின்று (தை)

சரணம்.

மேட்டி சரசக் கண்ணுட்டி மதன் வாழிடர்
காட்டி சுகங் கொடுத்துப் போட்டி செய்யலாமடி
தாட்டி கக்காரி மலர் சூட்டி யலங்கரித்து
வீட்டி லிந்த க்ஷணமே கூட்டி வரச் செய்வேனடி (தை)

வஞ்சி மிக உன்னத ரஞ்சிதக் காரியென்று
கொஞ்சி முத்தந் தாவென்று கெஞ்சுகிறனேயடி
பஞ்சவர்ணக் கிளியே தஞ்சமென்றே னுனது
நெஞ்ச மிரங்க விலேயோ கொஞ்சமாகிலும் இளகு (தை)

நாடி யுருகும் வேளை மோடி செய்யலாமேயடி
தேடிக் கலியாணி ராகம் பாடிச் சுப்பராமன்
வேடிக்கையாக விளை யாடிக் காங்கேயனுடன்
கூடிக் கலந்தணைய வாடி சமயமிளங் (தை)

முத்துக் குமரன் பாடியதைப் பூரணமாகக்கேட்டு அந்த மங்கை ஒரு சந்தேகத்தை யுண்டுபண்ணி மிகச் சாமர்த்திய மாய்க் கூறுகிறாள். குமாரன் போகும் இடங்கள் எத்தனையோ கோடிக் கணக்கா யிருக்கும் என்றும் அதில் கவனப்பிசகாக அங்கு வந்திருப்பதாகவும், அவர் நினைத்துவந்த வீடதுவல்ல வென்றும் கருதிவந்த காரிகையும் தானல்லவென்றும் பொருள் படும்படி காம்போதியில் பாடுகின்றாள்.

இராகம் காம்போதி—தாளம் அடதாளம்.

பல்லவி.

நேற்றி ராத்திரிபோன பெண்வீடுஇதுவல்ல
நிலவரமாக உற்றுப் பாரும் (நே)

அநுபல்லவி.

பூத்திருக்குஞ் சோலைக்குள் கழுக்குன்றந்தன்னில் மேவும்
புண்ணியனே யந்தக் கன்னியும் நானல்ல (நே)

சரணங்கள்.

இருட்டு வேளையிலே நீர் திருட்டுத் தனமாய்ச்செல்லும்
திருட்டெல்லாம் வெளியாச்சு மிரட்டாதேயும் சாமி
திரட்டிப்பாலும் சீனியுந் தேனும் பாகும் கற்கண்டும்
பிரட்டி வாயிலூட்டிய பெண்வீடந்த வீதியில் (நே)

பஞ்சணையிலே யந்த வஞ்சியு நீரும் கட்டிக்
கொஞ்சி யிதழ் கடித்த குறி யிருக்குதே பாரும்
மிஞ்சி சன்னதமேறி வீதிதப்பி வீதியில்
அஞ்சுகவாய் திறந்து கொஞ்சிகொஞ்சி பேசுகிறீர்
பாதி யிரவினில் வந்து வாதுகளேன் செய்கிறீர்
நீதியோ உமக்கிது வேதகிரீசரே
காதுக்கின்பந் தருஞ் சூதெல்லாம் ஓதுகிறீர்
ஓதும் சுப்பராமனுக் குகந்தருளு மீசரே (நே)

முத்துக் குமாரனுக்கு வருத்தமுண்டாய்விட்டது. அம் மங்கை தளுக்காய் கூறின வார்த்தைகளைக் கேட்டுச் சின மடைந்துச் சௌராட்டிய ராகத்தில் பாடினன்.

இராகம் தோடி—ரூபக தாளம்.

பல்லவி.

என்னடி மெத்த தளுக்கு காட்டுகிறாய் நானறிவேன்போடி
என்னடி மெத்த தளுக்கு காட்டுகிறாய்

அநுபல்லவி.

வர்ணக் கிளிகள் வளரும் பொழில்கள் நிறை
மாநகரிலுறை மாதவ ராதியோர்
பன்னிப்பணி முகுந்தன் வரதன் தன்னிறன்
பர்லிலகப்பட்டு பேச்சுங் கைவீசுமாய் (என்)

சரணங்கள்.

இக்கால மிப்படி யே யிருக்கு மென்று
எண்ணுதே யென் வார்த்தை கேளடி நீ யின்று
எக்காலமுஞ் சுப்ப ராமன் கவிகொண்டு
என்னை மறந்தவர் தன்மேல் மையல்கொண்டு (என்)

வெகு முடுக்காய் அவளிடத்திலிருந்து நீங்கி வெளியில் சென்றுவிட்டான். அவனை மீளவும் தனக்குச் சரசலீலைகளைத் தர அழைத்துவரும்படித் தனது சகிக்கு அம்மங்கை கூறுவாள்.

கல்யாணி ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அழைத்து வாராய் சகியே

அநுபல்லவி.

ஆதிமூலப் பொரு ளான சர்வேசனை
கோதிலாத கைலை வாழ் முருகேசனை (அ)

சரணங்கள்.

தானழைக்குங் கடப்ப மலர் தாரழகனைப் புல்லி
தாராளமா யென்னுயிரை தண்போலவே நீ சொல்லி
இழைக்கு மாரனெனுமோ ரினிமை தங்கிய வில்லி
எய்யு மலர்க்கணையா லுய்ய முடியாவல்லி
இதங்கொண்டு தழுவவன்பினொடு பலவிதந் தங்கு சுரவிந்தையது
செய்ய யிருவருமொரு மனதாகவே யிசைந்து மருவவிது தருண
[மாமென மொழிந்து

மாசிலா நற்பிர காச சப்ரமஞ்ச
வயங்கு முத்துப் பந்தல் நாட்டிய
முயங்கு சித்ரக் கந்தவர் பூட்டிய
மண்ணுடனேத்தையும் விலை கொளத்தக்க நிலைக்
கண்ணடிகள் சித்ரப் படங்கள் மிகக் குலவி
பல வுச்சிதமிதி களபப் பன்னீர் தெளித்து (அ)

ஒரு சமயத்தில் பொன் மலையில் எழுந்தருளியிருக்கும் குமரனிடம் ஒரு மங்கை சென்றிருந்து திரும்பித் தன் வீட்டுக்கு வந்தாள். அம்மங்கையைக் கண்டு அவளது முகச் சோர்வையும் பொலி வழிந்திருக்கும் நேர்மையையும் கண்டு சந்தேகப்பட்டு அவளது தாய் பின்வருமவிதமாகப் பாடினாள்.

இராகம்: அடாணு-தாளம்: ரூபகம்.

பல்லவி.

மானே யங்கே போன வகையென்னடி பொல்லா
வம்ப னிருக்கிற செம்பொன் மலைக்குள்ளே (மா)

அநுபல்லவி.

வானோர் புகழுஞ்சேனு திபனுஞ் சுப்பிர
மணியன் பலவந்தம் பண்ணுதிருப்பானோ (மா)

சரணங்கள்.

அம்புவிழி மடமானே உனக்கிது
யார் செய்த சூதடிமுத
வம்புகளுங்கொண்ட தொம்புவந்த மார்க்கம் தேடி
கும்பஸ்தனத்தி விளம் பிறைபோன்றக் குறிகள் மிகத்தோணுதே!
கும்புகள் கூடி மிடுகள் பேசுகிறு
கோலங்கண்ட நீலியே! நான் பெற்ற (மா)

ஜாதிப் புனுகும் பன்னீரும் திமிர்த ஜவ்வாது வீசுதே! உனக்
கேதுக்கிப்படி தூர்ப்புத்திகள் வந்த தெந்தன்வாய் கூசுதே!
நடுவீதியினிற் பெண்டு பிடிப்பதவனுக்கு
விர்த்தி யென்றெங்கும் பிர சித்தந் தெரியாதோ!
ஜாதிக்கில்லாத்தொழில் ஏதுக்கு வீணிலே
தானடங்கத் தன் குலம் விளங்குமடி (மா)

வண்டாடுஞ் சோலை திகழுங் கொன்றைக் கொடிவாழுங்
குணசீலன் நாளுந் தெண்டிரை சூழ் புவிகொண்ட
வினைகளைத் தீர்க்கும் சரத்துக்கன்பு
தந்த மணவன் கண்ணூரு மலர்த்தாளன்
ஒண்டொடியே கற் கண்டு ருசிகொண்டு
ஊரார் நகைக்க உடலெடுத்தாயேயடி (மா)

என்றிவ்விதமாகக் கட்டுத்திட்டம் செய்துவிட்டாள். ஆகவே, தன் வீட்டைவிட்டு வெளிச்செல்வது முடியாமற் போய் விடவே, அம்மங்கைக்கு லீலாவினோதனை குமாரன்மீது காதல் மிகவும் மிஞ்சியது. தன் தோழியைக் கூப்பிட்டு தன் காதலனிடம் சென்று தான் அவ்விடம் வரக்கூடாத நிலைமை யிலிருப்பதைத் தெரிவிக்கவும், தாமே நேரில் தன்னிடத்திற்கு வரவேண்டியது என்றும் சொல்லக்கேட்டுக்கொண்டாள்.

இராகம்—கல்யாணி—தாளம்—அடதாளம்

பல்லவி.

வருவதானாலவரை வரச்சொல் நானங்கே
வரக்கூடாதடி மானே!

அனுபல்லவி.

சிறுமணியிழைதொளிர் செய்கதிர்வேலேந்துங்
குன்றைக்குடிக்குமார னின்றைக்கென்வளவுக்கு (வரு)

சரணங்கள்.

கொண்டகணவன் செய்யுந் தண்டனைகள் பொல்லாது
குடிப்பெண்களதற்கஞ்சி நடக்கவேண்டுமெல்லாது
துண்டரீகபுத்தி கொண்டாலது செல்லாது
சொல்லுவோர் மொழி நில்லாது (வரு)

ஒண்டியாய்ச் செல்கிறே மென்று மணங்கோணமல்
வண்டுலவுந்தேன் மலர் வாடைமிகப் பூணமல்
மையிருளினிலயு லார்கள் கண்ணிற் காணமல்
வந்தாலிஷ்டம்போல மகிழ்ந் திருக்கலாமெனச்சொல்லி (வரு)

ஆசையோ கணக்குக ளில்லாமற் பெருகுது
ஆனதாக்கட்டு மென்றால் நெஞ்சமுருகுது
ராஜவீதியில் பத்திர காளியொன்றிருக்குது
நடுவேவந்து தடுக்குது (வரு)

மாசிலாதவென்னைப் பேசும்பன்னிரண்டு
மணிவேளையிற்றனியா வுறங்குஞ் சமயங்கண்டு
வீசுஞ்சூரியப்படையும் விளங்குமிடையிற்பூண்டு
விஞ்சைமந்திரஞ் சொல்லி வேஷமாறுடிக்கொண்டு (வரு)

கன்னியரிருவர்கள் களிப்புறும் நேயனை
கனகமால்வரைமகள் கலசப்பாலுண்வாயனை
பன்னுங்கலசமுனி பரவிப்புகழ் தூயனை
பகருமதி உபாயனை (வரு)

என்னுருயிர்த்துணையா யிருக்கும் அமிர்தவல்லி
யிட்சணம்பால்மாறும லெழின்குன்றைக்குடிபுல்லி
என்னசொன்னுளென்றவ ரேதேனுமுனைக்கெல்லி
யிழுத்தாலும் பேச்சையவற் கிதவார்த்தைகள் சொல்லி (வரு)

"சஞ்சீவிபோன்ற என் அமிர்தவல்லியே! நீ பால்மாறுமல் குமானிடம் சென்று நான் இப்போது தவிக்கும் தவிப்பை யெல்லாம் ஒன்றுகூடவிடாமற் சொல்வாய். பன்னிரண்டு மணி நல்ல நிசிவேளையில் ஊர் நிச்சத்தமாயிருக்கும் சமயத்

தில் மாறுவேடமணிந்து இங்கு வந்துவிடச் சொல். அப்பொழுது இஷ்டம்போல மகிழ்ந்திருக்கலாம் என்று நான் சொன்னதாக அவரிடத்தில் சொல்'' என்றனள். அத்தோழியாம் அமிர்தவல்லியும் குமாரனை நாடிச் சென்றனள்.

அப்பொழுது பூரண சந்திரன் தன் சோடசகலைகளுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். குமாரனும் தன் நினைவை அந்தமங்கையிடம் செலுத்தித் தினமும் தன்னிடம் வருபவள் வராதிருக்கக் காரணம் யாதாயிருக்கக்கூடும் என்று எண்ணி ஏங்கிய வண்ணமாயிருந்தான். வெண்ணிலா அவனுக்கு வெந்தணல்போல் தகித்துக்கொண்டிருந்தது. ஆகவே, அக்காதலை யாற்றமுடியாமல் பாட ஆரம்பித்தான்.

இராகம்—தோடி—தாளம்—அடதாளம்

பல்லவி.

தெளிந்த நிலவுபகல்போலெரிக்குதே என்னுசைக் கண்ணாட்டியைச் [சோரா
மலெந்தன் மனம் பதை பதைக்குதே (தெ)

அநுபல்லவி

அளிநேர் விழிச்சிற்றிடைச்சி துரைச்சி யெந்தன்
அருமை தெரிந்துமோசம் செய்தாளே—பாவி
வளருதே ராப்பொழுதே யுகமாகுதே!
வரவரமோக மீறி இதழூருதே! (தெ)

சரணங்கள்

சித்தினியிவளென்று மெத்தவும்பிரமை கொண்டு
மெத்தைமீதினிற் சென்று முத்தமிட்டுக்கொண்டு
மத்தகமார்பினின் வளருஞ் சேர்சந்தனம்பூசி
மன்மதக் கேளிக்குப் பந்தயங்கள் பேசி
தத்தைமொழியினளை கைத்தலத்தாலணைத்த
விந்தையை மறந்தாளோ? மீண்டும் பொருந்தாளோ? (தெ)

குளிர்ந்தவேளையில் வந்தே குலவிமார்போடணைந்து
கும்பஸ்தனங்குழையக் கட்டிமகிழ்ந்து
மையல் மிகவும் மூட்டி அல்குல்படத்தைக் காட்டி
துளஸிமணியுங் கிருஷ்ண லீலைபோற் பாராட்டி
சுகந்தரவருவாளோ சீமாட்டி யென் கண்ணாட்டி (தெ)

சற்றே செய்துமோடி சுத்தமாகத்தோடி
விந்தையாகப்பாடி நித்தமும் கூடி
நித்திரையின் கண்ட கனவாச்சேயதை
நினைக்க நினைக்கப் பெருமூச்சாச்சே
பத்தன் சுப்பராமன் பங்கினிலிருந்ததென்றும்
முத்துமுத்தாய்க் குலாவு மொழியாளைக் காணுமல் (தெ)

இவ்விதமாகத் தவித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அந்தத் தோழி தோன்றினாள். மேகத்தைக்கண்ட தோகைமயில்போல் குமாரன் குதூகலித்தான். அந்தச்சமயத்தில் அத்தோகை யைக் கண்டது அம்மங்கையைக் காண்பதுபோல விருந்தது. அவளும், அம்மங்கை சொல்லி அனுப்பியவற்றை முழுவதும் உரைத்து உடனேவந்து அவனை மகிழ்விக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அதைக் கேட்டதும் அவனுக்குப் பழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோலவும் சர்க்கரைப்பந்தலில் தேன் மாரி பொழிந்ததுபோலவும் ஆயிற்று. உள்ளம் மகிழ்ந்து தேகம் பூரித்தான். அவள் குறிப்பிட்டநேரம் எப்போது வரும் என்று ஆவலோடு பார்த்திருந்து அந்நேரம் வந்ததும் அவளிடம் செல்லப் புறப்பட்டு அவளை யடைந்தான்.

தன்னுடைய காதலியைப் பார்த்து வெகுநாளாகியபடியி னால் அவளைக் காண ஆவலுடையவனாயிருந்தான். அது வரையிலும் அவனது ஆசை ஒரு வரம்பிற் குட்பட்டிருந் தது. அவளைக் கண்டதும் கடல் மடைதிறந்ததுபோல அடக்கி வைக்கப்பட்டிருந்த ஆசை வெள்ளமானது வெளிக்

கிளம்பி விட்டது. தன் மதியை இழந்து அவளைக் கண்டு இனிமையாய்ப் பாடினன்.

இராகம்—சாவேரி—தாளம்—அட தாளம்.

பல்லவி

ஆசை மிஞ்சுதே பெண்ணரசே! என்னை
அணைந்தொரு முத்தந்தாடி.

அநுபல்லவி

வேசையர்க் குள்ளேயுல் வாசக்காரி நீயல்ல
மேடையின் மேல் விளை யாடுவோ மிருவரும் (ஆசை)

சரணங்கள்.

பத்தரை மாற்றுள்ள தங்கசரீரத்தைப்
பார்த்துப் பார்த் தென்மன முருகுதே
நத்துங் குஜமிரண்டும் கண்டவுடனெனக்குக்
கூட வேண்டு மென்றுமனம் பெருகுதே!
இத்தனை மோடியாமோ ஏய்க்குறாய் சும்மாப்போமோ
பத்துப் பொன் நூறுப்பொன் றருவனடி யென்னைப்
பாரடி மையல் தீரடி யன்னமே! (ஆசை)

சீதக்குளக்கரையிற் றண்ணீரிலுனைக் கண்டு
சிந்தைமிக மயங்கினேனடி
மாதரசி யுன்னைப் போல பெண்களிந்த
மண்டலத்திலெங்கும் காணேனடி
காதலுடனுனது காலோடு கால்பிணைத்
தாகிலுன்ளம் துணி வதாக நீமாக
கலந்து மன்மதலீலை செய்யும் (ஆசை)

இடையிலுடுத்ததுகிற் காற்றிலொதுங்கும்போதுன்
னிருதுடை பசும்பொன்போற் காணுதே!
வடிவுறு பஞ்சபூதம் வாடையதனைக் கண்டேன்
மதிமயங்கியே ப்ரேமை பூணுதே!

அடைவுட னென்னை கூடி யதர ரசத்தை நாடி!
குடமது தனிலென் னுகிர்வடு நாட்டவுங்
கொக்கோக விதியின்படி யுட்குரல் காட்டவும் (ஆசை)

என்று குமரன் தன் ஆசை தீர அம்மங்கையை அணைந்து முத்தமிட்டான்.

* * * *

ஒவ்வொரு தொழிலுக்கும் ரகசியம் இருப்பது போல பரத்தையர் தொழிலிலும் ரகசியம் இருக்கின்றது. அந்த ரகசியத்தைத் தாய்க்கிழவிகள் தங்களது ஆதீனத்திலிருக்கும் இளமங்கையர் களுக்குப் பருவம் வந்துற்றபோது போதிப்பார்கள். சிறுகுழந்தைகளாக யிருக்கும்போதே அத்தாய்க் கிழவிமார்கள் பால் புகட்டும் போது, 'அப்பன் வருவான் பின்னர் பிள்ளை வருவான், தப்புமுறை யென்று தள்ளாதே' யென்ற ஞானத்தையும் கூடப் புகட்டுகிறார்கள். அந்தவிதமாகப் பழக்கிக் கொண்டுவந்து யுக்தவயது வரும் போது அம்மங்கையர்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். உலகத்தில் பணந்தான் தெய்வம்! பணந்தான் எல்லாம் ஆகவே அந்தப்பணத்தைச்சம்பாதிக்கும் பருவம் யௌவனம் தான். அந்த சத்தான யௌவன காலத்தில் சரசமனுபவித்து வேண்டிய பொருளைச் சேகரிக்கவேண்டும் என்று பரம உபதேசம் செய்வார்கள். அதைப் பாட்டாகவும் பாடுவார்கள்.

இராகம்—அடாணா—தாளம்—ரூபகம்.

பல்லவி

கையினில் ரொக்கப்பணமும் கேளடி சடன் சொல்ல [வந்தால்
கதவைச் சாற்றித் தாளைப் போடடி. (கை)

### அநுபல்லவி.

தையலே நம்ப ஜாதித் தொழில்வித்தை
தாய்க் கிழவிச் சொல்லைக் கேட்டுக்கோ
ஐயனென்றாலென்ன அப்பனென்றாலென்ன (கை)

### சரணங்கள்.

மஞ்சள் செலவுக் கோரைந்து பொன் கேட்டுக்கோ பாக்கு
வெற்றிலை
வாங்கித்தின்ன ஓரைந்து பொன்கேட்டுக்கோ.
மிஞ்சிபீலிக்கு ஒன்பது பொன் கேட்டுக்கோ பட்டுப்பட்டா
[வளி
வேண்டு மென்றே எண்பது பொன் கேட்டுக்கோ.
வாக் கொற்றவர் நூறுபொன் தேடித்தருவாராகில்
மோகத்துடனே மேவிப் போகச் சொல்லடிமானே (கை)

வந்தவன் பின்னும் வந்தா னென்றெண்ணிக்கோ பணங்
[கொடாவிட்டால்
வஞ்சி நல்லாய் காலை முடக்கிப் பின்னிக்கோ
எந்தவழக்கு வந்தாலும் பயமில்லை
இத்தொழிலுக்குச் சூது தானுமில்லை
இன்றைக்கொரு நூறு பொன் எண்ணித் தருவாராகில்
நன்று நிற்வனிஷ்டம்போல நடந்து கொள்ளடி மானே (கை)

பண்ணுவதா நம்ப சாதிக் கென்ன வஞ்சமா பாவியொரு
[யொந்தை
பாழிலிரைக்குந் தண்ணீர்ச்குத்தா னென்ன பஞ்சமா
கிண்ணஸ்தனங்கள் வயிற்றில் விழுந்தபின்
எண்ணினவர் பின்பு ஈவாரோசொல்மின்னே!
பண்ணலவும் சுப்ப ராமன் பதத்திற்குப்
பாவித்திடும் வடிவேலனை சீலத்தவர்துதி சீலனை (கை)

பொற் கிண்ணங்கள் போன்றிருக்கும் இரு கொங்கைகள் சுருங்கித் தளர்ந்து போய்விட்டபின் உன்னை எவ

ராவது இச்சிப்பார்களா? ஆகவே, உனது நல்ல பருவத்தி லேயே தனத்தைச் சேர்த்துக் கொள். உன்னுடைய தனம் அழகுகெடுமானுல் உன்னிடம் தனம் வந்து சேராது. இது திண்ணம் என்று சொல்லிப் பின்னும் பாடுவாளாயினுள் :—

இராகம் : சங்கராபரணம். தாளம் : ரூபகம்

பல்லவி

வேசையொருவர்மீதில் பாசம்வைக்கலாமோடி
காசைக் கொடுத்தவனே கணவன்

அநுபல்லவி

தேசாதிபதியென்று ராஜகோபாலன்மே
லாசை மனதிலெண்ணி மோசம் போகலாமோடி (வே)

சரணங்கள்

சித்தங்கரைய நமது கீர்த்திச் சொல்லுகிற பேரை
திருட ரென்றல்லவோ தெரிந்துகொள்ளவேண்டும
சிரத்தையாய் மையல்மீறி வருகிறவர் தலையைத்
தடவியவர் தேடுந் தனத்தைப் பறிக்கவேண்டும் (வே)

ஞாலமீதினிலே நாளை யென்றே நமக்கு
நயவஞ் சகமாய்ச் சொல்வார் நம்பப்போகாது மானே
காலமிதுவோ கலி கால மென்றே நினைத்து
காற்றுள்ளபோதெல்லாம் தூற்றிக் கொள்ளவேண்டும் (வே)

காமன்கலைப் படித்துக் கலவி செய்வான்றன்னை
கண்யனென்றவன் பாலிற் கருத்துவைக்கப் போகாது
நாமொருவர் செய்சூதாலே மாறலாமோடி
நம்பினுற் செம்பொன்முக நாமிங்கறிவதேது (வே)

'என்மகளே! நம்மிடம் இச்சகம் பேசி வருவோர்களைக்கண்டு நீ மகிழ்ந்து விடாதே! அவர்களை நீ நமது பொருளைக் கவரும் திருடன் என்று நினை. நம்மிடம் வருவார்களின் தலையைத் தடவித் தனத்தைப் பறிக்கவேண்டும். நாளைத் தருகிறேன் என்று நாளோட்டும் நண்பர்களை நம்பாதே. இது கலிகாலமானதால் உடனே பணத்தைப் பறிப்பாய்.

காம நூலின்படி இன்பகரமாகக் கலவி செய்வோனைக் கண்யன் என்று எண்ணி அவனிடம் பாசம் வைக்கப் போகாது. அவர் களையெல்லாம் நீ நம்பினுற் ஒரு செம்பாலடித்தக் காசை யும் கண்ணினுலும் பார்க்க முடியாது' என்றுரைத்து உப தேசத்தை முடித்தாள்.

அவ்வுபதேச மொழிகளை வேதவாக்காக எண்ணி அம் மங்கை அனுஷ்டித்துவந்தாள். அப்படி யிருக்கும் நாளில் ஒருநாள் தென்பழனிக் குமரன் அவளிடம் லீலை செய்ய வந் தான். அப்போது அந்தமாது தனக்குப் பணம் கொடுக்க வேண்டு மென்பதை முன்னிட்டே கூறவேண்டு மென்று எண்ணி அதை எப்படிச் சொல்வது என்று சற்றுத் தயங்கிய பின் பாட்டாகப் பாடினுள்.

இராகம் : சாரங்கம். தாளம் : அடதாளம்

பல்லவி

கையிற் பணமில்லாமற் கலவிசெய்ய வந்தீரோ
கடனுறு லெழுந்திருஞ் சாமி

அநுபல்லவி

ஐயரே தென்பழனி யழகுக்குமரேசா!
அம்மான் மகளானுலும் சும்மா வரப்போகிருளோ (கை)

சரணங்கள்

ஆசை யிருந்தா லென்ன காசைவிடவும் போமா?
அழகு மாப்பிள்ளையானுல் வளவுக்குச் செல்லலாமோ?
வேசைக்குச் காசில்லாமல் வேறே பிரிய முண்டோ?
வீணுய் வந்தா லெங்கள் வீட்டுக் கிழவிவைவாள் (கை)

தெந்தினப் பாட்டுப்பாடி திருநாம மிடவந்தீர்
சிரித்துச் சிரித்து மெள்ளப் பசப்பிக் கைபோட வந்தீர்
அந்தத்தினு சாரத்திலென் மனதை மயக்குகிறீர்
ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தை விடலாமோ (கை)

தென்பழனிக் குமரேசா! வெறுங் கையினில் முழம் போடுவதே போல கையில் காசில்லாமல் கலவி செய்ய வந்

தீரோ ? சொந்த மாமன் மகளானாலும் சும்மா வரமாட்டாள். எவ்வளவு தான் ஆசை கொண்டிருந்தாலும் அவளுக்குக் காசை விட்டுவிட முடியுமோ? எவ்வளவு தான் அழகாக இருந்தாலும் அவனுடன் கூடியிருக்க மனமொப்புவளோ? அப்படியிருக்க வேசியாகிய எனக்குப் பணந்தானே நாட்டம். அதைவிட்டு விடுவேனானால் என் வீட்டுக் கிழவி என்னைத் திட்டுவாள். ஆகவே பணத்தைக் கொடுத்து இன்பம் நுகர் வீர். கடனென்றால் வீட்டுவிட்டு நடந்து செல்லும். பல்லைக் காட்டி இளித்து இச்சகம் பேசி சிரித்து சிரித்துப் பசப்பி அடிமடியில் கைப்போட வந்தீரோ? ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தை விடலாமோ? தனத்தைக் கொடுத்துத் தனத்தின் சுகத்தைப் பெறுவீர் என்றுரைத்து அவரை வெளியிற் போகச் செய்து கதவைச் சாற்றித் தான் போட்டுவிட்டாள்.

அவர் மிகவும் அவஸ்தைக்குள்ளாகி வருந்தி அவளை வேண்டிக் கொண்டார்.

இராகம் அடாணு—தாளம் அடதாளம்

பல்லவி

கதவைத் திறந்து பேசடி ! அடி யென்மானே !
கதவைத் திறந்து பேசடி ! (கத)

அநுபல்லவி

மதுவைப் பானஞ் செய்தோர்க்கு மயக்கங் கொண்டது போலே
மனது தடுமாறி யுனது வீடுதேடி
வந்தா லுனக்கு நான் சொந்த மல்ல வடி (கத)

சரணங்கள்

மானே ! கலாப மயிலே ! அன்னத்தின் பேடே !
வயங்கும் கன்னங் கருங் குயிலே !
நானுங் காத்திருப்பது நலமோ ? உனது சித்தம்
நடுக்கமுன் மனங் திடுக்கிட்டே வந்தா யதை
தடுக்காதே உன்னுடன் படுக்கவந்தே னடி (கத)

நிலவு மணல்போற் றுவுதே! கருங்குயிலும்
நிறுத்தி நிறுத்திக் கூவுதே!
இலவு காத்த கிளிபோ லேங்கி மனம் வாடுது
எதிர்த்து மதப்பையல் பகைத்தே யிருக்கிற
விதத்தை யறிந்தவன் துரைதனத்தின் கண்ணே! (கத)

புகழு மகுடஞ் சூட்டுவேன் தனது தேகம்
பூரிக்கப் பணிகட் பூட்டுவேன்
மகிழும்படிக்கு யுனக்கு போதை தலைக்கேறி
வாதை மிகுந் தெந்தன் காதை யடிக்குது! (கத)

என் காமக் கிழத்தி! கதவைத் திறந்து என்னை இது சமயம் காத்தருள்வாய். நீ கேட்கும் யாவற்றினையும் தரு கின்றேன். உனக்கு மகுடஞ் சூட்டுவேன்; வேண்டிய திவ்வியாபரணங்களைப் பூட்டுவேன் என்றுரைத்தான். அவ் வுரை கேட்ட மங்கையும் தன் தாமரைக் கரங்களினால் கத வைத் திறந்துத் தன் காதலனுக்குக் காதற் சுகம் கொடுத் தாள்.

* * * * *

கைலை நாதனென பரமேஸ்வரனைக் கண்டு ஒரு யௌவன விலைமாது மிக்க வாதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அதைக் கண்டு அவளது தாய்க் கிழவி அதைப் போக்கவும் அவள் மோகம் கொண்டுள்ள பேர்வழி அதற்கு அருகனல்ல வென் றும் சொன்னாள். அவன்மீது நீ காதற் கொண்டதற்குக் காரணமாக இருந்தது எது?

இராகம் கல்யாணி—தாளம் ரூபகம்

பல்லவி

எதைக் கண்டு நீ இச்சைக் கொண்டாய் மகளே!
என் கண்ணே! பெண்ணே! நீ இப்போதே (எ)

அநுபல்லவி

சுத்தப் பைத்தியக்காரன் கங்காதரன் தோகையே முன்னவன்
பேயனோடிய தொந்திக்கோ! பழங் கந்தைக்கோ!
ஏறும் நந்திக்கோ! செய்யும் விந்தைக்கோ! (எ)

சரணங்கள்

புலியை யுரித்து ஆடை யணிந்த போர்வை யாசைக்கோ!
வலியக் கரத்தில் மழுவை யேந்தும் மனது துணிவுக்கோ!
மலையின் பாம்பைப் பிடித்து கழுத்தில் மாட்டிக் கொண்டதை
பூட்டிக் கொண் டிட்ட மாலைக்கோ! காமலீலைக்கோ நீ (எ)

மாமனும் மாமியும் வொன்றாய்ச் செய்கின்ற
வரிசை பெருமைக்கோ!
சோமனைச் சிரசி லணிந்த வொருக்கண்
துலங்கும் நெற்றிக்கோ!
காமனை வென்றவராலத்தை யுண்டு மார்க்கண்டனுக் காகவே
கண்டனை யுதைத்த காலுக்கோ! சாம்பல் மேலுக்கோ! நீ (எ)

மானைப் பிடித்து கரத்தி லணிந்த வனத்தின் வேட்டைக்கோ!
மீனைப் பிடித்து தரித்த வொருக்கண் விசறும் வேட்டைக்கோ!
கானகத்தில் வேட னெச்சிலை கண்டு முண்டவன்
கண்ணைப் பிடுங்கிய கண்ணுக்கோ! மாடு வெண்ணுக்கோ!
சொந்த மண்ணுக்கோ! ஜடை பெண்ணுக்கோ! நீ (எ)

என் கண்மணி நீ எதைக் கண்டு அந்தப் பேயனை கங்காதரனை இச்சை கொண்டாய். அவனது தொந்தியின் அழகைக் கண்டோ? அல்லது அவனுடுத்தி யிருக்கும் பழைய கந்தைத் துணியைக் கண்டோ? மற்று அவன் ஏறும் நந்தியைக் கண்டோ? இன்னும் எதைக் கண்டு அவன்மேல் இச்சை கொண்டாய்? அவன் தலையில் சந்திரனைத் தரித்திருக்கின்றான் என்ற பெருமையைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து ஆசை கொண்டாயோ? நெற்றிக் கண்ணின் அழகி லீடுபட்டு ஆசை கொண்டுள்ளாயோ? நல்ல வேட்டை செய்வதில் சிறந்தவன் என்றும் கையில் மானைப் பிடித்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து இச்சை கொண்டனையோ? அவனிடத்தில் என்ன விசேஷ மிருக்கிறதென்று கண்டு நீ அவ்வளவு இச்சையை அவன்மேல் வைத்து அவஸ்தை யுறுகின்றாய் என்று ஒவ்வொன்றையும் எடுத்துச் சொன்னாள். அப்பொழுதும் அவளுக்குக் காதல் குறையவில்லை. அதற்குப் பதிலாக அளவு கடந்து அது ஓங்கி வளர்ந்தது.

## உரு. மதாலஸா

ஒரு காலத்தில் விஸ்வாவஸ் என்னும் வித்தியாதரவேந்தன் இருந்தான். அவனுக்குப் புத்திர சந்தானம் கிடையாது. ஆனால் ஒரே ஒரு புத்திரி மட்டும் தனக்குத் திருவருள் பாலித்திருந்ததைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டு வாழ்ந்து வந்தான். தன் குமரியை ராஜகுமாரன் கற்கவேண்டிய வித்தைகளை யெல்லாம் கற்கச் செய்தான். அந்தப் புத்திரிக்கு மதாலஸா என்று பெயரிட்டு மிக்கக் கவலையுடன் காப்பாற்றி வந்தான். அவளுடன் கூட சதா சர்வகாலமும் இருக்க ஒரு உயிர்ப் பாங்கியையும் நியமித்திருந்தான். அப் பாங்கியின் பெயர் குண்டலி. மதாலஸாவும் குண்டலியும் உயிரும் உடலும் போலவும், நகமும் சதையும் போலவும், மலரும் மணமும் போலவும் ஒன்றாய்க் கூடி யிருந்தார்கள். ஒருவரை விட்டு யொருவர் பிரிந்திருக்க மனந் தாளார்கள். இரண்டு மங்கையர்களும் இணைபிரியாமல் விளையாடியும் வித்தை பயின்றும் வந்தார்கள். அவர்களது சந்தோஷ வாழ்க்கைக்கும் ஒரு பெரிய பங்கம் வந்துவிட்டது.

"அங்கண் விசும்பின கனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டு மால்"

என்பதே போல் மதாலஸாவுக்குப் பெருத்த இன்னல் நேரும் சமயம் ஏற்பட்டு விட்டது.

மதாலஸாவின் அழகும் சாமர்த்தியமும் ஈரேழு பதினான்கு லோகங்களுக்கும் எட்டிவிட்டது. குன்றின்மேலிட்ட தீபம் போல் எங்கும் பிரகாசித்தது. எவ்விதத் திலாவது அம்மங்கையை அபகரிப்பதே சரியென்று பாதாள கேது என்னும் அசுரன் கங்கணங் கட்டிக் கொண்டான். அவன் எண்ணியபடி செய்யும் ஆற்றல் படைத்தவன். மருந்துக் கேனும் காருண்யம் என்பது அவனிடத்தில் கிடைக்காது.

அத்தகைய வன்னெஞ்சம் படைத்த அசுரன் மதாலஸாவை யும் அவளது உயிர்த்தோழியான குண்டலியையும் பலவந்த மாகத் தூக்கிக் கொண்டு போய் பாதாளத்தில் வைத்தான். அவனுடைய விருப்பதற்கு அவ்வணங்குகள் இணங்காமை யினால் அவர்கள் மீது சினங்கொண்டான். மதாலஸாவினிடம் இன்சொல்பகர்ந்து அவளது மனதை இளகும்படிச் செய்துத் தன்னை மணக்கவேண்டினன். அவனது முயற்சிகள் எல்லாம் கானகத்தில் காய்ந்த நிலவு போல் வியர்த்தமாகி விட்டது. ஆயினும் மிகவும் கடிந்து விவாக விஷயத்தைக் குறித்து ஆய்ந்து ஓய்ந்து ஆலோசனை செய்து தான் விரும்பியிருக்கும் விடையைத் தனக்குக் கொடுக்கும்படி ஒரு மாதகாலம் தவணை கொடுத்தான். அந்தத்தவணைக்குள் சரியான விடை தராவிட்டால் பின்னர் பலவந்தமாக விவாகம் செய்து கொள்வதாகக் கூறி வெளியே சென்று விட்டான். அவன் ஒழிந்ததைக் கண்டு அம்மங்கையர்கள் கவலையொழித்தார்கள். அந்த அசுரன் தம்மைப் பிரிக்காமலிருந்ததற்கு மிகவும் சந்தோஷப் பட்டார்கள். அவ்விருவர்களும் ஒன்றாய் கூடி யிருந்தால் எத்தனை ஆபத்து வந்தாலும் அதை எதிர்க்கச் சக்தி பெற்றிருப்பதாக அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஒரு மாதகாலம் தவணை கொடுக்கப் பட்டிருப்பதைக் கண்டு வெகு தைர்யங்கொண்டு எவ்விதத்திலும் அந்தத் தவணைக் குள்ளாக வெளியேறி விட முயற்சிகள் செய்யவேண்டும் என்று அவ்வங்கனைகள் தீர்மானஞ் செய்து கொண்டு அத்துறையில் உழைக்கலாயினர். மதாலஸா தன்னுடைய குலதெய்வமான கௌரியைக் குறித்துத் தோத்திரஞ் செய்ய வாரம்பித்தாள். தினந்தோறும் அதிகாலையில் பரிமள மிகுந்த புஷ்பங்களைக் கொய்து மாலையாகத் தொடுத்து கௌரிக்குச் சாற்றுவாள். அவளைத் துதித்து மலரால் அருச்சனை புரிவாள். தன் இனிய குரலை யெழுப்பி பக்திரசம்

ததும்பும் பாட்டுகளைப் பாடுவாள். இவைகளில் குண்டலியும் சேர்ந்து கொண்டு கௌரியை வழிபடுவாள். தன் தலைவியைக் காப்பாற்றும்படி இறைஞ்சுவாள்.

நிற்க, பூவுலகிற்கே சக்ரவர்த்தியாக விளங்கியிருந்த **சத்ருஜித்** என்பவனுக்கு ஒரே ஒரு புத்திரன் உண்டு. அக்குமாரனது பெயர் **ருதுத்வஜன்** என்பது. நல்ல அழகும், தேஜஸும், புஜபல பராக்கிரமமும் படைத்தவன். அவன் தந்தையின் பெயருக்கேற்ப சத்ருக்களை ஜெயிப்பான். யுத்தகளத்தில் நடு நாயகமாயிருந்து சமர்புரிந்து வெற்றி மாலை தரிப்பான். வடிவழகுடைய மங்கையர்களை வசீகரம் செய்யும் அருங்குணத்திற்கு உறைவிடம் அவனே யாகும். அவ்விதம் சுக்லபக்ஷத்துச் சந்திரன் போலக் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிர்த்தி யடைந்து வந்தான்.

அருங்கானகத்தில் வாழ்ந்து வந்த தவசிகளையும், முனிவர்களையும் பாதாளகேது என்னும் அசுரன் மிகக் கொடுமையாக நடத்தினன். அவர்களது தவத்தை யழித் தான்; ஆசிரமங்களைக் கொளுத்தினன். இவ்வாருக அவர் களைத் துன்புறுத்தினன். அக்னியுடன் வாயு சேர்ந்தாற் போல பாதாளகேதுவுடன் மூகாசுரன் என்னும் மற்ருெரு ராக்ஷதனும் சேர்ந்து கொண்டு ரிஷிகளைப் பலவாருக ஹிம்சை செய்து வந்தான். அக்கொடுமையைச் சகிக்க வாற்ருமல் **காலவ மகரிஷியும்** மற்றும் பல தவசிரேஷ்டர்களும் ஒன்று கூடி சத்ருஜித் சக்ரவர்த்தியிடம் சென்று முறையிட்டார்கள். 'வேந்தே! குடிகளுக்குத் தெய்வம் கொற்றவனே. எங்களுக் குற்ற இடுக்கண்களைப் போக்கி எம்மைக் காப்பாற்றுவது தங்களுடைய கடமை. அசுரர்கள் எங்களுக்குப் பலவிதங்களி லும் துன்பத்தைக் கொடுத்து வருகிருர்கள். அவர்களைக் கொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்கள். அதன் பின்பு காலவரிஷி அரசனைப் பார்த்து 'சத்ருஜித்! என்னிடம்

ஒரு பிரசித்தி பெற்ற அசுவம் இருக்கின்றது. அதன் பெயர் குவலயாஸ்வம். அதன் மீது ஆரோகணித்து அவ்வசுரர்களை யொழிக்க ஆற்றல் படைத்த வீரனை இப்பொழுதே அளிக்க வேண்டும்' என்றார். சத்ருஜித் தன் குமாரனை அசுரர் கூட்டத்தை யொழித்து வர அனுப்பினான். அவன் காலவ ரிஷி கொடுத்த குவலயாஸ்வத்தின் மீது ஆரோகணித்துக்கொண்டு கானகத்தில் சென்றான். அப்போது எதிரில் ஓர் அசுரன் பன்றி உருவத்துடன் தோன்றினான். அவன் தான் மூகாசுரன். அவனைப் பின் தொடர்ந்து ருதுத்வஜன் சென்றான். மூகாசுரன் தத்தளித்துப் போனான். அன்று தனக்கு அந்திய காலம் சமீபித்து விட்டது என்று தீர்மானஞ் செய்து கொண்டான். உயிர் தப்பிச்செல்ல ஓடும் போது தற்செயலாய் ஒரு குகை தென்பட்டது. அதனுள்ளே போய் புகுந்து கொண்டான். அதை யுணர்ந்த ராஜகுமாரன் அஸ்திரப் பிரயோகம் செய்தான். அந்த அஸ்திரம் உள்ளே யிருந்த பன்றியின் மீது பட்டது. அப்பன்றி மரண மடையும் போது தன் குரலெழுப்பி 'அரசே! நான் இறக்கின்றேன். மூகாசுரனாக இருந்து இதுகாறும் பலருக்குக் கஷ்டத்தை விளைவித்து வந்தேன். இன்றோடு என் ஆயுள் ஒழிந்தது' என்று கூறி உயிரை விட்டான். அவ்வார்த்தைகளைக் கேட்க ருதுத்வஜன் மிக்க ஆச்சரியங்கொண்டு அந்தக் குகையினுள்ளே சென்றான். அதன் உள்ளே சென்றதும் அந்தப் பிரதேசம் குகையாக விராமல் வெளிச்சத்தோடும் மிக விசாலமாயுமிருந்ததைக் கண்டு மேல் நடந்து சென்றான். பாதாளத்தை யடைந்தான். ஒரு பெரிய நீர் நிலை யொன்றில் தன் தாகவிடாய் தீர்த்துக் கொண்டு சற்று சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்தான்.

அப்போது மதாலஸாவும் குண்டலியும் மலர் கொய்து கொண்டிருந்தார்கள். மனித சஞ்சார மில்லாத தனிப்பிர

தேசத்தில் துணையின்றி அன்னப்பேடு போன்ற ஒருமங்கை தன் பாங்கியுடன் இருப்பதை உணர்ந்தான். அவ்விடம் இருந்தபடியே அந்த ஏந்திழையாளின் அழகு வீடு பட்டுக் கொண்டே தனக்குள் சொல்லிக் கொள்வானாயினன்.

'தன்னேரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே !
அன்னே தேனே யாரமிர்தே யென்றடி போற்ற
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாலப்
பொன்னே சூழும் பூவினை துங்கிப் பொலிகின்றாள் !

'பொன்சேர் மென்காற்கிண் கிணியாரம் புனையாரம்
கொன்சேரல் குன்மேகலை தாங்குங் கொடியன்னார்
தன்சேர் கோலத்தின் னெழில்கானச் சதகோடி
மின்சேவிக்க மின்னரசென்னும் படி நின்றாள்.'

'கொல்லிம் வேலுங்கூற்றமு மென்னும் மிவையெல்லாம்
வெல்லும் வெல்லும் மென்னமதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந்தன்மைத் தன்றது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும்புல்லுங் கண்டுருகப் பெண்கனி நின்றாள்.'

அம்மங்கையர் திலகம் ஒரு பெரிய விருக்ஷத்தின் அருகே மிகப்பொலிவுடன் நின்றிருந்தாள். அவளைக் கண்டதும் அவன் மனம் சபலமடைந்தது. எழுந்திருந்தான்; கண்களைக் கசக்கிப் பார்த்தான். உண்மையிலேயே மங்கை தான் என்று தெளிந்தனன். அதற்கப்புறம் அருகில் சென்று பார்ப்போம் என்று துணிவு கொண்டான். அவன் மட்டும் அவர்களைக் கண்டானே யொழிய அம்மங்கையர்களில் ஒருத்தியும் அவனைக் கண்டவளல்ல. ஆகவே, அவர்களை வியப்பு கொள்ளச்செய்யவேண்டுமென்னும் அவாக்கொண்டு அவர்கள் தெரியாத வண்ணமாகச் சென்று திடீரென்று எதிரில் நின்றனன். அவ்விதம் நின்ற அழகும் கம்பீரமுமுள்ள ராஜகுமாரனைக் கண்டதும் அவர்கள் அச்சப்படவில்லை. பாதாளகேதுவாக யிருந்தால் அச்சமும் வெறுப்பும் கொண்டிருப்பார்கள். அப்படிக்கில்லாது வேறாக இருக்கக் கண்டு தாங்கள் வழிபட்டு வந்த கௌரியின் இன்னருள் அது வாகும்

என்று மனந்தேறி அகத்தில் மகிழ்ச்சி கொண்டார்கள். மங்கை தன் கடைக்கண்ணால் ராஜகுமாரனைப் பார்த்தாள். அரசகுமாரனும் காதல் ததும்பும் பார்வையால் அவ்வடி வழகியைக் கண்டான். அந்தப் பார்வையில் எவ்வளவோ விஷயங்கள் அடங்கி யிருந்தன. ஈரடி கொண்ட குறளில் விஷயங்கள் எவ்வளவு அதிகமாகக் கொண்டிருக்கின்றனவோ அதேபோல காதலர்களின் பார்வையில் வாயினால் பேச முடியாத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்சொற்களென்னபயனுமில' என்றும் குறள் கூறுகின்றது.

'எண்ணரு நலத்தினாளினையு நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கெளவியொன்றையொன்
றுண்ணவுநிலை பெறுதுணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினனவளு நோக்கினாள்'

அவ்வாறு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட பார்வையிலிருந்து ஒருவிதமான சக்தி வெளிப்பட்டு இரண்டு இருதயத்தையும் பிணைக்கத்தலைப்பட்டது. காந்தம் அயத்தை இழுப்பதுபோலும் ஒரிருதயம் மற்றோரிருதயத்தை இழுத்தது. அந்த அவஸ்தையில் அரசகுமாரன் அவளது அழகையும், முகப்பொலிவையும் வியந்து கூறுவான்.

'மாசறுபொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
மலையிடைப் பிறவாமணியே யென்கோ?
அலையிடைப்பிறவா யமிழ்தே யென்கோ?
தாழிருங் கூந்தற் றையானின்னை'

'என்னைக் கவர்ந்த நற்காரிகையே! உன்னை எந்தவிதத்தில் புகழ்வேன்? மாசுமறுவில்லாத பத்தரைமாற்றுத் தங்கம் என்று உரைக்கவோ? அல்லது முத்தமே யென்று சொல்லவோ? கணுவில்லாத கரும்பென்னவோ? என் ஆருயிர்

மருந்தேயென்னவோ? மலையில் உற்பவியாத நல்ல வைரம் என்றுரைக்கவோ? கடலில் பிறவாத நல்ல அமிர்தம் என்றுரைக்கவோ! தையலே! நின்னை நான் எவ்விதம் புகழ்வேன் என்பதை அறியாதவனாக இருக்கின்றேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

குண்டலி அந்த சுந்தர ராஜகுமாரனையும் அவனது மனக்கலவரத்தையும் கவனித்த வண்ணமாக விருந்தாள். அவன், தன் தலைவிமீது தணியாத காதலும் கொண்டுள்ளான் என்பதை ஊகித்து உணர்ந்தாள். அந்த எண்ணம் அவளது மனத்திடையில் எழுந்ததும் அவள் ஆனந்தங்கொண்டாள்.

'இழந்தமணி புற்றரவெதிர்ந்த தெனலானாள்
பழந்தன மிழந்தனபடைத்தவரை யொத்தாள்
குழந்தையுயிர்ப்பித்த மலடிக்கு வமைகொண்டாள்
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப் பொறையுமொத்தாள்'

என்பதற்கிணங்க குண்டலி ஆனந்தம் என்னும் ஆழியில் ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு அச்சமயத்தில் என்னத்தான் சொல்வது என்றறியாமல் இருந்தனள். இனி பாதாள கேதுவினிட மிருந்துத் தப்பிச் செல்ல மார்க்கம் கிடைத்ததைக் குறித்து தன் தெய்வத்தைப் பிரார்த்தித்தாள்.

மதாலஸாவும் மதிமயங்கித்தன் எதிரிலுள்ள கம்பீரமும் சுந்தரமும் ஒருங்கேயமைந்த மன்மதனையும் வெல்லும் ராஜ குமாரன்பால் சற்று மனம் கொள்ளலானாள். அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் இருந்தாள். உடனே அவளது மனதில் திகில் உண்டாய் விட்டது. தன்னைச் சிறைவைத்திருக்கும் பாதாளகேது எங்கே அந்தச் சமயத்தில் வந்து அந்தச் சுந்தராங்கனைக் கொன்றுவிடுவானோ என்று அச்சங் கொண்டாள். அவனது புஜபல பராக்கிரமத்தை அவள் எண்ணினதும் அந்த அச்சம் ஆதித்தனைக் கண்ட பனிபோலப் போயிற்று.

இவ்வாறு ஒருவரையொருவர் வார்த்தைகளாடாமற் எத்தனை நேரம் தான் இருப்பது என்று எண்ணினவனாய் ருதுத்வஜன், அக்கன்னிகை பூலோகமாதல்ல மற்று தேவ லோகமாதோ அல்லது வித்தியாதரன் மகளோ யாரோ வெனத் தெரியாதிருந்தும் அவள்மீது மிக்க காதல்கொண்டு அவளைத் தன் உயிர்த்துணைவியாகக் கொள்ள விரும்பினான். எப்பொழுது அவ்வெண்ணம் உதித்ததோ அப்பொழுதே அதை வெளியிட்டுத் தெரிந்துகொள்ள முன்வந்தான். அக் கன்னிகையின் அருகே எதிரில் நின்றான். எவ்வளவு சூரனும், புஜபராக்கிரமமிகுந்தவனும், தைரியவானும், பல மன்னர் தம் பாதம் பணியும் சக்ரேசுவரனுமிருந்தாலும் தன் மனது பிடித்த மங்கையின் காதலுக்கு அடிமையாக வேண்டியது. இது யாவரும் ஒப்ப முடித்த ஒரு அனுபவ சித்தாந்தம் ஆகும். அதற்கேற்ப அவ்வரசகுமாரனும் அம் மங்கையின் காதலுக்கு அடிமையாக மிக ஏங்கி அவளை மிக வேண்டினான். தனது வலது கரத்தை மார்பிசைவைத்து மிக்க ஈனசுரத்தில் தழதழத்த குரலில் நாத்தடுமாற முகத்தில் வியர்வை அரும்ப 'என் மனதைக் கொள்ளைகொண்ட காரிகையே! என் கண்ணே! கருமணியே! என் உயிரே! என்னைக் காதலித்து மணக்கிறேன் என்று சொன்னால்தான் என் உயிர் நிலைத்திருக்கும். (படம்பார்க்க) இன்றேல் இப் பொழுதே உன் இணை அடியிற் என் உயிரை விட்டுவிடுவேன். அப்பாவம் உன்னைத் தொடரும். தடையேதும் புகலாமல் என்னை அங்கீகரிப்பாய்' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டான். கரும்புதின்னக் கூலியும் வேண்டுமோ என்பதுபோல அம்மங்கை நல்லாள் தனது சம்மதத்தைக் கொடுத்ததுபோலச் சும்மாயிருந்தாள். குண்டலி என்னும் தோழி தன் தலைவியின் சந்தோஷத்தைக் கண்டு அது தனக்கே வந்துற்றது போல எண்ணித்தன் இரு கைகளையும் விரித்து அந்த ராஜ

குமாரனிடம், 'அரசே! தங்கள் மனோபீஷ்டத்தின்படியே என் தலைவியை மனைவியாக ஏற்றுக்கொள்ளலாம். அவள் சாதாரண மான பூவுலகத்து மாதல்ல. விச்வாவசு என்னும் வித்தியாதர வேந்தரது ஏகபுத்திரி. நான் அவளது உயிர்ப்பாங்கி. எம்மிரு வரையும் பாதாளகேது என்னும் அசுரன் சிறையாகப்பிடித்து இவ்விடத்தில் வைத்துள்ளான் அவனைக்கொன்று எம்மை மீட்டுச் சென்று உமதிஷ்டப்படி விவாகம் செய்துகொள்ளும். அவளது பெயர் மதாலஸா; அடியாள்பெயர் குண்டலி. என் தலைவி சுகப்பட, சந்தோஷமாயிருக்க நான் காண்பதே எனக் கேற்ற திருப்பணியாகும்' என்று சொல்லி முடித்தாள்.

பிறகு அவ்வசுரனுடன் போர் புரிந்து அவனைக்கொன்று மதாலஸாவையும் குண்டலியையும் மீட்டுக்கொண்டு போய் ருதுத்வஜன் விவாகம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்திருந் தான்.

'பூ மடந்தையே இவள்'

"வானமங்கை யல்லளிவள் வார்குழற்பூ பாடுகின்ற
தேனனைய மைக்கண் சிமிட்டுகின்ற—ஞான
குருவெனப் பழனிக் குவட்டின் மேய
வொருவனே யேதின முன்னு
முருடர்தங் குலத்து முகிழ்முலை மகளே"

ஊசல்.

இல்லறமுந் துறவறமுந் தூண்களாக விகப்பரசாதனப்
பொதுச் சீர்வட்டமாக
நல்லறமாதிய நான்கும் வடங்களாக நழுவருஞ்
சத்தியமதுவே பலகையாக
வல்லசத்தி யோராறும் போற்றியாட்ட மாயன்மக்க
ளிருவருடனுடீ ரூசல்
நல்லவச் செஞ்சடைச்சிவனார் தவப்பேறான பழனி நகர்க்
குழகர் மகிழ்ந்தாடீ ரூசல்.

## உச. "முருகா! முத்தம் தருகவே"

சித்தர்பலர்க்கோ ராசாகித் திகழ்வெண்கயிலைக் கிரிமிசைவாழ்
சிவனார்தாமு மவளிடபாற் சிறிதும்பிரியா வுமையாளுஞ்
சுத்தமலிபா கீரதியுஞ் சுடர்நேருடுக்க ளோராறுந்
தும்பிமுகத்தோர் துணைவோனுஞ் சூரூர்ப்பிடியுங் குறக்கொடியு
மித்தரையின்கா ழியிற்கூட விடத்திலிருதம் பதி[illegible]ரு
மிணையிலருணைக் கிளிதானு மெய்தப்பெறலால் யான்விழைந்
முத்தர்வருசீர்ப் பழனிமலை முதல்வாமுத்தந் தருகவே [தேன்
மூவாவமரர் நகர்க்காவன் முருகாமுத்தந் தருகவே! (க)

அந்ந[illegible]ளென்னது கனவில்வலி தளித்தமுத்தம் பலவுளவீண்
டவற்றின்மகிமை சிறிதேனு மவிர்கின்றில[illegible]நா லயர்கின்றே
னிந்நாணனவிற் றருதல்பெரி திலங்கிற்றெனினு நலமாநின் [ரூ
னிதயத்தருட்பண் பெங்குளதோ வெனைநீமக வென்றதும்படி
மொய்ந்ந[illegible]னுரையே னெனுநிசமிப் புவியோருணரப் போகாதோ
புகழ்சால்வீர வாகுமுதற் புத்தேளிரினு நரர்மேலோ
முந்நானெறியு மகிழ்வயலூர் முதல்வாமுத்தந் தருகவே
மூவாவமரர் நகர்க்காவன் முருகாமுத்தந் தருகவே! (உ)

கோங்கையனைய முலைமடவார் குளிர்சேல்விழிப்பார் வைசினருமை
குறியாவிளமைப் பருவத்தாட் கொண்டுதமிழ்ச்சீர் கொடுத்தது
தீங்கைபே ராசையினுற் றிருமாமலைமேற் சென்றுள்காற் [வுந்
செத்துத்தொலையா தளித்ததுவுஞ் செப்பாதமிக் குரைத்ததுவும்
வேங்கையனுகன் முதற்சொலவ மிருத்தாயிரமுன் விலக்கியதும்
வீணேமறையத் தகுங்கொல்லோ வியன்கூடலிலோர் வணிகன்
மூங்கைமகவு மாம்பழனி முதல்வாமுத்தந் தருகவே [மனை
மூவாவமரர் நகர்க்காவன் முருகாமுத்தந் தருகவே! (ந)

கருமம்பரமென் பலருணராக் கருணைக்கடற்பே ரமுதாய
கந்தாவுமையாண் மனத்தொடுகண் களிக்கவருசீர்க் கான்முளையே
பெருமந்தரநேர் முலையராற் பெயர்மங்கையரோ ரறுவர்களும்
பெருகாதரத்தால் வளர்க்கவளர் பிள்ளாய்வள்ளற்
[பெருந்தகையாய்
குருவென்றவிர்வா ரனைவருக்குங் கொடுக்கங்கலையா யிரம்பொ[illegible]நந்
குழகாசேவற் கொடிக்குமரா குலவுமறையா கமங்குறிக்குந் [[illegible]ங்
தருமம்பொலி[illegible]தென் பழனிநகர்த் தலைவாமுத்தந் தருகவே
தமிழ்மாமுனியா தியருணர்மெய்த் தயையாய்முத்தந் தருகவே. [illegible])

குலிசாயுதத்தோ னகர்ப்பிடியுங் குறிச்சிக்குறவ ரிளங்குயிலுங்
 கொஞ்சியணையும் பொருக்கணவா கோலாகலப்போகனுங் கொலை
புலிவாகனனு தியபலரும் புரிபூசனையேற் றருள்செய்தாய் [வேம்
 பொல்லாவசுரர் குலகாலா புலைவேரறுப்பார்க் கெளியானே
பலியேற்பவர்போ லுருச்சமைந்து பலமங்கையர்கற் பழித்தார்தம்
 பாலாவேலா வலயநெடும் பாம்பிற்றுயின்மா யவன்மருகா!
சலியாக்கொடையோர் வளர்ப்பழனித் தலைவாமுத்தந் தருகவே
 தமிழ்மாமுனியா திருணர்மெய்த் தயையாய்முத்தந் தருகவே!

அருகனையேவழி படுமெவராணவ மற்றொழியச் செயும்வீ
 றறைபவர்யாவரு நலமுறுமாறு செயற்புத சற்குருவே
யொருகவியாசைகொ டழல்படுபாலையி லுற்றுமதற் குயர்பா
 வுரைசெயுநாவல் பயிலுடனுடுமு கைப்பதனுக் கிசைவாய்
மிருகசுபாலமெய்திட கொடியோர்கள் வெறுக்கும் வனப்புடையாய்
 விலைமகளார்மனை தொறுமலையானையு மெய்க்கிளியிற் புனைவாய்
முருகவிழ்தாதகி யணிசடையார் சுதமுத்த மளித்தருளே
 முதிரருள்சேர்குக பழனியில் யானுய முத்தமளித்தருளே. (சு)

பாவமனேகமெ நாளும்விடாதுசெய் பற்பலரைப் புகழ்வார்
 பால்புரைநீறணி வாருனுமாறுமொர் பற்றுமிடத் துணியார்
சேலனிலாவிய கேதனமாணுவல் சிட்டர்களைப் பணியார்
 சீதைமணன்ன ஞாசாளவகை சித்தமிதிற் கருதார்
பூவலமாகுத னேர்தவநாடு நற்புத்தியை மிக்கிகழ்வார்
 போல்பவரோடுச தாவகலாதுபு ணர்ப்புறு மக்கினிபோன்
மூவகையேடணை தீர்தர நீயொரு முத்தமளித்தருளே
 மூதறி வார்பழ னுபுரிவாழ்குக முத்தமளித்தருளே. (எ)

கற்றுணர்வித்தக ருற்றதமிழ்ச்சபை கற்பினுயர்ச்சியதார்
 கட்டழுகுக்கொடி யொப்பவருப்பொடு கட்டுணர்மிக்கவர்கா
மற்றுவமைப்பொரு ளற்றதவத்தின்ம னத்தைநிறுத்தவலார்
 மற்சரமற்றுவ சிக்குமடதிதொகை மட்டில்கொடைத்தொழி
ருற்றுயர்மச்சும னைத்திரள்சத்திர முக்கிரமற்பயில்வா!! [லோ
 ருட்டினமற்றம ணிக்கழகத்தணி யொத்தனபற்பலசீர்
முற்றுத்திருப்பழ னிப்பதியிற்குக முத்தமளித்தருளே
 முப்புரமட்டந கைப்பரர்கட் சுதமுத்தமளித்தருளே. (அ)

---

Tirupati Sri Mahant's Press, Madras.




*Title Page Printed at M. C. A. PRESS, Madras.*